ANGLO ASIAN
MINI MART
513 High Road
Wembley,
Middx, Hao 4 ag
Tel: 020 8900 2451
தரமான இலங்கை Groceries
கடலுணவு வகைகள், மரக்கறி
வகைகள் அனைத்தையும்
பெற்றுக்கொள்ள நாடவேண்டிய
இடம்!
Pub.

GB 70 P
ஈழமுரசு
பிரித்தானியா
Eelamurasu Weekly
முரசு: 8 03 - 09 ஒக்டோபர் 2002 முழக்கம்: 403

FORWARD
CONSULTANTS
Consulting For People
WE PROVIDE !!!!
*** ANY PURPOSE LOAN ***
*** BUSINESS LOAN ***
*** RESIDENTIAL MORTGAGES ***
CALL US ON 020 8900 9052
1 LANCELOT PARADE, LANCELOT
ROAD, WEMBLEY, MIDDX HAD 2 AJ, UK
info@forwardconsultants.co.uk
Pub. www.forwardconsultants.co.uk

இலங்கைத் தமிழர்
கலாச்சார ரீதியாகத்
தனிமைப்
படுத்திக்கொள்கின்றனர்
– பாலுமகேந்திரா

நேசமொழியில்
பேசவிடு

பிறமுக
அறிமுகம்

ஏன் நீ எதுவும்
எழுதவில்லை
என்று கேட்டேன்.
அதற்கு அவன்
சொன்ன பதில்
என்னைத்
திடுக்கிட
வைத்தது.

ஊர்க்கோலம்

மிக வாய்ப்பான
சர்வதேசச் சூழலில்
ரணில்
– மு. திருநாவுக்கரசு

காட்சியும்
பதிவும்



# கொழும்பு தலைவர்கள் போர் வியூகம்

## ஜனாதிபதிக்கு எதிரான சட்டத்திற்கு ஆதரவு கோரும் ரணில்

## இணக்கப் பேச்சுக்களை குறிவைக்கும் சந்திரிகா

சிறீலங்காவின் சனாதிபதிக்கும், ரணில் தலைமையிலான அரசுக்கும் இடையேயான அதிகாரப் போட்டி மீண்டும் சூடுபிடித்துள்ளது. பாரளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள 19வது சட்டத் திருத்தத்திற்கு ஆதரவு கோரி ரணில் தரப்பினர் தீவிர பரப்புரைகளை பாரளுமன்ற உறுப்பினர்கள் மத்தியில் நடாத்தி வருகின்றனர். மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் நிறைவேற்றப்பட வேண்டிய இச்சட்டமூலமானது சந்திரிகாவுக்குள்ள அதிகாரங்களைப் பறித்து ரணில் அரசுக்கு வழங்கவுள்ளதால் இதனை எதிர்பதற்கான கடும் முயற்சியில் சனதிபதி தரப்பினர் ஈடுபட்டுள்ளனர். இந்த முயற்சியின் ஒரு பகுதியாக தற்போது இடம்பெறும் இணக்க முயற்சியை சனதிபதி குழப்பாமல் இருக்க வேண்டுமாயின் 19வது சட்டதிருத்தத்தை கைவிட வேண்டும் என சந்திரிகா தரப்பினர் பகிரங்கமாக கோரிக்கை விடுத்துள்ளனர்.

பாரளுமன்றத்தை கலைக்க மாட்டேன் என சனாதிபதி வாக்களித்துள்ளதால் அவருக்கு எதிரான சட்டமூலத்தை ரணில் முன்வைக்கக் கூடாது என சந்திரிகாவின் கதிர்காமர் கோரிக்கை விடுத்துள்ளார். மேலும், தங்களது கட்சி சமாதானத்திற்கு ஆதரவளிக்கின்றது ஆனாலும், அதற்குக் கொடுக்கப்படும் விலையும் முக்கியமானது எனக் கூறும் கதிர்காமர் இந்த விலையே சிறீலங்காவின் தலைவிதியை தீர்மானிக்கவுள்ளது எனத் தெரிவித்துள்ளார். அதனால், தற்போது இடம்பெறும் புலிகள் - அரசு பேச்சுக்கள் விரைவாக முடிவுக்கு வரவேண்டும் எனவும், பேச்சுக்கள் நீண்டகாலத்திற்குத் தொடர்ந்தால் அது தளம்பல் நிலையை ஏற்படுத்தும் எனவும் அவர் கூறியுள்ளார். இதேவேளையில் சந்திரிகாவின் தரப்பில் உள்ள முக்கிய அதிருப்தியாளர்களை தனது பக்கத்திற்கு இழுக்கும் முயற்சியில் ரணில் தரப்பினர் ஈடுபட்டுள்ளனர். ரணில் தரப்பில் உள்ள சந்திரிகாவின் முன்னாள் சகாக்கள் இதற்கான முயற்சிகளை எடுத்து வருகையில், இத்தகையவர்களின் உயிருக்கு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளதாக கொழும்பு தகவல்கள் விபரம் தருகின்றன.

# புதிய தரை–கடல் நடவடிக்கை தலைமையகம்!

## சிறீலங்கா இராணுவத்தை நவீனமயப்படுத்தும் அறிக்கை வெளிவந்தது

சிறீலங்கா தரப்பினர் தமது இராணுவத்தை நவீனமயப்படுத்துவது தொடர்பான முதல்கட்ட ஆய்வறிக்கையை வெளியிட்டுள்ளனர். தற்போது மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ள இராணுவத்தின் கட்டளை அமைப்பை மாற்றி புதியதொரு துடிப்பாகப் போர் புரியத்தக்க அமைப்பை உருவாக்கும் நோக்குடன் இவ்வாய்வு நடாத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இவ்வறிக்கையின் பிரகாரம், சிறீலங்காவின் தரைப் போர் நடவடிக்கைகளை ஒரு மேஜர் ஜெனரல் தலைமையிலான சிறப்பு நடவடிக்கை தலைமையகம் கையாளும். அவரின் கட்டளையின் கீழ் தரை - விமான மற்றும் கடற்படையினர் போரில் ஈடுபடுத்தப்படுவார்கள். அதேவேளையில் சிறீலங்காவிற்குச் சொந்தமான கடற்பரப்பில் அனுமதியின்றி ஒரு சிறுகப்பல்களும் ஊடறுக்க முடியாத விதத்தில் கடற்படையினரின் தொழில்நுட்ப ஆற்றல் மேம்படுத்தப்படவேண்டும எனவும், அவ் அறிக்கை தெரிவிக்கின்றது.



வன்னியில் கடந்த 26ம் திகதி வியாழக்கிழமை நடைபெற்ற கேணல் சங்கர், லெப்.கேணல் திலீபன் நினைவு நிகழ்வில் தமிழீழத் தேசியத் தலைவர் கலந்துகொண்டு சுடரேற்றி அமைதி வணக்கம் செலுத்தியபோது...

# திருமலையில் தொடரும் கைதிகள் விவகாரம்!

போர்நிறுத்த உடன்பாட்டு விதிகளுக்குப் புறம்பாக விடுவிக்கப்பட்ட புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் நுழைந்த 7 சிறீலங்காப் படையினர் தொடர்ந்தும் புலிகளினால் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். இவர்களின் விடுலை தொடர்பாக புலிகளுடன் கண்காணிப்புக்குழு பேச்சுக்களை நடாத்தி வருகின்றபோதும், திருமலை ஆக்கிரமிப்புப் பகுதியில் கைதான இரு

(☞ பக்கம் 02)

தமிழினி
பல்பொருள்
அங்காடி
195-197 The Broadway,
Southall, Middx Ub1 1LZ
Tel: 020 8606 9900
Fax: 020 8843 9429
TAMILINI Cash and Carry
• எமக்கு லண்டனில் வேறு எப் பகுதியிலும் கிளைகள் எதுவும் கிடையாது!

தமிழ் மக்களின் இதயத்துடிப்பாக என்றும் முழங்குவது ஈழமுரசு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழமுரசு
Eelamurasu Weekly

"EELAMURASU"
JOURNAL TAMOUL
HEBDOMADAIRE

**Siege Social**
18 à 26, Rue Perdonnet,
75010 Paris, France.

**RCS PARIS**
B 399 673 110 (95B01491)

**Directeur de la publication:**
P. Velupillai

**Redacteur:** K. Jeisanthar
**Impression:**
IMPRIMERIES IPS
27 BERNAY, FRANCE.

நிர்வாகி: ப. வேலுப்பிள்ளை
நிறுவக ஆசிரியர்:
அமரர் க. கஜேந்திரன்
ஆசிரியர்: கி.ஜெய்சந்தர்

தபால் தொடர்புகளுக்கு:
EELAMURASU
22, Rue Perdonnet,
75010 Paris, France

E.Mail-eelamurasu@noos.fr
Web side: *www.eelamurasu.com*

விளம்பர விநியோக தொடர்புகட்கு:

பிரான்ஸ்:
TeL: 01 40 37 63 63
Fax: 01 40 37 64 64

ஜேர்மனி:
EELAMURASU
Postfach - 240346, 42233 Wuppertal.
Tel: 0173 / 5324511
Fax: 0202 / 7589320

டென்மார்க்: EELA MURASU
P.O.Box 65
7400 Herning, Denmark.
Tel: 24422634 - Fax: 65302588

சுவிஸ்: சுவிஸ் முரசம் புத்தகசாலை
Tellstr.31, 8004 Zürich, Swiss.
Tel: 043/3179600 - 079/6350216
Fax: 043/317 96 01

பிரித்தானியா: தபாற்தொடர்பு
EELAMURASU
5, Saxony Parade,
Hayes, UB3 2TQ.
Fax/Tel: 0208-56 16 877
ஜெயந்தன்: - Tel: 07956908145
பாஸ்கரன்: - Tel: 07811040188
ஆனந்: - Tel: 02085710323

இத்தாலி: மக்கள் கடை
VIA DANTE - 218A, PALERMO
Tel: 091-6824056

நோர்வே:
JAFFNA FOOD
Tel: 22425527

நெதர்லாந்து: த.லிங்கரட்ணம்
Tel: 076 5425804

அவுஸ்திரேலியா: 'EELAMURASU'
Tel: (613) 9457 6347
Fax: (613) 9440 7367
E-Mail:tccsydney@one.net.au

கனடா:
Tel: (416) 686-3041

**குறிப்பு:**
இவ் இதழில் பிரசுரிக்கப்படும் விளம்பரங்களுக்கு அந்தந்த விளம்பரதாரர்களே பொறுப்பு.

ஈழமுரசில் வெளிவரும் ஆக்கங்களை மறுபதிப்புச் செய்பவர்கள் முன்னனுமதி பெறவேண்டும்.

# சமாதானத்தை குழப்ப நினைத்தால் படைபலத்தை பிரயோகிப்பதைத் தவிர வேறு வழியில்லை

**மட்டு, அம்பாறை இராணுவப் புலனாய்வுப் பொறுப்பாளர் ரமணன்**


விடுதலைப் புலிகளுக்கும் அரசுக்கும் இடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தத்தையடுத்து இன்று ஓர் சமாதானச் சூழல் ஏற்பட்டுள்ளது. இந்தச் சமாதானச் சூழலைக் குழப்பிவிட்டு எவரும் வேடிக்கை பார்க்க நினைத்தால் படைபலத்தைப் பிரயோகிப்பதைத் தவிர எமக்கு வேறு மார்க்கம் எதுவும் இல்லை. நாம் கிழக்கில் போதிய தளபதிகளுடன் எதற்கும் தயாரான நிலையிலேயே உள்ளோம் என்று விடுதலைப் புலிகள் மட்டக்களப்பு அம்பாறை மாவட்ட இராணுவப் புலனாய்வுப் பொறுப்பாளர் ரமணன் தெரிவித்தார்.

தியாகி திலீபனின் நினைவு தின நிறைவுநாள் நிகழ்வு கடந்த வியாழன் இரவு மட்டக்களப்பு கோட்டைமுனை மைதானத்தில் நடைபெற்றது. நகர அலுவலகப் பொறுப்பாளர் வீரபாண்டியன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் ரமணன் தொடர்ந்து பேசுகையில், இன்று பேச்சுவார்த்தை வரக் காரணமானது எதுவுமல்ல. எமது தேசியத் தலைவரின் நெறிப்படுத்தல், போராளிகளின் தியாகம், இலங்கை இராணுவத்துக்கு அடுத்தடுத்து ஏற்பட்ட தோல்விகள், இதனால் சிங்கள மக்களுக்கு இராணுவம் மீது ஏற்பட்ட அவநம்பிக்கை இவையே சிங்கள அரசு பேச்சுவார்த்தை மேசைக்கு வரக் காரணம். தாய்லாந்துப் பேச்சுவார்த்தை விடுதலைப் புலிகளே தமிழ் மக்களின் ஏக பிரதிநிதிகள் என்பதைச் சர்வதேச சமூகம் ஏற்றுக்கொண்டமைக்குச் சான்றாகிவிட்டது என்று தனது உரையில் குறிப்பிட்டார்.

*(01ம் பக்கத் தொடர்ச்சி)*

**திருமலையில்...**

புலிகள் விடுவிக்கப்பட வேண்டும் என்கின்ற கோரிக்கையை புலிகள் கண்காணிப்புக்குழுவின் கவனத்திற்குக் கொண்டுவந்துள்ளதாக ஊடகங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.



மட்டக்களப்பில் நடைபெற்ற திலீபன் நினைவு உண்ணாவிரதம்

# மரண அறிவித்தல்



தோற்றம்
24.08.1962

மறைவு
27.09.2002

## திரு. தியாகராஜா கிறிஸ்ரி வசந்தராஜா
(வசந்தன்)

யாழ்ப்பாணம் நல்லூரை பிறப்பிடமாகவும் பிரான்ஸை தற்காலிக வதிவிடமாகவும் கொண்டிருந்தவருமான திரு. கிறிஸ்ரி வசந்தராஜா அவர்கள் 27.09.2002 அன்று காலமானார்.

இவர் காலஞ்சென்ற திரு.திருமதி. சீனியன் தியாகராஜா அவர்களின் மகனும், வத்சலாதேவியின்(டுசி)பிரான்ஸ் அன்புக் கணவரும், தர்சனின் அன்பு தந்தையும் ஆவார்.

அன்னார் வதனி (இலங்கை), அன்ரனட் காமினி (இலங்கை), யூலியட் மாலினி (ஜெர்மனி), அனிஸ்ரி (டோல்) (பிரான்ஸ்), பிறிஜிர் நளாயினி (இலங்கை), லெஸ்லி வண்ணன் (இலங்கை) ஆகியோரின் சகோதரரும், ஜெயசிங்கம் (இலங்கை), ஞானப்பிரகாசம் (இலங்கை), சந்தரலிங்கம் (ஜெர்மனி), மஞ்சுளா (பிரான்ஸ்), சீலன் (கொலண்ட்), ரகு (இலங்கை), ஜீவா(பிரான்ஸ்), ஜினேஸ்(பிரான்ஸ்), ஜெகா (பிரான்ஸ்), ரஜீவ் (பிரான்ஸ்) ஆயோரின் மைத்துனரும், உஜிதாவின் (இலங்கை) மைத்துனியும் ஆவர்.

இவரின் ஆத்மா சாந்திக்காக 03.10.02 அன்று மாலை 2.00 மணி முதல் 3.00 மணி வரை பார்வைக்கு வைக்கப்பட்டு அதே மயானத்தில் மாலை 3.30 மணிக்கு *Ets Santilly - Funérarium de Pantin-10, Rue des Pommiers - 93500 PANTIN M° : Eglise de Pantin* தகனம் செய்யப்படும்

தொடர்புகளுக்கு:
*01 48 40 10 95 - 06 21 31 54 46*
*06 73 20 21 78 - 06 16 97 79 10*

தகவல்: உறவினர்

**Cuisinier தேவை**

பிரெஞ்சு கதைக்கக்கூடிய, பலநாட்டு உணவு வகைகள் சமைக்கத் தெரிந்த, அனுபவம் மிக்க Cuisinier தேவை.
வேலை நேரம்: 9 மணி–18 மணி (வாரத்தில் 5 நாள்)
தொடர்புகளுக்கு: **01 46 07 69 40**
M.Moya François
M°: Louis-Blanc (Paris 10e)

**பற்களின் அழகு சொற்களுக்கு உறுதி!**
**உங்கள் பற்களில் பிரச்சினையா?**



புதிய பற்கள் கட்டவேண்டுமா?
ஆலோசனைக்கு எம்மை நாடுங்கள்!
தொடர்புகளுக்கு:
**01 48 84 92 67**
என்ற தொலைபேசியில் தொடர்பு கொள்ளுங்கள்.

**உங்கள் விழாக்களை இசைமழையில் அலங்கரிக்க**

பாரிசின் முன்னணிக் கலைஞர்களோடு 12 ஆண்டுகளைக் கடந்து உங்கள் மனம் கவர்ந்த

**பாரிஸ் இளையநிலா இசைக்குழு**

**தொடர்புகட்கு:**
இயக்குநர் M.குருநாதன் - 01 48 41 49 90
S. கஜன்-*Free Birds* - 06 09 56 71 81
அருள் Sono - 06 60 65 22 72

Pub.Fr-420

**S.M.T. Tele Movie**



உங்கள் இல்லத்தின் திருமணம், பூப்புனித நீராட்டு விழா, பிறந்த நாள் மற்றும் அனைத்து மங்களகரமான நிகழ்வுகளையும் சிறந்த முறையில் வீடியோவில் படம்பிடித்துக் கொள்வதற்கு நீண்ட காலம் படப்பிடிப்பில் அனுபவம் வாய்ந்தவர்களால் நவீன முறையில் கணினி (Computer) மூலம் உங்கள் இல்லங்களின் நிகழ்வுகளைப் பதிவு செய்து தருகின்றார்கள்.
தொடர்புகளுக்கு: 01 34 68 55 31 / 06 13 07 68 30

# Be an AGENT for SHP

*Eam good money working part-time or full-time*

**if you have:**
- Enthusiasm
- Energy
- Good business connexions in your area
- Accuracy
- Ability to communicate clearly
- English and one or more other languages
- Can turn Contacts into Contracts

**Contact Skill Human power on 0870 330 8176(National rate rumber) immediately. Limited number of vacancies.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலிகளின் புனிதப் போருக்கு மக்கள் பூரணமாக ஒத்துழைக்கவேண்டும்

## சர்வதேச ஐக்கிய சோஷலிசக் கட்சிப் பிரமுகர் எலிசபெத் தெரிவிப்பு

(30.09.02)

இனத்தின் சுதந்திர விடுதலைக்காகப் போராடும் போராளிகள் எங்கும் என்றும் புனிதமானவர்களே. அதே போன்று தமிழ் மக்களின் உரிமைக்காகப் போராடும் தமிழீழ விடுதலைப் புலிகள் இன்று சர்வதேச அரங்கில் புனித மானவர்களாகக் கருதப்பட்டுள்ளார்கள். இவர்களின் புனிதப் போர் நிறைவேறும்வரை மக்கள் பூரணமாக ஒத்துழைக்கவேண்டும் என பிரித்தானியாவையைச் சேர்ந்த சர்வதேச ஐக்கிய சோஷலிசக் கட்சிப் பிரமுகர் திருமதி எஸ்.எலிசபெத் தெரிவித்துள்ளார். கடந்தவாரம் கொழும்பில் நடைபெற்ற மேற்படி கட்சியின் மாநாட்டிற்கு வந்திருந்த இவர், வட பகுதியில் நடைபெறும் அத்துமீறல்களை நேரில் காண்பதற்காக கடந்த வியாழக்கிழமை வடமராட்சிப் பகுதிக்கு சென்றிருந்தார். அங்கு பத்திரிகையாளர்களுடன் உரையாடியபோதே இதனைக் கூறியுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில், இலங்கையின் வடபகுதியில் நடைபெற்றுவரும் இராணுவ அத்துமீறல்கள், அரசியல் அத்துமீறல்கள் போன்றவற்றை நாம் இன்று நேரடியாகக் காண்கின்றோம். இதை நாம் சர்வதேச அரங்கில் முன்வைப்போம் என்று தெரிவித்தார்.

# பருத்தித்துறையில் இளைஞன் மீது இராணுவம் கடுமையான தாக்குதல்

(30.09.02)

யாழ். பருத்தித்துறைப் பகுதியில் தமிழ் இளைஞன் ஒருவர் சிறீலங்கா இராணுவத்தினரால் கடுமையாக தாக்கப்பட்டுள்ளார். சிறீலங்கா இராணுவத்தின் அதியுயர் பாதுகாப்பு வலயமான பருத்தித்துறை கொட்டடிப் பகுதியில் நேற்று முன்தினம் சனிக்கிழமை அதியுயர் பாதுகாப்பு இராணுவ வலயத்தினுள் வசித்து வரும் உறவினர் ஒருவரை பார்த்துவிட்டுத் திரும்பிய போதே தாக்கப்பட்டுள்ளார். பருத்தித்துறையைச் சேர்ந்த எஸ். ரவீந்திரன் கண்ணன் என்ற 25 வயது இளைஞனே தாக்கப்பட்டவர் எனத் தெரிவிக்கப்படுகிறது. தலையில் ஏற்பட்டுள்ள கடுமையான காயம் காரணமாக வல்வெட்டித்துறை வைத்தியசாலையில் இவர் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இராணுவத்தினர் கூறியிருந்தபடி குறித்த நேரத்தில் வெளியேறாமையே இவர் தாக்கப்பட்டதற்கு காரணம் என்று கூறப்படுகிறது. இச்சம்பவம் தொடர்பாக வடமராட்சி விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பணியகத்துக்கு அறிவிக்கப்பட்டு யாழ்ப்பாணம் யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடம் முறையிடப்பட்டது. இதனையடுத்து தாக்கப்பட்ட இளைஞரையும் அழைத்துக்கொண்டு சம்பவம் நடைபெற்ற இடத்திற்குச் சென்ற யுத்த நிறுத்தக் கண்காணிப்பாளர்கள் விசாரணைகளை நடத்தியுள்ளனர்.

## சிறீலங்கா இராணுவத்தினரின் பாதுகாப்புடன் 304 போராளிகள் வன்னிக்குச் சென்றனர்

(30.09.02)

மட்டக்களப்பிலிருந்து சுமார் 200 பெண் போராளிகள் உட்பட 304 விடுதலைப் புலிகள் உறுப்பினர்கள் கடந்த 24ம் திகதி வன்னிக்குச் சென்றனர். இவர்களுக்கு சிறீலங்கா இராணுவம் பாதுகாப்பு வழங்கி அனுப்பி வைத்தது. மட்டக்களப்பு இலுப்படிச் சேனையிலிருந்து புறப்பட்ட இவர்களை செங்கலடி கறுத்த பாலத்தில் வைத்து இராணுவத்தினர் பொறுப்பேற்று பாதுகாப்பு வழங்கினர். இவர்களை வழியனுப்பி வைப்பதற்காகப் புலிகளின் சிறப்புத் தளபதி ரமேஸ் விநோதன், படையணித் தளபதி தாத்தா ஆகியோர் சமுகம் அளித்திருந்தனர்.

இரண்டு பிக்கப் வாகனம் மற்றும் ஐந்து பேருந்தகளில் பயணம் மேற்கொள்ளும் புலிகளின் அணிக்கு புலிகளின் மட்டு. அம்பாறை இராணுவத் தளபதி றொபர்ட் தலைமை தாங்கிச் சென்றார். இரண்டு கவச வாகனங்கள் உட்பட பெருந்தொகையான வாகனங்களில் இராணுவத்தினர் இவர்களுக்குப் பாதுகாப்பாகச் சென்றனர். ஒக்ரோபர் 10ம் திகதி பெண் போராளி மாலதியின் நினைவு தினமாகும். அன்றைய தினம் தமிழீழ பெண்கள் எழுச்சி தினமாகவும் அனுஷ்டிக்கப்படுகிறது. வன்னியில் இது தொடர்பாக இடம்பெறும் அணிவகுப்பு மற்றும் நிகழ்ச்சிகளில் பங்குகொள்ளவே மட்டக்களப்பு விசேட படைப்பிரிவைச் சேர்ந்த கணிசமான பெண் போராளிகள் கிழக்கிலிருந்து வன்னிக்குச் சென்றனர் என செய்திகள் தெரிவிக்கின்றன.

# குஜராத் படுகொலைகளுக்கு ரணில் கண்டனம்

(30.09.02)

கடந்த செவ்வாய்க்கிழமை குஜராத்தின் காந்திநகர் சுவாமி நாராயண் கோவிலில் இடம்பெற்ற படுகொலைச் சம்பவத்திற்கு சிறீலங்காவின் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கடும் கண்டனம் தெரிவித்துள்ளார். கோயில் படுகொலைச் சம்பவம் தொடர்பாக இந்தியப் பிரதமர் அடல் பிஹாரி வாஜ்பாய்க்கு அனுப்பிவைத்துள்ள அனுதாபச் செய்தியிலேயே ரணில் தனது கண்டனத்தை வெளியிட்டுள்ளார். கோவிலில் நடைபெற்ற தாக்குதல் சம்பவத்தைக் கேட்டு தாம் அதிர்ச்சியும் கவலையும் அடைந்ததாகவும், புனித ஸ்தலத்தில் இடம்பெற்ற இப்பயங்கரவாதத் தாக்குதலை வன்மையாகக் கண்டிப்பதாகவும் கூறியுள்ளதுடன், பாதிக்கப்பட்ட மக்களுக்கு தனது அனுதாபங்களையும் தெரிவித்துள்ளார். ஐ.தே.க. ஆட்சிக் காலத்திலும் வடக்கு கிழக்கு பகுதிகளிலுள்ள ஏராளமான இந்து, கிறிஸ்தவ ஆலயங்கள் சிறீலங்காப் படையினரால் அழித்து நாசமாக்கப்பட்டதுடன் ஆலயங்களில் வைத்து பலர் படுகொலை செய்யப்பட்டதும் தெரிந்ததே.

# கடுகுச் செய்திகள்

- கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் வந்த தனியார் பேருந்து ஒன்று புத்தளம், மங்களஎளிய என்ற இடத்தில் விபத்துக்குள்ளானதில் நான்கு பயணிகள் கொல்லப்பட்டனர். 49 பயணிகள் காயமடைந்தனர். 27ம் திகதி அதிகாலை 12.45 மணியளவில் இவ்விபத்து இடம்பெற்றது. மற்றொரு வாகனத்தை முந்திச் செல்ல முற்பட்டபொழுது விபத்து ஏற்பட்டு வீதியோர மரம் ஒன்றுடன் மோதியுள்ளது.

☺☺☺

- கண்காணிப்புக் குழுவின் தலையீட்டை அடுத்து நெடுந்தீவில் பாரிய கடற்படை முகாம் ஒன்றை அமைக்கும் வேலையைக் கைவிட்டு கடற்படையினர் அங்கிருந்து வெளியேறினர். நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் பணிமனைக்குப் பின்புறமாக பாரிய கடற்படை முகாம் ஒன்றை அமைக்கும் நோக்குடன் ஐம்பதுக்கும் மேற்பட்ட கடற்படையினர் தரையிறங்கு கலம் மூலம் கடந்தவாரம் அங்கு தரையிறக்கப்பட்டனர். போர்நிறுத்த உடன்படிக்கையை அப்பட்டமாக மீறி, கடற்படையினர் அங்கு புதிதாக முகாம் நிறுவுவதை ஆட்சேபித்து விடுதலைப் புலிகள், யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடம் நேற்று முறையிட்டிருந்தனர். யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழு அதிகாரிகள் சம்பந்தப்பட்ட தரப்பினருடன் தொடர்புகொண்டு கலந்துரையாடியதை அடுத்து, கடற்படையினர் தமது முயற்சியைக் கைவிட்டு சென்றனர்.

☺☺☺

- சிறீலங்காவின் புனர்வாழ்வு, மீள்குடியமர்த்தல் மற்றும் அகதிகள் விவகாரங்கள் அமைச்சர் டாக்டர் ஜயலத் ஜயவர் தனவுக்கு ஐரிஸ் சர்வதேச பல்கலைக்கழகம் கௌரவ பேராசிரியர் பட்டம் வழங்கி கௌரவித்துள்ளது.

☺☺☺

- வன்னிமாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் இமானுவேல் சில்வாவின் மரணம் தொடர்பாக அவரது மனைவியும் சந்திரன் என்ற நபரும் கைதுசெய்யப்பட்டனர். வவுனியா நீதிமன்றின் உத்தரவின் பேரில் சந்தேக நபரான சந்திரன் கைதானார். அவரைத் தொடர்ந்து சில்வாவின் மனைவியும் கைதுசெய்யப்பட்டார். கடந்த 14ம் திகதி வவுனியாவில் மர்மான முறையில் எரியுண்ட அவரது சடலம் மீட்கப்பட்டது தெரிந்ததே. வீட்டில் படுத்திருக்கையில் வீடு தீப்பிடித்ததால் அவர் எரியுண்டு மரணமானார் எனக் கூறப்பட்டது. இம்மரணம் தொடர்பாக முன்னுக்கு பின் முரணான தகவல்கள் வெளியாகிக்கொண்டிருக்கையில் பொலீஸார் மேற்கொண்ட விசாரணைகளை அடுத்தே அவரது மனைவியும் சந்தேக நபரான சந்திரனும் கைதுசெய்யப்பட்டிருக்கின்றனர். சம்பவதினம் இமானுவேல் சில்வாவுக்கு தூக்கமாத்திரை கொடுத்து மயக்கிய பின்னர் அவர் மீது ஐந்து லீற்றர் மண்ணெண்ணெய் கலந்த பெற்றோலை ஊற்றி தீ மூட்டப்பட்டதாக ஆரம்ப விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

☺☺☺

- வன்னிப் பிரதேசத்தில் பன்றி, முயல் தவிர்ந்த ஏனைய காட்டு, விலங்குகள் வேட்டையாடுதல், அழித்தல் என்பன தடைசெய்யப்பட்டுள்ளதாக விடுதலைப் புலிகளின் வனவள பாதுகாப்புப் பிரிவினர்அறிவித்துள்ளனர். யுத்தம் காரணமாக இயற்கை வளங்கள் அழிந்து சீரற்றுப்போயுள்ளதுடன் வனவிலங்குகள் வேட்டையாடப்படுவதனாலும், அழிக்கப்படுவதனாலும் மாறுபாடுகளும், இயற்கையின் சமநிலைப் பாதிப்புகளும் ஏற்பட்டும் அபாயம் தோன்றியுள்ளதாக சூழலியல் வள ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர். எனவே, உடனடியாகவே இந்த நடைமுறை அமுலுக்கு வருகின்றதென விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர்.

☺☺☺

- ஈ.பி.டி.பி. டக்ளஸ் தேவானந்தா, களுத்துறைச் சிறைக்கைதிகளைப் பார்வையிடச் சென்றசமயம் அங்கிருந்த கைதிகளால் தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பான சந்தேகநபர்களுள் ஒருவரான கந்தசாமி லிங்கேஸ்வரன் என்பவருக்கு களுத்துறை மாஜிஸ்திரேட் நீதிமன்றம் பிணை அனுமதி வழங்கியது. இதனையனடுத்து கடந்த சனியன்று நடைபெற்ற கைதிகள் பரிமாற்றத்தின்போது இவரும் விடுவிக்கப்பட்டார். இவர் சிறீலங்காவின் முன்னாள் பாதுகாப்பு அமைச்சர் லலித் அத்துலத்முதலி கொலைச் சம்பவம் தொடர்பாகக் கைது செய்யப்பட்டு நீண்டகாலமாக தடுத்துவைக்கப்பட்டிருந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

☺☺☺

- யாழ். சோனகதெரு பகுதியில் வீடுகளில் திருடமுயன்ற கோஷ்டி ஒன்றை அப்பகுதியைச் சேர்ந்த சிலரும் பொலீஸாரும் கூட்டாக துரத்திச் சென்றவேளை, பொலீஸார் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனர். இதன்போது திருடர்கள் தப்பிவிட, திருடர் கோஷ்டியை துரத்திப்பிடிக்க முயன்றவர்களில் கருப்பையா கணேஸ் (26), செ.ரமேஸ் (29) ஆகிய இருவர் காயமடைந்தனர்.

☺☺☺

- திருகோணமலையிலிருந்து சுமார் 209 கிலோ மீற்றர் தொலைவில் ஹைதர்வே என்ற துருக்கியின் எண்ணெய்க் கப்பல் கடலில் மூழ்கியது. இக்கப்பலில் இருந்து வெளியான அவசர அபாய அறிவிப்பு சமிக்ஞையை அடுத்து அப்பகுதியில் சென்று கொண்டிருந்த இந்தியக் கப்பல் ஒன்று விரைந்து சென்று மூழ்கிக்கொண்டிருந்த கப்பலில் இருந்த் 18 மாலுமிகளையும் மீட்டது.

வோல்த்தம்ஸ் ரோவில் இரண்டாவது வருடத்துக்குள்

எட்ட நின்றாலும்
கிட்ட வந்தாலும்
அதே மாறா
அழகு தரும் நகைகள்
தங்க நகைகளுக்கான
தனியான ஓர் மாளிகை

ATN Jewellery

ATN Jewellery

37, Palmerston Road, E17 6PR
Tel: 020 8521 9767
Fax: 020 8521 1281

வாரம் ஏழு நாட்களும் காலை 11.30 முதல் மாலை 7 மணி வரை திறந்திருக்கும்



Pub.Lon.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் இளைஞர் யுவதிகளின் விடுதலைக்கு கைதிகள் பரிமாற்றம் உதவ வேண்டும்

## -புலிகளின் அரசியல்துறையினர் வேண்டுகோள்-

(30.09.02)

தென்பகுதிச் சிறைகளில் எந்தவித விசாரணையுமின்றி வாடுகின்ற பல நூற்றுக்கணக்கான தமிழ் இளைஞர் யுவதிகள் விடுதலையாகி தங்கள் குடும்பத்தவர்களுடன் மீண்டும் இணைவதற்கு இந்த யுத்தக் கைதிகளின் பரிமாற்றமானது உதவிகரமானதாக அமைய வேண்டுமென விடுதலைப் புலிகளின் அரசியல்துறையினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர். ஓமந்தையில் இடம்பெற்ற போர்க்கைதிகள் பரிமாற்ற நிகழ்வு தொடர்பாக புலிகளின் அரசியல்துறை யினர் வெளியிட்ட அறிக்கையில் இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது

அரசியல்துறையினரின் இந்தச் செய்தியைப் புலிகளின் அரசியல்துறை துணைப்பொறுப்பாளர் தங்கன் (சுதா) இந்த நிகழ்வில் வாசித்தார்.

அந்தச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, மிக நீண்டகாலமாகத் தங்கள் குடும்ப உறவுகளிடமிருந்து பிரிக்கப்பட்டிருந்த கைதிகளை விடுவிக்கும் இந்த மிக முக்கியமான வைபவத்தில் கலந்துகொள்ளும் வகையில் நாம் அனைவரும் இங்கு கூடியிருக்கின்றோம். குடும்பப் பெறுமானங்களை மதிப்பவர்கள் என்ற வகையில் இந்தக் குடும்பங்களின் மீளிணைவானது எமக்கு பெரும் சந்தோசத்தைத் தருகிறது. மனிதாபிமான அடிப்படையில் எமது தலைவர் வே.பிரபாகரனின் நல்லெண்ண வெளிப்பாடாகப் போர்க்கைதிகள் காலத்திற்கு காலம் விடுதலை செய்யப்பட்டு அவர்களின் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டு வருவதை நீங்கள் அறிவீர்கள்.

தற்போது ஏற்பட்டுள்ள சமாதானச் சூழ்நிலைக்கு மேலும் வலுவூட்டவும் பரஸ்பர புரிந்துணர்வு மற்றும் நம்பிக்கை ஏற்படவும் இந்தக் கைதிகளின் விடுதலை அமையுமென்பதில் நாம் மிகுந்த நம்பிக்கை கொண்டுள்ளோம். இந்த இறுதியணிக் கைதிகள் விடுவிப்பு தொடர்பில் கடந்த கால அரசுக்கும் எமது அமைப்பிற்குமிடையில் மிக நீண்ட பேச்சுக்கள் நடைபெற்றபோதிலும் பேச்சுக்களுக்குப் பொறுப்பாகவிருந்தவர்கள் மனிதநேய சிந்தனையில்லாதவர்களாக இருந்ததால் இந்த இறுதியணிக் கைதிகளின் விடுதலை தாமதமாயிற்று. தற்போது இவர்கள் அனைவரும் பெற்றோர்கள் உறவினர்கள் நண்பர்களுடன் மீண்டும் இணையப் போவதையிட்டு நாம் பெரும் மகிழ்ச்சியடைகிறோம். அதேபோன்று தென்பகுதிச் சிறைகளில் எந்தவித விசாரணையுமின்றித் தடுத்துவைக்கப்பட்டுள்ள எம்மவர்களது விடுதலைக்கும் இந்தக் கைதிகள் பரிமாற்றம் உதவ வேண்டும். தென்பகுதியில் விசாரணைகளின்றி சிறைகளில் வாடிக்கொண்டிருக்கும் எமது சகோதரர்களையும் சகோதரிகளையும் விரைவாக விடுதலை செய்ய நாம் மிகுந்த கவனம் செலுத்த வேண்டும். தெற்குச் சிறைகளில் வாடும் தமிழ் இளைஞர் யுவதிகளின் விடுதலைக்கு கைதிகள் பரிமாற்றம் உதவ வேண்டும் என்று தெரிவித்தார்.

# புலிகளுக்கும் தனியாக சமாதானச் செயலகம்

### ஜோன் வெஸ்ட்பேர்க் சு.ப. தமிழ்ச்செல்வனுடன் சந்திப்பு

(30.09.02)

தற்போதைய அமைதி முயற்சிகளை முன்னெடுப்பதற்கு அரசுத் தரப்பில் சமாதானச் செயலகம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. அதேபோன்ற சமாதானச் செயலகம் ஒன்று விடுதலைப் புலிகள் தரப்பிலும் தனியாக அமைக்கப்படவிருக்கின்றது. நேற்று கிளிநொச்சிக்கு சென்றிருந்த கொழும்புக்கான நோர்வேத் தூதுவர் ஜோன் வெஸ்ட்பேர்க், அங்கு விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனுடன் நடத்திய பேச்சுக்களில் சமாதானச் செயலகம் அமைப்பது பற்றிய விடயம் குறித்து ஆராயப்பட்டுள்ளது.

கடந்த புதன்கிழமை ஜோன் வெஸ்ட்பேர்க் வன்னிக்குச் சென்று சு.ப.தமிழ்ச் செல்வன் தலைமையிலான புலிகளின் பிரதிநிதிகள் குழுவினருடன் அவர் விரிவாகப் பேச்சு நடத்தினார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, தான் பிரதமராகப் பதவியேற்ற கையோடே, பிரதமர் அலுவலகத்தில் சமாதானச் செயலகம் ஒன்றை அமைத்தார். தற்போது சமாதானப் பேச்சுக்களில் பங்குபற்றும் பேர்னாட் குணதிலக அதன் பணிப்பாளர் நாயகமாக நியமிக்கப்பட்டார். அதேபோன்ற சமாதானச் செயலகம் ஒன்று புலிகள் தரப்பில் தனியாக அமைக்கப்பட உள்ளது. கிளிநொச்சியில் அதன் தலைமையகத்தையும், வடக்கு - கிழக்கு மாகாணங்களில் மாவட்டம் தோறும் அதன் கிளைப் பணிமனைகளையும் திறக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. மக்கள் எதிர்நோக்கும் அன்றாடப் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணுதல், மீள்குடியேற்றம், கண்ணிவெடி அகற்றல் போன்ற நடவடிக்கைகளை ஒருங்கமைத்துச் செயற்படுத்தல் போன்ற விடயங்கள் இந்தச் செயலகத்தின் கீழ் கொண்டுவரப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. நேற்று கிளிநொச்சியில் ஜோன் வெஸ்ட்பேர்க்குடன் இடம்பெற்ற சந்திப்பில் இவ்விடயங்கள் குறித்து விரிவாகப் பேசப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

# புலிகள் மீதான நம்பிக்கையை பாலசிங்கத்தின் பதில்கள் பலப்படுத்தியுள்ளன

## - அமைச்சர் பீரிஸ் பாராட்டு -

(30.09.02)

விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் தாய்லாந்தில் பத்திரிகையாளர்களின் கேள்விகளுக்குப் பதிலளித்த விதம், சிறீலங்கா அரசுக்கு விடுதலைப் புலிகள் மீதான நம்பிக்கையை அதிகரிக்கச் செய்திருக்கிறது. புதிய தெம்பையும் ஏற்படுத்தியுள்ளது என்று அமைச்சரவைப் பேச்சாளரான அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார். அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நடைபெற்ற - வாராந்த அமைச்சரவைக் கூட்டத் தீர்மானங்களை அறிவிக்கும் - மாநாட்டிலேயே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் கூறியதாவது, தாய்லாந்தில் நடைபெற்ற பேச்சு வெறும் வைபவரீதியான ஆரம்பம் என்று கூறிவிடமுடியாது. இரு தரப்பிலும் உணர்வுபூர்வமாகப் பல விடயங்கள் ஆராயப்பட்டு, புலிகளுக்கும் அரசுக்கும் இடையிலிருந்த இடைவெளி நீக்கப்பட்டுள்ளது. ஒற்றை ஆட்சிக்குள் தமிழ் மக்களின் சுயநிர்ணய, அடிப்படை உரிமைகள் மற்றும் தன்னாட்சியை அரசு ஊர்ஜிதப்படுத்தினால் தனிநாட்டுக் கோரிக்கை பற்றி சிந்திக்க வேண்டிய அவசியம் வராது என பாலசிங்கம் குறிப்பிட்டிருக்கிறார். இடைக்கால நிர்வாகசபை என்பது நிரந்தரமான ஒன்று அல்ல அது தற்காலிகமானதே. தமிழ் மக்களின் எண்ணங்கள், அபிலாஷைகள், அடிப்படை உரிமைகள் தொடர்பாக உறுதியான ஒரு தீர்வு காண்பதற்கான ஓர் அடித்தளம் மட்டுமே அது.

இடைக்கால நிர்வாக சபை நிரந்தரமாகிவிடும் என்று எவரும் அஞ்ச வேண்டியதில்லை என அன்ரன் பாலசிங்கம் கூறியமை பெரும்பான்மை இன மக்களுக்கு அவர் நேரடியாகக் கூறியதுபோல் அமைந்திருந்தது.

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான இரண்டாவது சுற்றுப் பேச்சு ஒக்ரோபர் 31ம் திகதி முதல் நவம்பர் 3ம் திகதி வரை தாய்லாந்தில் நடைபெறும். இந்தப் பேச்சுக்களிலும், சென்ற முறை கலந்துகொண்ட அரசுப் பிரதிநிதிகளே கலந்துகொள்வார்கள். அதில் மாற்றம் இல்லை. கடந்த பேச்சின்போது இணக்கம் காணப்பட்ட மீள்குடியமர்வு, கண்ணி வெடி அகற்றுதல் ஆகிய இரு விடயங்களிலும் அரசும் புலிகளும் இணைந்து செயற்படுவதால் அவை பெரும் வெற்றியளிக்கும். அடுத்த கட்டப் பேச்சுக்களுக்கு முன் பெருமளவில் மீள்குடியமர்வு நடைபெற்றுவிடும். இரண்டாவது கட்டப் பேச்சுக்களில் பொருளாதார அபிவிருத்தி மற்றும் கல்வி, கலாசாரம், சுகாதாரம், மற்றும் அடிப்படைப் பொதுவசதிகள் தொடர்பாக ஆராயப்படும். முதற்கட்டப் பேச்சுக்களை சர்வதேச சமூகமும், பொதுநலவாய அமைப்பு நாடுகளும் பெரிதும் வரவேற்றுள்ளன. நானும் அமைச்சர் மிலிந்த மொறகொடவும் பேச்சுக்களைத் தொடர்ந்து பிரிட்டன், கனடா, அமெரிக்கா ஆகிய நாடுகளுக்குச் சென்றோம். இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகள் அனைத்தும் கூட்டாக எமது நாட்டின் அபிவிருத்திக்கு உதவ பாரிய திட்டம் ஒன்றை வகுத்து வருகின்றன. இவ்வாறு பேராசிரியர் பீரிஸ் கூறினார்.

# 5000 படையினரை திரட்ட நடவடிக்கை

(30.09.02)

இராணுவத்துக்கு மேலும் 5000 பேரைத் திரட்டுவதற்கு சிறீலங்கா அரசு நடவடிக்கைகள் மேற்கொண்டுள்ளது. புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்தாகி, இரு தரப்பு போர் நிறுத்தம் அமுலுக்கு வந்து ஒரு வாரத்தில் இராணுவத்துக்கு ஐயாயிரம் பேரைத் திரட்டுவதற்கு அழைப்பு விடுக்கப்பட்ட போதிலும் 475 பேர் மட்டுமே புதிதாக இணைந்துகொண்டனர். இந்நிலையில் படைக்கு ஆள் சேர்ப்பதற்கு இரண்டாவது முயற்சியை சிறீலங்கா அரசு ஆரம்பித்துள்ளது. இந்தத் தடவை ஆள் சேர்ப்பின்போது படையில் இணைவதற்கான கல்வித்தகைமை மேலும் குறைக்கப்படவிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

# குடாநாட்டில் தீவிரமடையும் படையினரின் கெடுபிடி சமாதானத்துக்குப் பெரும் அச்சுறுத்தல்

### யாழ். அரசியல் பொறுப்பாளர் தெரிவிப்பு

குடாநாட்டில் நிலைகொண்டுள்ள சிறீலங்காப் படையினர் தமது நிலைகளைப் பலப்படுத்தி வருவதும், மக்கள் மீதும் போராளிகள் மீதும் கெடுபிடிகளை விதித்து வருவதும் தற்போதைய சமாதான முயற்சிகளுக்கு அச்சுறுத்தலாகவே அமைந்துள்ளன என யாழ். மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி தெரிவித்தார். நல்லூர் கந்தசுவாமி கோயில் வீதியில் இடம்பெற்ற லெப்.கேணல் திலீபனின் 15வது நினைவு தின நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில், மக்கள் முன்சென்று போராட்டத்தின் நிலைப்பாட்டையும், எதிர்கால நடவடிக்கைகளையும் எடுத்துக் கூறியவன் திலீபன். இந்திய அமைதிப்படையினர் எமது மண்ணில் காலூன்றிய பின்னர் நடந்த விடயங்களையும், நடைபெறப் போகும் நிகழ்வுகளையும் முற்கூட்டியே தீர்க்க தரிசனமாகக் கூறியவன் இவன்.

அன்று திலீபன் வளர்த்த சுதந்திரத்தீ இன்று மக்கள் மனதில் கொளுந்து விட்டெரிந்து கொண்டிருக்கிறது. இன்று இந்த இடத்தில் மக்களும், புலிகளும் ஒன்றான சூழ்நிலை ஏற்பட்டுள்ளதைப் பார்க்கும்போது போராட்டம் எந்த அளவுக்கு வலுப் பெற்றுள்ளது என்பதை உணரமுடிகிறது. மக்கள் எழுச்சிபெற்று, போராட்டம் வலுப்பெறும்போது ஓர் இனம் சுதந்திரம் அடைவதை எவராலும் தடுக்க முடியாது. மக்கள் சுதந்திரமாக வாழவும் தமது சொந்த மண்ணில் தாம் நினைத்ததை எவ்வித தடையுமின்றிச் செய்யவும், சுதந்திரமாகக் கல்வி கற்கவும் எவ்வித தடைகளும் இருக்கக் கூடாது என்பதையே திலீபன் விரும்பினான்.

அவனது கனவு நனவாகும் சூழல் தற்பொழுது உருவாகிவருவதைக் காணக்கூடியதாக உள்ளது. அரச படையினரும் இதன் மூலம் போராட்டத்தின் நியாயத்தை அறிந்து கொள்வர் என்று நம்புகிறோம் என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலிகளிடம் பலம் பொருந்திய இராணுவம் உள்ளது

# ஜே.வி.பி. கொள்கையில்லாத கட்சி

## பத்தேகம சுமித்த தேரர்

(30.09.02)

காலையில் கூறுவதை மாலையில் மறந்துவிட்டு வேறு கதையைக் கூறும் கொள்கையில்லாக் கட்சி தான் ஜே.வி.பி. எவ்விடயம் தொடர்பிலும் நிரந்தரமான ஆணித்தரமான கருத்தை அவர்கள் வெளியிட்டதில்லை. இளைஞர்களைப் பலி கொடுத்ததும் இரத்த ஆறை ஓட விட்டதுமே வரலாறு முழுவதும் அவர்கள் செய்து வந்த காரியங்களாகும். இவ்வாறு காலி மாவட்ட பொதுஜன ஐக்கிய முன்னணி நாடாளுமன்ற உறுப்பினர் பத்தேகம சமித்த தேரர் தெரிவித்துள்ளார். ஜே.வி.பி.யின் பயணம் மிகக் குறுகிய காலமேயாகும். அது ஒரு இளைப்பாறும் தங்குமடம். பொதுஜன ஐக்கிய முன்னணி மீது அதிருப்தி கொண்டோர் ஜே.வி.பி.க்கு வாக்களித்தனர். இதனால் தான் மூன்றாமிடத்திற்கு அவர்கள் வந்தனர். சிறீலங்கா சுதந்திரக் கட்சிக்குள் குழப்பங்களை ஜே.வி.பி.யினரே ஏற்படுத்துகின்றனர். இன்று பொதுஜன ஐக்கிய முன்னணிக்குள் உள்ள சிலருக்கு ஜே.வி.பி. இல்லாமல் ஒன்றும் செய்யமுடியாது. அப்படியானவர்கள் அவர்களுடனேயே போகட்டும்.

பொதுஜன ஐக்கிய முன்னணியினதும் ஜே.வி.பி.யினதும் கொள்கைகள் வேறு. தேசிய பிரச்சினை, பொருளாதார நிகழ்ச்சி நிரல், அரசியல் வியூகங்கள் அனைத்திலும் வேறுபட்ட கொள்கைகளைக் கொண்ட ஜே.வி.பி.யுடன் இணை-ந்து செயற்பட முடியாது என்று சமித்த தேரர் தெரிவித்துள்ளார்.

பொதுஜன ஐக்கிய முன்னணி, ஐ.தே.கட்சி மட்டுமல்ல ஜே.வி.பி., சிஹல உறுமய பேச்சுவார்த்தைக்கு சென்றாலும் நிபந்தனைகளுடனேயே போகவேண்டும். ஆயுதங்களை கீழேவைத்து விட்டுத்தான் பேச்சுக்கு வரவேண்டுமென நிபந்தனை விடுப் போர் முடியுமானால் அவ்வாறு பேசிப் பார்க்கட்டும் என சவால் விடுக்கிறேன். மேற்கில் உதிக்கும் சூரியன் கிழக்கில் உதித்தாலும் இது போன்ற நிலை ஏற்படாது.

விடுதலைப் புலிகளிடம் பலம் பொருந்திய இராணுவம் உள்ளது. அவர்களது கட்டுப்பாட்டிலும் பிரதேசங்கள் உள்ளன. அரசாங்கத்திடம் உள்ளதைவிட அதிகளவில் பண பலம் உள்ளது. சர்வதேச ரீதியில் பலமான நிலை அதற்குள்ளது. இவையனைத்தும் போதும் நாம் யுத்தத்திற் தோற்பதற்கு. இது மாயையல்ல உண்மை இதுதான். இத்தகைய நிலையில் ஜே.வி.பி.யினதும் அரசாங்கத்தினதும் தாளத்திற்கு புலிகள் ஆடுவார்களா? எனவே, நாட்டைப் பிரிக்காது பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டு பிரச்சினையைத் தீர்ப்பதை விட எங்களுக்கு வேறு வழியில்லை என்றும் சமித்த தேரர் தெரிவித்துள்ளார்.

# கட்டுநாயக்காத் தாக்குதல் 6000 பக்கங்களில் அறிக்கை

(30.09.02)

கட்டுநாயக்கா விமானப்படைத் தளத்தின் மீது நடத்தப்பட்ட தாக்குதல் தொடர்பான முழு விசாரணை அறிக்கையையும் இரகசியப் பொலீஸார் சட்டமா அதிபருக்கு அனுப்பி வைத்துள்ளனர். இந்த விசாரணை அறிக்கை சுமார் 6000 பக்கங்களைக் கொண்டதென சட்டமா அதிபர் திணைக்களப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார். விசாரணை அறிக்கை சட்டமா அதிபர் கே.சி.கமலசபேசனின் பணிப் புரைக்கமைய சிரேஷ்ட அரச சட்டத் தரணிகள் குழுவொன்றினால் பரிசீலிக்கப்பட்டு வருகிறது. தற்போது கைது செய்யப்பட்டுள்ள ஐந்து சந்தேக நபர்களுக் கெதிராக மேல் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்வதற்கு சட்டமா அதிபர் திணைக்களம் நடவடிக்கை எடுத்து வருவதாகவும் கூறப்பட்டது.

# பெண்களுடன் சேஷ்டை புரிந்தவர்கள் புலிகளிடம் சிக்கினர்

## மக்கள் மகிழ்ச்சி தெரிவிப்பு

வடமராட்சிப் பகுதியிலுள்ள உடுப்பிட்டிப் பிரதேசத்தில் இளைஞர்களின் செயல்கள் பெண்களை அவமானப்படுத்துவதாகத் தெரியவருகின்றது. இப்பிரதேசத்தில் வீதியால் சென்ற பெண்பிள்ளைகளுடன் சேஷ்டை புரிந்தும் தகாத வார்த்தைகளால் பேசியவர்களுமான இரு இளைஞர்கள் வல்வெட்டித்துறை தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளரிடம் வகையாக மாட்டிக் கொண்டனர். அதனைத் தொடர்ந்து அரசியல்துறைப் பொறுப்பாளர் மக்கள் முன்னிலையில் வைத்தே தண்டனை வழங்கியதுடன் அந்த இளைஞர்களின் பெற்றோர்கள் வரவழைக்கப்பட்டு அவர்களின் முன்னிலையில் நாம் இனி இப்படியான தகாத செயல்களை செய்யமாட்டோம் என உறுதி உரை வழங்கியதுடன் இனி இவ்வாறான செயல்களில் ஈடுபட்டால் தமிழீழ விடுதலைப் புலிகள் மேற்கொள்ளும் நடவடிக்கைக்கு அமைவாக அதற்கான தண்டனையையும் ஏற்றுக்கொள்வோம் எனவும் கையொப்பம் இட்டு ஓர் உறுதிக் கடிதமும் வாங்கியுள்ளனர்.

மேற்படி சம்பவங்கள் பல மாதங்களாக நடைபெற்று வருவதாகவும் பாடசாலை, ரியூசன்மற்றும் கடைகளுக்குச் செல்ல முடியாத நிலை உள்ளதாக பெற்றோர்கள் முறைப்பாடு செய்ததைத் தொடர்ந்தே விடுதலைப் புலிகள் இந்நடவடிக்கையினை மேற்கொண்டமையும் குறிப்பிடத்தக்கது. இளைஞர்களை திருந்த வைத்ததுடன் பெண்பிள்ளைகள் சுதந்திரமாக நடமாடவைத்த விடுதலைப் புலிகளின் இந்நடவடிக்கை தமக்கு மகிழ்ச்சி அளிப்பதாக அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.


உங்கள் தலைமுடி உதிர்கின்றதா? கவலையை விடுங்கள்

இதோ புதிய திருத்தியமைக்கப்பட்ட வடிவத்தில் ஜேர்மனியின் புதிய கண்டுபிடிப்பு



Naturina®

முடி உதிர்வு, மெல்லிய முடி, இளநரை, முடிவளர்ச்சி நிறுத்தம், முடியின் வெடிப்புத் தன்மை, பளபளப்பற்ற முடி, நகங்கள் விரைவில் உடையும் தன்மை, கணைவெடிப்பு, போன்றவற்றால் விரக்தியடைந்து போயுள்ளவர்களுக்கு ஓர் நற்செய்தி!

இந்தப் பிரச்சினைகள் வயதானவர்களுக்கு மட்டுமல்ல இள வயதினருக்கும் ஏற்படலாம். ஆனால் இக் குறைபாடுகளை Naturina® வைத் தொடர்ந்து உபயோகிப்பதன் மூலம் தடுத்து நிறுத்தலாம்.

இத் தயாரிப்பு நீண்டகாலமாக ஆய்வுகளில் ஈடுபட்டுவந்த ஜேர்மனி முன்னணி நிறுவனத்தின் கண்டுபிடிப்பு.

Naturina® இயற்கையான மருத்துவத்தின் கலவைகளை அடிப்படையாகக் கொண்ட ஓர் உயிர்ப்புக் கலவையாகும்.

இத் தயாரிப்பு எந்தவித பக்க விளைவுகளையும் ஏற்படுத்தாது.




இதோ நிவாரணம் தருகின்றது

ஜேர்மனியில் புதிதாக திருத்தியமைக்கப்பட்ட வடிவில்

Naturina® இக்குறைபாடுகளை 3 மாதங்களுக்குத் தொடர்ந்து பாவிப்பதன் மூலம் இக்குறைபாடுகளைத் தவிர்க்கலாம்.

உங்கள் தோலுக்குத் தேவையான உயிர்ச் சத்துக்களையும் கனியுப்புக்களையும் வழங்குகிறது. Naturina®

மேலும் உங்கள் தோல் வரட்சித் தன்மையாகவோ அல்லது எண்ணெய்த்தன்மை கூடியதாகவோ அல்லது மெதுமையான நகங்களுக்கு விரைவில் உடையும் நகங்களுக்கு நிவாரணம் தருகின்றது Naturina® கூட்டுக்குளிகைகள்.

Naturina® வால் நிவாரணம் அடைந்த பலர் தமது பாராட்டுக்களை எமக்குத் தெரிவித்தவண்ணமுள்ளனர்.

புதிய வடிவமைக்கப்பட்ட அதிசக்தி கொண்ட Naturina தயாரிப்புக்கள் தற்போது மலிவு விலையில் விற்பனையாகின்றது.

மூன்று மாதங்களுக்கான பொதி (3 Xshampoo + 3X Hairtonic + 3X Capsules

**ஜேர்மனி 99 யூரோ, சுவிஸ் 166.50 சுவிஸ் பிராங்**

**பிரித்தானியா -65 பவுண்**

***விசேட விலைச் சலுகையைத் தவறவிடாதீர்கள்.***

எமது புதிய தயாரிப்புக்களைப் பற்றி அறிய விரும்பினால் எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள். உங்களுக்கான ஆலோசனைகளை வழங்கக் காத்திருக்கின்றோம்.

மேலதிக விபரங்களுக்கு:

**Intercare Handels GmbH**

Nassauer str 33-37, 59065 Hamm-Germany

Tel: 0049 1805 915910 / Fax: 0049 1805 915920

Internet: www.naturina.de


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# தமிழர்களை ஏமாற்றும் நடிகர்கள் தமிழ் அமைப்புகள் கண்டனம்

காவிரிப் பிரச்சினையில் இயக்குநர் இமயம் பாரதிராஜா மிகக் கடுமையாகக் குரல் கொடுத்தும் கூட இப்பிரச்சினைக்காக தீவிரமாகப் போராடும் எண்ணம் இல்லையென்று தென்னிந்திய நடிகர் சங்கம் கூறியுள்ளது. இதைப் பல தமிழ் அமைப்புகள் வன்மையாகக் கண்டித்துள்ளன. சந்தனக் கடத்தல் வீரப்பனிடமிருந்து பத்திரமாக மீட்கப்பட்ட கன்னட நடிகர் ராஜ்குமாரின் தலைமையில் தமிழகத்திற்குத் தண்ணீர் விடுவதை எதிர்த்து சமீபத்தில் பெங்களூரில் கன்னட நடிகர்கள் ஊர்வலம் நடத்தினர். இது தமிழ்த் திரையுலகில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. தமிழனால் உயிர் பிழைத்த ராஜ்குமாரே தமிழகத்திற்கு எதிராகப் போர்க் கொடி உயத்துவதா என்றும், தமிழர்களின் பணத்தில் பிழைப்பு நடாத்தும் சில கன்னட நடிகர்களைக் கண்டித்தும் இயக்குநர் பாரதிராஜா மிகக் கடுமையாக விமர்சித்திருந்தார். இந்நிலையில் தென்னிந்திய நடிகர் சங்கமும், பிற தமிழ்த்திரைப் படச் சங்கங்களும் அமைதி காத்து வந்த பாரதிராஜாவின் அறிக்கையைத் தொடர்ந்து தென்னிந்திய நடிகர் சங்கம் கடந்த 27ம் திகதி தலைவர் விஜயகாந் தலைமையில் அவசரமாகக் கூடியது. இக்கூட்டத்தில் காவிரிப் பிரச்சினையில் கன்னடத் திரையுலகம் காட்டியது போன்ற தீவிரத்தை தமிழ்த் திரையுலகினரும் காட்டினால் தமிழகத்தில் பெரும் போராட்டம் வெடிக்கும் என்ற காரணத்தைக் காட்டி, காவிரிப் பிரச்சினையில் நடிகர் சங்கம் தலையிடுவதில்லை என்றும் உச்ச நீதிமன்றமும், தமிழக கர்நாடக அரசுகளும் பேச்சு நடத்தி முடிவுகாண வேண்டுமென்று கூறி ஒதுங்கிக்கொண்டுள்ளன.

நடிகர் சங்கத்தின் இந்த முடிவில் பல தரப்பினருக்கும் உடன்பாடில்லை என்று கூறப்படுகிறது. ரஜனியின் வேண்டுகோளின் பேரில்தான் இந்த முடிவை விஜயகாந் எடுத்துள்ளதாகவும் கூறப்படுகிறது. இது குறித்து பல தமிழ் அமைப்புக்கள் கூட்டாக வெளியிட்டுள்ள அறிக்கையில், எப்படியோ தமிழர்களின் பணத்தில் கோடிகளில் புரளும் தமிழ்த் திரையுலகினர் தமிழர்கள் பாதிக்கப்படும்போது



அவர்களுக்காக குரல்கொடுக்கத் தயாரில்லை என்பது வேதனையிலும் வேதனை. ஆனால் அவர்களுக்கு பணம் வேண்டுமென்றால் கடல் கடந்து நிம்மதியாக வாழும் தமிழர்களையும் விடாமல் துரத்தி நாடகம் போட்டு, பாட்டுப்பாடி நிதி கேட்டு காரியத்தைச் சாதித்துக்கொள்வார்கள். இன்று சோற்றுக்கு வழியில்லாமல் எலியைப் பிடித்துத் தின்னும் கிராமவாசிகளும், கர்நாடகத்திடம் தண்ணீர் கேட்கும் விவசாயிகளும்தான் திரையரங்குகளில் இவர்களின் படத்தைப் பார்த்து அவர்களுக்கு கோடிகளைச் சேர்த்துக்கொடுத்தவர்கள். தமிழ் திரையுலகினரின் நன்றியுணர்ச்சி புல்லரிக்க வைக்கிறது, என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பிரபல இந்தி நடிகர் சல்மான்கான் கொலை வழக்கில் கைது

குடி போதையில் இருந்த இந்தி நடிகர் சல்மான்கான் ஓட்டிய கார் மோதி ஒருவர் இறந்தார். மேலும் நான்குபேர் பலத்



த காயமடைந்தனர். மும்பையில் கடந்த 27ம் திகதி இரவு 2.50 மணிக்கு இந்தச் சம்பவம் நடந்துள்ளது. வீதியோரமாக உறங்கிக்கொண்டிருந்தவர்கள் மீதே இந்தக் கார் விபத்து நடந்துள்ளது. இதையடுத்து சல்மான்கான் அந்த இடத்திலிருந்து தப்பியோடிவிட்டார். தப்பியோடிய சல்மான்கானைப் பிடிக்க தனிப்படைகள் அமைக்கப்பட்டன. இந்நிலையில் கடந்த 28ம் திகதி காலை 7 மணியளவில் அவர் தானாகவே வந்து சரணடைந்துள்ளார். இந்தி திரையுலகில் சல்மான்கான் `பேட்டை ரவுடி' என்று வர்ணிக்கப்படுபவர். இவர்மீது ஏற்கனவே பல வழக்குகள் நிலுவையில் உள்ளன. முன்னாள் உலக அழகியும், பிரபல இந்தி நடிகருமான ஐஸ்வரியாராயை காதலித்த இவர் அதற்காக பல தடவை ஐஸ்வரியாராய் மீது பல வன்முறைச் சம்பவங்களில் ஈடுபட்டார் என்று காவல் துறையினரால் கைதுசெய்யப்பட்டவர். ராஜஸ்தான் பகுதியில் மான்களை வேட்டையாடிய வழக்கிலும் பத்திரிகை புகைப்படக் காரரைத் தாக்கிய இன்னொரு வழக்கிலும் இவர் பிணையில் உள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

## சென்னையில் தடையை மீறி பேரணி நூற்றுக்கணக்கான மாணவர்கள் கைது

சென்னையில் தடையை மீறி பேரணி நடத்த முயன்ற 800 இற்கும் அதிகமான மாணவர்கள் கடந்த 27ம் திகதி கைதுசெய்யப்பட்டனர். அரசு கல்லூரிகளை பல்கலைக்கழகங்களுடன் இணைக்கும் தமிழக அரசின் சட்டத்தைக் கைவிடக்கோரி கல்லூரி மாணவ, மாணவிகள் சென்னையில் பேரணி நடாத்தி மனுக்கொடுக்கத் திட்டமிட்டிருந்தனர். ஆனால் பேரணி நடாத்த காவல் துறையினர் அனுமதி மறுத்தனர். 27ம் திகதி காலையில் திட்டமிட்டபடி மன்றோ சிலையருகே இந்திய மாணவர் சங்கத்தினரும் மெமோறியல் கோல் அருகே அனைத்து இந்திய மாணவர் பெருமன்றத்தைத் சேர்ந்தவர்களும் பேரணி நடாத்த முயன்றனர். தமிழகம் முழுவதிலுமிருந்த மாணவ, மாணவிகள் இதில் பங்கேற்க வந்திருந்தனர். ஆனால் அவர்களைக் காவல் துறையினர் கைது செய்து பொது மண்டபங்களில் தடுத்து வைத்திருந்தனர். அன்றிரவு அனைவரும் விடுதலை செய்யப்பட்டனர்.

இது தொடர்பாக அனைத்து இந்திய மாணவர் பெருமன்றத்தில் மாநில செயற்குழு வெளியிட்டுள்ள அறிக்கையில் மாணவர் உரிமைகளுக்காக மாணவர்கள் போராடும்போது ஜனநாயகத்திற்கு விரோதமாக காவல்துறை நடந்துகொள்வது கண்டிக்கத்தக்கது என்றும் பேரணிக்கு வந்த மாணவ, மாணவிகளை சென்னைக்குள்ளே நுழையவிடாமல் பல்வேறு இடங்களில் தடுத்து வைத்தது கண்டிக்கத்தக்கது என்றும் கூறப்பட்டுள்ளது. மாணவர்கள் கோரிக்கையை நிறைவேற்ற அரசு முன்வரவேண்டும். கோரிக்கைகளை நிறைவேற்றாவிட்டால் மாணவர் போராட்டம் தொடரும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பாபா – நஷ்டமடைந்தவர்களுக்கு பணம் திருப்பப்பட்டது

பாபா படத்தை வாங்கி கடுமையாக நஷ்டப்பட்ட திரையரங்கு உரிமையாளர்களுக்கும் விநியோகஸ்தர்களுக்கும் கோடிக் கணக்கில் பணத்தைத் திருப்பிக் கொடுத்தார் ரஜனிகாந். திரையுலக வரலாற்றில் அதிகளவில் பேசப்பட்ட, விமர்சிக்கப்பட்ட படம் பாபா. பெரும் தொகைக்கு இந்தப் படத்தை விற்றார் ரஜனி. படத்தின் திரைக்கதை தெளிவின்மையால் படம் மோசமான தோல்வியைத் தழுவியுள்ளது. மேலும் டாக்டர் ராமதாசின் விமர்சனம் பா.ம.காவின் அடிதடி ஆகியவையும் இத்தோல்விக்கு இன்னும் வலுச் சேர்த்தன. இதனால் தாம் போட்ட பணத்தைத் திருப்பித் தருமாறு விநியோகஸ்தர்கள் ரஜனியிடம் வலியுறுத்தினர். இதையடுத்தே இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது. இந்தத் தகவலை பாபா படத்தின் விநியோகஸ்தர்கள் கடந்த 27ம் திகதி மாலை நிருபர்களிடம் தெரிவித்தனர். ரஜனி சொன்னபடி 110 திரையரங்கு உரிமையாளர்களுக்கும், 10 விநியோகஸ்தர்களுக்கும் பணம் திருப்பிக் கொடுக்கப்பட்டுள்ளது.

## குஜராத் படுகொலைக்கு பாகிஸ்தானியர்களே காரணம்

குஜராத் தலைநகர் காந்திநகரில் உள்ள அக்சார்தாம் சுவாமி நாராயணன் கோவிலில் புகுந்து அங்கிருந்த 32 பக்தர்களைச் சுட்டுக்கொன்ற பயங்கரவாதிகள் இருவரும் பாகிஸ்தானியர்களைச் சேர்ந்தவர்களே என்பது தெளிவாகக் கண்டுபிடிக்கப் பட்டுள்ளதாக உள்துறை அமைச்சு தெரிவித்துள்ளது. தேசியப் பாதுகாப்புப் படையின் வீரர்களால் சுட்டுக்கொல்லப்பட்ட இரண்டு பயங்கரவாதிகளில் ஒருவர் லாகூரைச் சேர்ந்தவர் என்றும், மற்றவர் பாகிஸ்தான் தலைநகர் இஸ்லாமாபாத்தைச் சேர்ந்தவர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. குஜராத்தில் தாக்குதல் நடாத்தியவர்கள் பாகிஸ்தானியர்கள் அல்ல என்றும், குஜராத் கலவரத்தின் எதிர் விளைவாக இத்தாக்குதல் நடந்துள்ளது என்றும் பாகிஸ்தான் ஜனாதிபதி முஷாரப் கூறியிருந்தது, சதியை மறைக்கும் திட்டமிட்ட பொய்ப் பிரச்சாரம் என்பது தெளிவாகியுள்ளதாக உள்துறை அமைச்சகம் குற்றம்சாட்டியுள்ளது. இவர்கள் இருவரும் எந்த இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் என்று தொடர்ந்து புலனாய்வு நடந்து வருவதாக உள்துறை அமைச்சகத்தின் மூத்த அதிகாரி ஒருவர் கூறினார். இவ்விரு பயங்கரவாதிகளும் காஷ்மீருக்குள் ஊடுருவியவர்கள் என்பதும் அங்கிருந்து ஜம்மு விரைவு புகையிரதம் மூலம் அகமதாபாத் வந்திறங்கியதும் கண்டறியப்பட்டுள்ளது.

குஜராத்திலுள்ள சுவாமி நாராயணன் கோவிலுக்குள் கடந்த 24ம் திகதி மாலை புகுந்த இந்தப் பயங்கரவாதிகள் இருவரும் அங்கிருந்த பக்தர்கள் மீது துப்பாக்கியால் சுட்டதில் 32 பக்தர்கள் கொல்லப்பட்டது தெரிந்ததே. 70 இற்கு அதிகாமானோர் காயமடைந்தனர்.

GLENMORE
PROPERTY SERVICES LTD
Sales | Lettings | Management | Mortgage advice
எல்லாவித மோட்கேஜ்களும் செய்துதரப்படும்
You have tried the rest, now come to the best
810 Harrow Road. Wembley,
Middlesex HAO 3EL
Tel: 020 8904 5040
website: www.glenmoreproperties.co.uk
e-mail: rightmove@glenmoreproperties.co.uk
Fax: 020 8904 5220
your home is at risk if you do not keep up repayment on a mortgage or other loan(s) secured on it.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஈழமுரசு
Eelamurasu Weekly
'உண்மையின் முன்னால் நடுநிலைமை என்பது இல்லை'

## சமாதான முயற்சிக்கு உந்துசக்தி

கடந்த சனிக்கிழமை விளக்குவைத்த குளத்தில் இடம்பெற்ற கைதிகள் பரிமாற்றம் சமாதான முயற்சிகளுக்கு ஒரு உந்துசக்தியாக அமைந்துள்ளது. புரிந்துணர்வு உடன்படிக்கையில் கையொப்பம் இடுவதற்கு சிறீலங்கா அரச தரப்பு இழுத்தடிப்பு செய்துவந்த வேளை, தமிழீழத் தேசியத் தலைவர் கடந்த பெப்ரவரி மாதம் கையொப்பதினை இட்டு தொடக்கி வைத்த சமாதான முயற்சி, இலங்கையின் போர் முனைப்பை அடக்கி முழு இலங்கையையும் அமைதிப் பூங்காவாக்கியது. இந்நிலையில் தான் இன்று முப்படைத் தளபதிகளும் புலிகளின் பிரதேசத்திற்குள் சென்று கைகுலுக்கி கைதிகளை பரிமாறிக்கொண்டுள்ளனர். சமாதானம் முன்னோக்கி முழு வீச்சாக நடைபோடுகின்றது என்பதற்கு எடுததுக்காட்டாக இந்நிகழ்வு அமைந்திருக்கின்றது.

கடந்த காலங்களில் யாழ்குடாவிலும் ஏனைய பல பகுதிகளிலும் பல நூற்றுக்கணக்கான தமிழ் இளைஞர்கள், யுவதிகள் படையினரால் கைது செய்யப்பட்டு காணாமற்போயிருந்தனர். இவர்களில் பலர் செம்மணி உட்பட பல இடங்களிலும் கொன்று புதைக்கப்பட்டபோதும், தமது பிள்ளைகள் எங்கோ ஒரு சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருக்கலாம் என்றே அவர்களது பெற்றோர்களும் உறவினர்களும் இன்னும் நம்புகின்றனர். சிறீலங்கா அரசினால் இறந்துவிட்டதாக மரண சான்றிதழ் வழங்கப்பட்ட பின்னர், சித்தசுவாதீனமற்ற நிலையில் அண்மையில் நெப்போலியன் என்ற இளைஞன் விடுவிக்கப்பட்டது, இவர்களது நம்பிக்கையை இன்னும் அதிகரிப்பதற்கு காரணமாக அமைந்துள்ளது.

கப்டன் பொயாகொட உட்பட ஏழு படையினர் விடுவிக்கப்பட்டதுடன், தமது தரப்பில் தடுத்து வைக்கப்பட்டிருந்த அனைத்துப் படையினரும் விடுவிக்கப்பட்டுள்ளதாக விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர். ஆனால், சிறீலங்கா அரச தரப்பு சந்தேகத்தின் கீழும், பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழும் தடுத்து வைத்திருக்கும் நூற்றுக்கணக்கான தமிழ் இளைஞர் - யுவதிகளில் 11 பேரை மட்டுமே விடுவித்துள்ளதுடன் ஏனையவர்களை விடுவிப்பதற்கு சட்ட சிக்கல்களை காரணம்காட்டி அக்கறையின்றி செயற்படுகின்றது.

இன்றைய நிகழ்வானது பல குடும்பங்களின் மகிழ்வுக்கு காரணமாவதுடன், அதற்கு மேலாக படையினர் மத்தியிலும் சந்தோசத்தை ஏற்படுத்தும். விடுவிக்கப்பட்ட படையினரின் அனைத்து நலன்களையும், பாதுகாப்பு அமைச்சும், படையினரும் கவனித்துக் கொள்வார்கள். அவர்கள் அனைவரினதும் புதிய வாழ்க்கைக்கு எனது வாழ்த்துக்கள். இருபத்தியேழு வருடங்களை சிறையில் கழித்த நெல்சன் மண்டேலாவைப்போல, இவர்களும் இனிமேல் நல்ல எதிர்காலத்தைப் பெற்றுக் கொள்வார்கள் என்று கைதிகள் விடுதலை குறித்து கருத்துக் கூறிய பாதுகாப்பு அமைச்சு செயலர் ஒஸ்ரின் பெர்னாண்டோ போன்றவர்கள், சிறைகளில் தங்கள் பிள்ளைகள் இருக்கின்றார்களா இல்லையா என்ற ஏக்கங்களோடும் கேள்வி குறிகளோடும் வடக்கு - கிழக்கில் வாழும் பெற்றோர்களின் மகிழ்ச்சிக்கு என்ன பதிலளிக்கின்றார்கள். தாங்கள் தடுத்து வைத்திருக்கும் தமிழ் அரசியல் கைதிகள் அனைவரையும் விடுதலை செய்ய முன்னின்று உழைப்பார்களா? அல்லது விடுதலைப்புலிகள் வசம் உள்ள படையினர் அனைவரும் விடுவிக்கப்பட்டுள்ளதால் தமிழ் கைதிகளின் விடுதலையில் அக்கறைகாட்டாது செயற்படுவார்களா என்பதை பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

## நவீனமயப்படும் சிங்கள இராணுவம் ஒரு அச்சுறுத்தல்!

### பார்வை

இலங்கைத்தீவின் இனச்சிக்கலுக்கான தீர்வை காணும் பாங்கொக் பேச்சுக்களின் தொடர்ச்சியாக கைதிகள் பரிமாற்றம் இடம்பெற்றுள்ளது. புலிகள் இயக்கமும், சிறீலங்கா அரசும் மிக உயர்மட்ட அதிகாரிகள் பங்கேற்ற கைதிகள் பரிமாற்றத்தை நடாத்தியுள்ளனர்.

இந்தக் கைதிகள் பரிமாற்றம் இரு தரப்பும் சமமான பலம் உள்ளவர்களாகவே பேச்சுக்களில் ஈடுபட்டுள்ளனர் என்பதன் குறியீடு என விபரிக்கப்படுகின்றது. தரையிலும், கடலிலும் தமிழர்களும், சிங்கள தேசமும் பேணும் படைப்பல சமவலுவே இன்றைய இணக்கப் பேச்சுக்களின் பிரதான அச்சாகவே சுழல்கின்றது. இந்த சமவலு நிலைவலையை பகிரங்கமாக சுட்டிக்காட்டியவாறு தான் சிங்கள இனவாத அமைப்புக்குள் எழும் எதிர்ப்புக் குரல்களை கட்டிப்போட ரணில் முயல்கின்றார். இது அழும்பிள்ளைக்கு பயத்தைக் காட்டி கட்டிப்போடும் கதையை ஒத்தது எனலாம். இவ்வாறு சுட்டிக்காட்டுவது கூட ரணிலுக்கு எதுவித அரசியல் தர்மசங்கடத்தை ஏற்படுத்தப் போவதில்லை. தான் ஆட்சிக்கு வருவதற்கு முன்பே புலிகள் சிங்கள இராணுவத்தின் முதுகெலும்பை உடைத்து விட்டார்கள் என்கின்ற பாவனையிலேயே அவரின் பரப்புரைகள் அமைகின்றன. இது தனது எதிரியான சந்திரிகாவின் தோல்வி என்றே ரணில் கருதுகின்றார்.

இத்தகைய தோற்றங்களுக்கு அப்பால் உண்மையில் சிங்கள அரசும், இராணுவமும் வெறுமனே சும்மா இருக்கின்றார்களா?. நிச்சயமாக அவ்வாறு இல்லை என்பதை தினசரி வெளிவரும் இராணுவத்தின் பயிற்சித்திட்ட அறிவிப்புக்கள் வெளிப்படுத்துகின்றன.

1. நவீன பயிற்சிகள் வழங்கப்படுகின்றன.

2. யாழ். உட்பட தமிழர் தாயகத்தின் அனைத்து இடங்களிலும் உள்ள இராணுவ நிலைகள் பலப்படுத்தப்பட்டுள்ளன. குறிப்பிடத்தக்க அளவில் பொதுஇடங்களை விட்டு வெளியேறினாலும் வேறு இடங்களில் படைநிலைகள் அமைக்கபடுகின்றன.

3. சிறீலங்காவின் இராணுவ அமைப்பையே முற்றாக மறுசீரமைக்க இந்திய-பிரித்தானிய இராணுவ நிபுணர்கள் அழைக்கப்பட்டுள்ளனர்.

4.தரைப்படைத்தளபதி பலகெலவும், கடற்படைத் தளபதி தயாசங்கரியும் நீண்ட பதவி நீடிப்பைப் பெற்றுள்ளனர். இது ஒரு தொடர்ச்சியினைப் பேணும் முடிவாகவே பார்க்கப்பட வேண்டும்.

உண்மையில் சிங்கள அமைப்பு புலிகளுடனான சமவலு நிலையை உடைத்து சிங்கள அமைப்பின் இராணுவ ஆதிக்கத்தை பலப்படுத்த பல்வேறு வழிகளிலும் முயல்வதை இத்தகைய பல்வேறு நடவடிக்கைகளின் ஊடாகவும் அறிய முடிகின்றது

தமது இந்த முயற்சிக்கு சிக்கலுக்குப் பின்னான நவீன இராணுவத்தை (post conflict military) கட்டியெழுப்பும் வழி என சாதுரியமான பெயரைச் சூட்டுகின்றார் ரணில்.

ஆனால், அவரது இராணுவ அமைச்சர் மாரப்பன நியமித்த மூவர் கொண்ட சிறப்புக் குழு சமர்ப்பித்துள்ள நவீனமயப்படுத்தும் அறிக்கை சிக்க்லுக்குப் பின்னான இராணுவத்தைப் பற்றிப் பேசவில்லை மாறாக, தற்போது இடம்பெறும் இணக்க சூழல் முறிவடைந்து போர் ஏற்படும் போதுள்ள இராணுவத்தினைப் பற்றியே பேசுகின்றது.

ஒரு சிறப்பான தரை நடவடிக்கைகளுக்கான தலைமையகம் மற்றும் சிறப்பான கடல் நடவடிக்கைகளுக்கான தலைமையகம் என்கின்ற இரு விடயங்கள் இதில் வலியுறுத்தப்பட்டுள்ளது. ஒரு மேஜர் ஜெனரல் தர அதிகாரியின் தலைமையில் தரைப்படை- கடற்படை - விமானப் படை என்பன இணைந்து செயற்படும் ஒரு தரைப்படை நடவடிக்கை தலைமையகம் உருவாக்கப்படவுள்ளது. அதேபோன்று அனைத்து அனுமதி பெறாத கடற்கலங்கள் எதுவும் எமது கடலுக்குள் நுழையாது தடுக்கும் ஆற்றலுள்ள நவீன கடற்படை நடவடிக்கை தலைமையகமும் நிறுவப்படவுள்ளது.

சிங்கள அமைப்பு இந்த நவீனமயப்படுத்தலுக்கு சரியான விளக்கம் எதுவம் தரவில்லை. தற்போதுள்ள போர் முடிவுற்ற பின்னர் ஐ.நா சபையின் சமாதானப் பணிகளுக்கு தமது படை பயன்படுத்தப்படும் என்கின்ற விரிப்பு மட்டும் போர்த்தப்பட்டுள்ளது.

ஆனால், கூர்மையாகப் பார்க்கும் போது சிங்களம் ஏதோ ஒன்றை நோக்கியே தன் நவீனமயப்படுத்தலை செய்ய முனைவதைக் காணலாம்.

1. இணக்கப் பேச்சுக்களின் போது தாங்கள் நினைக்கும் தீர்வை தமிழர்களின் மீது திணிக்க வேண்டுமாயின் நிச்சயம் தமக்குப் பலமான இராணுவம் தேவை என்கின்ற எண்ணவோட்டம் சிங்களத்திற்கு இருக்கலாம்.

2. புலிகளுடனான சமநிலையை உடைப்பதாயின் அதற்கு தயாராக இராணுவத்தை மீள கட்டியெழுப்ப வேண்டும். அத்தகைய கட்டியெழுப்பும் பணிக்கு தற்போது கிட்டியுள்ள வாய்ப்பைப் பயன்படுத்த சிங்களம் முயல்கின்றது.

3. உலக சூழலில் ஏற்படும் மாற்றங்களைப் பயன்படுத்தி த்மிழர்களுடனான போரில் ஆதிக்கம் பெறுவதற்கு தயாரான நிலையில் இராணுவம் இருக்க வேண்டும்

4. கடல் ஆதிக்கத்தை சிறீலங்கா முழுமையாகக் குறிவைக்கின்றது.

எனப் பல ஊகங்கள் இங்கு எழுகின்றது.

ஆனால், நவீனமயப்படுத்தல் என்கின்ற பெயரில் மீண்டும் தமிழீழ தேசத்திற்கான அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது என்பதை தமிழீழ மக்கள் அவதானிக்க வேண்டும்.

**– ராஜா**

## ஈழ கருத்து

## திலீபன் ஒரு வழிகாட்டி!

ஈழ விடுதலைப் போர் என்ற வேள்வியில் தியாகி திலீபன் தன்னை ஆகுதியாக்கி இன்றுடன் பதினைந்து ஆண்டுகள் பூர்த்தியாகின்றன. உலகில் உரிமைக்காக உண்ணா நோன்பிருந்து உயிர் துறந்த உத்தமர்களின் வரிசையில் உயர்ந்த இடம் திலீபனுக்கு உண்டு.

பகத்சிங்கின் தோழர் ஜதீந்திரநாத்தாஸ், ஆந்திராவின் பொட்டி சீராமுலு, விருதுநகர் சங்கரலிங்க நாடார், ஐரிஷ் விடுதலைப் போராளி பொபி சாண்ட்ஸ் வரிசையில் திலீபனும் ஒருவன்.

ஆனால், நீராகாரம்கூட உள்ளெடுக்காமல் உண்ணாநோன்பிருந்ததால் இவர்கள் அனைவரையும் விஞ்சி நிற்கின்றான் தியாகி திலீபன். சாத்வீகத்தால் சுதந்திரம் பெற்ற பாரதத்துக்கே சாத்வீகத்தைப் போதித்து, தலைகுனிய வைத்த பெருமை அவனுடையது.

காந்தி தேசத்துக்கே காந்தீயத்தை மீளப் புகட்டிய தமிழ் மறவன் திலீபன்.

ஈழத்தமிழர்களின் விடுதலைப் போராட்ட வரலாற்றில் வித்தியாசமானதொரு திருப்பு முனைக்கு சங்கொலித்த அவனது தியாகம், அந்த விடுதலைப் போராட்டத்தில் புதியதோர் அத்தியாயத்துக்கு அத்திவாரமிட்டது.

கழுத்தில் சயனைட் குப்பியைத் தொங்கவிட்டும், உடலில் தற்கொலைக் குண்டு தாங்கிய அங்கியை அணிந்தும், இனத்துக்காகக் கணத்தில் உயிர்துறக்கத் தயாரான ஓர்மத்தோடு விளங்கும் போராளிகள் மத்தியில் திலீபன் வித்தியாசமானவனாக இருந்தான்.

உணவின்றி, தாகத்துக்கு ஒரு சொட்டு நீர்கூட அருந்தாமல் - ஒரு கணத்தில் மட்டுமன்றி - உயிர் பிரியும்வரை - 12 நாள்கள் வரையும் - கணந்தோறும் மரண அவஸ்தையை - மக்களுக்காகத் தன் உடல், பொருள், ஆவி அனைத்தையும் தாரைவார்க்கும் திருப்திப் பெருமிதத்துடன்கூடிய புன்னகை முகத்தில் தவழ சகித்துக்கொண்டவன் அவன்.

உண்ணாநோன்புப் போராட்டத்துக்குத் திலீபன் முன்வைத்த கோரிக்கைகள் ஐந்து.

அவற்றுள் முக்கியமானது தமிழர் தாயகத்தில் நடத்தப்படும் திட்டமிடப்பட்ட சிங்களக் குடியேற்றங்கள் உடனடியாக - முற்றாக - நிறுத்தப்படவேண்டும் என்பது.

ஈழத்தமிழர்கள் சுதந்திரக்காற்றைச் சுவாசிக்க அவர்களுக்கு ஒரு தாயகம் தேவை. வரலாற்று ரீதியாக, பாரம்பரியமாக அவர்கள் வாழ்ந்துவரும் தாயகபூமி தனித்துவத்தோடு பேணப்படவேண்டும் என்பதே அவர்களது அவா.

அந்த ஆவலின் - அவாவின் - வெளிப்பாடே விடுதலைப் போர். தங்கள் தாகம் தமிழீழத் தாயகம் என்று ஈழப்போராளிகள் முழங்கியது இதைத்தான்.

இந்தத் தாயகப் பூமிக்காகத்தான் அன்று திலீபன் சாகும்வரை உண்ணாநோன்பிருந்து உயிர் துறந்தான். இன்று முன்னெடுக்கப்படும் சமாதானப் பேச்சுக்கள், அமைதி முயற்சிகள் போன்றவற்றிலும் தமிழர் தாயகத்தைப் பேணும் தீர்வுகுறித்துத்தான் பிரஸ்தாபிக்கப்படுகின்றது, முன்னுரிமை தரப்படுகின்றது.

எமது தாயகத்தில்-எமது மூதாதையரின் சரித்திர ரீதியான வாழ்விடத்தில் - கணிசமான தன்னதிகாரத்துடன் கூடிய சுயாட்சி முறை ஒன்றை அரசு முன்வைக்குமானால் அதைப் பரிசீலித்து ஏற்றுக்கொள்ளத்தயார் என்று தாய்லாந்து சமாதானப் பேச்சுக்களில் புலிகளின் தத்துவாசிரியர் அன்ரன் பாலசிங்கம் கூறியவை இங்கு நினைவு கூரத்தக்கவை.

சமாதான முயற்சிகளில் ஈழத்தமிழரின் விடுதலைப் போராட்டத்தில் இன்றும், என்றும் முனைப்புற்றிருக்கும் விவகாரம் தமிழரின் தாயகம் பற்றிய விடயமே.

அதனைப் பேணவும், பாதுகாக்கவும் வலியுறுத்தியே அன்று திலீபன் உண்ணாநோன்பிருந்து உயிர் துறந்தான்.

தமிழர் தாயகத்துக்காக களத்தில் ஆயுத சமராடி உயிர்துறக்கத் தயாரான ஆயிரக்கணக்கான வேங்கைகள் மத்தியில், அகிம்சை வழியில் அறப் போர் நடத்தி, தன்னைத் தானே பட்டினி போட்டு, தனது உடலை உருக்கி, உயிரைத் துறக்கத் தயாரான திலீபன் போன்றோர் முற்றிலும் மாறானவர்கள்.

உள்ளத்தால் உறுதிமிக்க இத்தகைய இளைஞர்களைக் கொண்ட இனம் தன் இலக்கை அடைவது நிச்சயம்.

ஆயுத வழியில் மட்டுமல்லாமல், அகிம்சை வழியிலும் இலக்கை எட்டுவதில் உறுதிமிக்கவர்கள் நாங்கள் என்பதை உறுதியோடு உலகுக்கு நாம் எடுத் துக்காட்ட வேண்டியவேளை மீண்டும் தமிழருக்கு வந்துள்ளது என்பதை மறந்துவிடக்கூடாது.

அதற்கு திலீபனின் தியாகமும், உறுதியும் வழிகாட்டட்டும்.

நன்றி: 'உதயன்'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# முற்றுகை தளர்வு அரபாத் வெளியே வந்தார்

பாலஸ்தீன அதிகாரசபையின் தலைவர் யாசீர் அரபாத்தின் ஏமல்லாத் தலைமையகத்தை முற்றுகையிட்டிருந்த இஸ்ரேலிய படையினர் தமது முற்றுகையை தளர்த்திக்கொண்டதையடுத்து யாசீர் அரபாத் தான் தங்கியிருந்த கட்டடத்தில் இருந்து வெளியே ஆதரவாளர்களைச் சந்தித்தார். பல நூறு பாலஸ்தீனர்கள் அரபாத்தைச் சூழ்ந்துகொண்டு தமது ஆதரவினைத் தெரிவித்தனர். அவரது தலைமைக் காரியாலய கட்டடத் தொகுதியில் பல கட்டடங்களை தகர்த்த தாங்கிகள் ஞாயிறன்று மாலை திடீரென விலகிக்கொண்டன. ஆனால் சிறு அணிகளாக மீண்டும் ரமல்லாவில் நிலையெடுத்த அவர்கள் ஒலிபெருக்கி மூலம் ஊரடங்கு உத்தரவுகளை அறிவித்தனர்.

கடந்தவார ஐ.நா பாதுகாப்புச் சபை இஸ்ரேல் உடனடியாக முற்றுகையை விலக்கிக்கொள்ள வேண்டும் என்றும் அரபாத்தின் சதந்திர நடமாட்டத்துக்கு வழியேற்படுத்த வேண்டும் என்றும் பிரேரனைகளை நிறைவேற்றியது. அத்துடன் அமெரிக்க அதிபர் சனியன்று தொலைபேசி மூலம் உடனடியான படை விலகலின் அவசியம் பற்றி பிரதமர் சரோனுடன் உரையாடினார் என்றும் சொல்லப்படுகிறது. ஆனால் வெளியுறவு அமைச்சர் சிமோன் பெரஸ் முற்றுகை விலக்கிக் கொள்ளப்படாத பட்சத்தில் தாம் பதவி விலகப் போவதாகவும் தொழிற்கட்சியினர் அரச ஆதரவினை விலக்கிக் கொள்ளக் கூடும் என்று எச்சரித்தாலுமே படைவிலகலுக்கு சரோன் உத்தரவிட்டார் என்று நம்பப்படுகிறது. இதற்கிடையே மூன்று நாள் உத்தியோகபூர்வ விஜயமொன்றினை மேற்கொண்டு இஸ்ரேலிய பிரதமர் ஆரியல் ஷரோன் ரஷ்யா சென்றுள்ளார். திங்களன்று அதிபர் விளாடீமீர் புடீனுடன் மேற்கொள்ளும் பேச்சுவார்த்தைகளில் ஈராக் விவகாரம் முக்கிய இடத்தினை வகிக்கும் என்று நம்பப்படுகிறது. ஈராக்கின் பிரதான ஆயுத விநியோகஸ்தர்களான ரஷ்யா ஆயுத விபரங்களை இஸ்ரேலுடன் பகிர்ந்துகொள்ள வேண்டும் என்று சரோன் விரும்புகின்றார். அதேவேளை இஸ்ரேலின் பாலஸ்தீனர்களுக்கு எதிரான கடும்போக்கு மாற்றப்படவேண்டும் என்பதுவும் மத்திய கிழக்கு சமாதானம் என்பதுவும் இப்பேச்சில் புடீனினால் முன்வைக்கப்படும் என்றும் அவதானிகள் கருத்துக் கூறியுள்ளனர்.

# சௌகல் கப்பல் விபத்தில் பலநூறு பேர் பலி



சௌகல் நாட்டில் இடம் பெற்ற பயணிகள் கப்பல் விபத்து ஒன்றில் சுமார் 900 வரையிலானவர்கள் கொல்லப்பட்டுள்ளனர். இறந்தவர்களில் பிரெஞ்சு, சுவிஸ், ஸ்பானிய உல்லாசப் பயணிகள் சிலரும் அடங்குவர் என்று செய்திகள் தெரிவிக்கின்றன.

சௌகல் நாட்டின் கசமாஞ்ச் மாகாணத்தின் சிகுன்சூர் இலிருந்து தலைநகர் டக்கர் இற்கு பயணம் செய்த ஜீலா என்ற கப்பல் கம்பியக் கரைப்பகுதியில் கவிழ்ந்தது. வியாழனன்று இவ் விபத்து இடம் பெற்றுள்ளது. நீண்டகாலமாகத் திருத்த வேலைகளுக்காக இடை நிறுத்தி வைக்கப்பட்டிருந்த இக் கப்பல் சேவை கடந்த மாதமே மீண்டும் ஆரம்பிக்கப்பட்டது. ஜீலா கப்பலில் 540 பேர் பயணம் செய்வதற்கே அனுமதிக்கப்பட்டிருந்தது என்றும் விபத்து நடந்த அன்று 1000 இற்கும் அதிகமானோர் பயணம் செய்துள்ளனர் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. இதுவரை 63 பேர் மாத்திரமே காப்பாற்றப்பட்டுள்ளனர் என்றும் 350 பேர்களது உடல்கள் மீட்கப்பட்டுள்ளன என்றும் அரசு அறிவித்துள்ளது.

மேற்படி கப்பல் மாத்திரமே கசமாஞ்ச் மாகாணத்துக்கு சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தது என்றும் கப்பலின் இயந்திரம் ஒன்று பழுதடைந்திருந்தது என்றும் பயணத்தை இடைநடுவில் நிறுத்திக்கொண்டிருக்க வேண்டிய கப்பலைத் தொடர்ந்தும் பயணம் செய்ய அனுமதித்ததாலேயே இவ் விபத்து ஏற்பட்டுள்ளது என்று கூறியுள்ள உயிர் தப்பிய பயணிகள் உதாசீனப் போக்கும் பொறுப்பற்ற தன்மையுமே இவ் விபத்துக்குக் காரணம் என்று கூறியுள்ளனர். கப்பல் வந்து ஐந்து நிமிடங்களுக்குள்ளேயே தலைகுப்புறக் கவிழ்ந்தது என்று கூறிய பயணியொருவர் கவிழ்ந்த கப்பலின் உச்சியில் இரண்டு மணித்தியாலங்கள்வரை பயணிகள் காத்திருந்தனர் என்றும் உதவிகள் கூட உடனடியாகக் கிடைக்கவில்லையென்றும் குற்றம் சுமத்தியுள்ளனர்.



# ஐவரி கோஸ்ட்டிற்கு ஆபிரிக்க சமாதானப்படை

(30.09.01)

அரச படைகளுக்கும், இராணுவத்தில் இருந்து பிரிந்துபோய் கலகக்காரர்களாக அரசுக்கு எதிராகப் போராடிவரும் அணிகளுக்கும் இடையே ஐவரிகோஸ்டில் கடுமையான மோதல்கள் தொடர்ந்தும் இடம்பெற்று வருகின்றன. நாட்டின் வட பகுதியில் பல நகரங்களை கலகக்கார இராணுவ அணிகள் தமது கட்டுப்பாட்டிற்குள் வைத்துக்கொண்டுள்ளன. பொதுமக்கள் தமது உடமைகளுடன் பாதுகாப்பான பகுதிகளை நோக்கி நகர்ந்து வருகின்றனர். கடந்த 19ம் திகதி முதல் ஐவரி கோஸ்ட் இல் தொடர்ந்துவரும் மோதல்கள் சிவில் யுத்தம் ஒன்றுக்கு வளிகோலும் என்று அவதானிகள் அச்சம் தெரிவித்துள்ளனர். இந்த இராணுவ பிளவுக்கும் மோதல்களுக்கும் அண்டை நாடான புர்கினாபாரோ காரணம் என்று ஐவரி கோஸ்ட் குற்றம் சுமத்தியுள்ளது.

கொண்ட தலைவர்கள் ஐவரி கோஸ்ட் அமைதிக்காக சமாதானப் படையொன்றினை அனுப்புவது குறித்து ஆராய்ந்துள்ளனர். அத்துடன் இரு தரப்பினரையும் இணைத்து பேச்சுவார்த்தையொன்றை ஆரம்பிப்பதற்காக ஐந்து ஆபிரிக்க தலைவர்கள் ஐவரிகோஸ்ட் செல்லவும் தயாராகியுள்ளனர்.

முதலில் பேச்சுவார்த்தையை ஆரம்பிப்பது என்றும் அது தோல்வியடையும் பட்சத்தில் 4000 வரையிலான படையை அனுப்புவது என்றும் முடிவாகியுள்ளது. இப்படைத் தொகுதிக்கு போக்குவரத்து மற்றும் தளபாட உதவிகளைச் செய்வதற்கு பிரான்ஸ் முன்வந்துள்ளது. கலகக்காரப் படைகளின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் இருந்து வெளிநாட்டுப் பிரஜைகளை அமெரிக்கப் படைகளும் பிரெஞ்சுப் படைகளும் மீட்டுள்ளன. இதுவரை மாணவர்கள் உட்பட 1500 வரையிலான வெளிநாட்டவர்கள் பாதுகாப்பான இடங்களுக்கு அப்புறப்படுத்தப்பட்டுள்ளனர். இவர்கள் விரைவில் விமானங்கள் மூலம் தத்தமது நாடுகளுக்கு அனுப்பப்படுவார்கள் என இராணுவ அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.





கானா நாட்டில் அக்ரா நகரில் ஆரம்பமாகிய மேற்கு ஆபிரிக்க நாடுகளின் பொருளாதார சமூக உச்சி மாநாட்டில் பல தலைவர்கள் கலந்துகொண்டுள்ளனர். ஐவரிகோஸ்ட் பிரச்சினைகளை ஆராய்வதற்காகவே இம் மாநாடு கூட்டப்பட்டது. இதில் கலந்து

# விமானக் கடத்தல் சந்தேக நபர் சுவீடனில் விடுதலை

(30.09.02)

சுவீடனில் இருந்து பிரித்தானியாவுக்குப் புறப்பட்ட விமானம் ஒன்றினை கடத்த முற்பட்டார் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட துனிசிய பூர்வீகத்தைக் கொண்ட சுவீடன் இளைஞரை நீதிமன்றம் விடுதலை செய்துள்ளது. மேற்படி இளைஞனின் பயணப் பொதியில் துப்பாக்கியொன்று கண்டுபிடிக்கப்பட்டதையடுத்து விமானத்தை எவர் கடத்திச் சென்று முக்கியமான இலக்கு ஒன்றின்மேல் மோதவைக்கும் திட்டத்தைக் கொண்டிருந்தார் என்று வழக்கு பதிவு செய்யப்பட்டிருந்தது. ஆனால் அவ் இளைஞர் எவ்வித இஸ்லாமிய அமைப்புகளுடனும் தொடர்புகளைக் கொண்டிருப்பது நிரூபிக்கப்படவில்லை என்பதாலும் குற்றச்சாட்டுக்கு ஆதாரங்கள் இல்லாத காரணத்தாலும் அவர் விடுதலை செய்யப்படுகிறார் என்று நீதிபதிகள் தெரிவித்துள்ளனர். ஆனால் அவர் மீதான விசாரணைகள் தொடரும் என்று பொலிசார் தெரிவித்துள்ளனர். மேற்படி இளைஞர் தன்னிடம் துப்பாக்கி இருந்ததை ஒப்புக்கொண்டுள்ளார். ஆனால் தனக்கு எவ்வித கடத்தல் திட்டமும் இருக்கவில்லை என்றும் கூறியுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

03 - 09 ஒக். 2002

# முரசு. இதழ்

murasu.ithal

வாழ்வு - இலக்கியம் - பண்பாடு

## காடுகள் சுடுகின்றன

*(சென்ற வாரத் தொடர்ச்சி)*

இவ்வளவு தமிழர்களையும் எப்படிக் காப்பாற்றுவது? சிங்களத்தின் பசி வயிற்றுக்கு பெருந்தீனி!

அனுராதபுரச் சந்திக்கு முன்னர், புத்தளம் றோட்டில் நாலைந்து 403 மைல் தள்ளியிருக்கும் ஒரு குளக்கட்டில் வந்தவர்களை நிறுத்தி வைத்துவிட்டு மேலும் பாதுகாப்புக்கு இராணுவத்தைக் கேட்டார் இன்ஸ்பெக்ரர். இப்போதைக்கு இராணுவம் வருவதாகத் தெரியவில்லை `ஹஜியார் வீட்டிலேயே நின்றிருக்கலாமோ?' அது ஹாஜியார் குடும்பத்துக்கும் ஆபத்துத்தான்.

அம்மாள் தந்த குழந்தை. அம்மாள் தான் குழந்தையா வந்தாள். அதுதான் அந்த றாங்கி இருக்குது. பிடிவாதம் இருக்குது. நினைத்ததைச் செய்கிற ஓர்மம் இருக்குது. அன்பு, ஆசை இரக்கம் அத்தனையும் இருக்குது. கொஞ்சிவிடத் தரும் கன்னத்தில் எத்தனை இனிமை இருக்குது இப்போது ஆழ்ந்த அமைதியாக உறங்குகிறாள் அம்மாள். அம்மாளே, உன் குழந்தை. நீதான் காக்கவேண்டும். அந்த குழந்தையை இருகைகளில் வைத்து அம்மாளிடம் கையேந்தினா அம்மா. அந்த இருட்டினில் மின் மினிப் பூச்சியின் வெளிச்சத்தில் அம்மாவின் கண்களில் கண்ணீர் பெருகியது. அப்பா அதைக் கண்டார். அம்மாவின் முதுகைத் தடவினார். அப்பா சப்பாணி கட்டி இருந்து பிள்ளையை கைகளில் ஏந்த அம்மா விசிறினா. விசிறிக்கொண்டுதான் பார்த்தா.

மிகத் தூரத்தில் வெளிச்சம் தெரிந்தது. `அங்கை பாருங்கோ' அப்பா கண்டுவிட்டார். `காட்டுக்கை தேன் எடுக்கப் போறாங்கள்' என்றார் அப்பா. இன்ஸ்பெக்ரர் கதிர்காமரும் கண்டுவிட்டார். அது பாதுகப்புக்கு வருகிற இராணுவ ட்ரக்குகளினதும், ஜீப்புகளினதும் வெளிச்சம். மிகத் தூரத்தில் தெரிகிறது. அவ்வளவுதான். அம்மாவிற்கு இது ஆபத்தான வெளிச்சம் என்று உடனே உறைத்துவிட்டது. அம்மா கீரிமலையில் வாழ்கிறபோதே கடலில் கண்ட வெளிச்சம்தான் அது. வலித்தூண்டல் மீனவர்கள் றால் பிடிக்க, நண்டு பிடிக்க சூள் கொளுத்திக்கொண்டு இரவு வழிய கடலுக்குப் போவார்கள். கடலில் வரிசையாக சூள் வெளிச்சம் தெரியும். சாமம் அம்மா முளித்துப்பார்க்கிறபோது, நடுக்கடலில் மிகச் சின்னதாய் குழம்பிக் குழம்பி வெளிச்சப் பொட்டுகள் ஆடும், மனிசர் என்றால் வரிசையாக இருக்கும். பேய்கள்தான் குழப்பி விடுவன. நடுக்கடலில் சூறை அடித்து, வள்ளம் புரட்டி, சுறாதின்று பிரேதம் கூடக் கிடைக்காமல் போனவர்கள் எத்தனைபேர்! அவை சும்மா இருக்குமா? சாமம் எழும்பி ஆடவேண்டாமா? இன்னும் உயிர்களை விழுங்கும் வேகத்தில் வேண்டி நிற்கின்றன. அம்மா பயத்தில் கண்களை மூடுவா.

பயம்தான். ஆனால் இப்போது கண்ணை மூடமுடியாது. பேய்கள் வருகின்றன. பிள்ளையைக் காக்கவேண்டும். இன்ஸ்பெக்ரருக்கு விளங்கிவிட்டது. `ஒருத்தரும் சத்தம் போடாதையுங்கோ. ஒருத்தரும் ஓடாதையுங்கோ. நாங்கள் இருக்கிறம். காப்பாத்துவம்'. இன்ஸ்பெக்ரருக்கு இன்னுமொன்றும் விளங்கிவிட்டது. தாங்கள் எங்கு நிற்கிறோம் என்று இராணுவத்தினருக்குத்தான் அறிவிக்கப்பட்டது. இந்த ஒளிவு மறைவான இடம் காடையருக்குத் தெரிய சந்தர்ப்பம் இல்லை. இராணுவம் அனுப்பியவங்கள் வாறாங்கள். சிந்தவேண்டிய இரத்தங்கள் சிந்திய பிறகு, அனுப்பவேண்டிய தமிழ் உயிர்களை அனுப்பிய பிறகு எல்லாம் முடிய இராணுவம் வந்து சேரும். இன்ஸ்பெக்ரரிற்கு கை நடுங்கியது. றிவோல்வரில் கைவைத்தார். வெசாக் முடிந்து ஒரு மாதம்தான்... வெசாக்கிற்கு கொண்டைப் பணியாரமும், கொக்கீசும், களுதொதலும், கிரிபத்தும் தந்தவர்களின் சகோதரங்கள், மாமன் மைச்சான் மார் வாறாங்கள். இம்முறை அப்பா அழுகிறார். அழுவது தெரிய மின் மினிப்பூச்சிகளின் வெளிச்சம் தேவையில்லை. சிறிது தூரம்தான். என்றாலும் நூற்றுக்கணக்கான தீப்பந்தங்களின் வெளிச்சம் போதும்! அம்மாள் தந்தவள் அழியப்போகிறாள்.

தீப்பந்தங்கள் நெருங்கி வருகின்றன. கத்தி, கோடாரி, வாள், பிக்கான், அலவாங்கு, பொல்லு எல்லாம் இருந்தனவா தெரியவில்லை. வெளிச்சம் அவற்றைக் காட்டவில்லை. வரும் வேகத்தைக் காட்டியது. கண்களின் வெறியைக் காட்டியது.

இன்ஸ்பெக்ரர் தனது றிவோல்வரால் முதல்வெடி வைத்தார். வானை நோக்கித்தான் முதலில் துப்பாக்கிகள் முழங்கின. அக்கா திடுக்கிட்டு முழித்துக் கத்தத் தொடங்கினா. தீப்பந்தங்கள் முன்னேறின. நிலத்திற்குச் சமாந்தரமாக ஒரு அடி உயரத்தில் குண்டுகள் பாயத் தொடங்கியன. சற்றுச்சில நிமிடங்கள் கழித்துத்தான் தீப்பந்தங்கள் பின்னோக்கி ஓடின...

வவுனியாவிற்கு பஸ்கள் வந்துசேர காலை பத்துமணி ஆனது. கச்சேரி வளவினுள் பஸ்கள் புகுந்தன. பஸ்ஸைக் கண்டு ஒரு தமிழன் ஓடிவந்தான். ஒரு நூறு தமிழர் ஓடி வந்தனர். அப்பா பஸ்ஸால் இறங்கி ஒரு தமிழன் கைபிடித்து `எங்கன்ரை நாட்டுக்கு வந்திட்டம். எங்கன்ரை நாட்டுக்கு வந்திட்டம்' என்று விம்மினார். பிள்ளைக்கு வெய்யில் படக்கூடாது என்று யன்னலில் துவாயைத் தொங்கவிட்டிருந்த அம்மா, துவாயை விலத்தி, அதைப்பார்த்து அழுதா. எங்கள் தேசத்துச் சூரியனின் வெய்யில் படட்டும் என்று துவாயை அவிழ்த்தா. பஸ்ஸில் வந்த எல்லாரும் எல்லாற்றை கையைப் பிடிச்சும் அழுதிச்சினம். அம்மாளே அம்மாளே என்று அம்மா இன்னும் அழுதா. இன்ஸ்பெக்ரர் கதிர்காமரை கையெடுத்துக்கும்பிட்டா. அம்மாள் அனுப்பி வந்த அவன் மகன் கதிர்காமன்!

எங்கன்ரை நாட்டின் வெய்யில் சுடத் தொடங்கிச்சுது. அந்தச் சாமம் குளக்கரை தராத குளிரை, இவ்வளவு நாளும் கல்லுலுவவின் வாய்க்காலோரம் தராத குளிரை அந்த வெய்யில் தந்தது. வவுனியா எம் பி அடங்காத் தமிழன் சுந்தரலிங்கம் அய்யா வந்தார். நடையில் நிமிர்வு இருந்தது. ஏன் கூன வேண்டும்? யாருக்குக் கூனவேண்டும்? நெஞ்சிலை கை வைத்தார். `வாங்கோ. எங்கன்ரை சனங்கள் நீங்கள். உங்கன்ரை நாட்டுக்கு வந்திட்டீங்கள். இனி ஆருக்குப் பயப்பிடவேணும்? ஒண்டுக்கும் யோசிக்காதையுங்கோ. அங்கார் பெரிய வக்குக்கை தண்ணி இருக்கு. குளிக்கிற ஆக்கள் போய்க் குளியுங்கோ. பொம்பிளைகளுக்கு புறிம்பா இருக்கு. இங்கை கிடாரம் கிடாரமா பால் கோப்பி, பால் தேத்தண்ணி இருக்கு குடிக்கிற ஆக்கள் குடியுங்கோ. சாப்பிடுகிற ஆக்கள் அந்த மண்டபத்துக்குப் போங்கோ. விரும்பின சாப்பாடு இருக்கு. ஒண்டுக்கும் யோசிக்காதையுங்கோ. குளிச்சு, சாப்பிட்டு, குடிச்சு ஆறுதலா இருங்கோ. பின்னேரம் பஸ் வெளிக்கிடுது' பெரிய தொட்டி நிறைய தண்ணி இருந்தது. கிடாரம் கிடாரமா பால் கோப்பி இருந்தது. கிடாரம் கிடாரமாய் சோறு கறி இருந்தது. களைப்பாற மரநிழல் இருந்தது. திண்ணைகள் இருந்தன. அடங்காத் தமிழன் அத்தனை உபசாரங்களும் செய்துவிட்டுப்போனான். அவனுக்கும் ஆயிரத்தெட்டு வேலைகள் இருந்தன. ஒருவேலை அதிமுக்கியமான வேலை!

சுவாம்பிள்ளை நல்ல வேட்டைக்காரன். வேட்டை; தொழில் அல்ல. வேளாண்மைதான் தொழில். மாதத்திற்கு ஒருக்காலாவது பெரும் வேட்டை ஆடவேண்டும். அல்லது பொச்சம் அடங்காது. கொழுத்த முயல் ஒன்றினை விழுங்கிக்கொண்டிருந்த வெங்கிணாத்தி பாம்பை உருகுதடம் போட்டுப் பிடித்து, தன் கொட்டில் வாசலில் பார்வைக்கு கட்டி வைத்திருந்தார். வயிற்றில் முயல் வைத்து வாலால் துடித்துக்கொண்டிருந்தது பாம்பு. வேட்டை என்றால் ஆகக்குறைந்தது ஒரு மான் அல்லது மரை. அப்படியே தூக்கித் தோளில் போட்டுக்கொண்டு வரவேண்டும். பன்றி என்றால் காட்டுக்குள்ளேயே மரத்தில் கட்டி கீழே நெருப்பு வைத்து வாட்டி, தோலைப் பொசுக்கி பிறகுதான் கொண்டுவரவேண்டும். எதுவென்றாலும் கொண்டு வருவன விற்பனைக்கல்ல. பங்கு பிரித்து, உறவினர்களுக்கு, நண்பர்களுக்குப் போகும் ஞாயிற்றுக்கிழமைகளில் தேவாலயத்துக்குக் கட்டாயம் போவார். ஞாயிற்றுக்கிழமையின் மற்றைய கட்டாயமான விசயம் இறைச்சிக்கறி.

பன்னிரண்டு இஞ்சிக் குண்டுகள்தான் சுவாம்பிள்ளையின் வேட்டைத்துவக்குக்கு. ஒருவெடிதான். குறிபார்த்த மிருகம் விழும். குண்டு வாங்கி ஓடிக்கொஞ்சத் தூரத்தில் விழுவனவும் அல்ல. உடன் விழும். சிறுத்தைகளைக் காண்பார். மோதலுக்கு வராது. வந்தால் வைக்கலாம் வெடி! இறைச்சிக்கு இல்லையென்ற பின் ஏன் வைப்பான் வெடி! அதுகளும் பாவங்கள்தானே? புலித் தோல்கள் வீட்டில் இருப்பதே போதும். சுவாம்பிள்ளைக்கு பன்னிரண்டு இஞ்சிக குண்டுகள் மிஞ்சுகின்றன. மிஞ்சுகின்ற குண்டுகளுக்கு வேலை வலுகெதியில் வந்தது.

குண்டுகள் வெடித்தபின் கோதுகளைக் கொண்டுபோய் கொடுத்தால்தான் பிறகும் குண்டுகள் கிடைக்கும். கோதுகள் கணக்குக்குத்தான். அவை பின்னர் அழிக்கப்படும். அழிக்கப்படும் கோதுகளில் கொஞ்சத்தை காட்டுக் கந்தோரில் வேலை செய்கிற சுவாம்பிள்ளையின் மைச்சான் பொறுக்கிக்கொண்டு வருவான். எனவே சுவாம்பிள்ளையிடம் துவக்குக்கான பன்னிரண்டு இஞ்சிக்குண்டுகள் இன்னும் இன்னுமெனச் சேர்ந்தன.

சுவாம்பிள்ளைக்கு அவசர வேலைகள் திடீரென வந்தன. வரும் என்று எதிரபார்த்தவர்தான். ஆனால் இவ்வளவு விரைவாக வரும் என்று எதிர்பார்க்கவில்லை. ஒருநாள் அய்யாகூட ஜீப்பில் கொட்டிலுக்கு வந்து கொஞ்ச நேரம் இருந்து கதைத்துவிட்டுப்போனார். இரண்டு போத்தல் தேனும் பெரிய மரைவத்தல் பார்சலும் கொடுத்துவிட்டார் சுவாம்பிள்ளை.

ஆற்றின் அடியில் மணல் கிண்டி, அதனுள்ளே சேறாய் இருக்கும் மண்ணள்ளி தலை தேய்த்து, மணல் அள்ளி உடல் தேய்த்து ஒவ்வொருநாளும் முழுகுபவர். குளத்தில் யாரும் குளிப்பார்களா? அது தேங்கி நிற்பது; வீச்சுடன் ஓடுவது அல்ல. வன்னிக் காட்டுக்கும், வளமான வயல் காணிக்கும் சொந்தக் காரரான சுவாம்பிள்ளையைத் தேடி சுவாம்பிள்ளை ஆற்றில் தலையை நனைத்துக்கொண்டிருந்த சமயம் ஒருவன் வந்தான். `அய்யா உங்களை அவசரமா வரச் சொன்னவர்' என்று படபடக்கிற செய்தியைச் சொன்னான்.

## காலம் ஆகி வந்த கதை

சுவாம்பிள்ளை தலைமுழுகி விட்டுப் போனார். பெரும் வேட்டை செய்யவேண்டிய செய்தி கிடைத்தது. வந்த உடனேயே சுவாம்பிள்ளை வேலை தொடங்கினார். பன்னிரண்டு இஞ்சிக்குண்டுகள் பத்தினை எடுத்து, மண்சட்டியில் வைத்துக் காய்ச்சினார். ஈயக்குண்டுகள் உருக நேரம் எடுத்தது. உருக அதை விட்டுவிட்டு எரிய விறகுகளைத் தள்ளிவிட்டு விட்டு, துவக்கை எடுத்து ஒவ்வொரு பாகமாகக் கழட்டி எண்ணெய் பூசினார். பூசியபடியே விட்டுவிட்டு வந்தார். உருகிய பத்து ஈயக் குண்டுகளும் ஒன்றாகித் திரணையாகியது. ஒரு குண்டாகியது. துவக்குக்கு அளவா, தனக்கு வேண்டிய வடிவத்தில் அதை ராவி ராவிச் செப்பனிட்டார். பொருத்தமான ஒரு குண்டு ஆயிற்று. ஒன்பது குண்டுகள் ஆயின. பன்னிரண்டு குண்டுகள் செய்தார். கோதுகளுக்குள் குண்டுகள் வைத்து இறுக்கக்கட்டினார். பல்லை நெருமினார். சொன்ன வசனத்தை இங்கு சொல்வது சரியல்ல. அது தகாத மூன்றெழுத்துச் சொல்லுடன் `மக்கள்' என்று முடிந்தது.

கொண்டு போனார். மரங்களின் பின்னே காத்துநின்றார். வேட்டைக்காரன் வேலை பழுதானதில்லை. எங்கள் படைகள் நடந்த காடுகளுக்குள்ளே அந்நியப்படைகள் வந்தன. ஒரு குண்டு... இரண்டு குண்டு...மூன்று குண்டு... குண்டு.. குண்டு..குண்டு! தொப்பு தொப்பு என்று வீழ்ந்தனவும், துடிதுடித்து கிடந்தனவும், `மகே அம்மே' என்று கதறினவும்... மேலும் விவரணம் வேண்டாம்.

ஆனால் இதனைச் சொல்லி முடிக்க வேண்டும். இலங்கைப் பாராளுமன்றத்தில், பிரதமர் பண்டாரநாயக்கா' எமது பாதுகாப்புப் படைவீரர்கள் வவுனியாப் பகுதிகளில் சுடப்படுகிறார்கள். வவுனியா பாராளுமன்ற உறுப்பினரிடம் அதுபற்றி விளக்கம் கேட்க விரும்புகிறேன்.' அப்போது வவுனியா பாராளுமன்ற உறுப்பினர் அடங்காத் தமிழன் சி. சுந்தரலிங்கம் அவர்கள் சொன்னார்:

***`காடுகள் சுடுகின்றன. காடுகளைப் போய் விளக்கம் கேள்'***

நாடு காண் நாள் வரைக்கும் காடுகள் சுடுகின்ற காலம் ஆகிவிட்டது.

(முற்றும்)

இராஜி. அருணாசலம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுகதை

# அங்கவீனர்கள்

அலுவலகத்தில் வேலைமுடிந்து வீடு திரும்பிக் கொண்டிருந்தேன்.

சாலையில் சனநெரிசல் அதிகமாக இருந்தது. சீரற்ற அந்தச் செம்மண் தெருவில் புழுதிகளை வாரியிறைத்தபடி விரைந்து... செல்லும் கனரக இயந்திர வாகனங்களின் அதிவேகத்துக்குள் சிக்காது, லாவகமாக சாலையில் உள்ள பள்ளம் திட்டிகளைப் பார்த்து, எனது மிதிவண்டியை நிதானமாகச் செலுத்திக் கொண்டிருந்தேன்.

என்ன மச்சான் இப்பதானே வேலை முடிஞ்சு போறாய்...?

குரல் கேட்டுத்திரும்பிப் பார்த்தேன். என் நண்பன் ஒருவன், என்னை வினவியபடி என்னோடு சமாந்தரமாக வந்து கொண்டிருந்தான்.

ஓமடாப்பா. இண்டைக்கு வேலை முடிய கொஞ்சம் நேரம் போட்டுது.

நீ எங்கை துலையாலையே...? நான் கேட்டேன்.

ரண்டு நாளா காதுக்குள்ளை ஒரே இரைச்சல். அதுதான் கிளினிக்கிலை காட்டிக் கொண்டு வாறன்.

அவனது குரல் உணர்ச்சியற்று இருந்தது.நான் அவனை அனுதாபத்தோடு பார்த்தேன். பார்வைக் கோளாறு காரணமாக கண்ணிலே ஒரு சத்திரசிகிச்சை செய்து கொண்ட பின்பு, அவனுக்கு காது நரம்பினுள் ஏதோ ஒரு சிறு தாக்கம் ஏற்பட்டுவிட்டது.

கண்டத்துக்கு மேலேயுள்ள கண், காது, மூக்கு மற்றும் தொண்டை நரம்புகள் ஒன்றோடு ஒன்று தொடர்பு பட்டிருக்கின்றன என்று எப்போதோ ஒரு மருத்துவக் குறிப்பொன்றில் படித்தது ஞாபகத்தில் இருந்தது. அதுதான் அவனுக்கு கண்ணிலே சத்திரசிகிச்சை செய்த பின்பு, அதனோடு சம்பந்தப்பட்ட நரம்பு ஏதாவது காதினுள் பாதிப்படைந்திருக்கக் கூடுமென நான் அடிக்கடி நினைத்துக் கொள்வேன்.

அத்தோடு, இந்திய இராணுவம் எமது தாயகத்தில் அத்து மீறி நிலை கொண்டிருந்தபோது, எம் மக்களுக்கு ஏற்படுத்திய இன்னொரு தாக்கம் என் நண்பனிலும் பிரதிபலித்துக் கொண்டிருந்தது.

ஒருநாள்- கோண்டாவில்- உப்புமடப் பிள்ளையார் கோவில் சந்திக்கு அண்மையாகச் சென்று கொண்டிருந்தான். அப்போது, அச்சாலைவழியே முகமெங்கும் அச்சம் நிறைந்த நிலையில், தம்விழிகளை அகல மலர்த்தி, அக்கம்பக்கம் பார்த்தபடி... நகர்ந்து கொண்டிருந்தன சில அந்நிய உருவங்கள். இரண்டு நாட்களுக்கு முன்பு, அந்த உப்புமடப்பிள்ளையார் கோவில் சந்திக்கு அருகாமையில் வெடித்த கிளைமோரில் ஒரு கவசவண்டி தூக்கி எறியப்பட்டதோடு, அதில் பயணித்த பச்சைச்சட்டைகள் பலவும் கொல்லப்பட்டன.

இந்நிலையில்தான், அந்த அந்நிய உருவங்களில் ஒன்று அவனை வழிமறித்து கிளைமோர் வெடித்த இடத்தைக் காட்டி ஏதோ கேட்கத் தொடங்கியது. அவனுக்கு எதுவும் விளங்கவில்லை. அது பேசியது நம் மண்ணுக்குச் சொந்தமில்லாத ஓர் அந்நிய மொழி.

அவன் சிறிது தடுமாற்றத்தோடு, எனக்கு ஒண்டும் தெரியாது... என தனது தாய்மொழியில் கூறினான்.

அவ்வளவுதான்... உலக்கை போன்ற அதன் கையொன்று அவனது காதைப் பதம் பார்த்தது. அன்று அந்த அந்நிய உருவத்தால் ஏற்பட்ட தாக்கம்... அவனது செவிப்புலன் பாதிக்கப்பட்டதுக்கு ஒரு காரணமாக இருக்கலாமென நான் அடிக்கடி நினைத்துக்கொள்வது உண்டு. என் நண்பனுக்கு காது கேளாது என்றில்லை.

எனக்கு காது நல்லா கேட்குது. ஆனா சொல்லுப் புரியுதில்லை... என்றே அவன் அடிக்கடி கூறுவான். குறிப்பாக, வெள்ளை... என்று நாம் சொன்னால், அவனுக்குப் பிள்ளை... எனப் பொருள்படுகின்றது. இதனால் சில இடங்களில் அவன் பலரோடு உரையாடுகையில் சிரமப்படுவதையும், பொது நிகழ்வுகள் என வரும்போது அதில் கலந்து கொள்ளாது ஒதுங்கியிருப்பதையும் நான் அறிந்தும், கண்டுமிருக்கின்றேன். அதிலும், அவன் தொழில் புரியும் இடத்தில் காது கேளாதவன்... என்ற சொல்லுக்கு ஆளான நிலையில், அவன் அநேகமானவர்களோடு, அதிகம் ஐக்கியம் பேணாது ஒதுங்கியிருப்பதையும் நான் அறிந்திருப்பதோடு, அவனைப் போகவிட்டுப் பின்னே, அவனின் குறைபாட்டைக் குறித்து கேலியாகக் கதைப்பவர்களையும் நான் நன்கு தெரிந்து வைத்திருந்தேன்.



அதனால்தான் இன்று அவன், தன் காதுக்குள் ஒரே இரைச்சல்... எனக் கூறியபோது, எனக்குக் கவலையாக இருந்தது.

கிளினிக்கிலை என்ன சொன்னவை...?

வழக்கம்போல குளிசையும், காதுக்குள்ளைவிட சொட்டு மருந்தும் தந்தவை.

நீ ஒண்டுக்கும் யோசியாதை மச்சான். சில வியாதிகள் உடனை மாறாது. தொடர்ந்தும் மருந்து பாவிக்க வேணும். காலப்போக்கில பிறகு சுகம் வந்திடும்...

அவன் பாவிக்கும் மருந்துக்கு காலப்போக்கில் சுகம் வருகுதோ இல்லையோ அதைப் பற்றி எனக்குத் தெரியாது. ஆனால், அவனின் அப்போதைய மனநிலைக்கு, நான் கூறிய அந்த வார்த்தைகள் சற்று ஆறுதலாக இருக்கட்டுமென்றுதான் நான் அப்படிக் கூறினேன்.

அவன் எதுவும் கூறவில்லை. மௌனமாக வந்து கொண்டிருந்தான்.

களப்போராட்டத்தில் ஒரு கையை இழந்த புலிப்பெண் போராளி ஒருத்திதன் மறுகையுடன் எங்கள் இருவரையும் விலத்திக்கொண்டு, வேகமாக தனது மிதி வண்டியில் சென்றுகொண்டிருந்தாள்.

அந்நிய இராணுவ ஆக்கிரமிப்பின் கொடூர வடுக்கள் எம் மக்கள் பிரதிபலிப்பதைக் கண்டு, என்னுள் இருந்து வெளிக்கிளம்பியது பெருமூச் சொன்று. என் நண்பனைப்போல... அந்தப் பெண் போராளியைப் போல... இந்த மண்ணில் இன்னும் எங்கெங்கு யார் யாரோ...?

மனம் மீண்டும் பெருமூச்செறிந்து கொள்கிறது. அப்போது, அந்தச் சாலை வழியே எதிரே உந்துருளி ஒன்றில் வந்த ஒரு மனிதர், என் நண்பனின் பெயரைச் சொல்லி நிற்கும்படி கூறிவிட்டு, தனது உந்துருளியை மறுபக்கமாகத் திருப்பிக் கொண்டு வந்து எம்மருகில் நிறுத்தினார். நீ இண்டைக்கு வேலைக்குப் போகேல்லையே..? நண்பனைப் பார்த்துக்கேட்டார்.

இல்லை முதலாளி...

ஏன்...?

கேட்ட இரண்டாவது கேள்வியில் அதிகாரத்தொனி நிறைந்திருந்ததை என்னால் அவதானிக்க முடிந்தது. காது சுகமில்லை... அவர் அவனை ஒருவித வெறுப்புடன் பார்த்தார். பின்பு... சரி, நாளைக்கு வேலைக்குப் போவியே?

ஓம்...

அப்ப நான் சொன்னதா ஸ்டோர் பொடியனிட்டை சொல்லு. பதினைஞ்சு லீற்றர் வடி எடுத்து வெளியிலை வைக்கட்டாம். பின்நேரம் வாறனாமெண்டு.

என்னது படியோ...

என் நண்பனுக்கு அவர் வடி என்று கூறியது சொல்லின் ஓசைமாறி படி என செவியினுள் நுழைந்து. பதிந்துகொண்டதை நான் உணர்ந்து கொண்டேன்.

முதலாளியின் முகத்தில் அருவருப்புடன் கூடியதான எரிச்சல் தென்பட்டது.

வடியடாப்பா... வடி... வடி... அதாவது எண்ணெய், ஒயில்... இப்ப விளங்குதே?

பலத்த குரலில் சத்தம்போட்டு, கைகளால் அபிநயித்துச் சொல்லிக் கொண்டபோது... அந்தச் சாலையில் சென்றவர்களில் அநேகமானவர்கள் எங்கள் மூவரையும் மாறிமாறிப் பார்த்துக்கொண்டு போனார்கள்.

சனப்புழக்கம் நிறைந்த அந்தச் சாலையில், அவனது அங்கக் குறை பாட்டை முதலாளி பகிரங்கமான தனது சொல்லாலும் செயலாலும் எடுத்துக்காட்டியது எனக்குள் சினத்தை உண்டு பண்ணியது. நான் எனது நண்பனின் முகத்தைப் பார்த்தேன். அவனது முகத்தில் எந்தவித உணர்ச்சிகளும் இல்லை. அவன் அமைதியாக அவரைப் பார்த்துக்கொண்டிருந்தான்.

அவனிடம் இந்த முதலாளி மட்டுமல்ல அவன் வேலைசெய்யும் இடத்தில் உள்ள ஏனையவர்களில் ஒரு சிலரும் இதேமாதிரியாகத்தான் அவனுக்கு விளங்காத விசயங்களை அபிநயித்துச் சொல்லிக்காட்டுவார்களென நான் அறிந்திருந்தேன். ஆரம்பத்தில் அவன் தனது அங்கக்குறைபாட்டை நினைத்து அடிக்கடி மனம் வருந்திக்கொண்டது உண்மைதான். ஆனால், காலப்போக்கில் போரும்-வாழ்வும் நமக்கு ஒன்றாகிப்போன நிலையில், புதியதொரு விடுதலைக்காக போராடும் இன்றைய நாளில், சாதாரண ஒரு மனிதனான அவனுக்கு இக்குறைபாடு பெரியதொரு பிரச்சினையாகத் தோன்றவில்லை.

காரணம் சண்டைக் களங்களில் கையிழந்து... காலிழந்து... கண் இழந்து.. இன்னமும் உறுதிதளராது வாழும் போர் வேங்கைகளைப் பார்க்கும்போது அவன், தானும் அந்த உறுதியைப் பெற்றுக் கொண்டதான உணர்வில் அகமகிழ்ந்து போவான்.

அத்தவர்களுடைய அங்கக்குறைபாடுகளை நாலுபேர் முன்னிலையில், பகிரங்கப்படுத்தி மட்டம்தட்டிக் கூறுவதில் எம்மில் சிலருக்கு ஏன்தான் இப்படி ஆனந்தமோ அகப்பூரிப்போ தெரியவில்லையென நான் எண்ணிக் கொண்டிருக்கையில் அந்த முதலாளி அவனுக்கு வேறு சில விடயங்களையும் கூறிவிட்டு, தனது உந்துருளியை இயக்க ஆரம்பித்தார். அப்பொழுதுதான் நான் அவரது அந்தக் காலைக் கவனித்தேன்.

முழங்காலுக்குக்கீழே துண்டாடப்பட்ட நிலையில், அதற்குப் பதிலாக பொய்க்கால் பொருத்தப்பட்டிருந்தது. அவர் அந்த இடத்தைவிட்டுப் புறப்பட்ட பின்பு, நாங்கள் புறப்பட்டோம். மச்சான் டேய் உவருடைய காலுக்கு என்னடா நடந்தது? ஆனையிறவுப்பக்கம் போனவராம். அங்கை ஆமி தாட்ட மிதிவெடியிக்கை காலைக் குடுத்தவராம்...

அப்ப அவரும் யுத்த கால சூழலில் உன்னைப்போல பாதிக்கப் பட்டிருக்கிறாரெண்டு சொல்லன்.

நண்பன் என்னைப் பார்த்து, சிரித்துவிட்டுக் கூறினான். பௌத்த - சிங்கள பேரினவாதம் நடத்தும் யுத்தத்தால நாங்கள் எல்லோரும் பாதிக்கப்பட்டிருக்கிறம் என்பது உண்மைதான். ஆனால், அந்தப் பாதிப்பின் மூலம், இஞ்சை எத்தனை பேருடைய புத்தி தெளியுது? மனசு பக்குவப்படுது என்பதை ஓர் ஆய்வுக்கு எடுத்துக்கொண்டால் கேள்வி, கேள்வியாகத்தான் வளைந்து நிற்கும்.

எனக்கு எதுவும் புரியவில்லை. வினாக்குறியோடு அவனைத் திரும்பிப் பார்த்தேன்.

நண்பன் மீண்டும் சிரித்துவிட்டுக் கூறினான்.

இங்குள்ள ஒரு சிலருக்கு இன்னும் புத்தி நல்லாத் தெளியேல்லை. உதாரணத்துக்கு நம்முடைய முதலாளியை எடுத்துக்கொள். பணம் புரளும் அவர் வாழ்க்கையிலை, தான் ஓர் அங்கவீனன் என்பதை உணராது, அடுத்தவனின் குறைபாடுகளை வர்ணிப்பதில் சந்தோசம் காணுகிறார். காரணம், தங்களுடைய அங்கக் குறைபாடுகளை வெளிநாட்டுப் பணமும், உயர் அந்தஸ்தும், போட்டிருக்கிற உடுப்புகளும் மூடிமறைக்கிறதென்ற கற்பனை வாதத்தில் மூழ்கியிருப்பதே ஆகும். ஆனால், இது இவர்களுக்கு நிரந்தரமல்ல.

ஏனென்றால், எமது இனம் இன்னமும் தனது தாயக மீட்புப் போரிலிருந்து விடுதலை பெறவில்லை. இந்த விடுதலைக்காக இனிவரும் காலங்களில் நாங்கள் போராடும் போது எமக்கான இழப்புக்கள் இன்னமும் அதிகமாக இருக்கலாமென்றே நான் நினைக்கின்றேன்.

நிலைமை இப்படியிருக்க, இந்த மண்ணில் போரினால் பாதிக்கப்பட்டவர்களின் அங்கக் குறைபாடுகளை பலபேர் முன்னிலையில் வர்ணிப்பதும், உரத்துச் சொல்லிக் காட்டுவதும் அது அவர்களின் அறியாமையில் ஊறிய பலவீனமே ஒழிய வேறில்லை. இவர்கள் எல்லாம் பரிதாபத்துக் குரியவர்கள். ஏனென்றால், இப்படிப்பட்ட மனிதர்களுக்காக காலம் காத்துக் கொண்டிருக்கிறது ஒரு நியாயத் தீர்ப்பு வழங்குவதற்கு...

நண்பன் இன்னும் பல விடயங்களைக் கூறிக்கொண்டே வந்தான். கேட்பதற்கு சந்தோசமாக இருந்தது. காரணம்- அவன் இந்தச் சமுதாயத்தை... போரியல் வாழ்வில் புறக்கணிக்கப்பட்ட உள்ளங்களை... மேம்போக்காக வாழும் மனிதர்களை... நன்றாககே புரிந்தும், இனம் கண்டும் வைத்திருந்தான். இப்போது, அவனை நினைக்கவும் சந்தோசமாக இருந்தது எனக்கு.

ஆஞ்சநேயன் (வன்னி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாரம் தமது பிறந்த தினத்தைக் கொண்டாடும் செல்வன் சர்வோதயா அருச்சுனன், செல்வன் நிலன் திசவீரசிங்கம், செல்வி லக்ஷிகா ஸ்ரீ, செல்வன் சிவராசா சேந்தன் ஆகியோரை பல்கலையும் கற்றுச் சிறப்புடன் வாழ்கவெனக் குட்டி மாமாவும் மற்றும் சிறுவர் முற்ற சகோதர சகோதரிகளும் வாழ்த்துகிறோம்.



# சிறுவர் முற்றம்

## விடுகதை முற்றம்

### கடந்தவார விடை

1. இளநீர்.
2. கதவு.
3. தீக்குச்சி.
4. கோபுரம்.
5. நிலா.
6. ஊதுபத்தி.
7. வைக்கோல் போர்.
8. மீன்

### விடுகதை முற்றம்

1. காட்டிலும் மேட்டிலும் முளைக்காத பனை அது எது?
2. சிவப்புக்கார சிங்காரிக்கு கறுப்புக்கல் மூக்குத்தி அது என்ன?
3. ஓடையில் ஓடாத நீர். ஒருவரும் குடிக்காத நீர் எது?
4. பாடல் இல்லாத ஆட்டம். அது என்ன ஆட்டம்?
5. காட்டில் பச்சை. கடையில் கறுப்பு. வீட்டில் சிவப்பு அது என்ன?

[விடை அடுத்தவாரம்]

## கவிதை முற்றம்

### கும்மிப்பாடல்

கொட்டுங்கடி கும்மி
கொட்டுக்கடி - இளம்
கோதையரே கும்மி
கொட்டுங்கடி - புவி
எட்டுத் திசையிலும்
செந்தமிழின் - புகழ்
எட்டிடவே கும்மி கொட்டுங்கடி

சொல்லுக்குச் சொல்
வெல்லக் கட்டியடி - அதில்
தோய்ந்திடும் நூல்கள்
தேன் தொட்டியடி - பொருள்
வெல்லப் பயின்றவர்
தம்மினுக்கே - அதில்
வீறும் அறிவு பொன் பெட்டியடி.

## கதை முற்றம்

### மனிதர்கள், ஜாக்கிரதை!

'அம்மா! ஒரு கவளம் அன்னம் இருந்தால் கொடுங்கள், அம்மா!'

'ஐயா! ஒரு கவளம் அன்னம் இருந்தால் கொடுக்கச் சொல்லுங்கள், ஐயா!'

'கேட்'டுக்கு வெளியே நின்று, மாறி மாறிக் குரல் கொடுத்துப் பார்த்தான் அந்தப் பிச்சைக்காரன். 'உண்டு' என்று சொல்வாரும் இல்லை: 'இல்லை' என்று சொல்வாரும் இல்லை.

கொஞ்சம் துணிந்து, மெல்லக் கேட்டைத் திறந்துகொண்டு உள்ளே சென்றான். அவ்வளவுதான் 'புத்தி இருக்கிறதா, உனக்கு? இல்லை கேட்கிறேன்; புத்தி இருக்கிறதா, உனக்கு?' என்று சீறிக்கொண்டே அவனை நோக்கிப் பாய்ந்து வந்தார் அந்த வீட்டுக்காரர்.

அவன் சற்றே பின் வாங்கி, 'கோபித்துக்கொள்ளாதீர்கள் ஐயா! பசி வயிற்றைக் கிள்ளுகிறது; ஒரு பிடி சோறு இருந்தால் போடச் சொல்லுங்கள், ஐயா!' என்றான் பரக்க விழித்து, பல்லை மிகக் காட்டி. அவன் சொன்னதை அவர் காதில் போட்டுக்கொள்ளவில்லை; 'நான் கேட்பதற்குப் பதில் சொல்; புத்தி இருக்கிறதா, உனக்கு? இல்லை கேட்கிறேன்; புத்தி இருக்கிறதா, உனக்கு?' என்று மறுபடியும் கேட்டுக்கொண்டே முன்னேறி, 'இங்கே பார், என்ன எழுதியிருக்கிறது?' என்றார் கேட்டின் முகப்பில் மாட்டப்பட்டிருந்த சிறு 'போர்டு' ஒன்றைச் சுட்டிக்காட்டி.

அவன் பார்த்தான்; பார்த்துவிட்டு, 'நாய்கள் ஜாக்கிரதை என்றுதானே எழுதியிருக்கிறது?' என்றான் ஒன்றும் புரியாமல்.

'அதைப் பார்க்காமல் உள்ளே வரலாமா? இல்லை, கேட்கிறேன்; அதைப் பார்க்காமல் உள்ளே வரலாமா?' என்று இரைந்தார் அவர்.

'மன்னியுங்கள்; 'மனிதர்கள்தானே உள்ளே இருக்கப்போகிறார்கள்' என்று நான் நினைத்தது தப்புத்தான்!' என்றான் அவன் அமைதியாக.

### பொன்மொழிகள்

★ நான் என்னிடம் இருக்கும் அறிவு முழுவதையும் பயன்படுத்தி வருகிறேன். மேலும் மற்றவர்களிடம் இருக்கும் அறிவையும் கேட்டு வாங்கி பயன்படுத்தி வருகிறேன்.

–ஜோர்ஜ் பில்லிஸ்–

★ அறிஞனாக உங்களை உயர்த்திக் கொள்வதை விட, நல்ல காரியங்களைச் செய்து முடிக்கும் செயல் வீரனாக உங்களை உயர்த்திக்கொள்ளுங்கள்.

★ எவை உங்களுக்கு உபயோகமாக இருக்கிறதோ அவற்றை மட்டும் எடுத்துக் கொள்ளுங்கள். மற்றவற்றை விட்ட விடுங்கள்.

– கென் கெலா–

★ உங்களை விட உயர்ந்த நிலையில் இருப்பவர்கள் உங்களை எப்படி நடத்த வேண்டுமென்று நீங்கள் எதிர்பார்க்கிறீர்களோ அதே போன்று உங்களை விட தாழ்ந்த நிலையில் இருப்பவர்களை நீங்கள் நடத்துங்கள்

–செனேகா–

## சித்திரக்கதை — ஓயாத அலைகள் - 01 — அலை-09




(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'புலம்பெயர் தலைமுறை தங்கள் மூலவேர்களைத் தேடத் தொடங்கியுள்ளது'

## எனது வாழ்க்கையும் எழுத்தும் – எஸ்.பொ

*(கடந்த 11.08.2002 அன்று, காவ்யா வட்டம் சென்னை ஆனந்த திரையரங்க வளாகத்தில் நடத்திய விழாவின் படைப்பாளி அரங்கத்தில், எழுத்தாளர் எஸ்.பொ. அவர்கள் `எனது வாழ்க்கையும் எழுத்தும்' என்ற தலைப்பில் ஆற்றிய உரையில் புலம்பெயர் மக்கள் தொடர்பான பல விடயங்கள் அடங்கியுள் ளன. எனவே, ஈழமுரசு வாசகர்களுக்காக அதனை இங்கே தொகுத்துத் தருகின்றோம்.)*

*(சென்ற வாரத் தொடர்ச்சி)*

உண்மையில் ப. ஜிவானந்தம் அவர்கள் கல்கத்தா மாகாணத்திற்குச் சென்று யோக்கியமாக டாக்டர் விக்ரமசிங்காவுடன் கொழும்பு வந்து சேர்ந்தார். அவர் கள்ளத் தோணியிலே வரயில்ல. அவர் வந்து இறங்கின உடனேயே அவர் ஒரு தமிழ்க் கவிஞர் என்று பத்திரிகையிலேயே அறிமுகப்படுத்தப்பட்டார். அந்தக் காலத்திலே எனக்கு மிகப் பிடித்தமான எழுத்து அண்ணா துரையினுடைய எழுத்துத்தான். நான் தலைமாட் டில் வைத்து வசனமாகச் சொல்லுவேன். ரோமா புரி ராணிகளையும் அப்புறம் கம்பரசத்தையும், அதுல சிரித்து சித்திரவதை செய்யும் சிங்காரி. அவள் சொகுசுக்காரி. பலே கைக்காரி என்றெல் லாம் வரும். அற்புதமாக நான் அதிலே அடிமைப்



பட்டு அந்த வசனங் களை அப்படியே உள்வாங்கி ஒரு கதை எழுதினேன். அந்தக் கதைக்குப் பெயர் `அவள் அழகி ஆனாள்' எப்படித் தலைப்பு. இதேபோல் இந்தத் தலைப்புகளெல்லாம் விசேஷமானவை அந்தக் காலத்திலே அய்யோ என் செய்வார் அய்யர். அவள் அழகி ஆனாள் என்பதிலே அடுக்குத் தமிழிலே ஒருத்தியினுடைய அழகை வர்ணித்து அடித்திருக்கிறேன். அது வீரகேசரிக்கு போயிட்டு திரும்பி வந்திட்டு . அவன் ஏன் போடப் போறான். திரும்பி வந்துட்டுது. திரும்பி வந்தால், இந்த எழுத்திலே அதிகம் ஊக்குவித்து ஒரு இன்ஸ்ப்ரேஷனாக இருந்தது. எம். சி. சுப்பிரமணியம் என்று கம்யூனிஸ்ட் கட் சியைச் சேர்ந்தவர். கம்யூனிஸ்ட் கட்சியினுடைய நாடாளுமன்ற உறுப்பினராக இருந்தவர். இலங்கை ஒடுக்கப்பட்ட மக்களுடைய தலைவராக இருந் தவர். என்னுடைய அக்காவினுடைய கணவர்.

அவருடைய வீடும் என்னுடைய வீடும் இரண்டு வீடு தள்ளி. இந்த போஸ்ட் மேனுக்கு ஒரு சோம்பல் குணம் வந்துவிடும். அந்த ரெயில் பாதையைத் தாண்டி இங்க வந்து லெட்டர் கொடுக்கறதுக்கு அஞ்சாறு லெட்டர் இல்லா விட்டால், எனக்கு ஒரு லெட்டர் இருந்தால் அதை அத்தான் வீட்டிலேயே கொடுத்துவிட்டுப் போய் விடுவார்.

அப்படிக் கொடுக்கப்பட்ட கடிதம் ஜிவானந்தம் அவர்கள் அங்கு வந்து தங்கி யாழ்ப்பாண மக்களுடன் உறவாடிக்கொண்டிருந்த சமயத்திலே தான் கிடைத்தது. அப்ப அத்தான் அதை எடுத்து விரித்துப் பார்த்தார். இதென்ன உன்னுடைய மச்சான்... அவனும் நல்லா எழுதுவான் என்று இவரும் ஒரு ரெக்கமெண்டேஷன் கொடுத்திருக் கிறார். இதை வாசிப்பாக்கலாம் என்றதும் வாசிக் கறம். அப்போ அது அழகியானாள். உடனே ஜிவானந்தம் நான் வந்த பிறகு வேற விஷங்களை இழந்துபோட்டு, ஆம் அப்புறம் அவள் அழகியா னாள் பிறகென்னப்பா நடந்தது? இந்த அவள் அழகியானாள் என்று எழுதறதுனால வீட்ல சோறு கிடைச்சிருமா? அல்லது உங்களுடைய இந்த ஒடுக்கப்பட்ட நிலைமை மாறிடுமா? அய்யா எழுத்து என்பது விழுந்துபட்டு கிடக்கும் மனி தனை உயர்த்துவதற்கு, அதை மேன்மைப் படுத்துவதற்கு, அதிலும் ஒடுக்கப்பட்ட ஒரு சமூக நிலையிலுள்ள நீ உனக்கு எழுத்து ஒரு வாதாய மாக வருமானால் ஏன் நீ அதற்கு பயன்படுத்தக் கூடாது என்று. எனவே நான் வழி தவறிப்போன ஆட்டுக்குட்டி என்று இங்கே சித்தரிக்கப்படுவது போல நான் அல்ல. நல்ல முறையான ஆசா னிடம் பயிற்சி பெற்று வந்தவன். ஆனால், எங்கே பிரச்சினைகள் முளைக்கின்றது என்றால், எழுத்து ஆற்றல் படைப்பு ஆற்றல் அற்றவர்கள் இலக் கியத்தை மதிப்பீடு செய்வது ஒரு கலை என்றும், அது படைப்பு புரோசசிலே வகுபடா கூறு என்றும், உரிமை பாராட்டிக்கொண்டு, இது பிடிக்காது, இது பிடிக்கும் என்ன யாட்ஸ்டிக். யாட்ஸ்டிக்குன்னா என்ன அளவுகோல். மார்க்சிசமா அது இல்ல. மேலே நாடுகளிலே அங்கீகரிக்கப்பட்ட இலக்கிய தன்மைகளையும், திறமைகளையும் அளவுகோலாக வைத்து மார்க்சிய எழுத்தாளர்களுடைய எழுத்தை அளக்கும் ஒரு வித்தை. இதுக்கு எதிராக பேசி னால் ஏனைய்யா கோபப்படுகிறீர்கள். நான் மார்க்சிய இயக்கத்துக்கு எதிராகவே ஒரு இயக்கம் நடத்துவதாக ஏன் கற்பனை செய்துகொண் டிருக்கிறீர்கள். அநியாயங்களை நாங்கள் சொல்லு னுமய்யா. இந்த பாருங்க. இங்கே வந்து பல விமர்சன நூல்கள் வந்திருக்கின்றன. நான் சொல்லக்கூடியவர்களுடைய விமர்சன நூல்கள் எதிலாவது மஹாகவியினுடைய பங்களிப்பு பேசப்பட்டிருக்கிறதா? ஏன் காணவில்லை. அரிக் கிற முதுகை சொரிவதுதான் எங்களுடைய விமர் சனம். சொரி இன்பம் வேணும். இந்த சொரி இன்பத்துக்கு நான் என்னை உட்படுத்தாததி னாலும், மற்றவர்களுடைய எழுத்துக்களைக் காட்டிலும் என்னுடைய எழுத்துக்கள் வித்தியாச மாக இருக்கின்றன. தமிழ் அடையாளத்துடன் பின்னிப் பிணைந்து இருப்பது தமிழ் தேசிய உணர்வு. அந்தத் தமிழ்த் தேசிய உணர்வு புலம்பெயர்ந்த நாடுகளிலே உண்டு. மாத்தளை சோமு சொல்வதுபோல அடுத்த தலைமுறை பேசுமோ அதல்ல. என்னுடைய வீட்டிலே ஒரு உதாரணம் சொல்லுகிறேன். என்னுடைய மனை வியினுடைய சித்தியினுடைய மகன் இன்றைக்கு ஒரு பெரிய சர்ஜனாக இருக்கிறான். அவன் லண்டனிலே பிறந்தவன். ஆஸ்திரேலியாவிலே வைத்தியக் கல்லூரியிலே படித்து இன்றைக்கு மிகவும் மதிக்கப்படும் ஒரு வைத்தியனாக இருக்கிறான். அந்த வைத்தியன் தாய், தந் தையுடன் கோபித்தான். என்ன கோபித்ததென்றால் `ஹூ ஐயம் ஐ' நான் யார்? நான் தமிழன். நான் தமிழன் என்ற உணர்வையும் நான் தமிழில் பேச வேண்டும் என்ற உணர்வையும் நீங்கள் ஏன் கற்றுத்தரயில்லை.' (**அடுத்தவாரம் நிறைவுறும்**)

# நேசமொழியில் பேசவிடு

**29.07.2002 திங்கள் மாலை 6.50**

வெய்யில் தாழ்ந்தும் அதன் புழுக்கம் அடங்கவில்லை. பிடரி பிசுபிசுத்துக்கிடந்தது. கயிற்றில் கட்டிய தகர வாழியை கிணற்றுக்குள் மெல்ல இறக்கி மூன்று முறை தாழ்த்தி நீரள்ளிக்குடித்தும், தகரத்தின் நெழிவில் விரல் வெட்டாது தெளிந்த குளிர் நீரை பின்னங்கால்களுக்கு ஊற்றியும் வியர்வை கசிந்தபடிதான் இருந்தது. காற்று வீசாத இந்தப் புழுங்கும் மாலையை என்ன தான் செய்யலாம்? வாசல் படியின் இருபுறமும் உருண்டு நிற்கும் தூண் அருகே வந்தமர்ந்தேன். அங்கும் காற்று வீசுவதாக இல்லை. இன்று இரவு கண்விழித்திருக்கவேண்டுமென்று ஒரு குட்டித்தூக்கம் போட்ட பலர் இப்பொழுது விழித்துவிட்டனர். கையில் ஒரு விசிறியுடன் வியர்வையை திட்டியபடி வாசற்படியருகே வந்தமர்ந்தனர். ஒரு சின்னக்கலக்கம் என்னைத் தொற்றிக்கொண்டது. `அப்படியெண்டால் இண்டைக்கு இரவு கூட காத்து வீசாதோ?' என்று நான் கேட்டேன். `ஆருக்குத் தெரியும்' என்று அத்தை சொன்னா. சட்டென என்னுள் இருண்டுகொண்டது. காற்றில்லாத ஓர் இரவு வரலாம். புரண்டு புரண்டு வியர்வைக் கசிவில் நாம் வெதும்பியும் போகலாம்.ஆனால் இன்றைய இரவிற்கு சோளகம் வேண்டும். விழிக்கும் செவிக்கும் விருந்து கிடைக்க விருக்கும் இன்றைய இராப்பொழுதில் மனதிற்கு சோளகம் வேண்டுமே! சோளகம் வீசாதுபோனால்...

சிறிது சிறிதாய் சில படங்கள். பெரிது பெரிதாய் பல கதைகள். அனைத்தும் பொய்யாகிப் போய்விடுமே!

அப்படி ஆகிவிடக்கூடாது. இன்று - இரவு - சோளகம் - வீசும்! அப்படித்தான் நான் நம்பவிரும்பினேன். ஓர் இராப்பொழுதில் சோளகம் ஏன் வீசவேண்டும்? ஏன் கண்விழித்திருக்கவேண்டும்? என்று கேட்கிறாயா?

நேற்று மாலைமுதல் மரங்களிலும் போஸ்ட்களிலும் வாழ்வு மிளிர்கிறது. லவுட்ஸ்பீக்கரும் இடையிடை ரியூப்லைட்டும் பூட்டப்பட்டு வீதி கூட ஒரு விழாப்போல மாறிவிட்டது. இருந்தும் மனதில் ஒரு உறுத்தல், கண்ணைக்கூசும் ரியூப்லைட்டின் வெள்ளை ஒளியிடையும் லவுட்ஸ்பீக்கரின் கனீரென்ற ஒலியிடையும் தார் வீதி போரின் சுவடுதனை தாங்கி நிற்கிறது. பீரங்கிகளின் இரும்புச் சில்லுக்குள் நெரிபட்டவலி, மனிதக்குருதியை உறிஞ்சிக் குடித்த துயர் யாவும் அப்படியே அதில் பதிந்திருக்கிறது. இப்போது விட்டு விட்டு பக்திப்பாடல் ஒலிக்கிறது. கிணற்றடிக்கும் முற்றத்திற்கும் மாறி மாறி ஓடிச்சென்று அதனை கேட்கிறேன். மதிலுக்கு பின்னால் கேட்கிறது. அட, தென்னோலைகளுக்குள்ளிருந்தும் கேட்கிறது. இது விசித்திரம் அல்லவா? இப்போது புரிந்துவிட்டதா?

இன்று இரவு அம்மன் கோயில் பூங்காவனம். பிறகு விடிய விடிய மேளச்சமா! மேளச்சமா என்றால் அதற்கு சோளகம் வேண்டும். வீசும் சோளகத்தை கிழித்துக்கொண்டு கடகடவென ஒலிக்கும் அந்த தவில்தான் இப்போது மனதிற்கு மகிழ்வு தரும் விடயம். `மேளச்சமா எப்ப தொடங்கும்?' மிகுந்த ஆவலுடன் கேட்கிறேன். `அது இரவு பத்து பத்தரை ஆகும்' என்று பதில் வந்தது. மணிக்கூட்டைப் பார்த்தபடி நான் காத்திருக்கிறேன்...

**சாமம் 12.20**

சட்டென அந்த இடத்தில் இருந்து எழுந்து வந்தது சரியா? பிழையா? தெரியவில்லை. ஆனால் மனதிற்கு ஒவ்வாத ஒரு சூழலில் அமர்ந்திருப்பதில் அர்த்தம் ஏதும் உண்டா? இல்லையல்லவா? மேளச்சமா கேட்க எத்தனை ஆவலுடன் இருந்தேன் என்று உனக்கு தெரியும். மணிக்கூட்டைப் பார்த்தபடி மனதில் சிறகு விரியவிட்டதும் உனக்குத் தெரியும். எல்லாம் சிதறிச் சிதைந்தது மட்டும் உனக்குத் தெரியாது...

இரவு நெருங்க நெருங்க அயலவர் பலர் வீட்டினுள் கூடினர். தவில் கச்சேரிக்கு எல்லோரும் சேர்ந்து போகலாம் எனக் காத்திருந்தனர். வந்தவர்க்கு தேநீர் உணவு என அடுப்பில் நெருப்பு எரிந்தபடி இருந்தது. 'பசியில்லை' என்று சொல்லியும் கப்பல் பழத்தை புட்டுடன் பிடித்து பிடித்து தந்தா அப்பம்மா. கைகழுவும் போது மிகவும் அண்மையில் அது கேட்டது. உடுப்பை போட்டுக்கொண்டு `மேளச்சமா தொடங்கிவிட்டது வாங்கோ எல்லாரும்' என்று அவசரப்படுத்தினேன். ஒளியே இல்லாத எங்கள் ஒழுங்கையில் நாம் நடந்தோம். முன்னே ஒருவர் ரோச்லைட்டை அடித்தபடி செல்ல நாம் அவரை பின்தொடர்ந்தோம். அதன் ஒளி முழு நிலவு போல நிலத்தில் விழுந்து உருண்டு உருண்டு →

PAPAYA
MODERN CEYLON CUISINE
Restaurart

குறைந்த விலையில்
குன்றாத மனநிறைவு
* தமிழர்களால் தயாரிக்கப்பட்டு தமிழர்களால் பரிமாறும் அறுசுவை உணவகம்.
* அனுபவமும், திறமையும் உள்ள சமையலாளர்களால் தயாரிக்கப்படுகின்றன.
* இத்தாலிய உணவுவகைகளும் தேர்வுகளுக்குண்டு.
* திருமணம், பிறந்தநாள் மற்றும் விருந்துபசார வைபவங்களுக்கு குறித்த நேரத்தில், குறைந்த நியாயமான விலைகளில் அறுசுவையுடன் பரிமாற காத்திருக்கின்றார்கள்
15 Village Way East,
Rayners Lane,
Harrow,
Middlesex HA2 7LX
Tel: 020 8866 5582 Fax: 020 8866 5582
www.papayauk.com,
e-mail:papaya@papayauk.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓடித்திரிந்தது. எம் சிரிப்பொலி கேட்டு வேலியின் பின் உறங்கிக்கொண்டிருந்த நாய் ஒன்று குலைக்கத்தொடங்க அண்ணாவின் கைகளை நான் நசுக்கிப்பிடித்தேன். அம்மன் கோயில் அண்மித்ததும் வறுத்த கச்சானும் ஐஸ்கிரீமும் கலந்து மணத்தது. திருவிழாவில் மட்டும்தான் அப்படி ஒரு மணம் வரும். மிக அபூர்வமான மணம் அது. வீதியோரங்களில் மண்ணெண்ணை லாம்பு பூட்டி வியாபாரம் நடந்தது. வண்ண வண்ண ப்ளாஸ்டிக் சாமான்கள் ஒரு கடை. பாத்திரக்கடை, காப்புக்கடை, கச்சான் கடலைக்கடை, விளையாட்டுச்சாமான்கடை... வண்ணங்களுக்கு அங்கே பஞ்சமே இல்லை. 'அக்கா வாங்கோ, அம்மா வாங்கோ' என்று ஒரு சிறுவன் லாம்பின் ஒளியில் கையசைத்துக் கூப்பிட்டான். மஞ்சள் ஒளியில் அவனின் விழிகள் மின்னின. என்னைக் கேட்காமலே கால்கள் அவனருகே சென்றன. சிறுவயது நினைவுகள் தான் என்னை அவனிடம் கூட்டிச்சென்றிருக்க வேண்டும். அம்மாவின் கையை இறுகப்பிடித்தபடி சுற்றுக்காப்பும், வளைந்த மீன் கிளிப்பும் வாங்கியது ஞாபகம் வந்தது. அண்ணாவிற்கு அப்போது ஆறு வயது. காரும், 'வைன்' குடுத்தால் நிலத்தில் ஓடித்திரியும் கோழிக்குஞ்சும் அம்மா வாங்கிக் கொடுத்தா. திருவிழாவின்போதே அண்ணா அதனை உடைத்ததும், வீடு வரும்போது முகம் கறுத்து கோழிக்குஞ்சின் ஒவ்வொரு பாகத்தையும் கையில் அள்ளி வந்ததும், பிறகு அடுத்தநாள் அதனை எடுத்து ஒட்ட முயன்று தோற்றுப்போனதும்... எல்லாம் அப்படியே நினைவில் வந்தது. என் நினைவினை நிறுத்த கடகடவென்று அந்த ஒலி கேட்டது. எம் நடையில் வேகம் கூடியது. நாம் வெண்மணலில் அமர்ந்தோம். அது வேம்பின் வேரோடிய மணல். கூட்டம் கூட்டமாக எத்தனை சனம்! நின்றும், சரிந்தும், அமர்ந்தும், கால்கள் மாறி மாறி நீட்டியும், மடித்தும், குவித்தும்... கதிரை இல்லை. அதனால் ஓர் ஒழுங்கு இல்லை. ஆனால் அந்த ஒழுங்கற்ற நிலையே அங்கு அழகாய் இருந்தது. உள்ளங்கைகளிலும் உடுத்த உடையிலும் மண் ஒட்டியிருக்குமே! அதுதான் அழகு. எம்முன் மேடை போட்டு, பூச்சரத்தால் பந்தலிட்டு, மைக்பொருத்தி அதன் முன் பட்டுவேட்டியும் பதக்கத்துடனும் நால்வர் அமர்ந்திருந்தனர். இருவர் நாதஸ்வரம் இசைக்க மற்ற இருவரின் கைவிரல்கள் தவிலில் புரண்டன.

தவிலிசை என்றால் தேனில் குழைத்த நல்ல தேவாரம் அல்லது பக்திப்பாடல் ஒலிக்கும் என நினைத்தேன். ஒவ்வொரு வீச்சிலும் கைகளில் இறுக்கிப்பிடித்து தாளம் தப்பாமல் சுத்தமாக வந்து விழும் என நினைத்தேன். சுருதி பிசகாது காதிற்கு விருந்து கிடைக்கும் என்ற நினைத்தேன்.

வாழ்வு ஏன் நாம் நினைப்பதுபோல் இருப்பதில்லை? தேவாரம் அங்கு ஒலிக்கவில்லை. பக்திப்பாடல் கூட வர பஞ்சிப்பட்டது. தாளமும் கைக்குள் நில்லாது தப்பி எங்கோ ஓடிச்சென்றது. சுருதி பிசகி காதிற்கு இனிமை அல்ல. இரைச்சல் தந்தது. 'ஓபோடு' எனும் பாட்டில் தாளம் எப்படி கட்டுக்குள் நிற்கும்? 'பொண்ணு ஒருத்தி சும்மா சும்மா' என்றால் சுருதி பிசகும்தானே? 'அப்பிள் பெண்ணே' என்றால் அங்கு எங்கு லயம் இருக்கப்போகிறது?

எம்முடன் வந்தவர்கள் முதல் இசை தொடங்கும் போதே தலையை உடைத்து 'இதுதான் பாடல்' என என் காதில் சொல்லினர். மிகுந்த ஆவலுடன் தலையசைஞத்து காலில் தாளம்போட்டு இரசித்தனர். நான் மிகவும் குழம்பிப்போனேன். மக்களையும் வாழ்வையும் புரியாது நின்றேன். மக்களின் இரசிப்புத்தன்மை மாறியதால் இசைமாறியதா? அல்லது இசையின் திசை மாறியதால் மக்களும் அதற்கு இசைந்து மாறி விட்டார்களா?

பலாப்பழத்தின் சுவையை உருசித்து, பால் நிலவின் ஒளியில் உறங்கி, செம்மண்ணின் சூட்டில் உலவி, செம்பருத்தியின் சிலிர்ப்பில் மகிழ்ந்து, துலா மிதித்து, நீர் அள்ளிக் குளித்து, கச்சான் கொறித்து, நல்ல மேளச்சமா கேட்டு வந்த எம் மக்கள் எங்கே? அவர்களா இதற்கு தலையசைக்கின்றனர்? மாற்றங்களை வெறுப்பவள் அல்ல நான். மாற்றங்களால் எம் அடையாளம் அழிந்துவிடும் நிலையாயின் அவை வேண்டாம். காதிற்கு இரைச்சல் இன்னும் கூடியது. கால்கள் மடித்து அமர்ந்திருந்ததில் விறைக்கத் தொடங்கின. அம்மாவின் கண்களும் மண்ணைக் கவ்வியபடி இருந்தது கண்டு 'போவமா' என்று தலையசைத்துக்கேட்டேன். இருவரும் தவிலிசையின் இடையில் எழுந்து வீடு வந்துவிட்டோம். வரும்போதுதான் அண்ணாந்து பார்த்தேன். வேம்பினதும் அரசினதும் இலைகள் சரசரத்தனதான். ரியூப்லைட்டின் வெளிச்சத்தில் அது இன்னும் தெளிவாகத் தெரிந்தது. பச்சிலைகள் மின்னி மின்னி அசைந்தன. இந்த இரைச்சலுக்கு அவைகூட தலையாட்டுகின்றனவா? வீசாது என்று நினைத்த சோளகம் விசியது. இனிக்கும் என்று நினைத்த மேளச்சமா இனிக்கவில்லை. அந்த கடகடவென்ற ஒலிதான் என் நடையின் வேகத்தைக் கூட்டி கோயிலுக்கு இழுத்துச் சென்றது. சற்று முன் அதே ஒலிதான் என்னை எழுந்து வீடு வரச்செய்தது.

இப்போது நள்ளிரவு தாண்டி நாய்கள் ஊளையிடுகின்றன. சட்டென எழுந்து வந்ததில் அலைந்து அல்லாடி அந்தரப்பட்டு துவண்டு துயருற்று போகிறது மனம். இருள் கவிகையில் சற்று அதிகமாகவே துயர் கசிகிறது. இந்த இருளின் ஒவ்வொன்றிலும் அது நிறைந்து நிற்கிறது. கிணற்றோரம் சரிந்து நிற்கும் சாம்பல் வாழையிலும், முற்றத்துக்கொடி மல்லிகையிலும், மண்குடத்தினுள்ளும், மாவிலையிலும், அள்ளும் நீரிலும் பொளியும் நிலவிலும், வீசும் மென்காற்றிலும் மெழுகாய் துயர்படர்கிறது. கேள்விகள் என் உடல் மீது ஊர்கின்றன. உண்மையிலே அது இரைச்சல்தானா? அல்லது தவிலிசையின் இந்தப் புதிய அலைக்கு நான் இசைந்துகொடுக்கவில்லையா? அலைக்கெதிராய் நீந்துகிறேனா?

ஊரில் ஊறிய பலர் தவில் என்றால் தட்சிணாமூர்த்தி என்பார்கள். அந்த தட்சிணாமூர்த்தி இந்த தவிலிசையை கேட்டிருந்தால் என்ன கூறியிருப்பார்? எழுந்து வந்திருப்பாரா? அல்லது அமர்ந்து இருந்திருப்பாரா? எனினும்...

சிறிது சிறிதாய் சில படங்கள். பெரிது பெரிதாய் பல கதைகள்- எல்லாம் பொய்யாகிப்போனதுவே!

– அம்புலி

## மார்பக புற்று நோய்க்கு உதவ புதிய திட்டம்

இங்கிலாந்தில் உள்ள டெபன்ஹாம்ஸ் என்ற உள்ளாடை விற்பனை நிறுவனத்தினர், மார்பகப் புற்றுநோயால் பாதிக்கப்பட்ட பெண்களுக்கு உதவுவதற்காக ஒரு புதிய ஏற்பாடு செய்து உள்ளனர். அதன்படி அந்த நிறுவனத்தினர் விற்பனை செய்யும் ஒவ்வொரு மார்பங்கி மூலம் கிடைக்கும் வருவாயில் குறிப்பிட்ட வீதம் மார்பகப் புற்றுநோயாளிகள் நல அறக்கட்டளைக்கு வழங்க முடிவு செய்துள்ளது. அந் நிறுவனத்தின் இந்த நல்ல திட்டத்திற்காக, இங்கிலாந்தின் பிரபல மாடல் அழகி கேப்ரியல் ரிச்டிசன்ஸ் அந்நிறுவனத்தின் உள்ளாடையை அணிந்து விளம்பரம் செய்துள்ளார். இம்முயற்சி பலாராலும் பாராட்டப்பட்டுள்ளது.

## பலதும் பத்தும்

## 3000 தேள்களுடன் 32 நாள் இருந்து

தாய்லாந்து நாட்டில் கின்னஸ் சாதனை வரிசையில் இடம் பெறும் நோக்கத்துடன் 3,000 தேள்களுடன் இருந்து பெண் சாதனை படைத்து வருகிறார். தாய்லாந்து நாட்டைச் சேர்ந்தவர் காஞ்சனா கெட்கி யூவ் என்ற 30 வயது பெண், 3000 வரையான விஷத்தேள்களுடன் 32 நாட்கள் இருந்து, சாதனை புரியும் முயற்சியை 21.09.2002ம் அன்று தொடங்கினார். அந்த நிகழ்ச்சி பாங்ஹொக் அருகில் பட்டயா என்ற இடத்திலுள்ள இட் ஓர் நொட் அருங்காட்சியகத்தில் நடைபெற்று வருகிறது. கின்னஸ் சாதனையாளர் வரிசையில் இடம்பெற





வேண்டும் என்ற நோக்கத்துடன் அந்த நிகழ்ச்சியை நடத்திவரும் காஞ்சனா, தேள்களைக் கையில் எடுத்து முத்தம் கொடுக்கும் காட்சியை மக்கள் ஆவலுடன் பார்வையிடுகின்றனர். இதற்கு முன் மலேசியப் பெண் ஒருவர் 2700 வரையான தேள்களுடன் 30 நாட்கள் தங்கியிருந்தது தெரிந்ததே. இவரது சாதனையை முறியடிக்கவே தாய்லாந்துப் பெண் இறங்கியுள்ளார்.

## கஸ்ரோவின் சாதனையை சோக்கல்லோ சண்முகம் முறியடித்தார்

1960 செப்ரெம்பர் 26ல் கியூப ஜனாதிபதி பிடல் கஸ்ட்ரோ ஐக்கிய நாடுகள் சபையில் தொடர்ந்து 4 மணி 29 நிமிடங்கள் பேசி அப்போது உலகசாதனை படைத்து கின்னஸ் புத்தகத்தில் பெயர் பதித்தார். அவருடைய சாதனையை தமிழர் ஒருவர் முறியடித்துள்ளார்.

மக்கள் கலைஞர் என அழைக்கப்படும் சோக்கல்லோ சண்முகம் என்பவரே இச்சாதனையை நிலைநாட்டி கின்னஸ் சாதனை நூலில் தனது பெயரை பதிவு செய்துள்ளார். கடந்த வாரம் கொழும்பில் தேசிய கலை இலக்கிய பேரவையின் அனுசரணையுடன் வெள்ளவத்தை பெண்கள் ஆய்வு நிலையத்தில் காலை 9 மணிக்கு தனது பேச்சை ஆரம்பித்த அவர், மாலை 4 மணி 40 நிமிடம் வரை சுமார் 7 மணி 40 நிமிடங்கள் பேசியுள்ளார்.

இயற்கைக் கடன்களைக் கழிக்கக்கூட நேரமெடுக்காமல் சோக்கல்லோ சண்முகம் தொடர்ந்து பேசினார். பேசுவதற்கு குறிப்பு எதையும் அவர் வைத்திருக்கவில்லை. எனினும் பார்வையாளர்களுக்கு சலிப்பு ஏற்படாதளவிற்கு மிகவும் சுவாரசியமாக பேசியுள்ளார். மொத்தம் 7 மணி 40 நிமிடங்கள் பேசிய அவர் நாலரை மணிநேரம் பேசிய பின்னரே தண்ணீர் அருந்தினார். இவரது சாதனைப் பேச்சிற்கு பேராசிரியர் சிவசேகரம், சி.வன்னியகுலம், கா.செந்தில்வேல், கலாநிதி செல்வி திருச்சந்திரன், ச.இலகுப்பிள்ளை, ஆ.பிரான்ஸிஸ் ஜெனம், மா.கண பதிப்பிள்ளை, த.கோபாலகிருஷ்ணன் ஆகியோர் நடுவர்களாக கடமையாற்றியுள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கவிக்களம்

மௌனமே வாழ்க்கையாக
வார்த்தைகள் இன்றி
நிசப்தத்தில் கரைகிறது
வாழ்க்கை.

சிரிப்பை தொலைத்த முகங்கள்
சத்தமின்றி அழுதிடும் விழிகள்
இடிந்த கட்டிடங்கள்
உடைந்த மனங்கள்
பறவைகள் கூட
மௌனம் காக்கின்றன
ஆனால்
மனங்கள் மட்டும்
எப்போதும் எதையோ
தேடியபடி...!

தொலைந்துபோன
வாழ்க்கையையா
இல்லை
மலரப்போகும் வசந்தத்தையா
எதை தேடுகின்றன ?
அந்த இனிய வசந்தத்தை
கோரப்பற்களாலும்
அசுர கால்களாலும்
அழித்து சிதைத்த
அரக்கர்களையா ?
எதை தேடுகின்றன ?
எப்போதும் எதையோ
தேடியபடி....
ஆனாலும்
ஒரு நம்பிக்கை
இலையுதிர் காலத்தில்
இழந்து நிற்கும்
மரங்களெல்லாம்
மீண்டும் துளிர்ப்புக்காய்
காத்திருப்பது போல
நாமும்

சாந்தனி வரதராஜன்

*(viiம் பக்கத் தொடர்ச்சி)* . . . . . . .

விகிதத்தினாலோ என்னா காரணத்தாலோ அவர்களிடம் நல்ல இலக்கியம், அரசியல், தமிழரக்ளோடு ஒப்பிடும்போது, இருக்கிறது. இங்க சராசரி வாசகன்னு எடுத்துட்டா கல்கி, குமுதம், ஆனந்த விகடன்னு திருப்திப்பட்டுப் போகிற, அதை ஒரு தகுதின்னு கூட கருதிக் கொண்டிருக்கிற வாசகச்சூழல். அங்கயும் இப்படி ஜனரஞ்சக எழுத்துக்களப் படிக்கிறவங்க இருக்காங்க ஆனா அதுக்கு அப்பாற்பட்டு, கொஞ்சம் காத்திரமான நல்ல இல்க்கியங்களப் படிக்க அவங்களுக்கு இருந்த கல்வி வசதி, படிப்பறிவு அதிகரித்தபடியில் இருக்கிறதனால, இயற்கையாகவே அதிகமான விழிப்புணர்வு இருக்கிறதனால அவங்க அப்பிடி இருக்கிறாங்க. அவர்களுடைய வாசகர்கள் இளயவர்கள், தமிழுடன் ஒப்பிடும்போது அவர்களது மொழி இளயமொழி. அவங்க மேல போக நெனக்கறாங்க. தமிழை எடுத்திட்டீங்கன்னா, தமிழனுடைய கலாச்சார உணர்வு,. இவன் வந்து ரெண்டாயிரத்தி ஐநூறு ஆண்டுகளினுடைய சிகரங்களைத் தொட்டவன். சிலப்பதிகாரம், சங்க இலக்கியம், சங்கம் மருவிய இலக்கியம், பக்திப்பாடல்களன்னு- இலக்கியத்துல மட்டுமல்ல, கட்டிடக் கலைல, இசையில, நடனத்தில இலக்கணம் எழுதக்கூடிய அளவுக்கு பாண்டித்யம் உள்ளதாக இருந்த ஒரு இனம் இது. நூற்றாண்டுகளாக அது எல்லாம் வீழ்ந்திருச்சு. அதனால நாம இது எல்லாத்துக்கும் புதுசா இருக்கறம். புதசா ஒரு அறிதலோ கட்டி எழுப்பிப் போகனுங்கற ஆர்வமோ நம்மகிட்ட இல்ல.

இலங்கைத் தமிழரோட ஒப்பிட்டுப் பாரத்துச் சொல்லனும்னா, அவன் கலாச்சார ரீதியாகத் தன்னைத் தனிமைப் படுத்திக் கொள்கிறான். ஒரே மொழியால் இந்தியத் தமிழர்களும் இலங்கைத் தமிழர்களும் ஒன்றுபட்டு இருந்தாலும், தமக்கென்று இலக்கியத்தை, அதிகாரத்தை, படைப்புக்களை ஆக்கி மேலெடுத்துச் செல்கிற சூழலில் அவன் இருக்கிறதால, அவன் ஒரு சராசரி இந்தியத் தமிழனைவிட விழிப்புணர்வுள்ளவனாக இப்பொழுது இருக்கிறான். ஒரு இலக்கை அடையவேனுமென்று அவன் போகிறான் ஆனா இங்க நாம் கல் தோன்றி முன் தோன்றாக்காலத்தே மூத்தகுடி அப்பிடின்னு இருக்கிறம். தமிழனுக்கு அருமையான அடையாளம் இருக்கு. அது இவனுக்குச் சொந்தமானதல்ல. இவனுடைய மூதாதையர்களுக்குச் சொந்தமானது.(உரையாடல் தொடரும்)


# உலக கால்நடை உற்பத்திகளின் பிறப்புரிமையியல்களுக்கான 7வது மாநாடு!

## - ஈழத் தமிழர்களும் பங்கேற்பு -

**ஈழமுரசு:- மிகுந்த பயன்பாடு என்று நீங்கள் சொல்லும்போது எங்கள் தேசத்தில் எருமை வளர்ப்பை ஊக்குவிக்க விரும்புகிறீர்கள் என்பது தெளிவாகிறது. அவற்றின் பால் இறைச்சி மற்றய மாட்டினங்களைப்போல் எங்களுக்கு ஏற்புடையனவா ?**

**தேவமனோகரன்:-** நிட்சயமாக நாட்டின மாடுகளோடு ஒப்பிடும்போது எருமையினம் அதிகளவு பயன்பாடுடையதே. நாட்டின மாடுகளைவிட அதிக அளவு பால் உற்பத்தியும், பாலின் கொழுப்பளவும் அதிகமாகவும்(மாட்டுப்பால் 4% ஆனால் எருமைப்பால் 8%) கொண்டுள்ளன. இறைச்சி உணவைப் பொறுத்தவரையிலும் அதிக நிறையுடன் கொலஸ்ரோல் இல்லாத தன்மையினையும் கொண்டிருப்பதால் அரபு நாடுகளில் உணவுக்காக இவ்வினத்தையே பெரிதும் விரும்புகின்றனர். நாட்டின மாடுகளைவிட நோய் எதிர்ப்புத்தன்மை, தரக்குறைவான உணவையும் விரைவில் சீரணிக்கும் இயல்பு இவ்வினத்தின் தனிச் சிறப்புக்களாகும்.

வெய்யில், மழை எந்தக் காலநிலையிலும்



உழவு வேலைக்கு உதவக்கூடியன. பிலிப்பைன்ஸ் நாட்டினர், எருமைகளின் முதுகுகளில் பொதிகளை ஏற்றிச் செல்வதற்கும், தாமே அதன் மீதிருந்து பிரயாணம் செய்வதற்கும் பயன்படுத்துகின்றனர். இப்படியாக ஆசிய கிராமிய விவசாயத்தில் இவற்றின் பயன்பாடுகள் அந்தந்த நாட்டினமாடுகளைவிட அதிகம் என்பதில் எந்த மாற்றமுமில்லை.

**ஈழமுரசு: உங்கள் ஆராய்ச்சிகளின் அடிப்படையில் ஏதாவது எதிர்கால செயல் திட்டங்கள்...?**

**தேவமனோகரன்:** நான் கற்றுக்கொண்டவற்றை எங்கள் மண்ணின் விவசாயிகள் தொழில் நுட்பவியலாளர்கள். மாணவர்கள் அனை வரும் மிக இலகுவான முறையில் புரிந்துகொண்டு எங்கள் மக்களின் வறுமையைப் போக்கும் பணியில் அவற்றினைத் தமிழிலும், ஆங்கிலத்திலும் நூல் வடிவமாக்கும் முயற்சியில் உள்ளேன்.

**ஈழமுரசு:- மிக்க நன்றி தேவமனோகரன் அவர்களே; நாங்கள் வெறும் சேற்று மாடுகளாகக் கணித்த எருமையினங்களின் சிறப்பு, பயன்பாடு, தேவை பற்றி மிக இலகுவாகப் புரியும் வண்ணம் சுருக்கமாகக் கூறியிருக்கிறீர்கள். உங்கள் எதிர்கால முயற்சிகள் திட்டங்கள் வளர்ச்சியும் வெற்றியும் பெறவேண்டும். வாழ்த்துக்கள்.**

**நீங்கள், சொல்லுங்கள் ஜெயறூபன்! ஈழத்திலிருந்து பொஸ்வானா நாட்டின் அழைப்பை ஏற்று அங்கு சென்று பணியாற்றிக்கொண்டிருக்கிறீர்கள். அங்கே அவர்களுக்கான உங்கள் பணி எவ்வகையானது?**

**ஜெயறூபன்:-** பொஸ்வானா இறைச்சி உணவுகளை ஐரோப்பிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதையே தன் முக்கிய முதலீடாகக்கொண்டது. முந்திய காலங்களில் வெளி நாட்டின மாடுகளைத் தருவித்து அவற்றை வளர்த்து இறைச்சிக்காக ஏற்றுமதி செய்து வந்தார்கள். ஆனால் தற்போது தங்கள் சுதேச மாட்டினங்களையே வளர்த்து அவற்றின் உற்பத்தித்திறனை அதிகரித்து ஏற்றுமதி செய்து முந்தியதை விட அதிக லாபத்தைப் பெறுமளவிற்கு எனது ஆராய்ச்சிகள் அவர்களுக்கு உதவி வருகின்றன.

**ஈழமுரசு:- அப்படியானால் இந்த மகாநாட்டில் அத்தகைய உங்கள் ஆய்வினைத்தான் சமர்ப்பித்தீர்களா!**

**ஜெயறூபன்:-** உண்மைதான், வளர்முக நாடுகளில் இறைச்சிக்காக வளர்க்கப்படும் மாடுகளை பிறப்புரிமையின் மூலம் எவ்வாறு அவற்றின் உற்பத்தியைப் பெருக்கலாம் என்ற விபரங்களைத்தான் வெளிப்படுத்தினேன். உதாரணமாக இதற்கு முன்பு 18 மாதங்களில் 230 கிலோவாக இருந்த நிறை எனது ஆராய்ச்சியின்படி 10 வருட காலங்களுள் 290-300 கிலோவரை அதிகரித்துள்ளது.

**ஈழமுரசு:- இப்படி குறைந்த வருட வளர்ச்சியில் இறைச்சி உணவுக்காக கால்நடைகளின் நிறைகளை அதிகரிப்பது உடலுக்கு தீங்கு தருவிக்கும் என்ற ஒரு கருத்து பொதுவாக மக்களிடம் நிலவுகிறதே!?**

**தேவமனோகரன்:-** (முந்திக் கொள்கிறார்) இல்லை... ஒருபோதும் இல்லை. அப்படி மக்கள் நினைப்பது தவறு.

**ஜெயறூபன்:-** இதற்குச் சுருக்கமாக விளக்கம் தருவதென்றால்... ஒவ்வொரு விலங்குகளிலும் நிறையானது அதன் உடலமைப்பிலுள்ள நிற முகூர்த்தங்களின் மூலம் (DNA) கட்டுப்படுத்தப் படுகின்றது. இவற்றினுள் சில நிறை கூடிய விலங்குகளை உற்பத்தி செய்யும் தன்மை



யுடையவை. பிறப்புரிமையியல் ஆராய்ச்சியினூடாக இந்த நிறை முகூர்த்தங்கள் கண்டுபிடித்து, அதன் விகிதாசாரங்களை அதிகரிப்பதன் மூலமே இறைச்சி நிறை அதிகரிக்கப்படுகிறது. ஆகையால் இவற்றினூடாகப் பெறப்படும் இறைச்சி மனிதருக்குத் தீங்கு தரக்கூடியதல்ல.

**ஈழமுரசு:- எங்கள் தேசத்திற்கு உங்கள் ஆராய்ச்சிகள் எவ்விதமான நம்பிக்கைகளைத் தரும்?**

**ஜெயறூபன்:-** நான் ஏற்கனவே எதை ஆராய்ச்சிகளினூடாக அதிக முட்டை தரக்கூடிய கோழியினத்தைப் பற்றிக் கூறியுள்ளேன்.

விரலுக்கேற்ற வீக்கம் என்று சொல்லுவார்கள். சிறிய நிலப்பரப்பைக் கொண்ட எங்கள் நாட்டில் பெருமளவு கால்நடை உற்பத்திகளைப் பெருக்க முடியாவிட்டாலும் சுய தேவைகளைப் பூர்த்தி செய்யுமளவிற்கும் ஓரளவு அயல் (சிங்கள) நாட்டிற்கு ஏற்றுமதி செய்யுமளவிற்கும், பால், இறைச்சி முட்டை போன்றவற்றின் உற்பத்தியை எனது ஆராய்ச்சிகளின் மூலம் பெருக்கலாம் என்ற நம்பிக்கையுண்டு.

**ஈழமுரசு:- தொடர்ந்தும் பொஸ்வானாவில்தான் பணியாற்றப் போகிறீர்களா அல்லது வேறு ஏதாவது விருப்பங்கள், திட்டங்கள் உண்டா?**

**ஜெயறூபன்:-** ஏன் சொந்த மண்ணிற்குச் சென்று அங்குள்ள எங்கள் மக்களுக்கும் விவசாயிகளுக்கும் எனது சேவையைப் பயன்படுத்த வேண்டும் என்பதே எனது பூரண விருப்பம். இதற்கான எனது விண்ணப்பத்தை யாழ் பல்கலைக் கழக துணைவேந்தரிடம் ஏற்கனவே அனுப்பியுள்ளேன். இதுவரை அவரிடமிருந்து எவ்வித பதிலும் வரவில்லை. காத்திருக்கிறேன்..

**ஈழமுரசு:- உலக உணவு உற்பத்திக்கான உங்கள் மகத்தான சேவையில் எங்கள் தேசம் பெருமை அடைகிறது. ஈழமுரசு வாசகர்கள் சார்பாக எங்கள் வாழ்த்துக்கள்.**

**நாளை நமதே! நம் நாடும் நமதே!! நாளை உங்கள் பணி எங்கள் மண்ணில் தொடரவேண்டும். நன்றி**

***- சந்திப்பு: எம்.அரியநாயகம் -***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முரண்பட்ட பார்வைகொண்ட பாரதியும் ஔவையும்

**(புரட்சிக் கவிஞர் பாரதியின் நினைவாக...)**

(சென்றவாரத் தொடர்ச்சி)

ஆனால், அதேவேளை தமிழனைக் கண்டிக்கவும் தயங்கவில்லை, பாரதி. தமிழனுக்கு அவர் கூறிய அறிவுரை இதோ!

தமிழா, உன் வேலைகள் அனைத்திலுமே பொய்க் கதைகள் மிதமிஞ்சிவிட்டன உனது மதக் கொள்கைகள், லௌகீகக் கொள்கைகள், வைதீக நடை - எல்லாவற்றிலுமே பொய்கள் புகுந்து தலை தூக்கி ஆட இடங்கொடுத்துவிட்டாய். இவற்றை நீக்கிவிடு. வீட்டிலும், வெளியிலும், தனிமையிலும், கூட்டத்திலும், எதிலும், எப்போதும் நேர்மையாயிருக்க வேண்டும்: உண்மையிருக்க வேண்டும். நீயும் பிறரை வஞ்சிக்கலாகாது. பிறரும் உன்னை வஞ்சிக்கலாகாது. பிறர் பிறரை வஞ்சிப்பதையும் நீ இயன்றவரை தடுக்கவேண்டும். எல்லாப் பேறுகளையும் காட்டிலும் உண்மைப் பேறுதான் பெருமை கொண்டது. உண்மைத் தவங்களுக்கெல்லாம் உயிர். உண்மை சாஸ்திரங்களுக்கெல்லாம் வேர். உண்மை இன்பத்திற்கு நல்லுறுதி. உண்மை பரமாத்மாவின் கண்ணாடி. ஆதலால், தமிழா, எல்லாச் செய்திகளிலும் உண்மை நிலவும் படி செய்.



அதேவேளை, தமிழ் மொழி குறித்துச் சற்று வித்தியாசமான கருத்தக்களையும், ஏன் கடுமையான கருத்துக்களையும் கூட அவர் வெளியிட்டுள்ளார். `தமிழில் எழுத்துக் குறை' என்ற தலைப்பில் ஒரு கட்டுரையையும்: `தமிழ்ப் பாஷைக்கு உள்ள குறைகள்' என்ற தலைப்பில் ஓர் உரையாடல் கட்டுரையையும் அவர் எழுதியுள்ளார். தமிழ்க்குரல் அன்பர்களின் தமிழ்ப்பசிக்கு அவை தீனி போடுவதாகவே அமையும் என்பது எமது கருத்து! அவற்றில் இருந்து சில வசனங்கள்:-

`பிரெஞ்சு, ஆங்கிலம் முதலிய ஐரோப்பிய மொழிகளிலும் இந்தி முதலிய நமது நாட்டுப் மொழிகளிலே வளர்வனவெல்லாவற்றிலும் உயிருள்ள மொழிகளிலே வளர்வனவெல்லாவற்றிலும் உச்சரிப்புத் திருத்தத்தைக் கருதிப் பழைய எழுத்துக்களில் சில அடையாளங்கள்

**— சபேசன் (தமிழ்க்குரல்) —**

சேர்த்து சௌகர்யப் படுத்திக் கொள்ளுங்கள். இதனால் எழுத்தின் வடிவத்தில் யாருக்கும் சந்தெகம் நேரிடாது. இந்த எளிய வழியை அனுசரித்து நமது தமிழ் மொழி விசாலமடைய வேண்டுமென்பதே என்னுடைய விருப்பம்.

**`சென்றிடுவீர் எட்டுத்திக்கும் - கலைச்**
**செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்'**

என்று தான் பாடியதின் உட்கருத்தை இவ்வாறு இன்னுமொரு பாடலிலும் தருகின்றார்.

**பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள்**
**தமிழ்மொழியிற் பெயர்த்தல் வேண்டும்:**
**இறவாத புகழுடைய புதுநூல்கள்**
**தமிழ்மொழியில் இயற்றல் வேண்டும்:**
**மறைவாக நமக்குள்ளே பழங் கதைகள்**
**சொல்வதிலோர் மகிமை இல்லை:**
**திறமான புலமையெனில் வெளி நாட்டோர்**
**அதை வணங்கஞ் செய்தல் வேண்டும்.**

அது மட்டுமல்ல தனது கட்டுரை ஒன்றில் கீழ்வருமாறும் எழுதியிருக்கின்றார். தமிழா, பயப்படாதே ஊர்தோறும் தமிழ்ப் பள்ளிக் கூடங்கள் போட்டு ஐரோப்பிய சாஸ்திரங்களை எல்லாம் தமிழில் கற்றுக்கொடுக்க ஏற்பாடு செய். தமிழன் உயர வேண்டும், தமிழ் மொழி சிறப்புற வேண்டும் என்று பாரதி விரும்பினார். அதையே உரக்கவும் சொன்னார். ஆனால், பாரதியின் வசன நடையிலும், பாடல்களிலும் அநேக சமஸ்கிருதச் சொற்கள் கலந்து வந்ததை மறுப்பதற்கில்லை. அதேபோல், சாதிகள் இல்லை என்று சொன்ன பாரதி, அந்தச் சாதிப்பேயை அழிப்பதாக நினைத்தக் கொண்டு, தாழ்த்தப்பட்ட சாதியினரைப் பிராமணராக்கும் முயற்சியிலும் ஈடுபட்டவர்தான்.

ஆனால், இதனைப் பாரதிகளின் குறைகள் என்று கருதுவதை விட, அந்தக் குறைகளில் இருந்து வெளிப்பட முனைந்த போது ஏற்பட்ட தவறுகள் என்றுதான் கொள்ள வேண்டும்! பாரதி வாழ்ந்த காலம் அப்படி! சீரழிந்து போன சமுதாயச் சேற்றில் இருந்து தன்னை விடுவித்துக் கொண்டு, புரட்சிகரமான சிந்தனைகளுடன் வெளியே வந்தவன் இந்த மகாகவி! அவன் இன்னும் நீண்டகாலம் வாழ்ந்திருந்தால், காலத்தின் பிடியால் தன்மீது ஒட்டியிருந்த மற்றத் தூசுகளையும் தூக்கி எறிந்து, தமிழ் இனத்தை, தமிழ் மொழியை மேலும் மிளிர வைத்து, உலக மகாகவியாகத் திகழ்ந்திருப்பான்! நல்லதொரு வீணையாக விளங்கியவனின் அருமை தெரியாமல் காலமும், மக்களும் அவனைப் புழுதியில் தள்ளினர்.

(முற்றும்)

# இலங்கைத் தமிழர் கலாச்சார ரீதியாகத் தனிமைப் படுத்திக்கொள்கின்றனர்

—பாலுமகேந்திராவுடன் யமுனா ராஜேந்திரன் உரையாடல்—

**03**

(சென்றவாரத் தொடர்ச்சி)

அதுக்கப்பால் பல சமயங்கள்ல இந்த வார்தைகள்ல சொல்லமுடியாத விஷயங்களுக்காக, நமது கையசைவுகளை, முகபாவத்தைக் கடன் வாங்க வேண்டிய அவசியம் இருக்கிறது. அவ கண்ணு ரொம்ப அழகானது. அவ கண்ணப்பத்தி நா என்ன சொல்லீட்டன்?. இலக்கியத்தில இந்தக் கண்ணப்பத்தி வர்ணிக்கறப்ப கயல்விழியாள், கண்ணுங்கற அறிந்த விஷயம், கண்ணுங்கற அறிந்து கொள்ளாத விஷயம் என இலக்கியம் மொழிக்குள் செயல்படுகிறது. காடசிரூபம் வந்து மொழி உச்சரிப்புக்குள், இயற்கைக்குள், உடல் மொழிக்குள் அதனது அசைவுக்குள் செயல்படுகிறது. இதைத்தான் இலக்கியத்தின் பற்றாக்குறை என்கிறேன்.

என்னுடைய நெருங்கிய நண்பனுடைய தாய் இறந்து போனாள். அந்தத் தாயின் சடலம் அவனுடைய வீட்டு முகப்பில கிடத்தப்பட்டிருக்கிறது. இவன் அழுது அழுது ஓய்ந்து மேற்கொண்டு அழமுடியாது திண்ணையில் கையில் தலை கவிழ்த்து உட்கார்ந்திருக்கிறான். நான் அந்தச் சாவுக்குப் போறன். என்னுடைய நண்பனை, அவனுடைய தாயை நடுக்கூடத்தில் பிணமாகப்படுக்க விட்டு, அழுது ஆறாது கண்ணீர் வற்றிப் போய் திண்ணையில் உட்காரந்திருக்கும் என் நண்பனை, என்ன வார்த்தைகள் சொல்லி நான் தேற்றட்டும்? வார்த்தைகள் இங்கு தோல்வியடைகிறது. வார்த்தைகள் இங்கு துயரமா தோத்துப் போகுது. அங்க போய் நான் ஏதாவது வார்த்தைகளை முட்டாள் தனமாகப் பேசி, ரொம்பவும் அநாகரிகமான ஒரு செயற்கையாக ஆனாலும் ஆகிவிடும். அதைவிட, எதுவுமே பேசாம அவன் பக்கத்துல போயி உட்காந்து, அவன் கைய எடுத்து உங்க கைக்குள்ள வச்சுக்கறீங்க. இந்தப் பரிமாற்றத்தை, இந்தத் தேற்றுதலை, எந்த வார்த்தைகளுஞ் செய்துவிட முடியாது. பற்றாக்குறை என்று நான் இதத்தான் சொல்ல வர்றன். மொழி போதாமை கொண்ட ஒரு ஊடகம். மொழி ஒரு துயரகரமான (*miserably*) பற்றாக்குறையுள்ள ஊடகம். தாஜ்மஹால் என்று வையுங்களேன். கட்டிடக் கலை யின் மாபெரும் அற்புதம். ஆயிரம் பக்கங்களில் உருக்கமாக மாய்ந்து மாய்ந்து வர்ணித்து எழுதினாலும், தாஜ்மஹாலைப் படத்தில் கூட பார்த்திருக்காத பார்வையாளனுக்கு, உன்னுடைய ஆயிரம் பக்கங்களைப் படித்தபிறகும் வராத உணர்வை காட்சிரூபம் கொடுத்துவிடும்.

## இரண்டாம் பகுதி

**ய.ரா:–** மொழி சம்பந்தமான ஆய்வுகளப் பார்க்கும் போது, மொழி நிறைய வரலாற்று ரீதியான ஆதிக்கத்தையும் கறைகளயும் மௌன அர்த்தங்களையும் கொண்டிருக்கிற அதேபோது, கலாச்சார ரீதியல் சார்புநிலையிலுள்ள பல விஷயங்கள மொழி தனக்குள்ள கொண்டு வற்றதில்லைங்கறது தெரியுது. மொழி வந்து சிந்தனையின் ஊடகம் அல்லது கருவி என்று சொன்ன விஷயம் கூட இன்னக்கி இல்ல.

**பாலு:–** எமது உணர்ச்சிகளைத் துல்லியமாகச் சொல்ல மொழி போதுமானதல்ல. உணர்ச்சிகள மட்டுமல்ல, ஒரு தடவ ஒண்ணப் பார்த்திருந்தாதான் அத சம்பந்தப்படுத்த முடியும், அல்லது கடன் வாங்கிச் சொல்ல முடியும். இந்த மொழியினுடைய இந்தப் பற்றாக்குறைதான், இந்த ஊடகத்தினுடைய மிகப்பெரிய பலமும் கூட. இந்தப் பற்றாக்குறை காரணமாகச் சொல்லப்படாமல் விட்ட விஷயங்களை, கலாபூர்வமாக வேண்டுமென்றே தவிர்த்துக் கொண்ட விஷயங்களை, ஒருத்தர் இட்டு நிரப்புவதற்கான சுதந்திரம் இந்த மொழியில இருக்கிறது.

இலக்கியங்கள சினிமா என்ற ஊடகத்தக்குக் கொண்டுவர்றதுக்கு முயற்சி பண்ணலாம். தப்பே இல்ல. ஆனா, எழுத்து என்கிற ஊடகத்தைப் படித்திருக்ககூடிய ஒருவனுக்கு, அந்த மூலத்தை அடிப்படையாக வைத்து எடுக்கப்பட்ட சினிமா மிகப் பெரும்பாலுமான சமயங்கள்ல ஏமாற்றத் தைக் கொடுக்கக்கூடும். சில அபூர்வமான சமயங்

**இலக்கியம்–கலைஞன்–அரசியல்**

கள்ல, படிக்கும்போது ஏற்பட்ட சுகானுபவம் படத்தைப் பார்க்கும் போதும் ஏற்படக் கூடும். ஆனா அது ஒரு விபத்து. ஒரு விதிவிலக்காக அது நடைபெறக் கூடும். இந்தக் காரணங்களுக்காக, அந்த ஊடகத்திலிருக்கிற உருவத்தை நான் முற்றிலும் கைவிட வேண்டியிருக்கிறதனால, அந்த உள்ளடக்கத்த மட்டும் நான் எடுத்துக் கையாள வேண்டியிருக்கிற காரணத்தினால, நான் தயங்கறன். நாம் பண்ணலாம, பண்ணக் கூடா துங்கறது இல்ல. அந்த எழுத்தப் படிக்காதவனுக்கு, எழுத்து ஊடகத்தை எதிர் கொள்ளாதவனுக்கு இந்தப் படத்தைக் கொடுக்கலாம். ஏனென்றால், இவன் மூலத்தை அறியாதன். ஆகவே முதன் முதலாக எதிர்கொள்வதால் அந்தக் கரு இவனை ஆகர்ஷிக்கலாம். இலக்கியத்த சினிமாவில கொண்டு வரணும்னு சொல்றது விருப்பார்வ எண்ணம் (wishful thinking). இதில தப்பேயில்ல. என்னளவுல, அந்த உருவத்தோட ஒரு இலக்கியத்துல நான் பெற்ற அனுபவம், இங்க நஷ்டப்பட்டுப் போகுமோ என்கிற ஒரு பயம் எனக்கிருக்கு. ஒரு கதைய ஒரு ஓவியமாக மாத்தறது அவ்வளவு இலகுவான காரியமல்ல. ஓவியனுடைய ஊடகத்திலிருக்கிற பாண்டித்யம் காரணமாக அவனும் அதை பிரக்ஞைபூர்வமான தனித்த படைப்பாக ஆக்க முடியும். அந்த நொடியில தோண்றர, கடையுடைத்த கற்பனா சுதந்திரம் இதுல இருக்காது. இப்படியான விஷயங்கள ஒரு தனிப்பட்ட ஊடகம் சார்ந்த விஷயமாக நீ பார்க்க வேணுமே ஒழிய, ஒப்பிட்டு நோக்கக் கூடாதுன்னு நான் நினைக்கிறன். மாறுபட்ட ஊடகங்கள் மாறுபட்ட அலைவரிசையைக் கொண்டிருக்கின்றன. மாறுபட்ட இலக்கணங்களைக் கொண்டிருக்கின்றன. ஆக, நமக்குள்ளயே ஒரு கட்டுப்பாட்ட விதித்துக் கொண்டு, அந்தந்த ஊடகத்துக்குரியதாக அதப் பார்த்தால் அது நல்லது.

**ய.ரா:–** மொழியினுடைய பற்றாக் குறை, அதனுடைய தனித்தன்மை போன்றவற்றையும் நாம் கவனத்தில் எடுத்துகொண்டு பார்த்தா, இப்ப இந்திய சினிமாவினுடைய நல்ல படங்கள்லாம் ஓரளவு இலக்கியத்தில் இருந்து வநதிருக்கிறதப் பார்க்கலாம். வங்கத்திலயும், கேரளாவுலயும் ரித்விக் கடக்கினுடைய படங்கள் ரேவினுடைய பெரும்பாலுமான படங்கள் கோவிந்த நிஹ்லானி மற்றது அடுர் கோபாலகிருஷ்ணன், வாசுதேவன் நாயர, கௌதம் கோஷினுடைய படங்கள் போன்றவை எல்லாமுமே இலக்கியத்தை அடிப்படையாக் கொண்டதுன்னு பார்க்கமுடியுது. அப்பிடிப் பார்த்தா தமிழ்ச் சூழல்ல அப்பிடி இல்லைன்னு சொல்லலாம்?

**பாலு:–** இலக்கியத்துக்கும் சினிமாவுக்குமான இடைவெளி தமிழ்ல்ல மிகப் பெரியது. அப்பிடியான உறவேயில்லை தமிழ்ல்ல இப்பிடி இருந்ததாகவும் சரித்திரம் கிடையாது. ரேயைப் பத்திச் சொல்லும்போது, ரேயினுடைய காலத்தில கடுமையான விமர்சனங்கள் ரேயிக்கு எதிராக வைக்கப்பட்டது. பதேர் பாஞ்சாலிய எடுத்துக்கொண்டு ரே தன்னுடைய மீடியத்துக்கான மாற்றங்களச் செஞ்சபோது, நாவல் படித்த அறிவுஜீவிகள் கடுமையாக எதிர்க்கவும் செய்தார்கள். அதற்கு ரே இப்படிப் பதில் சொல்லியும் இருந்தார்... நாவலின் ஒவ்வொரு வார்த்தைக்கும் முழுக்க முழுக்க நான் விசுவாசமாக இருக்க வேண்டிய அவசியம் எனக்குக் கிடையாது. நாவல் என்னைத் தூண்டிப் பாதிச்சது. நான் ஒரு படம் எடுத்திருக்கிறேன் என்றார்.


கேரளாவுல எடுத்திட்டீங்கன்னா, கேரளாவினுடைய வியாபார சினிமா உட்பட நான் சொல்றன், கேரளாவுல அங்கீகரிக்கப்பட்ட நல்ல நாவல்கள், ஜனரஞ்ஜக நாவல்கள் கூட, ஏறக்குறைய எல்லா நாவல்களுமே செம்மீன் உள்பட படமாக்கப்பட்டிருக்கிறது. தமிழ்நாட்டுல ஏன் அது நடக்கல்ல என்கிறப்ப, ஒரு சராசரி மலையாளிக்கும் ஒரு சராசரித் தமிழனுக்குமான வித்தியாசத்த நாம பாக்க வேண்டியிருக்குது. கேரளப் படைப்பாளிகளோடு பார்க்க தமிழில் எழுதிக் கொண்டிருப்பவர்கள, எந்தக் காலகட்டத்திலும், எந்த வகையிலும் குறைந்தவர்கள் என்று சொல்லமுடியுது. ஆனால் வாசகர்களைப் பொறுத்தவரை, கேரளாவில அதிக அளவிலான எழுதப்படிக்கத் தெரிந்த

(☞ பக்கம் vi)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டென்மார்க்கில் தமிழ் மாணவர்களுக்கான ஒன்றுகூடல்

சென்ற 14-09-2002 சனிக்கிழமை அன்று போடிங் (Bording) எனும் இடத்தில் இவ் ஒன்று கூடலானது பேராசிரியர் சிறீஸ்கந்தராசாவின் வழிநடத்தலில் நடைபெற்றது விளக்கேற்றல், அமைதி வணக்கம் அதனை தொடர்ந்து வரவேற்பு, அறிமுகம், ஒன்று கூடலின் நோக்கம் என்ன என்பதன் விளக்கங்களும்



முன்வைக்கப்பட்டு தமிழ் இளைஞர்களின் கேள்விகள், தேவைகள், சிந்தனைகள் பகிரப்பட்டன இது ஆரோக்கியம் வாய்ந்த ஒரு பகிர்வாக தென்பட்டது.

நோர்வேயில் இருந்து வருகை தந்த பேர்கன் அன்னை பூபதி தமிழ்க்கலைக்கூட ஆசிரியரான திரு. தயாளன் வேலாயுதபிள்ளை அவர்கள் -தமிழ் சமூகம் இன்றும் அன்றும்- எனும் தலைப்பில் தமிழர்களுடைய வரலாற்றை எடுத்து கூறிக் கொண்டதோடு குறிப்பாக



இலங்கைத்தீவில் தமிழர்களுடைய வரலாறு, சிங்கள அரசுகளால் வஞ்சிக்கப்பட்ட தமிழர்களுடைய வாழ்நிலை அதனால் தமிழ்மக்கள் மேற்கொண்ட, மேற்கொள்கின்ற போராட்டங்கள் பற்றிய விளக்கங்களையும் கூறிக் கொள்ள பங்கு கொண்ட மாணவர்கள் இது தங்களுக்கு புதிய தகவல்போல் வியந்து கொண்டாலும் தங்கள் இதனை அறிந்து கொள்ள வேண்டும் என்பதில் ஆர்வமாய் இருந்ததை அவர்கள் முன்வைத்த கேள்விகள் மூலம் புரிய முடிந்தது.

## புகலிட நிகழ்வுகள்

தமிழ் இளைஞர் ஒன்றியம் நோர்வே சார்பாக திரு.நிர்மலன் செல்வராஜா அவர்களும் இதில் பங்கு கொண்டு தங்கள் ஒன்றியத்தின் செயல்பாடுகள் அதன் எதிர்கால செயல் திட்டங்கள் என்பன பற்றி விபரித்ததோடு எமது தாயகத்திற்கு இதன் மூலம் எப்படி உதவலாம், எங்களை நாம் எப்படி மேம்படுத்தி கொள்ளலாம் என்பது பற்றியும் விளக்கிக் கொண்டதோடு மட்டுமல்லாது இங்கும் இப்படியான ஒரு இளைஞர் ஒன்றியம் உருவாகும் பட்சத்தில் நாம் இதற்கு அதரவு தருவதோடு இணைந்து வேலைத் திட்டங்கள் மேற்கொள்ள வாய்ப்புக்கள் இருப்பதாயும் கூறிக்கொண்டார். தொடர்ந்து தாயகச் செய்திகள், தமிழ் சமூகத்தின் தேவைகள், மாணவர்களாகிய எம்மால் செய்யக்கூடிவை எவை, எவ்வாறு செயற்படலாம் என்பனபற்றி கலந்து உரையாடிக் கொண்டதோடு அடுத்த ஒன்று கூடலில் சந்தித்து இளைஞர் ஒன்றியம் உருவாக்கல் பற்றி கவனத்தில் எடுப்பது என முடிவாகியது.

– செ.ஆனந்தன்

# ஜேர்மனியில் விடுதலை கானம்பாடி

## போட்டியில் வெற்றிபெற்றவர்கள்

தமிழர் புனர்வாழ்வுக்கழகம் யேர்மனிக் கிளையின் 5வது விடுதலை கானம்பாடி-2002இன் சிறந்த பாடகர்களுக்கான தெரிவுப் போட்டி 14.09.02 சனிக்கிழமை 15.00 மணியளவில் வூப்பர் மண்டபத்தில் மிகவும் சிறப்பாக நடைபெற்றது. தமிழீழம் இசைக் குழுவின் பின்னணி இசையில், ஆண்குரல், பெண் குரல், சிறுவர்குரல், மழலையர்குரல் என நான்கு பிரிவுகளாக போட்டிகள் நடைபெற்றன. இப்போட்டியில் 30 வரையான போட்டியாளர்கள் கலந்துகொண்டனர். போட்டிகளுக்கு இடையில் எழுச்சி நடனங்களும் நடைபெற்றன. நூற்றுக்கணக்கான மக்கள் இப்போட்டியை கண்டுகளித்தனர்.

*மழலையர்*
1ம் இடம்- கிருத்திகா சிவராம்
2ம் இடம்- நிலக்சன் குலசிங்கம்
3ம் இடம்- கிரிணி கிமேஷ்

*சிறுவர்*
1ம் இடம்- சாயிஜா. கு
2ம் இடம்- சிவஞ்ஜீவ் சிவராம்
3ம் இடம்- பிறையன் வலன்ரைன்

*பெண்கள் – மேற்பிரிவு*
1ம் இடம்- பெனோஜி பெனடிக்ற்
2ம் இடம்- மதுரா மகிழ்ராசு
3ம் இடம்- நிவேதா புவனேஸ்வரன்

*ஆண் – மேற்பிரிவு*
1ம் இடம்- சுப்பிரமணியம் நடராஜ்
2ம் இடம்- தெய்வேந்திரன் ஜெயராஜயன்
3ம் இடம்- போர்ஸ்வின் வலன்ரைன்














Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உங்கள் வைபவங்களுக்கு
Wedding and Birthday Invitations
Printed in 48 hours
DESIGN AND PRINTING
Posters Stationary etc..
Convert your VHS and DV to Video CDs
Digital Video Editing (NLE)
VideoTitling in Tamil
Phone: 0208 2038587
Mobile: 07780978027
BaseDesigns

SML
Royal Jewellery
287. High Street North East Ham.
Manor Park, London E12 6SL
Tel - 020 8472 5500
Fax - 020 8472 5687



RESTAURANT
Palm Beach
Finest South Indian & Sri Lankan Cuisine
10% OFF ALL TAKE AWAY ORDERS
P.Sivarupan
Proprietor
17 Ealing Road, Wembley Middlesex HA0 4AA
Tel: 020 8900 8664
Mobile: 079 3958 7338
Home: 020 8900 1990

சீலன்ஸ்
இலங்கை, இந்தியாவில் இருந்து தருவிக்கம்பட்ட உடன் மரக்கறி, கடலுணவு, பல சரக்குகள் நியாயமான விலைகளில் பெற்றுக்கொள்வதோடு, மிகக்குறைந்த விலையில் தொலைபேசி அட்டைகளைம்ம் பெற்றுக்கொள்ள நாடவேம்டிய ஒரே இடம்.
Seelans
332 & 334. High Street North
East Ham, London E 12-6Ph
Tp & Fax- 020 8471 5733

அரோ பிரசி ரேட்
தரத்தின் உயர்வை நாடுவோர் நாடும் இடம்
ARO PRASI TRADE
Tel -02339-6478 / Fax- 02339- 121855
glashütten platz-11c , 45549- Sprockhouel

# Spices Express

## Indian Take Away

We urgently need a head chef for our restaurant. Hr should be qualified and experienced in Chettinadu Style cooking.

His main duty will perpare and cook various meals from a daily menu.

We offer £12000 per annum as wages and the working ours will be evening 4 p.m to 11 p.m

*Please forward your CV to*

**Spices express**
**163, Rye field Avenue**
**Hillington**
**Middx UB10 9DA**

இலண்டன் மாநகரில்
புதுமை! இனிமை! திறமை!
ஸ்பெக்ட்ரம்
தமிழ் இசைக்குழு
We can entertain you with live Tamil songs as you have never heard before.
Over electronic orchestra produces real music
(தனித்துவ வடிவம்பெற்ற இசை)
உங்கள் மங்கலகரமான எவ்வகை இசை நிகழ்ச்சிகளுக்கும் தொடர்புகொள்ள
T.சுரேன்
020 87642458/ 07879682121
Pub. Lon-405

பல் டாக்டர் வீ.பழனிவேல்
F.D.S.R.C.S (England)
0208-472-9429
127, Greengate Street,
Plaistow
London E 13



இலங்கையில் கொழும்பு, கல்முனை வைத்தியசாலைகளில் மூன்று வருடம் கடமை புரிந்த அனுபவமும், இலண்டனில் இருபத்து மூன்றுவருட அனுபவமும் உள்ள பல்டாக்டர்.
பல்முக அழகு சிகிச்சை (Cosmetic Dentistry) சிதைந்த பற்களை மீளமைப்பு (Restoration) கம்பிகள் மூலம் ஒழுங்கற்ற பற்களைச் சீராக்குதல் (Orthodontics) முரசில் இரத்தம் வருதலைத் தடுக்கும் Periodontal சிகிச்சை மற்றும் பல், முரசு தாடை எலும்புகள் சம்பந்தமான சத்திர சிகிச்சைகள் உட்பட எல்லாவிதமான சிகிச்சைகளும் செய்ய வசதிகள் உண்டு.
Underground: Plaistow (District Line)
Fellowship In Dental Surgery of The Royal College of Surgeons of England.
Pub. Lon-401

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

பிரான்சில் உள்ள சகல தமிழர்களின் வர்த்தக ஸ்தாபனங்களில் அமோக விற்பனையில்

ஒரே தொடர்பில் யாழ்ப்பாணத்திற்கு உடனடி இணைப்பு

# GALAXY 2002 7/7 24/24 Beta ONE

உத்தரவாதம் | நம்பிக்கை | சேமிப்பு

France இல் இருந்தபடியே USA, Canada, UK மற்றும் சகல ஐரோப்பிய நாடுகள் முழுவதற்கும் தொடர்பு கொள்ளக்கூடிய Galaxy, Beta One, Euro Gold Phone Card தற்போது சகல தமிழர் வர்த்தக ஸ்தாபனங்களில் அமோக விற்பனையிலுள்ளது.










CANADA QUICK TEL COMMUNICATION உடன் France QTC Network உம் இணைந்து உற்பத்தி செய்யும் தொலைபேசி அட்டைகளான GALAXY & BETA ONE


FRANCE முழுவதும் வாழும் இலங்கை இந்திய மக்களுக்கு ஒரு நற்செய்தி, அதிகரிக்கப்பட்ட

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இணைந்து உற்பத்தி செய்யும் தொலைபேசி அட்டைகளான GALAXY & BETA ONE

FRANCE முழுவதும் வாழும் இலங்கை இந்திய மக்களுக்கு ஒரு நற்செய்தி. அதிகரிக்கப்பட்ட நிமிடங்களுடனும் உடனடி இணைப்புடனும் சகல வர்த்தக நிறுவனங்களிலும் விற்பனைக்கு வந்துள்ளது GALAXY BETA ONE தொலைபேசி அட்டைகள்.

அளவைகள் அனைத்தும் தமிழில் பெற இலக்கம் 3ஐ அழுத்தவும்.

## QUICK TEL COMMUNICATION + QTC Network

### நிறுவனங்களின் சேவைகள்

1. சர்வதேச தொலைபேசி அட்டைகளின் உற்பத்தி உங்கள் பெயர்களில்
2. வீடுகளுக்கு தொடர்புகள் (LINE) கொடுத்தல். (நீங்கள் உரையாடும் நிமிடங்களுக்கு மட்டுமே பணம் அறவிடப்படும்)
3. Call Box களுக்கான தொடர்புகள் (LINE) கொடுத்தல். சகல நாடுகளுக்கும் மிகக் குறைந்த விலையில்
4. மொத்தமாக நிமிடங்கள் விற்பனை செய்தல். சகல நாடுகளுக்கும்

இலங்கை 80 நிமிடம் N° LOCAL

இப்போது இணையத்தளம் மூலமாகவும் Galaxy + Beta One அட்டைகளை பெற்றுக்கொள்ளலாம்.

**www.Qtc.fr**

இந்தியா 50 நிமிடம் N° LOCAL

மிக விரைவில் உலகம் முழுவதிலும் இருந்து வெவ்வேறான நாடுகளுக்கு தொடர்பு கொள்வதற்குரிய Travalling Card வெளிவர இருக்கின்றது.

**பிரான்சின் சகல பகுதிகளில் இருந்தும் விநியோகஸ்தர்கள் தேவை**

**எச்சரிக்கை !**

**போலி வியாபாரிகளுக்கு !!**

எங்களுடைய வரைபடங்களையோ அல்லது Logo வையோ, எமது அட்டைகள் போன்று பிரதி செய்பவர்களுக்கு எதிராக சர்வதேச வியாபாரச் சட்டத்தின் கீழ் உடனடியாக சட்டநடவடிக்கை எடுக்கப்படும்.

## புதிய நேரங்கள்

| DESTINATIONS | N° Local | N° Vert | DESTINATIONS | N° Local | N° Vert |
|---|---|---|---|---|---|
| ALGERIE | 90 | 80 | MALI MOBILE | 60 | 50 |
| ALLEMAGNE | 609 | 223 | MAROC | 76 | 60 |
| AUSTRALIE SYDNEY | 1088 | 266 | MAROC CASABLANCA | 78 | 63 |
| BANGALADESH | 50 | 45 | MAYOTTE | 76 | 60 |
| BANGALADESH CHITTA | 94 | 76 | NEWZEALAND | 476 | 202 |
| BANGALADESH DHAKKA | 96 | 75 | PAYS-BAS AMST. | 609 | 223 |
| BENIN | 58 | 50 | PAKISTAN | 50 | 45 |
| BOTSWANA | 86 | 69 | PAKISTAN MOBILE | 50 | 45 |
| BURUNDI | 58 | 49 | PEROU LIMA | 270 | 130 |
| CAMEROUN DOUALA | 97 | 76 | PHILIPPINES | 120 | 90 |
| CAMEROUN | 60 | 50 | PHILIPPINES MOBILE | 100 | 90 |
| CANADA | 626 | 300 | POLOGNE | 129 | 94 |
| CENTRE AFRIQUE | 46 | 40 | POLOGNE VARSOVIE | 234 | 140 |
| CHILI SANTIAGO | 357 | 130 | PORTUGAL LISBONNE | 371 | 180 |
| COLOMBIE BARRANQUILLA | 100 | 78 | RUSSIE MOSCOU | 331 | 170 |
| COMORES | 70 | 60 | SENEGAL DAKAR | 70 | 62 |
| COMORES MOBILE | 60 | 50 | SENEGAL MOBILE | 60 | 51 |
| CONGO | 70 | 60 | SINGAPORE | 476 | 202 |
| EGYPTE | 70 | 60 | SINGAPORE MOBILE | 448 | 197 |
| CÔTE D'IVOIRE | 72 | 54 | SOMALIE | 35 | 31 |
| CÔTE D'IVOIRE MOBILE | 72 | 54 | SRILANKA Colombo, Jaffna, Vavuniya, Trincomalee, Batticaloa, Mannar | 60 | 50 |
| FRANCE MOBILE | 90 | 70 | SRILANKA MOBILE | 50 | 45 |
| GABON | 80 | 60 | SUISSE ZURICH | 609 | 223 |
| GAMBIE | 58 | 49 | TCHAD | 35 | 31 |
| GHANA | 70 | 60 | THAILAND BANGKOK | 100 | 80 |
| HONGKONG | 461 | 200 | TOGO | 58 | 50 |
| HONGKONG MOBILE | 381 | 183 | TUNISIE | 75 | 60 |
| INDE | 50 | 45 | UK LOCAL | 1020 | 262 |
| INDE MOBILE | 50 | 45 | UK MOBILE | 35 | 31 |
| KENYA NAIROBI | 46 | 40 | USA | 625 | 300 |
| LIBAN | 101 | 67 | VENEZUELA CARACAS | 140 | 82 |
| LIBAN MOBILE | 36 | 32 | VIETNAM | 33 | 30 |
| MADAGASCAR | 50 | 43 | ZAIRE | 60 | 50 |
| MALI | 60 | 50 | ZAIRE MOBILE | 48 | 42 |
| MALI BAMAKO | 70 | 60 | ZIMBABWE | 39 | 35 |

மேலதிகத் தொடர்புகளுக்கு:

**QTC NETWORK INTERNATIONAL**
**137, BD VOLTAIRE**
**75011 PARIS, FRANCE.**
**TEL: 01 43 72 77 77 FAX: 01 43 72 16 00**
**WWW.QTC.FR**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

IITAG

## SPECIAL

உங்கள் பிரயாணத்திற்கு விசேட விலையில்

Reisebüro

## IITAG Travel

| | Sept | Oct | Nov | Dec | |
|---|---|---|---|---|---|
| Colombo | 1'190 | 1'290 | 1'190 | 1'190 | CHF |
| Chennai | 1'200 | 1'270 | 1'270 | 1'440 | CHF |
| Singapore | 990 | 990 | 1'065 | 1'150 | CHF |
| Toronto | 895.- | 780 | 895 | 780 | CHF |
| Australia | 1'706,- | 1'690 | 1'690 | 1'706 | CHF |
| Malaysia | 1'120.- | 1'200 | 1'200 | 1'065 | CHF |
| Thailand | 960.- | 1'050 | 1'050 | 1'065 | CHF |

REISEGARANTIE

IATA ACCREDITED AGENT

Member of Swiss Federation of Travel Agencies

We are the direct Agent of the following Air Lines:

Lufthansa malaysia swiss

அனைத்துத் தொடர்புகட்கும்

## IITAG Travel

Reichgasse 61, 7002 Chur

Tel: 081 250 59 90, Fax: 081 250 59 91

Email: travel@iitag.com

http// : www.iitag.com

தமிழில்விளக்கங்களுக்கு

IITAG

வைத்தியக் காப்புறுதி மாற்றுவதால் அதிக லாபம்

SW/CA Agent für ganze Schweiz

Groupe Mutuel Agent für ganze Schweiz

## Krankenkasse

மிக மலிவானதும் சுவிஸ் முழுவதும் அடங்கியதும் மற்றைய காப்புறுதி நிறுவனங்கள்போல் சகல வசதிகளும் கொண்டதுமானது.

2003ம் ஆண்டிற்கான கட்டணம் மற்றைய காப்புறுதிகள் கி. த. 10 லிருந்து 15% தால் அதிகரிக்கின்றது.

30.09.2002 வரைக்கும் உங்கள் தற்போதைய காப்புறுதியிலிருந்து விலகிக்கொள்ளலாம். பின்னர் கட்டாயமான காப்புறுதிமட்டும் விலகிக்கொள்ளலாம்.

எங்கள் வாடிக்கையாளர்களை காலவரையின்றி கவனிப்போம். (Betreuung während der Kundschaft)

உங்கள் அனைத்துத் தொடர்புகட்கும் விளக்கங்கட்கும்

## Innovative Independent Trust AG

Prätschliweg 2, Postfach 425, 7002 Chur

Tel: 081 354 99 11, Fax: 081 354 99 10

Email: krankenkasse@iitag.com

http// : www.iitag.com

Pub Sw 403

*International Calling Card* **ICC**




***Direct Connection with Srilankan Telecom***

* ➲ இலங்கை Telecom இன் நேரடி இணைப்பு!
* ➲ தொடர்ச்சியான நான்கு வருட சேவை!!
* ➲ மிக துள்ளியமான ஒலி நயம்!!!

உலகமெல்லாம் உள்ள உறவுகளோடு-மிக மலிவான விலையில், நிறைவாக உரையாட

## ICC International Calling Card

*"Someone Somewhere is thinking abut you"*

சகல வர்த்தக ஸ்தாபனங்களிலும் கிடைக்கும்.

***For Details***

**Tel: 020 89 06 91 03 / 077 470 64 596**

**www-iccphonecard.com**

U.K., France ஆகிய நாடுகளுக்கு விநியோகஸ்தர்கள் தேவை.

Pub.Lon.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழநாதம்

**Eelanatham** **வெள்ளிநாதம்**

## மதவழ மயிலர்



**செய்தி:- அரசு புலிகள் பேச்சுவார்த்தை மக்களைத் தப்பான வழியில் இட்டுச் செல்லும் முயற்சி என்கிறார் சந்திரிகா...**

**மயிலர்:-** பேச்சுவார்த்தைக்கு முன்னர் அதை குழப்பவும் நிறுத்தவும் எத்தனையோ குத்துக்கரணங்கள் அடித்த அம்மையார் கடைசியாக உதிர்த்திருக்கிற வார்த்தைகள் இவை... கடந்த ஏழாண்டு காலத்தில் அம்மணியின் அரசு விடுதலைப் புலிகளோடு யுத்தம் செய்த வேளையில் மட்டும் மக்கள் சரியான வழிக்கு இட்டுச் செல்லப்பட்டிருக்கிறார்கள் என்று மறைமுகமாக அவர் சொல்கிறார் போலிருக்கிறது... மக்களை அவர் சரியாக வழி நடத்தியத்திற்காகத்தான் அவரது பொதுசன ஐக்கிய முன்னணிக்கு தேர்தலில் சரியான பாடத்தை மக்கள் புகட்டியிருக்கிறார்கள் என்ன நான் சொல்லுறது சரிதானே பாருங்கோ..!

**செய்தி:- முழுமையான சிங்கள ஆட்சியை உருவாக்க சிங்களத் தலைமைகள் ஒன்றுபட்டு உழைக்க வேண்டும் என்கிறார் மகாநாயக்க தேரர்.**

**மயிலர்:-** மகாநாயக்கரின் பௌத்த தர்ம சிந்தனையில் உருவான தத்துவத்தின் பிரகாரம் சிங்களத் தலைமைகள் இயங்கினால் அரசாட்சியை விட்டு அரசமரத்தின் கீழ் ஆன்மீக ஆட்சியை நடத்திய புத்தபகவான் அந்த அரச மரத்திலேயே தூக்குப்போட்டுக் கொண்டாலும் அதிசயமில்லைப் பாருங்கோ... அகிம்சையைப் போதிக்க வேண்டிய ஞானிகள் அரசியலுபதேசம் செய்ய வந்தால் என்ன நடக்கும் என்பதற்கு கடந்த நாற்பது ஆண்டுகால சிறீலங்காவின் வரலாறு உலகுக்கு ஒரு எடுத்துக் காட்டு. எனக்கென்னவோ நாட்டுமக்கள் அனைவரையும் பிச்சாபாத்திரம் ஏந்த வைக்கும் தத்துவ உபதேசமாகத் தான் எனக்கு இது படுகுது பாருங்கோ... பாவம் சிங்கள மக்கள்...

**செய்தி:- சி.ஐ.டியினர் கைப்பற்றிய வங்கி வைப்புச் சான்றிதழ்கள் சட்டபூர்வமானவை என்கிறார் ரத்வத்தை.**

**மயிலர்:-** ஐயா சொன்னா பிழைக்காது பாருங்கோ... ஏழாண்டு கால பிரதிபாதுகாப்பு அமைச்சராக சிறீலங்காவை பிச்சைக்கார நாடாக மாற்ற அயராது உழைச்சு தன்னை கோடீஸ்வரராக்கிய இந்தப் போலி ஜெனரல் மெய் சொன்னதாக வரலாறே கிடையாது பாருங்கோ... அறிக்கை விடுவதில் மன்னரான ரத்வத்தை வங்கிப் பெட்டகத்துள் பாதுகாப்பாக வைத்த இவ்வளவு பணமும் சிறீலங்கா பாதுகாப்பு படையினரின் உயிர்களைப் பலி கொடுத்து சேர்த்த ஊழல்மோசடிப் பணம்தான் என்பதை சிங்களமக்கள் தான் புரிஞ்சு கொள்ளவேணும் பாருங்கோ...

**செய்தி:- போர் நிறுத்த உடன்படிக்கையில் நாட்டின் தேசிய பாதுகாப்புக்கு பெரும் அச்சுறுத்தல் ஏற்பட்டிருப்பதாக ரணிலை எச்சரித்து கடிதம் அனுப்பியுள்ளார் சனாதிபதி சந்திரிகா...**

**மயிலர்:-** போர்க்காலத்தில் சிறீலங்காவின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலே கிடையாது என்று அம்மணி கூறுவது போலல்லவா இருக்குது பாருங்கோ... என்னமோ அம்மையாருக்கு அண்மைக் காலமாக ஒரு வகையான மாறாட்டம் ஏற்பட்டிருக்கிறது போலத் தெரியுது பாருங்கோ...
முன்னுக்குப்பின் முரணாக பேசுவது அவரின் இயல்பாகி விட்டது... ஆனாலும் சண்டிராணித்தனம் மட்டும் குறையேல்லைப் பாருங்கோ... அம்மையார் என்ன மிரட்டினாலும் ரணிலும் அசையிறதாகத் தெரியேல்லை... அதுதான் அவவுக்கு ஆத்திரம் இப்ப. அந்த ஆத்திரத்திலை அலம்பத் தொடங்கீட்டா... கூடாத கூட்டங்களோட கூட்டு வைச்சால் இப்படி ஒப்பாரியும் ஓலமும் வைக்கத்தான் வேண்டிவரும் பாருங்கோ...

**செய்தி:- அநுராவின் செயற்பாடுகள் சிறீலங்கா சுதந்திரக்கட்சி பிளவுபடுவதற்கே வழிவகுக்கும் என மூத்த கட்சி உறுப்பினர்கள் எச்சரிக்கை...**

**மயிலர்:-** என்ன சொன்னாலும் அநுரா பண்டா பரம்பரையின் வாரிசெல்லே... சந்திரிகாவின் தம்பியெல்லே மூத்த உறுப்பினர் என்ன கூறியும் என்ன... அநுரா புகுந்த கட்சி உருப்படாது என்று தெரிந்தும் அக்கா சந்திரிகா அந்த ஆளை உள்ளுக்கு கொண்டு வந்திட்டா... கேடு வரும் போது மதி கெட்டு வரும் எண்டது சரிதான் பாருங்கோ... பிறகென்ன... சிறீலங்கா சுதந்திரக்கட்சியின் அஸ்தமனக் காட்சி ஆரம்பமாகி விட்டது எண்டு சொன்னால் பிழையில்லைப் பாருங்கோ...

## பிரமுக அறிமுகம்

# பதில் பொலிஸ்மா அதிபர்-சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் T.E ஆனந்தராஜா

சிறீலங்காவின் பொலிஸ்மா அதிபர் (IGP) லக்கி கொடித்துவக்கு அண்மையில் காலமானதைத் தொடர்ந்து அவரது பதவி வெற்றிடமானது சிரேஸ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் (DIG) T.E ஆனந்தராஜாவை பதில் பொலிஸ்மா அதிபராக நியமனம் செய்யப்படுவதன் மூலம் தற்காலிகமாக நிரப்பப்பட்டுள்ளது.

இவரது இந்தப் பதவியானது தற்காலிக பதில் பதவி என்ற தரத்திலிருந்து நிரந்தரப் பதவியாக மாற்றம் செய்யப்படலாம் என்ற கருத்து கேள்விக் குறியுடன் கூடிய செய்தியாக பரவலாக அடிபட்டாலும் அதனை இன்னமும் உறுதி செய்ய முடியாத நிலையே உள்ளது.

சிறீலங்காவின் பாதுகாப்புத் துறையின் அதியுயர் பதவிகள், உயர் பதவிகளில் தமிழர்களை நியமனம் செய்வதென்பது அவர்களுக்கு தகுதியும் திறமையும் சிரேஷ்ட பணிநிலை தகைமையும் இருந்தாலும் கூட கடந்த சில தசாப்தங்களாக சாத்தியமற்ற ஒன்றாகவே இருந்து வந்துள்ளது.

இது சிறீலங்காவின் அரசுகள் கடைப்பிடித்து வந்துள்ள தீவிர பேரினவாதக் கொள்கையின் எதிரொலி என்றே கூறமுடியும்.

எனினும் தற்போது T.E ஆனந்தராஜா பதில் பொலிஸ்மா அதிபராக நியமனம் செய்யப்பட்டிருப்பதற்கு பல கிளைக் காரணங்களும் உண்டு.

பொலிஸ் துறையில் இரண்டாவது நிலையில் வைத்து எண்ணக்கூடியவர்கள் என்று கருதப்படக் கூடியவர்கள் சிலருக்கு பல்வேறு சிக்கல்கள் இருப்பதும் அவர்கள் மீது சில குற்றச்சாட்டுக்கள் விசாரணை செய்யப்பட வேண்டிய நிலையில் இருப்பதும் அவர்கள் பொலிஸ்மா அதிபராக நியமனம் செய்யப்படுவதற்குத் தடையாக இருக்கிறது எனலாம்.

இதேவேளை கடந்த சில மாதங்களாகவே காலஞ்சென்ற பொலிஸ்மா அதிபர் லக்கி கொடித்துவக்கு விடுப்பில் இருந்த வேளைகளிலும் வெளிநாடுகளுக்குப் போயிருந்த சமயங்களிலும் அவர் ஆனந்தராஜாவிடமே தனது கடமைப் பொறுப்புக்களை ஒப்படைத்துச் சென்று வந்துள்ளமையானது ஆனந்தராஜா மீதான நம்பிக்கையையும் அவரின் கடமை விசுவாசத்தையும் கொடித்துவக்கு மதித்தமைக்குச் சான்றெனக் கூற முடியும். அத்துடன் ஏனைய சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர்களுக்கும் கொடித்துவக்குக்குமான சில தொழில் போட்டியும், முரண்பாடுகளும், ஆனந்தராஜாவுக்கு இந்த வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்ததாகவும் கருதப்படுகிறது.

எப்படியோ, ஆனந்தராஜா கடமையுணர்வும், அரசவிசுவாசமும் கொண்ட தமிழர், சிங்கள சிறீலங்கா அரசின் பாதுகாப்புத் துறையின் முக்கிய பிரிவுகளில் ஒன்றான பொலிஸ் திணைக்களத்தில் அதி உச்சப்பதவியான பொலிஸ்மா அதிபரின் இருக்கையில் அமரும் வாய்ப்பினை சில தசாப்தங்களின் பின்னர் தற்காலிகமாகவேனும் பெற்றுள்ளார் என்பதைக் குறிப்பிடுதல் அவசியம்.

ஆரம்பக் கல்வியை கல்முனை வெஸ்லி உயர் பாடசாலையிலும் மட்டக்களப்பு மெதடிஸ்ற் கல்லூரியிலும் பின்னர் இடைநிலை முதல் மேல்நிலைக் கல்வியை பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியிலும் கற்ற ஆனந்தராஜா ஹாட்லிக் கல்லூரியின் சிரேஷ்ட மாணவர் தலைவனாகவும் இருந்துள்ளார்.

விளையாட்டுத்துறையில் ஈடுபாடுகொண்ட இவர் தடகள போட்டிகளிலும் சிறப்பாக உதைபந்தாட்டத்திலும் டென்னிஸ்ஸிலும் பாடசாலையின் பெருமைக்குரிய ஒருவராக இருந்துள்ளார்.

★ 1963இல் பேராதனை பல்கலைக்கழகத்திற்குத் தேர்வான இவர் 1966ல் பட்டதாரி ஆனார். பல்கலைக்கழகத்திலும் விளையாட்டுத் துறையிலும் சிறந்து விளங்கினார்.

★ 1987-1990 காலப்பகுதியில் சிறிஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தின் M..A பட்டத்தினைப் பெற்றார். இவர் பட்டம் பெற்றது பொது நிர்வாகத்துறையில் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

★ 1974-1975 காலப்பகுதியில் சிறீலங்காவின் பௌத்த உயர்நிலைக் கல்லூரியில் (Buddhist Academy) குற்றவியலில் டிப்ளோமா பட்டத்தைப் பெற்றதுடன் 1995-1999 காலப்பகுதியில் திறந்த பல்கலைக்கழகத்தில் சட்டத்துறையின் LLB பட்டத்தையும் வென்றார்.

★ 1967 இல் உதவிப் பொலிஸ் இன்ஸ்பெக்டராக பொலிஸ்துறையில் நுழைந்த இவர் 1971 உதவி பொலிஸ் அத்தியட்சகர் (ASP) ஆனார்.

யாழ்ப்பாணம் உட்பட, சிறீலங்காவின் பல்வேறு தென்பகுதிகளின் ASP யாகக் கடமையாற்றிய ஆனந்தராஜா, பொலிஸ் தலைமையகத்திலும், ஆய்வு மற்றும் அபிவிருத்தி இயக்குநராகவும் (Director Research and Developmen) பணியாற்றியும் உள்ளார்.

வடக்கு மற்றும் கிழக்கு பிராந்தியங்களுக்குப் பொறுப்பான பிரதி பொலிஸ்மா அதிபராகவும், வடபிராந்தியத்திற்குப் பொறுப்பான பிரதிப் பொலிஸ்மா அதிபராகவும் 1989-1995 காலப்பகுதியில் இவர் இருந்துள்ளார் என்பது முக்கியமானதொன்றாகும்.

இது நெருக்கடி உச்சத்தில் இருந்த காலப்பகுதி ஆகும்.

தகவல் மற்றும் தொழில்நுட்பப் பிரிவின் DIG ஆகவும் பணியாற்றிய இவர் 1995-1998 காலப்பகுதியில் SLPR இன் DOG ஆகவும் இருந்துள்ளார்.

கொழும்பு பிராந்தியம் II இன் DIG யாக 1998 முதல் 2000 வரையான காலப்பகுதியில் பணியாற்றிய இவர் அன்றுமுதல் இன்றுவரை நிர்வாகத்திற்குப் பொறுப்பான DIG யாகவும் இருந்து வருகிறார். 'மாகாணசபை முறையும் சட்டம் ஒழுங்குப் பரவலாக்கலும்' என்ற ஆங்கில நூலை மாகாணசபை சட்டவிதிகளையும், 13வது திருத்தச் சட்ட மூலத்தையும் அடிப்படையாகக் கொண்டு எழுதியுள்ளதுடன், 'பொலிஸ்' என்ற தலைப்பிலான புத்தகம் ஒன்றையும் எழுதியுள்ளார். இதுவரையில் மூன்று தடவை கொடித்தவக்குக்குப் பதிலாக பதில் பொலிஸ்மா அதிபராக இயங்கிய அனுபவம் இவருக்கு உண்டு.

இந்த அனுபவமும், அரச விசுவாசமும், அறிவும் மட்டும் இவரின் பதில் 'பதவியை' நிரந்தரமாக்க உதவுமா?

பேரினவாத சிறீலங்கா அரசின் சனாதிபதிதான் அதனை உறுதி செய்யவேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நறுக்கென...

## விடைதேடும் வினாக்கள்

எதிர்பார்த்தபடி, எதிர்ப்புக்களுக்கு அப்பால் தாய்லாந்தில் சிறீலங்கா அரசு— விடுதலைப் புலிகள் பேச்சுவார்த்தையின் முதற்கட்டம் சுமூகமாக நடந்தேறியதாக வெளிவரும்செய்திகள் பேரினவாத சித்தாந்தவாதிகளுக்கு பேரிடியாக இருக்கும் என்பதில் ஐயமில்லை.

கடந்த பல மாதங்களாகவே பொதுசன ஐக்கிய முன்னணி - ஜே.வி. பி. கூட்டுத்தலைமையில் சமாதானத்திற்கெதிரான சக்திகள் தமது அனைத்து அறிவையும் ஆற்றலையும் ஏன், அதிகாரத்தையும் கூடப் பயன்படுத்தி சமாதான நகர்வுகளை தடுக்கவும், இனப்பிரச்சினையை மீண்டும் தூண்டவும் சந்திரிகா அம்மையார் மேற்கொண்ட முயற்சிகள் செயலற்றுப் போனதில் பொதுசன ஐக்கிய முன்னணிக்குள் விரிசல்கள் ஏற்படத்தொடங்கியுள்ளன.

ஜனாதிபதியின் அதிகாரங்களை மட்டுப்படுத்தவும் குறிப்பாக பாராளுமன்றத்தை தன்னிச்சையாக கலைக்கும் நிறைவேற்று அதிகார வலுவை இல்லாதொழிக்கும் மசோதாவுக்கு பொதுசன ஐக்கிய முன்னணிக்குள்ளேயே ஆதரவுவலுத்து வருவது சந்திரிகாவுக்கு சினத்தையும், பயத்தையும் ஏககாலத்தில் ஏற்படுத்தியுள்ளது.

அந்த மசோதாவை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்து விவாதத்திற்கு விட்டு பின்வாக்கெடுப்புக்கு விட்டால் தனக்கு தோல்வி நிச்சயம் என்பது மட்டுமல்ல அதுவே பொ.ஐ.முன்னணியின் அஸ்தமனத்தின் ஆரம்பமாகவும் ஆகிவிடும் என்ற அச்சம் சந்திரிகாவுக்கு ஏற்பட்டுள்ளது.



ஆனாலும் சந்திரிகாவின் வாக்குறுதிகளை நம்ப எவரும்தயாராக இல்லை. கடந்த காலங்களில் அவர் எத்தனையோ தடவை வாக்குறுதிகளை எவ்வாறு இயல்பாக மீறியுள்ளார் அல்லது மறந்துள்ளார் என்பதற்கு ஏராளம் சான்றுகள் உள்ளன. இவை ஐக்கிய தேசிய முன்னணிக்கும் ரணிலுக்கும் தெரியாத விடயமல்ல.

இந்தநிலையில் முதற்கட்ட பேச்சுவார்த்தைகளில் ஏற்படக்கூடிய வெற்றி அல்லது திருப்தி என்பது மக்களிடம் சமாதானம் குறித்தும் ரணிலின் ஆட்சி குறித்தும் நம்பிக்கையை அதிகரிக்கும் நிலையில் சந்திரிகா என்ன செய்யப்போகிறார்.

சந்திரிகாவின் —தந்திரி—கா வியூகத்தினுள் ரணில் சிக்குவாரா அல்லது அந்த வியூகத்தை உடைத்து மேலெழுவாரா? இதுவே பொதுமக்களையும், அரசியல்நோக்கர்களையும் விடைதேட வைத்துள்ள முக்கியவினாவாகும்.

நிலைமை எதுவானாலும் சந்திரிகாவின் நிறைவேற்று அதிகாரம் என்ற மந்திரக்கோலின் அசைவுகளின் தன்மையில் தான் தமது அரசியல் எதிர்காலமே தங்கியுள்ளது என பேரினவாத சக்திகள் நம்பிக்கை கொள்வதில்வியப்பில்லை...

நிறைவேற்று அதிகாரமா, பாராளுமன்ற ஆட்சி அதிகாரமா வெல்லப்போகிறது?

இப்படியும் கூடக்கேட்கலாம் - போர் முனைப்பா,சமாதான எழுச்சியா வெல்லப்போகிறது? அடுத்துவரும் வாரங்கள் அதற்கான பதிலை சொல்லியே திரவேண்டும்.

## ரத்வத்தையின் நிஜ வடிவம்...

அந்த ஆர்ப்பாட்டமிக்க அரசியல் ஜெனரலின் வெற்றி நிச்சயம் (ஜெயசிக்குறுய்) என்ற வெட்கம்கெட்ட வீராப்புத்தனம் மெல்ல மெல்ல ஆட்டம்காணத் தொடங்கி அடிபெயரும் நிலைக்கே வந்துவிட்டது தெளிவாகத் தெரிகிறது.

தொண்ணூறுகளின் மத்திய பகுதிக்கு மேல் புதிய மிலேனிய ஆரம்பம்வரை சீருடை அணிந்த அந்த அரசியல் வாதியின் சீரற்ற செயற்பாடுகளின் தில்லுமுல்லுத்தனங்களும் வில்லத்தனப்பக்கமும் ஒவ்வொன்றாக, மர்மக்கதையின் சுவாரஷ்யமான அத்தியாயங்களாக, வெளிவரத்தொடங்கியுள்ளதில் வியப்பிலும் வெறுப்பிலும் தென்னிலங்கை உறைந்து போயுள்ளது.

முன்னாள் சிறீலங்காவின் பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் அநுருத்த ரத்வத்தையின் கொட்டமும் கொற்றமும் இப்படியொரு அதலபாதாள வீழ்ச்சியை எட்டநேரும் என அவரே கனவுகூடக்கண்டிருக்க மாட்டார்.

ஜெயசிக்குறுவின் வீழ்ச்சியில் - சூரியக்கதிரினால் சூட்டப்பட்ட ஜெனரல்கீரிடம் - அர்த்தமற்றதாகியது.

ஓயாத அலைகள் ஒவ்வொன்றும் அவரின் இராணுவ ஞானத்தின் வெறுமையை வெளியுலகிற்கு பறைசாற்ற வைத்தது.



தேர்தலில் பொ.ஐ.முன்னணிக்கு கிடைத்த தொடர்வீழ்ச்சிகள் சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் தேசிய அமைப்பாளர் என்ற அவரின் பதவியின் பலவீனத்தை அவிழ்த்துக்காட்டியது. உடத்தலவின்ன படுகொலைச் சம்பவங்கள் அவரையும் அவரின்வாரிசுகளையும் கொடிய — நிஜவில்லன்களாக உலகிற்கு அறிமுகம் செய்தது.

ஊழல்கள் மோசடிகள் என அவ்வப்போது ஐ.தே முன்னணி ஆட்சியாளர்களால் வெளிக்கொணரப்பட்டவைகள் ஜெனரல் பட்டமளித்து கௌரவித்த மருமகள் சனாதிபதி சந்திரிகாவே அவரைத் தனது அரசிலுள்ள மிகவும் மோசமான மோசடியாளன் என சர்வதேச நாணய நிதிய அதிகாரிகள் முன்னிலையிலேயே பகிரங்கமாக பேரிழக்க வைக்கச் செய்தது.

இப்போது சுமார் 43 மில்லியன் ரூபாய் பெறுமதியான வங்கி வைப்புச் சான்றிதழ்களின் வெளிக்கொணர்கையானது அவரை ஒரு தேசிய மோசடியாளராகவே இனங்காட்டியுள்ளதென நோக்கர்களை விமர்சிக்க வைத்துள்ளது.

ரத்வத்தை குடும்பமே குற்றவாளிக்கூண்டில் நிற்கவேண்டியநிலை... மாமாவின் கூத்துக்கள் மருமகளின் வீழ்ச்சியை துரிதப்படுத்தியுள்ளது தெளிவாகவே தெரிகிறது. எல்லா நடவடிக்கைகளுக்கும் காலக்கெடுவிதித்து விறுவிறுப்புக்காட்டியவருக்கான காலக்கெடு விதிக்கும் வேளை நெருங்குவதாகவே தெரிகிறது. சந்திரிகாவின் நிறைவேற்று அதிகாரம் ஜெனரல்மாமாவை எந்தவகையிலாவது காப்பாற்றுமா?

ரத்வத்தை அதை எதிர்பார்க்கும் இழிநிலையிலேயே இப்போது உள்ளார் என்பதில் ஐயமில்லை.

## மஞ்சள் அங்கிகளுக்குளிருந்து மனிதக்குரல்...

—ஜே.வி.பி. மட்டுப்படுத்தப்பட்ட ஆதரவுடைய சிறுபான்மை கட்சிமட்டுமே—

—சிகல உறுமய செல்வாக்கில்லாத ஒரு சிறுபான்மைக் குழு மட்டும் பேரினவாதம் பேசுவோர் ஒரு தொகையானவர்கள் மட்டுமே—

ஆகவே இவர்களைக் கணக்கில் கொள்ளவேண்டிய அவசியமேயில்லை. பேச்சுவார்த்தைக்கு முன் விடுதலைப் புலிகள் மீதான தடையை நீக்க வேண்டியது அவசியமேயாகும். போரை நடத்துவதில் பொ.ஐ.முன்னணி தோல்வியை அடைந்துவிட்டது உண்மையே. இப்போது இந்த நாட்டிற்கு சமாதானம் மட்டுமே தேவை.

இவ்வாறெல்லாம் யார் கூறியிருக்கிறார் என்று நினைக்றீர்கள் வேறு யாருமல்ல... பாராளுமன்றத்தில் உறுப்பினராக இருக்கும் பௌத்த மகாசங்கத்தைச் சேர்ந்தவரும் லங்கா சமசமாஜகக் கட்சி அங்கத்தவருமான சாமித்த தேரர்தான். ஒரு காலத்தைய கம்யூனிஸ்ட் கட்சிகாரர், ஜே.வி.பி ஆதரவாளர்... சமகாலத்தில் பௌத்தபிக்கு பாராளுமன்ற உறுப்பினரென இரட்டை வேஷதாரி. இனவாத மதவாதம் பேசுவோர் சிறுபான்மையினராகவே உள்ளனர் என்று கூறுகிறார். அப்படியானால் தனிச்சிங்களவரின் ஆட்சியை ஏற்படுத்த பௌத்த சிங்கள மக்கள் ஒன்றினைய வேண்டும் என்று அறை கூவல்விடுக்கும் பௌத்தமத பீடாதிபதியையும் அவரது பக்தர்களையும் புறக்கணித்து அவர்களின் அரசியல் கருத்துக்களை உதாசீனம் செய்துவிடுங்கள் என பகிரங்கமாக தெளிவாக தென்பகுதி மக்களுக்கு ஒரு அரசியல்வாதியாகவல்லாது ஒரு பௌத்த துறவியாக நின்று உபதேசம் செய்வாரா?

இப்படிச் சிலர் கேட்கவே செய்கின்றனர். இதற்கு அவர் என்ன பதில் சொல்வாரோ தெரியாது. ஆனால் மஞ்சள் அங்கிக்குள் இருந்து அவர் வெளியிட்ட கருத்துக்கள் நிராகரிக்க முடியாத நியாயத்தன்மையைக் கொண்டிருப்பதை எவரும் மறுக்கவும் முடியாது.

மக்களைக் கூறுபடுத்தி வேறுபடுத்தும் மகாவம்ச அரசியல்பேசும் பிக்குமார்களுக்கிடையில் சிலரது குரல்கள் சமகால சமூக அரசியல் யதார்த்தங்களைப் புரிந்துகொண்டு பேசும் குரல்களும் எழவே செய்கின்றன. தர்மம் பற்றி உபதேசிப்பவர் போரை நியாயப்படுத்துவதென்பது அதர்மமானதென இதற்கு முன்னரும் ஒருதடவை இவர் கூறியதை நினைவுபடுத்த வேண்டியுள்ளது.

Restaurant Tharsana's

★ இலங்கை, இந்திய உணவுவகைகளை உங்கள் குடும்பத்தோடு வந்து சுவைத்து மகிழ்ந்திடவும்

★ உங்கள் இல்லத்தின் இனிய விழாக்களை கொண்டாடி மகிழ்ந்திடவும், அனைத்து உணவு வகைகளையும் முன்கூட்டியே பதிவு செய்து பெற்றுக்கொள்வதற்கும் லாச்சப்பலில் நீங்கள் நாடவேண்டியது.

Restaurant Prassah
Gastronomiques Indiennes

தர்ஷனா & பிரஷா உணவகங்கள்

இங்கு சாப்பாடுகளை ஓடருக்குப் பெற்றுக் கொள்வதுடன், உங்கள் விழாக்களையும் இங்கு மகிழ்வுடன் கொண்டாடலாம்

தர்ஷனாஸ் உணவகம்
23, Rue Perdonnet,
75010 Paris
Tél: 01 40 05 08 36- 06 80 02 93 41
M°: La Chapelle *ou* Stalingrad

பிரஷா உணவகம்
54 Rue Louis Blanc,
75010 Paris
Mo: La Chapelle *ou* Louis Blanc
Tel: 01 53 26 39 41

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

05

# இன்னொரு போர் முகம்



-போராளி தூயவன்-

-பயணத் தொடர்-

இங்கேதான் அட்டைக்கடி மோசம் என்கிறாங்கள். ஏற்கனவே வேண்டிய கடியின் வலி மீண்டும் ஞாபகம்வர பீதியை அவன் முகம் நன்றாகவே பிரதிபலிக்கிறது. சகதியும் முழங்கால் அள்வுவரும் இப்படியிருக்க இதற்கு யாரடா பூமாலை வெட்டை எனப் பெயர் வைச்சவன். ஒரு விவஸ்தையும் விளங்காதவன். அவனுக்குப் பெயர் வைத்தவனில் கோபம் வருகின்றது. கணிசமான அளவு அட்டைகளுக்கு இரத்ததானம் வழங்க குடித்து ஊதி, உடலில் தொங்கிக் கொண்டு நளுக் நளுக் என்று உரசும்போது ஏற்படும் அருவருப்புணர்வைப் பிரதியுபகாரமாக வழங்க உப்புப் பொதியை அதில் தேய்க்க அது கழன்றுவிடும். தொடையளவு சகதியினுள் புதைந்து புதைந்து உளவடித்த வயலிற்குள் இறங்கின எருமைக்கன்றுகளாய் இரண்டரை மணித்தியாலம் எடுத்துக் கடக்கின்றனர்.

பின்னர் பிரப்பம் காடு ஒன்றினுள் சென்று படுத்துக் கொள்கின்றனர். தளபாடங்கள் செய்யப்பயன்படும் பிரம்புகள் ஆளை மூடுமளவிற்கு வளர்ந்திருக்கின்றன. இவ்விடங்களில் 08 அடிக்கு மேல் நீளமான செட்டி நாகங்களுக்கும் பஞ்சமில்லை. எவரோ சொன்னது இப்பொது நினைவில் வர சிறு ஊர்வன ஏற்படுத்தும் சத்தமும் இவன் கருவிழிகளை இடம் வலம் என ஓடவைக்கிறது. இவன் நிலையுணர்ந்து பரிதாபப்பட்ட நித்திரை வெள்ளம் இவனை தன்னுள் மூள்கின்றது.

அடுத்த நாள் காலை 8.00 மணியளவில் எழுந்து நடக்கத் தெடங்கியவர்கள் காலை மூதூரைச் சென்றடைகின்றனர்.

மூதூர் கோட்டப் பொறுப்பாளர் தேவண்ணையிடம் தான் வந்ததன் காரணத்தை அருண் கூற அவர் சொல்கிறார் 'நேற்றுத்தான் காயப்பட்டவர்களை மட்டக்களப்பு ரீமோட வன்னிக்கு அனுப்பினனாங்கள்' என்று. இவனுக்கு தூக்கிவாரிப்போட்டது. இவ்வளவு தூரம் கஸ்ரப்பட்டு வந்ததை நினைக்க ஏமாற்றமாகவும் வெறுப்பாகவும் இருக்கிறது. எப்படியென்றாலும் அவனிடம் இருந்து தகவல்களைப் பெற்றுத் தானாவது தங்களுக்குத் தரப்பட்ட பணியை முடித்துவிட வேண்டும் என்று எண்ணியிருந்தான். இப்பொழுது அவ்வைராக்கிய அணையில் வெடிப்பு விழ தன்னம்பிக்கை எனும் தண்ணீர் வேகமாக வெளியேறுகின்றது.

அவனுக்கு மனச்சோர்வு வருகின்றது. 'நான் மீண்டும் வன்னிக்குப் போகவேண்டும்...' அவனைச் சந்தித்து மீண்டும் இங்குவர வேண்டும்... இடையில் வரும் ஆபத்துக்கள், தடங்கல் எனப் பலவற்றை யோசித்தவன் தேவண்ணையிடம் கூறுகின்றான் 'நான் மீண்டும் வன்னிக்குப் போகவேண்டும் நிலைமையை சொர்ணமண்ணைக்கு அறிவியுங்கள்' என்று. அதற்கு அவர் 'இன்னும் கொஞ்ச நாளில் மட்டக்களப்பு ரீம் ஒன்று வரும் அதோட நீங்கள் போகலாம். அதுவரைக்கும் இங்க நிற்க வேண்டிவரும்' எனக் கூறுகின்றார். பின்னர் சொர்ணமண்ணைக்கு செற்றில் விடயத்தைச் சொல்ல அவர் பின்வரும் செய்தியை அருணுக்கு அனுப்புகின்றார் 'நீ அங்க போய் மீண்டும் இங்கவாறது கஸ்டம். உனக்கு வேண்டிய மேலதிக ஒழுங்குகளைச் செய்துதாறன். என்னை வந்து சந்திக்க வேண்டும்' என்று தேவண்ணை இவனிடம் சொல்கின்றார். நாங்கள் ஒரு றெக்கி பாத்திருக்கறம் அத அடிச்சுப் போட்டு ஒன்றாகப் போவம்' என அதுவரைக்கும் சும்மாதானே நிற்கவேண்டும் என எண்ணியவன் தானும் சண்டைக்கு வர அனுமதி கேட்கிறான். சிறிது யோசித்தவர் பின்னர் அதற்குச் சம்மதிக்கின்றார்.

ஒரு கிழமைக்குப் பின்னர் தேவண்ணை தலைமையில் 25 பேர் கொண்ட அணி தாக்குதலுக்குப் புறப்படுகின்றது. காலை 7.00 மணி முதல் மாலை 3.00 மணி வரை இடையில் எங்கும் தங்காமல் தரிக்காமல் பயணம்செய்து ஒரு காட்டில் தங்குகின்றனர். மறுநாள் மீண்டும் பயணத்தைத் தொடர்கின்றனர். அதன்பொழுது ஆறு ஆறுகளை இவர்கள் கடக்கின்றனர். ஆறுகள் கடப்பது என்பது ஒரு கலையாகவே அங்கு வளர்ந்துள்ளது. இவர்களில் பலர் நீந்தத் தெரியாதவர்களாக இருந்தனர். அவர்களை ஆற்றைக் கடக்கவைப்பது என்பது சுவாரஸ்யமான விடயமாகவும் வித்தியசமான அனுபவமாகவும் இருக்கிறது. அவர்களில் தவம் என்பவர் நன்றாக நீந்தக் கூடியவர். அவர் இக்கரையிலிருந்து கயிற்றின் முனையொன்றைப் பிடித்த வண்ணம் அக்கரைக்குச் செல்வார். அப்பொழுது 75மீ - 100 மீற்றர் தூரம் ஆற்றின் திசையில் விலத்திப் போவார். பின்னர் மீண்டும் நேர வந்து கயிற்றை மரமொன்றில் கட்டுவார். மற்றவர்கள் கயிற்றைப் பிடித்தவண்ணம் நகர்ந்து அக்கரையை அடைவர். இன்னும் சில ஆறுகளைக் கடக்கும் போது பெரிய சருவச் சட்டிகளைப் பயன்படுத்துகின்றார். அவர்கள் அவற்றை மாகாணச்சட்டிகள் என அழைக்கின்றனர். அவற்றினுள் மூன்று மூன்று பேராக சமநிலை பேணும் வண்ணம் இருத்தி ஆற்றில் மிதக்கவிட்டு இரண்டு கரங்களினாலும் தள்ளியவாறே நீந்தி அக்கரை சேர்ப்பார்.

இவர்கள் இரண்டாம் நாள் முடிவில் எருமைப்பண்ணையுடைய முகாமொன்றை வந்தடைகின்றனர். வந்தவர்களுக்கு எருமைப்பாலில் சாதம் பொங்கித் தேனும் விட்டுக் கொடுக்கப்பட்டிருக்கின்றது. உலர் உணவுகளையே தொடர்ந்து உண்டு நாக்கின் சுவை நரம்புகள் மரத்துப் போயிருந்தவர்களுக்குத் தேவாமிர்தம் என்பது இதைத்தான் எனக் கூறவைத்தது. மறுநாள் மீண்டும் பயணித்து எல்லைக் கந்தளாய் எனும் வீதியைக் கடந்து 03ம் கொலனி எனும் இடத்தை வந்தடைகின்றனர். அங்கு கிணறு ஒன்று



வெட்டப்பட்டு, பொழியப்பட்ட கருங்கற்களைப் பொருத்தி கற்சிதமாக கட்டப்பட்டுள்ளது. அதனருகில் சிறு கேணியும் வெட்டப்பட்டுள்ளது. சில கருங்கற்தூண்களும் காணப்படுகின்றன. இதுதான் 'சீதை இருந்த இடம். இக்கேணியில்தான் சீதை குளித்தவா என்று ஒரு ஐதீகம் உள்ளது' எனத் தெரிவித்தார்கள். ஆச்சரியத்துடன் அந்த அதிசய இடத்தைப் பார்த்துவிட்டு பயணத்தைத் தொடர்ந்தவர்கள் தங்கள் முகாமொன்றை வந்தடைகின்றனர்.

அதற்குமுன் ஆமிக்காரர்கள் எப்படியோ மோப்பம் பிடித்து வந்துபோயிருக்கின்றாங்கள். இவர்கள் வைத்திருந்த பாத்திரங்கள் எல்லாம் அழிக்கப்பட்டிருந்தன. கைவிடப்பட்ட முகாம் என நினைத்து கண்ணிவெடி வைக்காமல் சென்றிருக்கின்றார்கள். அதனை உறுதிப்படுத்தியவர்களுக்கு ஒரு மண்பானையொன்று சேதமில்லாமல் கிடைக்கின்றது. அத்துடன் அவர்கள் முன்னர் ஒழித்து வைத்திருந்த அரிசியும் பருப்பும் பத்திரமாக இருக்கின்றது. இவர்கள் அப்பானையை வைத்தே அவ்வளவு பேருக்கும் சமைக்க வேண்டும். உடனே தவம் செயலில் இறங்குகின்றன். அப்பானையில் மூன்று தரம் சோறு சமைத்து ஒவ்வொன்றையும் ஒவ்வொரு முறையும் நிலத்தில் பக்குவமாக இடப்பட்டிருந்த பொலித்தீன் மேல் கொட்டுகின்றான். பின்னர் பருப்புக் கறியும் வைத்து சோற்றைச் சுவைத்துச் சாப்பிடுகின்றனர். பின்னர் ஏற்கனவே பார்த்திருந்த 'ரெக்கி'ப்படி தாக்குதலுக்கு 12 பேர் புறப்படுகின்றனர். மிகுதி 13 பேரும் முகாமில் தங்குகின்றனர்.

அதிகாலை 4 மணிக்குக் குறிக்கப்பட்ட இடத்தில் நிலையெடுத்தவர்கள் எதிரியின் வருகைக்காகக் காத்திருக்கின்றனர். அன்று மாலை வரை தங்களை உருமறைத்து அவ்வவ் இடங்களிலேயே ஆடாமல் அசையாமல் பதுங்கியிருக்கின்றனர். அன்று எதிரி வரவில்லை. என்ன காரணமோ தெரியாது. இவர்களில் ஒருவன் மயங்கி விட்டான் மீண்டும் மறுநாளே அவ்வாறே காத்திருக்கின்றனர். மறுநாள் மதியம் போல் 7 இராணுவத்தினர் தமக்கு விரிக்கப்பட்டிருக்கும் மரணவலை பற்றி அறியாது வரிசையாகவந்து கொண்டிருக்கின்றனர். அப்பொழுது பார்த்து இவர்களைப் பக்கமாக முந்திக்கொண்டு 'பீல்ட்மோட்டர் சைக்கிளி'ல் இரண்டு எஸ். எல். இராணுவத்தினர் வருகின்றனர். அவர்களை விட்டு பின்னால் வருபவர்களைத் தாக்கினால் இவர்கள் திருப்பித் தாக்கினால் எம்மவரில் இறப்போ காயமோ வரலாம். காயமடைந்தவர்களைக் காவிக் கொண்டு இவ்வளவு தூரமும் பின்வாங்குவது என்பது கற்பனைக்கெட்டாத கடினங்களை பரிசளிக்கும். உடனே தேவண்ணை முடிவை மாற்றி முன்னால் வரும் எஸ். எல். இருவருக்கும் அடிக்கின்றார். அவர்களில் ஒருவன் அவ்விடத்திலேயே விழ மற்றவன் காயத்துடன் அருகிருந்த காட்டுக்குள் பாய்ந்துவிட்டான். பின்னால் வந்த ஒருவனும் துப்பாக்கிப் பிரயோகம் செய்த வண்ணம் பின்வாங்கிவிட்டான். இவர்களில் ஒருவன் ஓடிச்சென்று இறந்த் இராணுவத்தினரின் ரி 56 - 2 ரைபிளையும் ரவைத்தாங்கியையும் எடுத்துக் கொண்டு விரைவாக ஓடிவருகின்றான்.

உடனேயே இவர்கள் மயங்கியிருந்த தங்கள் சகாவையும் தூக்கிக்கொண்டு பின்வாங்குகின்றனர். இன்னும் சில மணிகளில் அப்பிரதேசம் சுற்றிவளைக்கப்பட்டு சல்லடை போட்டு அவர்களால் தேடப்படும். ஒவ்வொரு எதிரியையும் கொல்வதற்கு எவ்வளவு கடினப்பட வேண்டியிருக்கின்றது.

இவர்கள் முகாம் திரும்ப இவர்களுக்கு சொர்ணமண்ணையிடமிருந்து செய்தி வந்திருந்தது. எல்லேரையும் தன்னை வந்து சந்திக்கும்படி. உடனேயே அவர்கள் தேவையான ஆயுதங்களுடன் புறப்பட்டு விட்டனர். அருண் தான் முதல் கடந்துவந்த பாதைகளை மீண்டும் நினைத்துப் பார்க்கிறான். இம்முறையும் நல்லகாலம் இருந்தால் தப்பலாம் என எண்ணிக் கொள்கின்றான். இவர்கள் மூன்று நாள் பயணத்தின் பின்னர் சொர்ணமண்ணையை சந்திக்கின்றனர்.

இப்பொழுது சொர்ணமண்ணை றெஜி தலைமையில் அறுவர் கொண்ட குழுவை அமைத்து அதில் வீடியோக்கமராவுடன் கதிரவனையும் இணைத்து மீண்டும் அருணை அவன் வந்த வேலையை வெற்றிகரமாகச் செய்து முடிக்கும்படி வாழ்த்தியனுப்புகின்றார். தேவையான இன்னோரின்ன உதவிகளைச் செய்யும்படி குணமண்ணையைப் பணிக்கின்றார்.

(பயணம் தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வல்வை
ந. அனந்தராஜ்

# உதிரம் உறைந்த மண்ணில் நடந்த மாணவப் படுகொலைகள்

1995ம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 22ம் நாள் தமிழீழத்தின் துயர்படிந்த அந்த இருண்ட நாளை நினைத்துப் பார்க்கும் பொழுது, எம் நெஞ்சமெல்லாம் ஒரு கணம் நடுங்குகின்றது!

ஆம்.... அந்தப் படுகொலைகள் நடந்து முடிந்து இன்றுடன் ஏழு வருடங்கள் ஓடிவிட்டன! எப்படித்தான் அந்தத் துயர் படிந்த, உதிரத்தையே உறைய வைத்த அந்த நாளை மறந்து விட முடியும்?

அம்மா... இண்டைக்கு நான் தான் கூட்டுமுறை வேளைக்குப் போகவேணுமணை.......
தம்பியை கெதியாய் வெளிக்கிடுத்தி விடணை........ நேரம் போயிற்றுது......
இண்டைக்குச் சிவபுராணம் படிக்கிறன எங்கடை வகுப்பம்மா.... அம்மா நான் நேரத்தோடை போகவேணும்.....
காலையில் வெள்ளைச் சட்டைகளுடன் புத்தகம் நிறைந்த பைகளையும் தூக்கிக் கொண்டு பள்ளிக்கூடத்தை நோக்கிக் குதூகலத்துடன் துள்ளிக்கொண்டு ஓடிச் சென்றவர்கள்...
ஒன்றா.... இரண்டா?..... இருபத்தியிரண்டு மாணவர்களைக் குண்டுகள் வீசிப்பலியெடுத்த அந்தத்துயரம் நிறைந்த நாட்களைத்தான் எப்படி மறக்க முடியும்.

வடமராட்சி கிழக்கில் அமைந்துள்ள கடலோரக் கிராமமான நாகர்கோயில் மகாவித்தியாலயத்தில், அன்று வெள்ளிக்கிழமை சிவபுராணம் பாடி முடிந்ததும் வகுப்புக்கள் ஆரம்பித்த கையோடு நடந்துமுடிந்த அந்தக் கோர நிகழ்வுகளை மனிதர்களின் கனத்த இதயங்களில் இருந்து எப்படித் தூக்கி எறிந்துவிட முடியும்?

அன்று பாடசாலை ஆரம்பித்து மாணவர்கள் குதூகலத் துடன் வகுப்புக்களில் கற்றுக் கொண்டிருந்தபோது திடீரெனக் கேட்ட கிபிர் விமானங்களின் உறுமலால் அந்தப் பள்ளிக்கூடமே ஒருகணம் அல்லோலகல்லோலப்பட்டது! கண்மூடி விழிக்குமுன்னே வானத்தில் வட்டமிட்ட அந்த நான்கு குண்டுவீச்சு விமானங்களில் இருந்தும் பாடசாலையை நோக்கிக் குண்டுகள் வீசப்பட்டன.....அதுவரை நிம்மதியாகப் படித்துக் கொண்டிருந்த மாணவர்கள் பதறித்துடித்தபடி அங்குமிங்கும் சிதறி ஓடத் தொடங்கினர்.
பிள்ளைகள் ........எல்லோரும் விழுந்து படுங்கோ....

அங்கு பதறித் துடித்துக் கொண்டு நின்ற அதிபரினதும், ஆசிரியர் களினதும் கூக்குரல்கள் எவருடைய காதுகளிலும் விழுந்ததாகத் தெரியவில்லை.

அங்கே எழுந்த மாணவர்களின் மரண ஓலம், நாகர்கோயில் கிராமம் எங்கும் எதிரொலித்துக் கொண்டிருந்தது.

ஆம்!....உதிரம் உறைந்த அந்த மண்ணில் நடைபெற்று முடிந்த அரச வான்படைகளின் மிலேச்சத் தனமான தாக்குதலில் கொல்லப்பட்ட மாணவர்களின் சிதறிய உடல்களின் பகுதிகள் மரங்களிலும், கோயிலின் சுவர்களிலும் வீதியோரங்களிலும் ஒட்டிக் கொண்டிருந்தன.

அவர்களது இரத்தம் தோய்ந்த புத்தகப் பைகள் அங்குமிங்குமாகச் சிதறிப் போய்க்கிடந்தன!

இரண்டு கால்களையும் இழந்து துடித்துக்கொண்டிருந்த மாணவி ஒரு புறத்திலும், கண்களை இழந்து கதறிக் கொண்டிருந்த மாணவர்கள் இன்னொருபுறத்திலும்: நெஞ்சிலும் தலையிலும் குண்டுகள்பாய்ந்து குருதி வடிய குற்றுயிராகக் கிடந்து துடித்துக்கொண்டிருந்த மாணவர்கள் இன்னொரு புறத்திலும், பேச்சும், மூசும், உணர்வும் இழந்து விழிகளை மூடிவிட்ட மாணவர்களின் உடலங்கள் இன்னொரு புறமுமாக அந்தப்பள்ளிக் கூடத்தின் சூழல் எங்குமே மாணவர்களின் பிணக் காடாக இருந்து நெஞ்சையே ஒரு கணம் உலுப்பிக்கொண்டிருந்தது.

எதிர்காலக் கனவுகளை நெஞ்சில் சுமந்து காலையில் மகிழ்சிகரமான ஒரு கற்றலுக்காகத் துள்ளிக் குதித்து வந்த அந்த மாணர்களில் இருபத்தியிரண்டு சிறுவர்களை அந்த ஒரு மணித்தியாலயத்திற்குள் துவம்சம் செய்து அழித்த சிறிலங்கா அரசின் நாகரீகமற்ற கண்மூடித் தனமான தாக்குலால் உலகமே ஒரு கணம் அதிர்ந்தது.

சர்வாதிகாரி ஹீட்லரின் போரியல் வரலாற்றில் கூட என்றுமே நடந்திராத கொடூரம் சிறிலங்காவில் நடந்தது. நவாலித் தேவாலயத்தில் இருநூற்றி நாற்பது அப்பாவி களை விமானக் குண்டுவீச்சில் அழித்தவர்களுக்கு,
இந்து ஆலயங்களைக் குண்டு வீசி நாசம் செய்தவர்களுக்கு,
ஓ, சாவகச்சேரி நகரத்தையே குண்டுவீசி அழித்தவர்களுக்கு .....இது பெரிதாகத் தெரிந்திருக்காது.
அந்த மிலேச்சத்தனமான தாக்குதலை சர்வதேசம் கண்டித்தது!
சிறிலங்கா அரசு வான்படைகளின் மன்னிக்கப்பட முடியாத மனித உரிமை மீறல்கள்..... என்று சர்வதேச மன்னிப்புச்சபையே கண்டித்த போதும், சிறிலங்காவின் அப்போதைய பாதுகாப்புப் பிரதி அமைச்சர் அநுரத்த ரத்வத்தை மட்டும்.
நாகர்கோயிலில் எந்தவொரு மாணவனும் கொல்லப்படவில்லை.... திலீபனின் நினைவு தினத்தைக் கொண்டாடி ஆர்ப்பாட்டம் செய்த புலிகளில் ஒரு சிலரே அன்று கொல்லப்பட்டனர். என்று விடுத்த அறிக்கையைக் கண்டு சர்வதேசம் நகைத்தது!
அந்தக் கொடூரம் சிறிலங்கா அரசின் கபடத்தனத்தையும், அரச பயங்கரவாதத்தையும், உலகுக்கு வெளிச்சம்போட்டுக் காட்டியது!.

ஈழத்தமிழ் மக்களின் வரலாற்றில் துயர் படிந்த அந்த நாகர் கோயில் மாணவப் படுகொலையின் 7வது ஆண்டின் முடிவிலும் கூட துயர்மறையாத நினைவுகளுடன் மரணித்துப் போன அந்த மக்களின் மனதில் நீங்காது இடம்பெற்ற அந்தப் பிஞ்சுகளின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்பதைத் தவிர இப்போதைக்கு எமக்கு வேறு வழி இல்லை.

# பூமியை பேரழிவிலிருந்து காப்பாற்ற மூன்று வழிகள்

சூரியத்தொகுதியில் கட்டற்று உலாவும் பல மைல்கள் சுற்றளவு கொண்ட பாறை மலைகளில் ஒன்று 2019 பெப்ரவரியில் பூமியுடன் மோதும் வாய்ப்புள்ளது. இது விஞ்ஞானிகளின் எச்சரிக்கை.

வியாழனுக்கும் - செவ்வாய்க்கும் இடையே உலவும் இப்பாறைக் கோள்கள் 'அஸ்ரொய்ட்' என ஆங்கிலத்தில் அழைக்கப்படுகின்றன.

வலுக்குறைந்த ஈர்ப்புவிசை கொண்ட இந்த பாறைக் கோள்கள் சுற்றுப்பாதை களை விட்டு விலகி அடிக்கடி பூமிக்கு அண்மையாக செல்வதுண்டு. இத்தகைய பாறைக் கோள் ஒன்று பல மில்லியன் ஆண்டுகளின் முன் பூமியில் மோதியதால் டைனோசர் என்ற ராட்சத விலங்குகள் அழிந்தன என்பது ஒரு கருத்து. இது இதுவரை அறுதியாக உறுதி செய்யப்படவில்லை.

இப்படிப்பட்ட பாறைக்கோள் ஒன்று 2019 பெப்ரவரியில் பூமியில் மோத வாய்ப்பிருப்பதாக பிரிட்டன் விஞ்ஞானிகள் மதிப்பிட்டுள்ளனர்.

அண்மையில் இத்தகைய பாறைக்கோள் ஒன்று பூமியை மிக அண்மித்துச்சென்றது. இப்போது 2001 NT-7 என்ற பாறைக்கோள் 2019 பெப்ரவரி 1 இல் பூமியுடன் மோதும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

மணிக்கு 60 ஆயிரம்மைல் வேகத்தில் பயணிக்கும் அது பூமியுடன் மோதினால் பல மில்லியன் ஐதரசன் அணு குண்டுகள் வெடித்தால் ஏற்படும் அழிவு உண்டாகும்.

இத்தகைய மோதுகைகள் ஏற்பட்டால் என்ற கேள்விக்கு பதில்தரும் வகையில் அமெரிக்காவின் நாஸா திட்டங்களை தீட்டிவருகின்றது.

2முதல் 4 கிலோமீற்றர் நீளமானதும, 11 மில்லியன் தொன்னை எடை கொண்டதும், நிமிடத்துக்கு 17மைல் வேகத்தில் நகர்வதும் சூரியனைச் சுற்ற 837 நாட்களை எடுப்பதுமான 2002 NT-7 பாறைக்கோளின் பாதையை திருப்ப பல்வேறு ஆலோசனைகள் முன்வைக்கப் பட்டுள்ளன.

1. அணுசக்தியால் இயங்கும் தகவு கொண்ட விண்கலம் ஒன்றை 2002 NT-7க்கு அனுப்பி அது ஒரு குடைவடிவ வலைத்தட்டு மூலம் தள்ளி அதன் பாதையை மாற்றுதல்.

2. சூரியப்படலம் ஒன்றுடைய செய்கோளை அனுப்பி NT-7இல் தரையிறங்கச் செய்து சூரியசக்தியை அதன்மீது பிரதிபலித்து அதன் பாதையை திசை திருப்பல்.

3. அணுகுண்டு செய்கோளை அனுப்பி NT-7க்கு அண்மையாக அதனை வெடிக்கச் செய்வதன் மூலம் அதிர்வலைகளையும், கதிர்வீச்சையும் உண்டாக்கி அதன் பாதையை திசை திருப்பல்.

இந்த 3 திட்டங்களை முன்வைத்து நாஸா பரிசீலனை செய்கின்றது. எது எப்படி நடக்கின்றது என்பதை 2019 வரை பொறுத்திருந்து பார்ப்போம்.

தமிழில்: அறிவன்

'எப்பொழுதுமே மலிவு விலை'

ரதி ஜுவெலர்ஸ்
28, Ealing Road, Wembley,
Middx HA0 4TL
Tel: 020-2903 3063
Fax: 020-2903 9711
OPEN: Mon - Sat: காலை 10 முதல் மாலை 6.30 வரை
7 Days a Week Sun: மதியம் 12 முதல் மாலை 6.30 வரை.
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மிக வாய்ப்பான சர்வதேசச் சூழலில் ரணில்

`தீவுகளின் ராணி' என்று இலங்கைத்தீவுக்கு நேரு புகழாரம் சூட்டினார். ஆனால் தற்போது இலங்கைத்தீவு அந்நிய சக்திகளுக்கு ஒரு கவர்ச்சிக் கன்னியாகவல்லவா உள்ளது.

தமிழரின் பெயரால் இலங்கை மீது இந்தியா எதிர்காலத்திற் படையெடுக்கக்கூடும். அதனைத் தடுக்க வேண்டும் என்ற நீண்டகால நோக்கின் அடிப்படையில்தான் பிரித்தானிய தளங்களை இலங்கையில் அமைக்கத்தான் சம்மதித்ததாகவும், அதனை இடதுசாரிகளும், தற்போது கூடவே பண்டாரநாயக்காவும் எதிர்ப்பதாக டி.எஸ் செனநாயக்கா மரணமடைவதற்கு சில மாதங்களுக்கு முன் தன்னிடம் கூறியதாக ஓய்வுபெற்ற சிங்கள அதிகாரி ஒருவர் இந்திய இராணுவம் இலங்கையில் நிலைகொண்டிருந்த காலப்பகுதியில் த ஐலண்ட் பத்திரிகையில் எழுதியிருந்தார்.

டி.எஸ் செனநாயக்காவின் பின் டட்லி செனநாயக்கா என, செனநாயக்கா குடும்பத்தை தொடர்ந்து அரசியல் அதிகாரத்தில் தக்கவைக்க பிரித்தானியா உதவும் என்ற இரகசிய உடன்பாடு தெரியவந்ததைத் தொடர்ந்து பண்டாரநாயக்கா ஐ.தே.க விலிருந்து வெளியேறினார். இதற்குப் பிரித்தானியா தளம் உறுதுணையாய் அமையுமெனவும், எனவே ஐ.தே.க. வினை வீழ்த்துவது பிரித்தரனியர் தளங்களை அகற்றுவதென்பதன் மூலமே பூர்த்தியாக்க முடியும் என்றும் பண்டாரநாயக்கா கருதினார். இதனடிப்படையில் தளமகற்றும் பிரச்சாரத்தில் ஈடுபட்டு இறுதியில் தளங்களை அகற்றியும்விட்டார்.

இத்தளம் அகற்றும் விவகாரத்தை நிறைவேற்றுவதற்கு பண்டாரநாயக்கா கையாண்ட அரசியல் சித்துவிளையாட்டே `அணிசாராமையும்', நேருவின் கரத்தைப் பலப்படுத்தல் என்பதுமாகும். தளத்தை அகற்றி டெல்கியின் மனதை குளிர வைப்பதன் மூலம் `இந்திய ஆபத்து' எனும் விடயத்தைக் கடந்திடலாம் என்பதே பண்டாரநாயக்காவின் உத்தியாகும். பிரித்தானிய தளங்களை ஏற்றுக்கொண்டு டி.எஸ். செனநாயக்காவின் மந்திரி சபையில் அமைச்சராயிருந்த பண்டார நாயக்கா தனக்குப் பிரதமர் பதவி கிடைக்கமாட்டாது என்பதை அறிந்துகொண்ட பின்பே தளவிவகாரத்தை தனிமுதன்மையான விவகாரமாய் கையில் ஏந்தினார்.

மீண்டும் காட்சி மாறியது. 1977ம் ஆண்டு பதவிக்கு வந்த ஜே.ஆர் இனப்பிரச்சினையின் பெயரால் சிங்கள இராணுவத்தை மேற்குலகமயமாக்கம் செய்தார். அதன் துணையுடன் பத்தாண்டுகளை அவரால் தெளிவாக கடக்க முடிந்தது. ஆனால் மேற்குலக இந்திய இராணுவ முரண்பாட்டின் பின்னணியில், பனிப்போர் சூழலில், சோவியத் அனுசரணையுடன் இந்தியாவின் கரம்மேலோங்கி நிற்கவே பின்பு இந்திய இராணுவத்தைத் தழுவி தன் எஞ்சிய காலத்தை ஜே.ஆர் நிறைவேற்றினார். இதில் ஜே.ஆரிடம் இருமுனைக்கத்தி நோக்குநிலை இருந்தது. ஒன்று இந்திய இராணுவத்தைப் பயன்படுத்தி தன்னைத் தக்கவைப்பது; இரண்டாவது புயபலத்தால் தன்னை மிரட்டும் இந்திய இராணுவத்தை சகதிக்குள் சிக்கவைப்பது. இப்படி வளர்க்கப்பட்ட இனவாதத்தின் பெயராலான இராணுவக் கட்டமைப்பிற்தான் ஐ.தே.க. தொடர்ந்து 17 ஆண்டுகள் பதவியில் இருக்க முடிந்தது. 17 ஆண்டுகளின் பின்பு ஐ.தே.க. வீழ்ந்தமை என்பது அரசியற் தக்க பூர்வ வளர்ச்சியின் தவிர்க்க முடியாத மொத்த விதியின் விளைவாகும்.

இப்போது மீண்டும் ஐ.தே.கவிற்கு புதியதொரு வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. ரணிலின் தலைமையின் கீழ் நிகழவுள்ள இரண்டாம் கட்ட நவீனமயமாக்கலே அது. அதன்படி நவீனமயமாகவுள்ளவை.

1. தகவல் தொழில் நுட்பம்,
2. இராணுவம்,
3. பொருளாதாரம்.

இங்கு பொருளாதாரம் நவீனமயமாதல் என்பது உண்மையின் மேற்குலக வர்த்தக மயமாதல் என்பது தான். இத்தகையவர்த்தக மயமாக்கலுடன் சேர்ந்தே மேற்குலக, வர்த்தக கலாச்சார மயமாதலும் நிகழும், இதிற சிறுவர் பாலியல் உட்பட ஒரு புதிய வளமான பாலியற் சந்தையாக இலங்கை எழுச்சிபெறும். அத்துடன் கைத்தொழில் வளர்ச்சியற்ற வர்த்தக மயமாக்கலில் ஒருவகை விகாரம் இருக்கும். அத்தகைய விகாரத்திற் குண்டர் கலாச்சாரம் செழித்து வளரும். இயல்பான வளர்ச்சியற்ற இந்த விகாரமானது அதற்கேயுரிய ஏனைய அழுகிய பக்கங்களையும் மனித மாண்பின்மையையும் வாழ்க்கை முறையாக்கிவிடும்.

இந்த நவீனமயமாதலில் சந்திரிகாவின் பிரச்சினை என்னவெனில் இராணுவம் நவீனமயமாதல் எனும் இரண்டாவது அம்சம்தான். ஏனெனில் இங்கு இராணுவம் நவீனமயமாதல் என்பது இராணுவம் அமெரிக்கமயமானால் அது ஐ.தே.கவினைத் தூக்கி நிறுத்தும். இதனால்



ஐ.தே.க நீண்டகாலம் பதவியில் நிலைக்க முடியும் என்றும், முன்பு பிரித்தானிய தளங்கள் தனது சந்தைக்கெதிராக டி.எஸ் இற்கு உதவியது போல இனி இலங்கையில் அமெரிக்க இராணுவ மயமாக்கல் தனக்கும், தனது வம்சத்திற்கும் எதிராக அமைந்துவிடும் என்றும் சந்திரிகா அதிகம் அஞ்சுகிறார் எனத் தெரிகிறது.

இந்நிலையில் காணப்படும் தற்போதைய சர்வதேச அரசியற் சூழுலை ரணில் எவ்வாறு பயன்படுத்துகிறார் என்பதை முதலில் விளங்க வேண்டியது அவசியம். தென்னாசியாவை மேற்குலக வர்த்தக மயமாக்கலுடன் இணைத்துவிட வேண்டும் என்பது அமெரிக்காவின் நிரந்தரக் கொள்கைகளுள் ஒன்று. இந்த இலட்சியத்தை அமெரிக்கா ஈட்டுவதற்கு இலங்கையை அமெரிக்காவின் கையில் இப்பிராந்தியத் திற்கான ஒரு தூண்டிலாக்க ரணில் சம்மதம். அதேவேளை அமெரிக்காவிற்கு ஏற்பட்டிருக்கும் வேறொரு உடனடித் தேவையின் நிமித்தம், அமெரிக்காவுடன் அதி கம் ஒத்துப்போவதன் மூலம் தனக்கான அனுகூலங்களை அதிகரிக்கவும் விரைவு படுத்தவும் முடியும் என்பது ரணிலின் இன்னொரு கணிப்பாகும்.

அதாவது இராணுவ ரீதியாக வளைகுடாவையும், அதன் நீட்சியாகத் தென்னாசியாவையும் தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்துவிட்டால் இந்து சமுத்திரம் முழுவதிலும் தமது பொருளாதார நலன்கள் எவற்றையும் அடையலாம் என்பதே அமெரிக்காவின் பேரவா. தென்னாசியாவில் இந்தோ-பாக் முரண்பாட்டைப் பயன்படுத்தி தன்னை அங்கு நிலைநிறுத்துவது, வளைகுடாவில் இஸ்லாமிய நாடுகளிடையேயான முரண்பாடுகளையும், உள்நாட்டில் ஆட்சியாளர் புரியும் எதேச்சதிகாரங்களையும் ஏதுவாகக்கொண்டும் வளைகுடாவில் நிலைகொள்வது என்பது அமெரிக்காவின் பெரும் போக்கான திட்டமாகும்.

இதில் தென்னாசியாவைக் கட்டுப்படுத்த வளைகுடா அரணாகும். வளைகுடாவைக் கட்டுப்படுத்த தென்னாசியா அரணாகும். இதில் தென்னாசியாவும் வளைகுடாவும் அவரவர் நிலையில் நின்று ஒன்றையொன்று பார்க்கையில் ஒன்றுக்கொன்று வேறானதாகத் தோன்றினும் அமெரிக்காவின் நிலையிலிருந்து பார்க்கையில் அவை இரண்டும் அவற்றின் விளிம்பில் உள்ள பிராந்திய நாடுகளுடன் இணைந்து ஓர் அமெரிக்க தேவைக்கேற்ற ஒன்றுக்கொன்று இசைவாக ஒட்டப்படுகின்றன.

ஈராக் மீதான அமெரிக்கத் தாக்குதல் முயற்சிக்கு அதன் பெற்றோலிய வளமே காரணமென கண்ணுக்குத் தெரியும் ஒரு பொருளாதார காரணியை மட்டும் சிலர் கூறி ஒரு பேருண்மையை மறைத்துவிடப்பார்க்கின்றனர். அமெரிக்காவிற்கு பெற்றோலியம் தேவை. அதிற் சந்தேகமில்லை. ஏதாவது சந்தையும் வர்த்தகமும்தான். சுழற்சியான பண்ட உற்பத்தியின் அச்சு. பண்ட, உற்பத்தி தான் பொருளாதார ஆக்கம். எனவே தொடர் பொருளாதார வளர்ச்சிக்கு சக்திப் பொருளாகிய பெற்றோலியம், வர்த்தகம், சந்தை தடையற்ற கடல் வழிப்போக்குவரத்து, மூலவளங்கள் என்பன அனைத்தும் ஒன்றுக்கொன்று பொருத்தமானவகையில் இணைக்கப்பட வேண்டியுள்ளன. ஆதலால் வளைகுடாவும் தென்னாசியாவும் அவற்றின் விளிம்பு நாடுகளும் ஒன்றுக்கொன்று இசைவான முழுமையான பார்வையுடன் இணைக்கப்படும் போதுதான் அது ஒரு முழுச் சுற்றோட்டத்திலான பொருளதார நலனை மேற்குலகிற்குக் கொடுக்கும். இத்தகைய ஒருங்கிணைப்புத் திட்டத்தின் கீழ்த்தான் புஷ் நிர்வாகம் செயற்படுகின்றது.

இத்தகைய ஒருங்கிணைப்பைத் துரிதப்படுத்துமாறு ஒரு வரலாற்று யதார்த்தம் அமெரிக்காவைத்தூண்டி நிற்கின்றது. அதுவே செப்டெம்பர் விவகாரம். இதனை வரலாற்றுப் பின்னணியில் வைத்தே புரிந்துகொள்ள வேண்டும்.

முதலாம், இரண்டாம், மூன்றாம் உலகமகா யுத்தங்களின் போதெல்லாம் அமெரிக்க மண்ணில் ஒரு துப்பாக்கிச் சன்னங்கூட வெடிக்கவில்லை. நான்காம் உலக யுத்தத்தின்போதுதான் பின்லாடனால் அமெரிக்க மண்ணில் இரட்டைக் கோபுரங்களை முற்றாக அழித்ததுட்பட அமெரிக்காவின் இராணுவத் தலைமைப் பீடமாகிய பென்ரகன் வரை பாரிய தாக்குலை நடத்த முடிந்தது.

இதன்பின்புதான் அமெரிக்க இராணுவச் சிந்தனையில் ஒரு புதிய திருப்பம் ஏற்பட்டது. அதாவது, அமெரிக்கா, அத்திலாந்திக் சமுத்திரம்,பசுபிக் சமுத்திரம் எனும் இரு பெரும் சமுத்திரங்களால் அரணமைக்கப்பட்ட நாடு. அத்துடன் அதன் சுற்றுமுற்றுமுள்ள நாடுகளும், பலவீனமானவை. எனவே சமுத்திரத்திட்டத்தாலும், கண்டத்திட்டத்தாலும் அமெரிக்க பாதுகாப்பு உறுதியானது. ஆதலால் அதற்கேற்படக்கூடிய ஆபத்து கண்டம்விட்டுக் கண்டம் பாயக்கூடிய ஏவுகணைகளாற்தான் என்பதே அமெரிக்க கணிப்பீடு. இதனாற்தான் நட்சத்திர யுத்தம் என்று சொல்லப்படுகின்ற எஸ்.டி.ஐ. (Strategic defence initiative) திட்டம் பற்றி அமெரிக்க ஜனாதிபதிகள் தீவிரமாகச் சிந்திக்கத் தொடங்கினர். இதன்படியே அண்ட வெளி யுத்தமுறையின் மூலம் வான்பரப்பில் வைத்தே ஏவுகணைகளை அழித் துவிடலாம் என்பது.

இவ்வாறு அமெரிக்கா ஒரு ஏவுகணை யுத்தத்தை எதிர்பார்த்துக்கொண்டிருக்கையில் பின்லாடன் வெளியிலிருந்து எந்தவொரு ஏவுகணையையும் ஏவாமல் அமெரிக்காவிற்குள்ளிருந்தே, அமெரிக்காவின் வளங்களைப் பயன்படுத்தியே, அமெரிக்கா தனது மண்ணில் எந்தவொரு யுத்தத்திலும் கண்டிராத பாரிய தாக்குதலைச் செய்தார். அமெரிக்க நட்சத்திர யுத்தத்தின் கண்ணுக்குப் படமுடியாத ஒரு தாக்குதல் அது. இதனால் அமெரிக்கா தனது வானத்து எஸ் டி.ஐ யினை விடவும் பலமான கள இராணுவ நடவடிக்கைகளிற் கவனம் செலுத்தத் தொடங்கியது. இதனால் கள இராணுவ நடவடிக்கையும் தரையில் தரித்து நிற்றலும் என்ற இராணுவ சிந்தனை அமெரிக்க திட்டமிடலாளர்களிடம் பலம் பெற்றுவிட்டது.

இத்தகைய விளக்கத்துக்குள்ளும் வியாக்கியானத்துக்குள்ளும் அமெரிக்கா சதாமை உட்படுத்தி வருவதுடன் அதற்கான பிரச்சாரத்தையும் செய்து வருகின்றது. சதாமிடம் ஆபத்தான இரசாயன ஆயுதங்களும், அணுவல்லமையும் இருப்பதாக புஷ்ஷும், ரொனி பிளேயரும் கூறிவருவதுடன் இத்தகைய ஆயுதங்கள் அமெரிக்காவிற்கும் ஆபத்தாயமையும் எனவும் கூறிவருகின்றனர்.. இதன் அர்த்தம் என்னவெனில் சதாம் ஆபத்தான ஆயுதங்களை ஐரோப்பாவிற்கும், அமெரிக்காவுற்கும் கடத்திச் சென்று அங்கு பேரழிவை உ்ருவாக்கி விடுவார் என்பது. இவ்வாறாக ஈராக்கை நோக்கி ஒரு யுத்த மேகத்தை அமெரிக்கா நகர்த்துகின்றது.

இத்தகைய யுத்தத்திற்கு இஸ்லாமிய நாடுகளின் களநிலை ஆதரவு எதிராய் அமையுமாயின் கள இராணுவ நடவடிக்கைகளுக்கு இராணுவப் பின்புலன்கள் அமெரிக்காவிற்குத் தேவை. இத்தகைய கட்டத்தில் இலங்கை சிறந்ததொரு மாற்று வழிப்பின்புலமாக அமையலாமென அமெரிக்கா கருதுகின்றது. இதனால் இலங்கை மீது அமெரிக்கா அதிக காதல் லீலை புரிகின்றது. அது இனிப்பும், கண்டோஷும் எனப் பலவற்றை நீட்டுகின்றது. இந்தப் புதிய வாய்ப்பை ரணிலும் ஐ.தே.க.வும் முழு அளவிற் பயன்படுத்த விரும்புகின்றனர்.

(26ம் பக்கத் தொடர்ச்சி)

– மு. திருநாவுக்கரசு –

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போராட்ட உணர்வு பொங்கியெழப் பாடும் தெலுங்குக் கவிஞன்

...த்தார் என்று ஆந்திர மக்களால் அழைக்கப்படும் கும்மாடிவிட்டலுக்கு 48 வயதாகிறது. அரசியல் கருத்துக்களை உரத்துச் சொல்பவா கத்தார். எல்லா கலை வடிவங்களின் தாயக மக்கள் போராட்டம் இருக்க வேண்டும். மக்களிடமும், ஒடுக்குமுறைக்கு எதிரான அர்களின் போராட்டங்களிலும் ஒரு கலைஞன் அக்கறை செலுத்தாவிட்டால் அவன் சரித்திரத்தின் குப்பைத்தொட்டியில் தூக்கிஎறியப்படுவான என்று முழுங்குகிறார் கத்தார்.

கத்தார் மக்களின் இதயத் துடிப்புக்கு குரல்கொடுகிறார். ஆந்திரப் பிரதேசத்தின் நாட்டுப்புற கலைவடிவான கதா என்ற வடிவத்தில் தனது பாடல்களை அமைத்துக்கொள்கின்றார். மொழி எல்லைகளைக் கடந்து செல்லக் கூடிய ஓர் ஊடகம் இது.

1969ல் நடந்த ஸ்ரீகாகுளம் எழுச்சி முதல் கடந்த சுமார் 25 ஆண்டுகளுக்கும் மேலாக ஜன நாட்டிய மண்டலி என்ற குழுவை நடத்தி வருகிறார். அவரும் அவரது குழுவினரும் இந்த அமைப்பின் மூலம் ஆந்திரப் பிர தேசத்திலுள்ள விவசாயிகள், தலித்துகள், மற்றும் பெண்கள் இயக்கங்களையும் தங்கள் பக்கம் ஈர்த்து வருகின்றனர். வலுவான அமைப்பு இல்லாவிட்டால் கத்தரோ இல்லை என்கிறார் அவர். கலை கலைக்காகவே என்று கூறும் பாரம்பரியத்தில் வந்தவர்கள். கலையில் எதற்காக அரசியலைக்கொண்டுவர வேண்டும் என்று கேட்கின்றானர். அரசிஎல் இலலாத காலலயை எனக்கு காட்டுங்கள். என்று கத்தார் அவர்களையே திருப்பிக் கேட்கின்றனர்.

கத்தார் மாற்றுக் கலாச்சாரத்திற குரல்கொடுப்பவர். இந்த மாற்றுக் கலாச்சாரத்தைச் சார்ந்த கலை வடிவங்கள் அங்கீகரிக்கப்பட்டதில்லை. அத்துடன் அவை பிரதான வெகுசன கலாச்சாரத்தால் புறக்கணிக்கப்படவும். மறக்கப்படவும் பட்டுள்ளன.

போராடுவதுதான் இயற்கையின் நியதி என்கிறார் கத்தார். மண்ணில் பதிக்கப்பட்ட ஓர் விதை சுதந்திரமாக வெளியே வருவதற்காக போராடுகிறது. சிறு செடியாக முளைவிடுகிறது. இலைகளை அணிந்துகொள்கிறது. பழங்கள் தருகிறது. அது இறப்பதற்கு முன்னால் கோடிக்கண்க்காகன விதைகளை ஈனுகிறது என்கிறார் கத்தார்.

நிறுவனத்தின் அடக்குமுறைக்கு வளர்ச்சியும் போராட்டமும் (கத்தாரின் அகராதியில் இரண்டு சொற்களுமே ஒரே பொருளைக் குறிப்பவைதான்.) ஆளாகத்தான் வேண்டியிருக்கிறது.

அடக்குமுறையை எதிர்க்கும்போது மக்கள் தியாகங்களைச் செய்யவேண்டியிருக்கிறது. போராட்டம் வீரர்களை உருவாக்குகிறது. தங்களக்கு இனியவர்கள் மரணமடையும் போது ஒரு கலைஞன் ஒடுக்கபட்டவர்களிடையே நம்பிக்கையை உண்டாக்க வேண்டுமஎன்கிறார் கத்தார்.

இதுபோன்ற போராட்டங்களில் இறந்தவர்களைப் பற்றி கத்தார் இயற்றிய ஒரு பாடல் இது.

விவசாயிகள் கூலிகளின் குழந்தைகளே எல்லாவழிகளிலும் அடைக்கப்பட்ட மக்களுக்கு குழந்தைகளே.

நீங்கள் போராட்டத்தின பாதையைக் காட்டியிருக்கிறீர்கள்

என் அன்பிற்குரிய குழந்தைகளே நன்றி

1991ல் நடைபெற்ற விவசாயிகள். உழைப்பாளிகள் கூட்டத்தில் இப்பாடல் பாடப்பட்டபோது பிள்ளைகளை இழந்த நூற்றுக்கணக்காண தெலுங்கானா விவசாயிகள் கத்தாருடன் மேடையில் இணைந்து பாடினார்கள்.

மக்கள் இயக்கங்களுக்கு ஆந்திரப் பிரதேசத்தைப் பொறுத்தவரை இது ஒரு இருண்டகாலம என்கிறார். எதிர்ப்பு இலக்கியமோ அல்லது அது போன்ற இதர கலை வடிவங்களோ வலுக்கட்டாயமாக — குறிப்பாக தொலுங்கான பகுதியில் என்னை பிராயாணம் செய்ய விடவில்லை. ஜனநாட்டிய மண்டலி மீது பிரகடனம் செய்யப்படாத தடை ஒன்று உள்ளது. எனவே மக்கள் தங்களது பாடலை தாங்களே இயற்றிக்கொள்கின்றனா என்கிறார் கத்தார்.

இதுபோன்ற சூழலில் வெகு வெளிப்படையாக இல்லாத அரசியல் செய்திகளைக்கொண்டு தனது பாடலை உருவாக்கிப் பாடவேண்டிய சவாலை அவர் எதிர்கொள்ள வேண்டியிருக்கிறது. இந்தச் சவாலை மரபைப் பயன்படுத்துவதன் மூலமும் மரபுக்குள்ளிருந்தே அதை உடைப்பதன் மூலமும் கத்தார் ஒருவாறு சமாளித்துக் கொள்கிறார். உதாரணமாக தேர்தலில் மக்களிடமிருந்து ஓட்டுக்களை யாசகமாகப் பெற்றுப் பதவிக்கு வந்த பின்னர் அவர்களை உதைத்து தள்ளிவிடும் உள்ளூர் அரசியல்வாதியைத் தண்டிக்கக் காளிதேவியை வேண்டுவது போல் தனது புதிய பாடல் ஒன்றை கத்தார் அமைத்துள்ளார்.

இதேபோல லஞ்சம் வாங்கும் பொலிசார். வெறும் தண்ணீரை இன்ஜெக்சனில் ஏற்றி படிப்பறிவில்லாத ஏழைகளுக்கு ஊசிபோட்டு ஏமாற்றும் டாக்டர்கள், ஏழை விவசாயிகளிடம் பணத்தைப் பெற்று அதைப் பண்ணாரர்களுக்குக் கடனாகத் தரும் பேங்க் மேனேஜர் போன்றவர்களையும் தண்டிக்க வேண்டும் என்று அப்பாடல் கேட்டுக்கொள்கிறது. தீமையை வென்று நன்மையை நிலைநிறுத்தும் காளி கூட அரசியல்வாதிகளின் தீமைகளுக்கு எதிராகச் சக்தியற்று விட்டாள் என்ற செய்தியுடன் அப்பாடல் முடிகிறது.

1960 ஸ்ரீகாகுளம் போராட்டத்தினாலும் பின்னர் நக்ஸலைட் இயக்கமான மக்கள் யுத்த குழுவினலும் பல கவிஞர்களும் எழுத்தாளர்களும் ஈர்க்கப்பட்டனர். 70ன் மத்தியில் கொண்டபள்ளி சீதாராமையாவின் தலைமையில் உருவாகிய நக்ஸலைட் இயக்கத்தை தீவிரமாக ஆதரிப்பவர் கத்தார்.

நக்ஸலைட் இயக்கத்தின் தலைவரான கொண்டபள்ளி சீதாராமையாவின் வீழ்ச்சயைப் பற்றி சொல்லும் போது தலைவர்கள் இயக்கத்துடன் வளரவேண்டும். அப்படி அவர்கள் வளரவில்லை என்றால் இயக்கம் அவர்களை ஒதுக்கிவிடும் என்கிறார் கத்தார். 1992ல் சீதாராமையா வெளியேற்றபபட்டபோதும் கத்தார் தொடர்ந்தும் மக்கள் யுத்த குழுவை ஆதரித்து வருகிறார். ஆந்திர பிரதேசத்தில் கிராமங்களில் நிலவி வந்த நிலபிரபுத்துவ உறவுமுறைகளை அவ்வமைப்பு பெருமளவு மாற்றிய மைத்துள்ளது என்கிறார் கத்தார். நானும் எனது சன தலித்துக்களும் கிராமத்தில் தலைநிமர்ந்து நடக்க முடிகிறது எனில் இதற்கு நாங்கள் கட்சிக்குப்பெரிதும் கடன்பட்டிருக்கின்றோம் என்கிறார்.

மக்கள் யுத்தகுழு மக்களின் ஆதரவை இழந்துவருவதுடன் வன்முறையிலும் பெருமளவு, ஈடுபட்டு வருகிறதே என்று கேட்டால், அதற்கு கத்தார்மக்கள் யுத்தக் குழுவை மக்கள் ஆதரிக்காவிட்டால் பின் ஏன் கிராமப் பகுதிகளுக்கு எல்லைக்காவல் படை போன்றவற்றை அனுப்ப வேண்டும்? அது ஆதரவை இழந்துவருகிறது என்றால் அது அப்படியே செல்வாக்கிழந்து போகும் படியாக அதை விடவேண்டியதுதானே. என்று திருப்பிக் கேட்கிறார்.

ஜுன் 21 முதல் ஆந்திர பிரதேச அரசு மக்கள் யுத்தக் குழுவின் மீது இருந்த தடையை தற்காலிகமாக நீக்கியுள்ள நிலையில் ஏதேனும் மாற்றங்கள் உண்டா?

தடையை நீக்கியது ஒரு தாமக்ஷ்தடை நீக்கப்பட்ட அன்றே நால்கொண்டா மாவட்டத்தில் ரமணாபேட்டையில் நான்கு இளம் விவசாயிகள் கொல்லப்பட்டுள்ளனர். கடந்த ஆறு மாதங்களில் மக்கள் யுத்த குழு எந்த வன்முறையிலும் ஈடுபடவில்லை. என்றாலும் என்.டீ.ஆர் அரசு பதவியேற்ற பின்னர் 49 பேர்கள் போலியான மோதல்களில் கொல்லப்பட்டுள்ளனர் என்கிறார் கத்தார்.

எந்தவிதமான நிபந்தனை களுமற்ற தடையை நீக்க வேண்டும் என்கிறார் கத்தார். அறிவுஜீவிகள், மனித உரிமைக் குழுக்கள் மற்றும் கலைஞர்கள் அடங்கிய குழுவை நான் முதல்வரிடம் அழைத்துச் செல்வேன் என்கிறார்.

இன்று தொழிலாளர்கள், விவசாயிகள், அறிவுஜீவிகள், மற்றும் மாணவர்கள் பணி இதுதான்.அரசின் புதிய பொருளாதாரக் கொள்கையை எதிர்க்க வேண்டும். பன்னாட்டுக் கம்பனிகளைத் தடுத்து நிறுத்த வேண்டும் என்று கத்தார் நினைக்கிறார். கிழக்கிந்தியக் கம்பனி இந்த தேசத்தை 200 ஆண்டுகள் ஆண்டது. போதாதென்று இப்போது இந்த பன்னாட்டு கம்பனிகள் நம்மை மீண்டும் அடிமைகளாக்க முயற்சிக் கின்றன என்றார் கத்தார்.

---

(25ம் பக்கத் தொடர்ச்சி) மிக வாய்ப்பான.....

ஆனால் இதில் ரணிலுக்குள்ள பிரச்சினை என்ன வெனில் இந்தியாவை சினமடையவிடாது பார்த்துக்கொள் வதுதான். அணு வல்லமைமிக்க பாகிஸ்தானுடன் இந்தியா மோத வேண்டியுள்ளது. அத்துடன் பனிப் போர்க்கால சோவியத் உறவும் இந்தியாவிற்கில்லை. இந்த சூழலில் அமெரிக்காவிற்கு இந்தியா நசிந்து போவதுதான் பாகிஸ்தானை எதிர்கொள்ளவுள்ள ஒரே வழி. இச்சூழலில் இந்தியாவை சற்று சமாளித்துவிட்டால் தனது அமெரிக்க காதல் நிறைவேற முடியும் என்பதே ரணிலின் நிலை.

இந்தியாவைக் கையாள்வதற்கு சென்னையையும், ஏனைய தென்னிந்திய மானிலங்களையும், மத்திய அரசையும் கையாளல் எனும் முக்கோணத் திட்டத்தை ரணில் கொண்டுள்ளார். இதில் இவ்விருநாடுகளையும் ஒரே நேரத்தில் சிறப்புற கையாளல் என்பதுதான் ரணிலின் இராஜதந்திர வித்தைக்குரிய சவாலாகும். தனது அரசியல் உயிர் மூச்சும் தளமும் இவ்விரு நாடுகளையும் கையாளல்தான் என ரணில் நம்புகின்றார். அதாவது தனது உள்நாட்டரசியலை ரணில் முற்றிலும் வெளி நாட்டரசியலுக்குள்ளாற்தான் பார்க்கிறார். ஈராக்மீதான அமெரிக்க யுத்தம் வெடித்தால் இலங்கை அமெரிக்க உறவு அதிகம் பலமடையும் பின்னணிகளே அதிகம் தெரிகின்றன.

இவற்றின் பின்னணியில் தனக்குரிய வாய்ப்புக்கள் அதிகம் சுருங்குவதைக்கண்டு சந்திரிகா குமுறுகிறார் என்பதை அவரது நடத்தைகள் காட்டுகின்றன. டி.எஸ் விட்டுச் சென்ற இடத்தில் இப்போது ரணில் இலங்கையை மேற்குடனும், ஐ.தே.கவுடனும் சேர்த்து மீள் முடிச்சுப்போடும் நிலையில் உள்ளார் என்பது சந்திரிகாவிற்குத் தெரிகின்றது. அதேவேளை அந்த முடிச்சை அறுப்பதில் தனது தந்தைக்கிருந்த வரலாற்றுக் கால கட்ட வாய்ப்பு தனக்கில்லை என்றும் அவருக்குத் தெரிகிறது. ஆனால் இனவாதத்தைக் கையில் எடுத்ததன் விளைவுதான் இது என்பதை சந்திரிகாக்களும், அனுராக் களும், குட்டி விஜேவீராக்களும் விளங்கிக் கொள்ள இன்னும் எத்தனை நூற்றாண்டுகள் எடுக்குமோ யாரறிவர். எப்படியோ மொத்தத்தில் இலங்கையின் அரசியல் என்பது முற்றிலும் சர்வதேச அரசியலின் பிம்பமாகிவிட்டது. சர்வதேச அரசியலின்றி இலங்கைக்கு இனி எவ்வித அரசியலுமில்லை. சர்வதேச அரசியற் சக்திகளின் கண்களில் இலங்கை ஒரு கவர்ச்சிக்கன்னி.

உங்களுக்கு தேவையான அனைத்து பொருட்களையும் ஒரே கூரையின் கீழ் பெற்றுக் கொள்ள நீங்கள் நாடவேண்டிய ஒரே நிறுவனம்

Hayes Food & Wine

OPEN 7 DAYS

HAYES FOOD & WINE

GROCERY & OFF-LICENCE
1100 Uxbridge Road, Hayes,
Middlesex, UB4 8QH

என்றும் உங்கள் மனதில் இருக்க வேண்டிய ஒரே நிறுவனம்

Hayes Food & Wine

7.00 am - 11.00 pm

தொலைபேசி இல : 0208 5732237 கை தொலைபேசி இல : 07786257736 தொலைநகல் : 0208 5732237

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கொடுப்பனுவுக்காக காத்திருக்கும் மீளக்குடியமர்வு மக்கள்

வன்னிப் பிரதேசத்தில் முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்டங்களில் தற்போது மக்கள் மீளக்குடியேறி வருகின்றனர். எனினும் அவர்களுக்கான கொடுப்பனவுகள் வழங்க நடவடிக்கைகள் ஏதும் எடுக்கப்பட வில்லை. மாறாக இவர்களுக்கான கொடுப்பனவுகள் வழங்குவதில் அரசாங்கம் கால இழப்புக்களை மேற்கொண்டு வருகிறது.

இக்கால இழப்புக்களினால் மீளக்குடியேறும் மக்களின் மனோநிலை பெரிதும் பாதிப்படைந்துவருகிறது. தமது சொந்த இருப்பிடங்களுக்கு திரும்பிய மக்கள் இழப்பீடுகள் கிடைக்காததினால் மர நிழலிலேயே தங்கும் அவலநிலையும் உருவாகின்றது. இதனால் குடும்ப ரீதியாக வந்து குடியேறும் மக்கள் சொல்லொணாத் துயரடைகின்றனர். இவர்களது துயர் மேலும் தொடர அனுமதிக்கக் கூடாது. சிறீலங்கா இராணுவ நடவடிக்கைளினால் அளப்பெரிய துன்பங்களை அனுபவித்து இடம்பெயர்ந்து தற்போது மீளக்குடியமர்ந்து வரும் மக்களுக்கு அரசாங்கம் கொடுக்கும் கொடுப்பனவானது ஆனைப்பசிக் குப்போட்ட சோளப்பொரியாக இருக்கக் கூடாது. தற்போது வழங்கப்படுகின்ற உதவுதொகைகள் கொடுப்பனவுகள் எந்தவகையி லும் போது மானதாக இல்லையென்று உணரப்படுகிறது.

மீளக்குடியேறும் மக்களின் இயல்புநிலை ஒரு சீரான நிலைக்குத் திரும்பும் வகையில் வழங்கப்படும் உதவுதொகையாக அமைய வேண் டும். அதை விடுத்து 15 ஆயிரம் ரூபாவுக்கு உட்பட்ட தொகையை வழங்குவதால் அவர்களுக்கு எந்தவொரு பயனும் நன்மையும் ஏற்படப்போவதில்லை. இந்த விடயத்தில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் அரச சார்பற்ற நிறுவனங்கள் மீளக்குடியேறும் மக்களின் மறுவாழ் வுத்திட்டத்தை விரிவுபடுத்த வேண்டும். இந்தவகையிலே பார்க்கின்ற போது மீளக்குடியமர்வு குறித்து அதிக பொறுப்பு அரச சார்பற்ற நிறுவனங்களுக்கு உண்டு. இதை இவர்கள் ஒரு போதும்தட்டிக்கழிக்கக் கூடாது. உள்நாட்டில் இடம்பெயர்ந்தவர்களை மீளக்குடியமர்த்தி அவர்களுக்கான சரியான வசதிகளை செய்து கொடுக்க வேண்டிய பாரிய பொறுப்பு அரசசார்பற்ற நிறுவனங்களுக்கும் உண்டு. உள்நாட் டில் இடம்பெயர்ந்து வாழும் மக்களை அதிகம்கொண்ட நாடுகளில் இலங்கை முக்கிய இடத்தைப் பெறுகிறது. அதிலும் வடக்குக் கிழக்கில் தான் அதிகமானோர் இடம் பெயர்ந்திருக்கிறார்கள். வடக்குக் கிழக் கில்தான் யுத்தம் முனைப்புப்பெற்ற மாகாணமாக வுள்ளது. அந்த வகையில் பார்க்கும்போது வன்னிப் பிரதேசம் முதலாமிடத்தில் நிற்கின் றது.

இவ்வாறு இடம்பெயர்ந்து வருபவர்களை மீளவும் அவர்களது சொந்த இடங்களில் குடியமர்த்தி அவர்களுக்கான வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டிய பாரிய பொறுப்பு அரசசார்பற்ற நிறுவனங்க ளுக்குள்ளது. இத்தருணத்தில் அரசசார்பற்ற நிறுவனங்கள் தமது செயற் பாடுகளை விழிப்புடன் செய்வது அவசியம். இந்த அமைப்புக்கள் மீளக்குடியமரும் மக்களின் விடயத்தில் மேலும் கவனம் செலுத்தப் படவேண்டும். அதாவது இடம்பெயர்ந்தோரது உரிமைகள் மீறல் சம்பந் தமானவை, தொலைக்கப்பட்டோ அல்லது விண்ணப்பித்தோ அடை யாள அட்டைகள் கிடைக்கப் பெறாதோர் முறைப்பாடுகள், இடம் பெயர்ந்து மீளக் குடியமர்ந்தும் அரச உதவிகள் கிடைக்கப் பெறா தோர், ஊழியர் சேமலாப நிதியம், ஊழியர் நம்பிக்கை நிதியம் முதலா னவை இடப்பெயர்வால் இழக்கப்பட்டோர் தொடர்பானவை, இவ்வா றானவற்றுக்கு உடனடி பரிகாரம் செய்து கொடுக்கப்பட வேண்டும்.

குறிப்பாக பல்வேறு வகையான இராணுவ நடவடிக்கைளினால் மக்கள் தமது இருப்பிடங்களை விட்டு வெளியேறினர். அவர்கள் அவ் வாறு வெளியேற வேண்டிய ஒரு நிர்ப்பந்தத்தை கடந்தகால பொது சன ஐக்கிய முன்னணி ஆட்சியில் அரச படைகளால் ஏற்படுத்தப் பட்டன. இது தமிழ் மக்களின் பொருளாதாரத்தை அழித்து சின்னா பின்னமாக்கும் திட்டமிட்ட நடவடிக்கைளில் ஒன்றாகும். அவ்வாறு வெளியேறிய மக்களின் வாழ்விடங்கள் இன்று எளிதில் முன்னைய நிலைக்கு மாற்றிக் கொள்ள முடியாத வகையில் ஒரு பெரும் சுடு காடாகவே காட்சியளிக்கின்றது. வயல் நிலங்கள் தரிசு நிலங்களாக மாறி, புதர் மண்டிக் காணப்படுகின்றது. தமது சொந்த இருப்பிடங்கள் இதுதானா என்று சந்தேகத்துடனேயே பார்க்க வேண்டிய நிலையில் இடம்பெயர்ந்தோர் உள்ளனர். யாழ் மாவட்டத்தில் சிலரது வீடுகளில் படையினர் இன்னமும் முற்றுகையிட்டவாறு உள்ளனர். இந்த நிலை யில் பல குடும்பங்கள் தமது சொந்த இருப்பிடங்களில் குடியமர முடியாது அவதியுறுகின்றனர். இத்தகைய நடவடிக்கைளில் அரச அதிகாரிகள், அரசசார்பற்ற நிறுவனங்கள் கவனம் செலுத்தி அவர்களது வீடுகளில் அவர்களைக் குடியமர வைக்க வேண்டியது அவர்களது கடமைகளில் ஒன்றானது என்று கருதப்படுகிறது.

மீளக்குடியமரும் மக்களுக்கென மறுவாழ்வுத்திட்டம் ஒன்றை ஆரம்பிக்க வேண்டும் இத்திட்டத்திலிருந்து அவர்களது இயல்புநிலை மீளப்பெறப்பட வேண்டும். இராணுவ நடவடிக்கைகளினால் இடம் பெயர்ந்த மக்கள், 0 புள்ளியிலிருந்து தமது புதிய வாழ்வு நிலையை ஆரம்பிக்க வேண்டியவர்களாக இருக்கின்றனர். இதனைக் கருத்திற் கொண்டே அவர்களது மறுவாழ்வுத் திட்டம் அமைய வேண்டும். இடம் பெயர்ந்த மக்களின் பலநூற்றுக்கணக்கான குடும்பங்களில் சிறுவர்களின் கல்வி நிலை பாழடிக்கப்பட்டிருக்கின்றன. பலரது தொழில் வாய்ப்புக் களும் இழக்கப்பட்டிருக்கினறன. கொடும் போரினால் பல மாணவர்கள் இடம்பெயர்ந்து விரக்தியடைந்து கல்வியைச் சீரழித்துவிட்டனர். இது தமிழ் மக்களின் பெட்டகம் இக்கல்விச் சொத்தை இழந்த குடும்பங் களை இனங்கண்டு மீளவும் அவர்களது கல்வி வளர்ச்சிக்காக உதவ வேண்டும்.

இராணுவ நடவடிக்கைகளினால் இடம்பெயர்ந்தமக்கள் தமது இருப் பிடங்கள் மட்டுமல்ல தொழில் நிலையங்கள், சுயதொழில் முயற்சிகள் அனைத்தையும் இழந்துவிட்டனர். இவர்களது வாழ்வு இன்று இருள் சூழ்ந்திருக்கிறது. இவர்கள் பெரும் பொருளாதாரச் சிக்கலுக்குள் மூழ் கியிருக்கின்றனர்.

முல்லைத்தீவு – கிளிநொச்சி மாவட்டங்கள் வளரும் மாவட்டங்கள். இம்மாவட்டங்களின் வளர்ச்சி காலத்துக்குக் காலம் ஏற்பட்ட போரி னால் நலிவடைந்தது. கொக்காவில், கிளிநொச்சி, மாங்குளம் ஆனை யிறவு, ஒட்டுசுட்டான், முல்லைத்தீவு போன்ற இடங்களில் இராணுவ முகாம்கள் இருந்த காலப்பகுதியில் அங்கு தாக்குதல்கள் நடந்தபோது அப்பகுதிகள் அழிந்து போயிருப்பது இன்றும் சாட்சியங்களாக இருக்கின்றன. அன்று மக்களுக்கு ஏற்பட்ட பாதிப்புக்களுக்குக்கூட உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. அவை இன்றும் அடையாளச் சின்னங்களாகவே இருக்கின்றன. இத்தகைய பேரழிவின் மத்தியில் தான் இடம்பெயர்ந்த மக்கள் மீளக் குடியேறி வருகின்றனர். இவ்வாறு குடியேறும் மக்களுக்கு அரசினால் வழங்கப்படுகின்ற கொடுப்பனவுகள் எந்த வகையிலும் போதுமானதல்ல. இது மேலும் அதிகரிக்கப்பட வேண்டும். எனவே மீளக்குடியேறும் மக்களின் வாழ்வுநிலை ஒரு உறுதியான இயல்பு நிலைக்கு திரும்புவதற்கு அரச அதிகாரிகளின் முயற் சிகளுடன், இங்குள்ள அரசசார்பற்ற நிறுவனங்களின் முயற்சியும் அவசியமாகக் கருதப்படுகின்றது என வரும்.

– எம்.கே.யோகரட்ணம்

# ஊர்க்கோலம்

## சமாதானம் குறித்த சில அதிர்வு !

எந்த பேப்பரைப் பார்த்தாலும், எந்தச் செய்தியைக் கேட்டாலும் சமாதானத்திற்கான ஆதரவு... சமாதானத்திற்கான பிரார்த்தனை... சமாதானத்தை வேண்டி ஊர்வலம்... சமாதானத்திற்கான பாதயாத்திரை... என ஒரே சமாதானத்திற்குச் சாதகமான செயற்பாடுகளை வெளிப்படுத்துவதாகவே உள்ளன.

நல்லது. மக்களின் சமாதான வேட்கை, தேடல், மற்றும் சமாதான எதிர்பார்ப்பு முன்னெப்போதையும் விடவும் பல மடங்கு அதிகரித்ததாகவே உள்ளது. மகிழ் ரீச்சர் வகுப்பு மாணவர்களிடம் சமாதானம் பற்றி அவர்கள் மனதில் படும் சில வரிகளை எழுதுமாறு கேட்டதற்கு அந்த க.பொ.த சாதாரணம் படிக்கும் பிள்ளைகள் எழுதிய சிலவற்றை என்னிடம் சொன்னார்.

** சமமாக ஆதனத்தை பகிர்ந்தால் அதுவே சமாதானத்தின் முதல் படி*

** சண்டை பிடியுங்கள் அப்போ தான் சமாதானத்தின் அருமை தெரியும்*

** தானங்களில் சிறந்தது சமாதானம்*

** சமாதானம் மனிதனை சோம்பேறியாக்கி விடுகிறது.*

** சண்டையோ மனிதனை கோமாளியாக்கி விடுகிறது...*

** சமாதானத்தை சட்டபூர்வமாக்க நினைப்பது தான் மனிதனின் மிகப்பெரிய பலவீனம்*

எப்படியிருக்கிறது..? மாணவர்களின் எண்ண ஓட்டம் ! எழுதியவர்கள் எல்லோருமே அந்த வரிகள் தமது சொந்த வரிகள் தான் என்று உறுதி கூறினார்களாம்.

எனக்கு வியப்பாக இருந்தது. மகிழ் ரீச்சர் ஒரு மாணவி கவிதைபோன்று எழுதிய சில வரிகளையும் கூறினார்...

*சமாதானம் பற்றி*
*பேசிக் கொண்டிருக்கும்போதே*
*சர்ச்சை சண்டையாகியது*
*அதற்கு*
*சமாதானத்திற்கான சண்டையென*
*சித்தாந்த விளக்கமும் கூறப்பட்டது.*
*பின்னர் காலம் செல்ல...*
*சாம்பல் மேடொன்றின் மேல்*
*அடுத்த சண்டைக்கான-*
*சமாதானம் பற்றிய பேச்சுக்கள் ஆரம்பமாயின...*

இது எப்படி இருக்கிறது..? எங்கள் பிள்ளைகள் நன்றாக சிந்திக்கிறார்கள்தான். கடைசியாக மகிழ் ரீச்சர் சொன்ன விடயம்:– ஒரு மாணவன் கொப்பியில் எதனையும் எழுதியிருக்கவில்லை... ஏன் நீ எதுவும் எழுதவில்லை என்று கேட்டேன். அதற்கு அவன் சொன்ன பதில் என்னைத் திடுக்கிட வைத்தது. அவன் சொன்னது இதுதான்...

*உலகெங்கும் சமாதானம் பற்றிய ஒப்பந்தங்கள் மையால் எழுதப்படவில்லை... இரத்தத்தாலேயே எழுதப்படுகின்றது... இரத்தவரிகளை என்னால் எழுதமுடியாது...*

நான் திடுக்கிட்டுப் போனேன்... மகிழ் ரீச்சர் சொன்னார்... இதைச் சொன்ன அந்த மாணவனுக்கு ஒரு கை எறிகணைவீச்சில் இல்லாமல் போய்விட்டது... அதற்கு மேல் மகிழ் ரீச்சர் கூறியவை எனக்கு சரியாக மனதில் பதியவில்லை... மகிழ் ரீச்சர் யாழ்ப்பாணத்தில் ஒரு பெரிய பாடசாலையில் கடமை புரிகிறார்... அவ்வளவுதான்.

## ஒரு கவிஞனின் வருகை

அந்த கவிஞரை பல வருடங்களின் பின் சந்திக்க நேர்ந்தது. ஆள் தோற்றத்தில் பூரித்துப் பெருத்திருந்தார். இரு தசாப்தகால இடைவெளியில் அவரது இயல்பில் வெளிநாட்டு வாழ்க்கை எந்த மாற்றத்தையும் ஏற்படுத்தியதாகத் தெரியவில்லை.

இன்னமும் முன்னர் போன்றே மனிதம் பற்றியும் சமுதாயம் பற்றியும், உலகம் பற்றியும் பேசினார்... ஒரு காலத்தில் போராட்டம்... புரட்சி... சமதர்மம் என சிவப்புச் சித்தாந்தம் பேசி எழுதியவர். இப்போது அந்தக் கட்டத்தைக் கடந்து தனது நாடோடி வாழ்க்கை பற்றிக் கூறினார்.

அவரது —அப்பா—வைப் பற்றிக் கேட்டேன்.

அவர் ஒரு நிறைவான வாழ்வை வாழ்ந்து விட்டவர்... அப்பிடியே இருக்கிறார், என்றார். இப்படிக் கூறும் தனக்கு அந்த மாதிரியான நிறைவான வாழ்க்கை எப்போது கிடைக்கும் என்ற ஆதங்கம் அவர் குரலில் மிதக்கவே செய்தது.

அவர் தன் தலைமுடியை வளர்த்து ஒரு குட்டிக் குதிரைவால் போல் கட்டியிருந்தார்.

என்ன இது கோலம் என்றேன்.

எங்கட தாத்தா காலத்து நாகரீகத்தை மேல் நாட்டுக்காரனிடமிருந்து இப்போது கடன் வாங்கியுள்ளேன் என்றார் சிரிப்புடன்...

சரி எப்படியோ ஒரு கலாசாரப் புரட்சியொன்றை செய்து விட்டாய் என்று சொல்ல நினைத்தேன்... ஆனால் சொல்லவில்லை.

*'நெடுந்தீவு ஆச்சிக்கு'*

என அருமையான கவிதைமூலம் தன் இயல்பான உள் ஆன்மாவை வெளிப்படுத்திய அந்த கவிஞனின் பலவீனங்களை கொச்சைப்படுத்த கடந்த காலத்தை நினைவுபடுத்த மனம் விரும்பவேயில்லை..

அந்த மனிதனை விடவும் அவனுள் உறைந்திருந்து

மண்ணின் இயல்புடன் கூடிய வார்த்தைகளை

மனிதம் கலந்து கூறும் கவிஞனை என்னால் அடையாளம் காணக்கூடியதாக இருந்தது...

## சந்தேசம் தெரிதல்?!

புதுக்குடியிருப்பு சந்தையில் இருவர் பேசிக்கொண்டது...

* என்னப்பா அநியாயம் இது வாழைப்பழம் முந்தி உருளைக்கிழங்கு வித்த விலைக்கு ஏறீட்டுது. உருளைக்கிழங்கோ வாழைப்பழம் வித்த விலைக்கு இறங்கிட்டுது...!?

* அது தான் ஏற்றுமதி இறக்குமதி வியாபாரம் அப்படித்தான் விற்கும்...

* ஓமோம் கொழும்பு பேமன்றிலை கொம்பியூட்டரே போட்டு குவித்து வைத்து பாலைப்பழ வியாபாரி மாதிரி கூவி விற்கிறார்களே... எல்லாம் காலம்...

* காலமுமில்லை கத்தரிக்காயுமில்லை இதுதான் உலகமயமாதல் எண்டு சொல்லுறது...

* ........!!!

மற்றவர் மௌனத்துடன் தலையை விறாண்டத் தொடங்குகிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாதனையாளர்களும் சாதாரண பிறவிகளே.

கே. சி. பகவான்

உலகில் தினம் சூரியன் உதிக்கிறது. மெல்ல மெல்ல மேலெழும்பி உச்சிக்குப்போய் மெல்ல மெல்ல சாய்ந்து மறைகிறது. 12 மணி நேரத்தைக் கால வெள்ளம் கண்முன்னே அடித்துக் கொண்டுபோய் விடுகிறது. அந்த 12 மணிப் பகல் பொழுதைக் கழிப்பதில்தான் ஒவ்வொரு நபரும் தங்களுக்கென்று தனி எண்ணம் வைத்துக் கொண்டிருக்கிறார்கள். வாழ்க்கையில் எல்லோருமே திறமையான சாதனையாளர்கள் இல்லை. ஒவ்வொரு துறையிலும் அவர்களை எண்ணிவிட முடியும். ஆனால் இந்த திறமையான சாதனையாளர்கள் பிறவியிலேயே அப்படிப் பிறந்துவிட்டவர்களா என்ன? கிடையாது.

ஏனையோரைப் போலவே பிறந்து சாதனையாளர்களாக மாறுகிறார்கள். ஆனால் இந்த மாற்றம் அவர்களிடம் மட்டுமே நிகழ்வது ஏன்?

அந்த மாற்றம் தானாக நிகழ்வதா அல்லது அந்த மாற்றத்தை இவர்கள் நிகழ வைக்கிறார்களா? நிச்சயமாக இவர்கள்தான் அதை நிகழ வைக்கிறார்கள். அப்படி நிகழ வைப்பதில்தான் திறமையான இவர்களது சாதனையின் ரகசியம் அடங்கியிருக்கிறது. தங்கள் செயல்திறனை உச்சக்கட்டத்திற்கு உயர்த்திக் கொள்ளும் உன்னத மர்மம் புரிந்திருக்கிறது அவர்களுக்கு!

1967ம் ஆண்டில் மனிதனைச் சந்திரனில் இறக்க முடிவு எடுக்கப்பட்டபோது அப்போலோ 11 மிஷினின் லூனார் மாடியூல் சந்திரனில் இறங்க வேண்டிய காலத்தைத் தயாரிக்கும் பணி க்ரம்மேன் ஏரோஸ் பேஸ் குழுவிடம் ஒப்படைக்கப்பட்டது. அக்குழுவின் தலைமையில் ஆயிரக்கணக்கான சாதாரண ஆண், பெண் வேலையாளர்கள், ப்ராஜக்ட் மனேஜர்கள், காரியதரிசிகள், தொழில்நுட்ப வல்லுநர்கள் ஆகியோர், திடீரென்று ஏதோமந்திர சக்தியால் இயக்கப்பட்டவர்கள் போல் பணிபுரிய ஆரம்பித்தனர். சொல்லி வைத்தாற் போல அனைவரும் தங்கள் உச்சக்கட்ட செயல்திறனைப் பிரதிபலித்தார்கள். என்ன காரணம்?

இந்த உலகமும் நிலவும் தோன்றிய காலத்திலிருந்தே நிலவில் காலடி எடுத்து வைக்க வேண்டும் என்று மனிதன் கனவு காண ஆரம்பித்து விட்டான். ஆனால் இத்தனை நூற்றாண்டுகள் வெறும் கனவாகவே இருந்து வந்த ஒன்றிற்கு வடிவம் கொடுக்கிறோம் அந்தக் கனவை நனவாக்கப் போகிறோம் நாங்கள்! என்று அந்தத்திட்டத்தின் மனேஜர் அதற்குப் பதில் கூறியிருக்கிறார்.

ஒரு தனிமனிதன் கனவல்ல. மனித குலத்தின் கனவாய் இருந்து வந்த நிலவுப் பயணத்தை மெய்ப்படுத்த வேண்டும் என்ற தீவிர ஆவல் அந்தப் பணியாளர்களை ஒட்டு மொத்தமாய் உற்சாகப்படுத்தியிருக்கிறது. செயல்திறனின் உச்சத்திற்கு அவர்களை ஏவியிருக்கிறது.

ஏறத்தாழ 18 ஆண்டுகால ஆய்வில் தெரியவந்துள்ள உண்மை என்னவென்றால் இந்த அற்புத சாதனையாளர்கள் ஒன்றும் அமானுஷ்யப் பிறவிகள் அல்ல. வெற்றிகாண மகாபிரமாதமான திறமையோ வெற்றியைப் பதிக்கப் பிரத்தியேகமான சாகசத் திட்டங்களோ அவர்களிடம் இல்லை. ஆனால் ஒன்றே ஒன்று தங்களுக்குச் சாதகமாக இல்லாதவற்றை கூடத் தங்கள் எண்ணத்திற்கு ஏற்ப வளைத்து மாற்றிக்கொள்ளும் திறன் இருந்திருக்கிறது.

உதாரணத்திற்கு டென்னிஸில் பீட் சாம்பிராஸ் உலகின் முதன்மை ஆட்டக்காரராய் மதிக்கப்படுகிறார். இப்படிப் பட்டவர்கள் பந்தயத்தின் முதல் சுற்றில் ஆடும்போதே தாங்கள் இறுதி ஆட்டத்தில் ஆடுவதைக் காண்கிறீர்கள் அத்தோடு தாங்கள் எல்லா வித விளையாட்டுக்களிலும் வல்லவர்களாக இருக்க வேண்டும் என்று விரும்புவதில்லை. அவர்களின் சிதறாத கவனம் இறுதியான முடிவில் மட்டுமே இருக்கும். தாங்கள் இருக்கும் இடத்திற்கும் அடைய வேண்டிய இலக்கத்திற்கும் இடையே பெரும் இடைவெளி இருந்தாலும் அதனால் மனம் தளர்வதில்லை. அந்த இடைவெளியைக் கடக்க சின்னச் சின்ன கோல்களை அமைத்துக்கொள்வார்கள். அவற்றைத் தாண்டித் தாண்டி தங்கள் இலக்கை அடைந்து விடுவார்கள். பிரபல உளநூல் வல்லுநர் ஆப்பிரஹாம் மாஜ்லோவின் ஆய்வுப்படி ஒவ்வொரு மனிதனிடமும் உள்ளூர ஒரு தாகம் இருக்கிறது. தங்களிடம் பொதிந்து கிடக்கும் திறமைகளை வெளிப்படுத்திச் சாதனை புரிந்துவிட வேண்டும் என்று தவிக்கிறார்கள். ஒரு உதாரணம் பாருங்கள் 1953ம் ஆண்டில் வல்லுநர்கள் இடையே ஒரு அபிப்பிராயம் நிலவி வந்தது. அதாவது எவ்வளவுதான் திறமை ஓட்டக்காரராய் இருந்தாலும் நான்கு நிமிடங்களுக்குள்ளாக ஒரு மைல் தூரத்தை ஓடிக் கடப்பது இயலாத காரியம் என்பதே அது. ஆனால் பிரிட்டனில் பிரபல ஓட்ட வீரரான ரோகர் பானிஸ்டர் அந்த அபிப்பிராயத்தை உடைத்தெறிய வேண்டும்.

நான்கு நிமிடங்களுக்குள்ளாக ஒரு மைல் தூரத்தை ஓடிக்காட்ட வேண்டும் என்று துடித்தார். அதை எப்படியும் சாதித்துக் காட்டிவிட வேண்டும் என்று முயன்று 1954ம் ஆண்டு ஓடினார். அவர் எடுத்துக்கொண்ட நேரம் 3 நிமிடம் 59.4 நொடிகள்! நான்கு நிமிடங்களுக்குள் ஓடிக்காட்ட முடியும் என்று நிரூபித்துவிட்டார். அது வெறும் உலக சாதனை மட்டுமல்ல. தன்னையே அவர் வென்று கொண்ட சாதனையும் கூட! அவருக்குப் பின் பல உலக வீரர்கள் ஒரு மைல் தூரத்தை நான்கு நிமிடங்களுக்குள் ஓடிக் காண்பித்திருக்கிறார்கள். காரணம் அவர்களுக்கு முன்பு ஒருவர் அதைச் செய்துவிட முடியும் என்று செய்து காட்டி இருந்ததால்! ரோகர்பானிஸ்டருக்கு தன்னைவிட தன்னிடமிருந்த சுயநம்பிக்கையே அவருக்கு எடுத்த காரியத்தை திறம்பட முடிக்கும் ஆற்றலைத் தந்தது.

பாருங்களேன்... ஒரே இடத்திலுருந்துதான் தங்களுக்கு வேண்டிய பளிங்குக் கற்களை கைடோ என்பவரும் மைக்கேல் ஏஞ்லோவும் வாங்கினார்கள். ஆனால் கைடோ ஒரு ப்ளம்பர் அதனால் அவர் பெற்ற கற்களை வைத்து அவர் தொட்டிகளை உருவாக்கினர்.

மைக்கேல் ஏன்ஜெல்லோ அற்புதமான சிற்பங்களை உருவாக்கினார்! ஏனெனில் அடிப்படையில் அவர் ஒரு சிற்பி.

# உயிர்ப்பினை நோக்கிய பயணக் குறிப்புகள்

உண்மையானதும் நிரந்தரமானதுமான ஒரு சமாதானத்தின் பாதையில் நெருஞ்சி முட்களாக நெருடிக்கொண்டிருப்பது பயங்கரவாத தடைச்சட்டமும், அதன் கீழ் கைது செய்யப்பட்டவர்கள் இன்னமும் சிறையில் வாடிக் கொண்டிருப் பதும் ஆகும். தமிழர்கள் என்பதற்காக கைது செய்யப்பட்டு சித்திரவதை மூலம் அவர்களிடம் பெறப்பட்ட ஒப்புதல் வாக்குமூலத்தின் மூலமே அவர்களைத் தண டிக்கும் இச்சட்டமூலம் சிறிலங்காவில் மட்டுமே நீண்டகாலம் நிலவி வருகிறது.

ஐக்கிய நாடுகள் சபையின் அடிப்படை மனித உரிமைகள் சாசனத்தின் பாதுகாவலர்கள் என மார்தட்டிக்கொள்ளும் எந்த ஒரு உலக மனித உரிமைகள் நிறுவனமும் இதுவரை இந்த பயங்கர வாதத் தடைச்சட்டத்திற்கெதிராகவோ அன்றி இதன் செயற்பாட்டிற் கெதிராகவோ குரல் கொடுக்கவில்லை என்பது ஆச்சரியத்தையும் துயரத்தையும் ஒருங்கே அளிக்கின்ற ஒரு செயற்பாடாகும்.

1977 யூலை மாத்தில் ஜே.ஆர் ஜெயவர்த்தனா ஆறு மாதங்களில் பயங்கரவாதத்தை முடிவுக்குக் கொண்டு வருவது எனும் இலக்கில் பாராளுமன்றத்துக்கு கொண்டு வரப்பட்ட இச்சட்டமூலத்தை ஆத ரித்த தமிழர் விடுதலைக் கூட்டணியினரில் ஓரிருவர் இன்னும் பாராளுமன்றத்தில் அதே கட்சியின் உறுப்புரிமையில் வீற்றிருக்கின றனர்.

நள்ளிரவில் கடத்தப்பட்டு சித்திரவதைக்குட்படுத்தப்பட்ட இன்பம்,செல்வம் தொடங்கி, குருநகர்,பலாலி,ஆனையிறவு, வெலிக் கடை, பூசா, பிந்துனுவெவ என தொடர்ந்த பயங்கரவாத தடைச் சட்ட சித்திரவதைக்கூடங்களில் உலர்ந்து போகாத ஆயிரமாயிரம் மனிதர்களின் குருதிக் கறைகளை எப்படி நாம் மறந்துபோக முடி யும். தமிழர்கள் என்பதற்காகவே கேள்வி வரையறை யின்றி கைது செய்யவும் சித்திரவதை செய்யவும் தேவை எனில் வீதியில் படு கொலை செய்யவும், பெண்களை அவமானப்படுத்தவும், பாலியல் வல்லுறவுக்குட்படுத்தவும், தமிழ் மக்களை பயணங்களிலும், வீடுக ளிலும் அவமானப் படுத்தவும் வழிசமைத்த இந்த சட்ட மூலத்தை எதிர்த்துக் குரல்கொடுக்க எத்தனை பேர் முன்வந்தனர்?.

இப்போது மட்டுமென்ன வெளியில் வீசுகின்ற சுதந்திரக்காற்று தம்மை மட்டுமேன் தளுவிக்கொள்ள மறுகிக்கிறது எனும் தவிப்பில் நான்கு சுவர்களின் இருட்டுக்குள்ளே பெருமூச்சோடு வாழுகின்ற அப்பாவி அரசியல் கைதிகளின் நிலைப்பாடு ஏன் மனித மனங் களைத் தொடவில்லை எனும் கேள்வி எழுகிறது. கணவன், மனைவி இருவருமே வெவ்வேறு சிறைகளில் அடைக்கப்பட்டு அடைந்த துயரத்தின் குரல்களை செவிமடுத்த வன்னி ஆசிரியர்கள் குழு ஒன்று கிளிநொச்சி அழகியல் கலா மன்றத்தின் ஏற்பாட்டில் க.விஜய சேகரனின் நெறியாள்கையில் உருவான இவ்வரங்க முயற்சி மூலம் அவர்களின் மனஉணர்வுகளையாவது உலகிற்கு வெளிச்சமிடும் இலக்கோடு கலைப்பயணத்தை அரங்கேற்றுகை ஒன்றுடன் ஆரம்பித்தனர். கிளிநொச்சி, வவுனியா, திருகோண மலை, மட்டக்களப்பு, கொழும்பு ஆகிய இடங்களில் ஆற்றுகையை அரங்கேற்றியதுடன் திருகோணமலை, மட்டக்களப்பு ஆகிய இடங் களில் சிறையில் இருந்த சகோதரர்களையும் பார்வையிட்டனர். களுத்துறை, வெலிக்கடை ஆகிய இடங்களுக்கான அனுமதி மறுக்கப்பட்டது. குறைந்தது மூவராவது பார்வையிட முயன்ற போதும் அதற்குக்கூட அனுமதிக்கப்படவில்லை என்பதே இன் றைய சூழ்நிலையின் யதார்த்தமாகும்.

பல்வேறு இடங்களில் பார்வையாளர்களின் நெகிழ்ச்சியுற்ற மனங்கள் சிந்திய கண்ணீரோடு சங்கமித்த இவ்வரங்கம் கொழும் பில் தமிழ்ச் சங்கத்தில் அரங்கிடப் பட்டபோது வித்தியாசமான உணர்வு வெளிப்பாட்டையே சந்தித்துக் கொண்டது. எனினும் மனம் நெகிழ்ந்து போனவர்கள் அங்கு இல்லாமல் போகவில்லை. கொழும்பில் வாழும் தமிழ்தேசிய கூட்டமைப்பின் உறுப்பினர்கட்கு வழங்கப்பட்ட அழைப்பை எவருமே ஏற்றுக் கொள்ளவில்லை என் பதும் குறிப்பிடத்தக்கது. எனினும் ஓரிருவர் எமது அரங்க செயற் பாட்டிற்கு உதவியிருந்தனர். மாறிவரும் உலகச் சூழலில் அரங்கு ஒரு வலுவான தொடர்பூடகமில்லை எனப் பலர் வாதிட்டனர் எனி னும் பல்வேறு எழுச்சிகளை உலக மட்டத்தில் ஏற்படுத்துவதில் இன்னும் அரங்கின் பங்களிப்பு உள்ளதை மறுக்க முடியாது.

பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டவர்கள் விடுவிக் கப்படுவதும், அவர்களுக்கான புனர்வாழ்வு உறுதிப்படுத் தப்படுவதும், அவசியமாகின்றது மனித அவலங்களுக்கு அடிப்ப டையாக அமைந்ததும் தமிழ் மக்களும் இந்த நாட்டில் சமத்துவ முள்ள குடிமக்கள் என்பதை நிராகரித்ததுமான பயங்கரவாத தடைச்சட்டத்தை நீக்கக் கோருவது மான ஒரு மக்கள் எழுச்சி ஏற்படுமானால் அதுவே இந்த அரங்கின் வெற்றியாய் அமையும்.

– அன்ரன் அன்பழகன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுய நிர்ணய வியாக்கியானங்களும் இனவாத வீச்சுக்களும்

சமாதானச் சூழலில் இன்னொரு கனி பறிக்கப்பட்டிருக்கின்றது. நீண்டகாலமாகவே எதிர்பார்க்கப்பட்ட போர்க் கைதிகளின் பரிமாற்றமே இந்தக் கனி என்பது சொல்லாமலே ஓரளவு விளங்கிவிடும். சிறீலங்காவின் சிறைக் கூண்டுகளுக்குள் இன்னும் பல நூற்றுக் கணக்கான தமிழ் இளைஞர் யுவதிகள் வாடிக் கொண்டிருக்கின்ற போதிலும் இந்த போர்க் கைதிகளின் பரிமாற்றம் அவர்களின் விடுதலைக்கும் ஒரு ஒளிக் கீற்றை காட்டும் என்ற நம்பிக்கை எழாமலில்லை. தாய்லாந்து பேச்சுக்களின் பின்னர் நடைபெற்ற முக்கியமான நிகழ்வு இது என்பதால் ஊடகத்துறையின் கவனத்தையும் இந்தப் பரிமாற்ற நிகழ்வு பெற்றுக் கொண்டிருக்கிறது. இவ்வாறான நிகழ்வுகள் சிறீலங்காவில் பல தசாப்தங்களாக தேங்கிக் கிடந்து நாற்றம் வீசிக் கொண்டிருக்கும் அரசியல் குப்பைகளை ஓரளவு அகற்றி இலங்கைத் தீவினை மீண்டும் ஒரு மரகத புரியாக்க உதவி செய்யுமா என்ற ஆதங்கம் ஆங்காங்கே எழுந்தாலும் இப்போதைய சமாதான இலக்கிற்காக சிறீலங்கா என்ன நிகழ்ச்சி நிரலை வைத்திருக்கின்றது என்பதில்தான் அந்த ஆதங்கம் நிதர்சனமாவதும் பொய்த்துப் போவதும் தங்கியிருக்கின்றது. தாய்லாந்துப் பேச்சுக்களின் போது தமிழர்தாயகம் வெளிப்படுத்திய சில அபிலாஷைகள் சிங்கள தேசத்திற்கு இப்பொழுது ஒரு இனவாத வியாக்கின கருதுகோளாகி விட்ட நிலையில் சமாதானம் என்பது இலேசான விடயம் அல்ல என்பதை மிக தெளிவாகவே தெரிவிக்கின்றது. தமிழர் தாயகம் வெளிப்படுத்திய சுயநிர்ணய உரிமை என்பது சிங்கள இனவாத அரசியற் களத்தில் சரியான அர்த்தம் காணமுடியாத ஒரு அவல நிலையும் ஏற்பட்டிருக்கின்றது. பல்லினத் தேசியங்கள் கொண்ட ஒரு நாட்டில் ஒரு இனத்தை மற்றொரு இனம் மேலாதிக்கம் செய்வதை சுயநிர்ணய உரிமைச் சித்தாந்தம் தடை செய்கின்றது. இவ்வாறான மேலாதிக்க நிலை ஏற்படுமானால் நசுக்கப்பட்ட இனம் பிரிந்து செயற்படுவதற்குரிய உரிமையை சுயநிர்ணய சித்தாந்தம் வழங்கிக் கொள்ளும். இது தான் யதார்த்த நிலை.

தமிழ்மக்களின்விடுதலைப் போராட்ட பாதையை உற்று நோக்கினால் ஆரம்பத்தில் அங்கு பிரிவினை கேட்கப்படவில்லை. உரிமைகள் தான் அங்கு கேட்டகப்பட்டன. இலங்கைத் தீவில் சிங்களவர்கள் என்னும் மானிடர்கள் அனுபவிக்கும்



உரிமைகளைத்தான் தமிழ் மானிடர்களும் அனுபவிக்கக் கேட்டுக் கொண்டார்கள். ஆனால் கிடைத்தது என்னவோ அடக்கு முறைகளும் அடாவடித் தனங்களும் தான். தமிழ் மக்கள் கேட்ட உரிமை சிங்கள தேசத்தினால் அரசியல் ரீதியாக நோக்கப்படாது கொடூரமான இராணுவ முறைமையினால் நசுக்கப்பட இலங்கைத் தீவே யுத்த பூமியானது, இது வெளிப்படை. ஆனால் துரதிஷ்டவசமாக சிங்கள மக்கள் மத்தியில் குறிப்பாக புத்தி ஜீவிகள் எனக் கருதப்படுவோர் மத்தியில் இந்த சிறிய உண்மை இன்னும் விளங்கிக் கொள்ளப்படவில்லை அல்லது விளங்கிக் கொள்ளாதவர்கள் போலக் காட்டிக் கொள்கிறார்கள். இந்த நிலமையை கடந்த வாரம் சிறீலங்காவின் ராவைய செய்தி இதழின் பிரதம ஆசிரியர் தனது நூல் ஒன்றில் சுட்டிக்காட்டியுள்ளார். சிறீலங்காவின் நீதித்துறையில் நடைபெற்ற அவலங்களை அந்த நூல் அட்டவணைப்படுத்தியிருக்கின்றது. தமிழ் மக்கள் கேட்டுள்ள உரிமைகளை வழங்காது அவர்களை கொடூரமாக நடத்திய அரசுகளும் அவற்றின் தலைவர்களும் நீதித் துறையின் பாரபட்சத் தன்மையுமே தமிழ் மக்களை ஆயுதப் போராட்டம் ஒன்றிற்கு இட்டுச்செல்ல நிர்ப்பந்தித்தது என்ற உண்மையை அவர் அந் நூலில் வெளிப்படுத்தியிருக்கிறார். ஆனால் விக்டர் ஐவனின் இந்தக் கருத்தினை எத்தனை சிங்களவர்கள் ஏற்றுக் கொள்வார்கள் என்பது ஆண்டவனுக்கே வெளிச்சம் ஒரு சமுதாயத்தில் மனித நீதியும் அரசியல் நீதியும் இன சமத்துவுமும் இல்லா விடில் அந்த சமுதாயத்திற்கு நிம்மதி என்ற பதம் அகராதியில் மட்டுமே கண்டு கொள்ளக் கூடியதாக இருக்கும். இந்த வகையில் இலங்கைத் தீவின் நிலமையையும் இவ்வாறாக தனது நூலில் ஐவன் விளக்கியிருக்கிறார். ஆனால் இவரது இந்த நூல் வெளியாகிய அதே நேரத்தில் சிறீலங்கா அரசியல் களத்தில் காணப்படும் நிலையை நோக்கும் பொழுது அரசியல் நீதியும் இன சமத்துவமும் எப்போதுதான் திரும்பிக் கொள்ளுமோ என்ற ஆதங்கம்தான் எழுகிறது.

புதிய ரணில் அரசு பதவி ஏற்றதன் பின்னர் மேற்கொண்டுவரும் சமாதானச் செயற்பாடுகளுக்கு சந்திரிகா குழாம் வேட்டுவைக்க செய்துவரும் கைங்கரியங்களே இதற்கு ஒரு எடுத்துக்காட்டு. இந்த அரசினை சமாதானச் செயற்பாட்டுத் திட்டங்களை செய்ய விடாமல் செய்வதற்கு பல வியூகங்கள் வகுக்கப்படுகின்றன. பாராளுமன்றத்தை கலைத்துவிட அது இயலாத பட்சத்தில் இடைநிறுத்திவிட சந்திரிகா தரப்பு கங்கணம்கட்டி நிற்கிறது. மறுதலையாக ரணில் அரசும் 19வது அரசியல் அமைப்பு சட்டத் திருத்தத்தின் மூலமாக சந்திரிகாவை முடக்கிவிட முயலுகிறது. நடாளுமன்றத்தில் இதற்கான திருத்தச் சட்டமும் ஏற்கெனவே சமர்ப்பிக்கப்பட்டு விட்டதால் அடுத்து என்ன நிகழும் என்ற கேள்விக்கு சிறீலங்காவின் உயர் நீதிமன்றத்தின் பக்கமே இப்போதைக்கு காத்திருக்கின்றது. ரணில் தரப்பால் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட இந்த திருத்தச் சட்ட மூலத்திற்கு எதிராக ஏறக்குறைய முப்பத்திஇரண்டு மனுக்கள் உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டிருப்பதால் இதற்கான விசாரணையை நீதிமன்றம் ஆரம்பித்திருக்கின்றது. நீதி மன்றத்தின் முடிவையடுத்தே அடுத்த காட்சி மாற்றம் நிகழலாம். குறிப்பாக சந்திரிகாவின் நகர்வு நீதிமன்ற தீர்ப்பின் பின்னர் மும்முரப் படலாம். குறிப்பாக தாக்கல் செய்யப்பட்ட மனுக்களுக்கு எதிராக தீர்ப்பு வருமானால் சந்திரிகா தனது



இறுதி அஸ்திரத்தை கையில் எடுக்கக் கூடும்.

பத்தொன்பதாவது திருத்தச் சட்டத்தின் மூலம் நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலத்துடன் நிறைவேற்றப்படுவது மாத்திரமல்ல அது சர்வசன வாக்கெடுப்பு மூலம் மக்களின் அங்கீகாரத்தை பெறவேண்டும் என்பதே நீதிமன்றத்தில் மனுப் போட்டவர்களின் வாதம். இந்த வாதத்திற்கு நீதி மன்றம் தரப் போகும் பதிலில் இன்னொரு சிறீலங்காவின் அரசியல் நிலை மாற்றம் தங்கியிருக்கின்றது. கொழும்பில் மையங் கொண்டுள்ள இந்த அதிகாரப் போட்டி என்னவோ சமாதானச் செயற்பாடுகளுக்கு இடையூறினை அல்லது முட்டுக்கட்டையை ஏற்படுத்திக் கொள்வது நிச்சயமான ஒன்று. சமாதானத்திற்கு எதிரானவர்களின் அவாவும் இதுவே.

என்னதான் சந்திரிகா ஆரம்பிக்கப் பட்டுள்ள சமாதானப் பேச்சுக்களுக்கு தானொருபோதும் இடையூறாக இருக்கப் போவதில்லையென வெளிப் பூச்சுக்கு கூறிக் கொண்டாலும் நோக்கம் என்னவோ சமாதானத்தின் குரவல்வளையை நசித்து கொலைசெய்து விடுவதுதான். குறிப்பாக சந்திரிகாவின் கைத்தடியாகிய கதிர்காமரின் கூற்று ஒன்றே அவர்களின் திட்டத்தை புலப்படுத்துகின்றது. சமாதானப் பேச்சுக்கள் நீண்டு செல்லப் போவதை தாம் அனுமதிக்கப் போவதில்லை எனத் தெரிவித்திருப்பதுடன் இப் பேச்சுக்களுக்கான எல்லையாக காலம் ஒன்றையும் நிர்ணயித்திருப்பது குறிப்பிடத்தக்கது. சமாதானப் பேச்சுக்களுக்கு அத்திவாரக் கிடங்கே இப்பொழுது வெட்டப்பட்டிருக்கும் நிலையில் இந்த அரைவேக்காடுகள் அக் கட்டிடத்தை நிர்மாணிப்பதிலுள்ள இடர்ப்பாடுகளை புரிந்து கொள்ளாமல் காலக்கெடு விதிக்கின்றார்கள். ஒருவேளை இவர்களின் அரசியல் அஸ்தமனத்திற்கான விதி இந்த அத்திவாரக் கிடங்கினுள்தான் காத்திருக்கின்றதோ யார் அறிவார்.

டென்மார்க் வாழ் அனைத்து தமிழ் மக்களதும் நம்பிக்கையைப் பெற்ற ஒரேயொரு பிரயாண முகவர் நனா ரவல்ஸ்.

Srilankan Airlines இன் டென்மார்க்கின் ஏக விற்பனையாளர்கள் நாமே.

தொடர்புகளுக்கு: நனா ரவல்ஸ்

| DENMARK | LONDON | SRI LANKA | INDIA |
|---|---|---|---|
| Mr.Neilwashington | Mr.S.Thasan | Mr.S.Rajan | Mr.Kevin joseph |
| Nanna Rejser | Nanna Travels Ltd | Nanna travels Ltd | Nanna travels |
| Fredensgade 1 | 14 pinglestone close | S-82 Bristol Street | no. 71 Kasiestate |
| 7400 Herning | Westdrayton, Middx | Colombo-1 | Ashokngar, madras 83 |
| T.P. 0045-97 21 41 47 | UB7 0DL, England | Srilanka | T.p.0091 44 48 96 325 |
| Mobil. 27 44 36 06 | T.p: 0044-2088979694 | T.P.0094-74 71 28 35 | Mobil -0091 98 41 08 98 35 |
| Fax 00 45 97 21 42 47 | Mobil-0044-7789268979 | Fax-00 94-74 71 49 90 | fax-0091 44 48 93 991 |
| nannatravels@mail.dk | nannatravels@hotmail.com | nannatravels@vsnl.com | nannatravels@vsln.com |

Denmark

எமது தற்போதைய விலை விபரங்கள்

| Airlanka | | Emirates | |
|---|---|---|---|
| Billund-Colombo- | 5555+Tax | Billund-Colombo- | 6100+Tax |
| Copenhagen-Colombo- | 5055+Tax | | |
| Billund-Madras- | 5620+Tax | | |
| Copenhagen-Madras- | 5240+Tax | | |

| Lufthansa | |
|---|---|
| Billund-Madras- | 6300+Tax |
| Billund-Singapore - | 5250+Tax |

Pub D Nanna Travels NANNA REJSER

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளக்குவைத்த குளத்தில் நடந்த கைதிகள் பரிமாற்றம்

## சமாதான முயற்சியில் இன்னொரு மைல்கல்

சிறீலங்கா அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான போர்க் கைதிகள் பரிமாற்றம் கடந்த 28ம் திகதி சனிக்கிழமை காலை வவுனியாவில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள விளக்குவைத்தகுளம் பகுதியில் நடைபெற்றுள்ளது. விடுதலைப் புலிகளால் தடுத்து வைக்கப்பட்டிருந்த கப்டன் பொயாகொட உட்பட ஏழு படையினர் விடுவிக்கப்பட்டபோது, தென்பகுதிச் சிறைகளில் தடுத்துவைக்கப்பட்டிருந்த 11 போராளிகள் விடுவிக்கப்பட்டனர்.

சமாதானப் பேச்சுகளுக்கு முன்னர் இக்கைதிகள் பரிமாற்றம் இடம்பெற ஏற்பாடாகியிருந்த போதிலும் சட்டச் சிக்கல்களை காரணம்காட்டி விடுதலைப் புலிகள் தரப்பில் விடுதலை செய்யப்பட வேண்டியவர்கள் தொடர்பில் சிறீலங்கா அரசு இழுத்தடித்து வந்ததால் இக்கைதிகள் பரிமாற்றம் தாமதமாகியது. இந்நிலையில் கடந்த சனிக்கிழமை ஓமந்தைக்கு அருகிலுள்ள விடுதலைப் புலிகளின் சோதனைச் சாவடி அமைந்துள்ள விளக்குவைத்தகுளம் பகுதியில் அமைக்கப்பட்ட விசேட பந்தலில் இந்தக் கைதிகள் பரிமாற்றம் மிகச் சிறப்பாக நடைபெற்றது. இந்நிகழ்வில் இருதரப்புக் கைதிகளின் பெற்றோரும் உறவினர்களும் பொதுமக்களும் கலந்துகொண்டனர்.

காலை 9 மணியளவில் மூன்று உலங்குவானூர்திகள் ஓமந்தைப் பகுதியில் தரையிறங்கின. ஒன்றில் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பெர்னாண்டோ தலைமையிலான குழுவினரும் இரண்டாவதில் 30ற்கும் மேற்பட்ட செய்தியாளர்கள் மற்றும் படப்பிடிப்பாளர்களும் மூன்றாவதில் விடுதலை செய்யப்பட்ட 11 தமிழ்க் கைதிகளும் கொண்டுவரப்பட்டனர். ஓமந்தைக்குக் கொண்டுவரப்பட்ட தமிழ்க் கைதிகளை ஓமந்தை இராணுவ சோதனை நிலையத்தில் வைத்துப் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பெர்னாண்டோ இராணுவத் தளபதி லெப்.ஜெனரல் லயனல் பலகல, கடற்படைத் தளபதி அட்மிரல் தயாசந்தகிரி, விமானப்படைத் தளபதியின் சார்பில் கலந்துகொண்ட விமானப்படை உயரதிகாரி ஒருவர் உட்பட பெருமளவு முப்படையினரும் வரவேற்றனர். இதன் பின்னர் 11 பேரும் கைதிகள் பரிமாற்றம் நடைபெற்ற பகுதிக்குப் பலத்த பாதுகாப்புடன் இராணுவ வாகனங்களில் ஏற்றிச் செல்லப்பட்டனர்.

இதேநேரம் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியின் தொடக்கத்தில் இருந்து நிகழ்வு நடைபெற்ற பகுதிவரை தமிழீழக் காவல்துறையினரும் ஆயுதம் தாங்கிய போராளிகளும் பாதுகாப்பு நடவடிக்கையில் முழுமையாக ஈடுபட்டிருந்தனர். இதேவேளை, கைதிகள் பரிமாற்றத்திற்காக 7 படையினரும் கிளிநொச்சிப் பகுதியில் இருந்து காலை பலத்த பாதுகாப்புடன் நிகழ்வு நடைபெற்ற பகுதிக்கு அழைத்து வரப்பட்டனர்.

இந்த நிகழ்வில் கலந்து கொள்வதற்காகப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியிலும் இராணுவத் தளபதி கடற்படைத் தளபதி விமானப் படைத் தளபதியின் சிறப்புப் பிரதிநித மறறும் பொலிஸ் உயரதிகாரிகள் உட்பட பெருமளவு படையதிகாரிகளும் பொலிஸா ரும் தங்கள் வாகனங்களில் சென் றிருந்தனர். போர்க்கைதிகள் பரிமாற்ற நிகழ்வு காலை 10.40 மணியளவில் வவு னியா அரசாங்க அதிபர் கே.கணேஸ் தலைமையில் ஆரம்பமானது. இந்த நிகழ்வு பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் இராணுவத் தளபதி, கடற்படைத் தளபதி விமானப்படைத் தளபதியின் சிறப்புப் பிரதிநிதி இரானுவப் பேச்சாளர் பிரிகேடியர் சனத் கருணாரட்ண உள்துறை அமைச்சின் செயலாளர் என்.எம்.ஜுனைட் உட்பட படை அதிகாரிகளும் வவுனியா வெகுஜன அமைப்புகளின் ஒன்றியத் தலைவர் சதாசிவம் குலதேவராஜாவும் அரசாங்க அதிகாரிகளும் கலந்துகொண்டனர்.

விடுதலைப் புலிகள் தரப்பில் வடபிராந்திய கட்டளைத் தளபதி கேணல் தீபன், கிட்டு பீரங்கிப் படையணித் தளபதி கேணல் பானு, கேணல் ஜெயம், கேணல் சசிகுமார், மாஸ்டர் சாள்ஸ் அன்ரனி படைப்பிரிவின் சிறப்புத் தளபதி வீரமணி மற்றும் முகுந்தன், ஜெரி ஆகியோருடன் அரசியல் துறையைச் சேர்ந்த தங்கன், புலித்தேவன், விசு, யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி வவுனியா மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் எழிலன், தயாநிதி மாஸ்டர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்தக் கைதிகள் பரிமாற்றத்தில் நடுநிலையாளர்களாகச் செயற்பட்ட சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி மற்றும் வவுனியாவுக்கான செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதிகளும் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர்.

இருதரப்பு கைதிகளினதும் பெயர் விபரப் பட்டியல் சரிபார்க்கப்பட்டு சர்வதேச செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதிகளிடம் ஒப்படைக்கப்பட்டது. இந்தப் பட்டியல் சரிபார்க்கப்பட்டதும் பட்டியலில் அரசு தரப்பில் ஒஸ்ரின் பெர்னாண்டோவும் விடுதலைப் புலிகள் தரப்பில் கேணல் தீபனும் கையெழுத்திட்டனர். இதன் பின்னர் முற்பகல் 11.25 மணியளவில் இந்தப் பட்டியல்கள் செஞ்சிலுவைச் சங்கத்தினரிடம் ஒப்படைக்கப்பட்டன. இதைத் தொடர்ந்து சரியாக 11.30 மணியளவில் கைதிகள் பரிமாற்றம் நடைபெற்றது. முதலில் புலிகள் தரப்பில் இருந்த கைதிகள் அரசாங்கத் தரப்பினரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

விடுதலைப் புலிகளால் விடுவிக்கப்பட்ட ஏழு கைதிகளில் மூவர் கடற்படையைச் சேர்ந்தவர்கள். நால்வர் இராணுவத்தைச் சேர்ந்தவர்கள். முதலில் கடற்படையைச் சேர்ந்த மூவரும் சிறீலங்கா கடற்படைத் தளபதி அட்மிரல தயாசந்தகிரியிடம் ஒப்படைக்கப்பட்டனர். இதில் முதலாவதாக 1994 இல் வடபகுதிக் கடற்பரப்பில் கடற்புலிகளால் தகர்த்தழிக்கப்பட்ட 'சாகரவர்த்தனா' கப்பலின் கப்டன் அஜித் போயாகொட ஒப்படைக்கப்பட்டார். இதன் பின்னர் நான்கு இராணுவத்தினரும் இராணுவத் தளபதி லெப்.ஜெனரல் பலகலவிடம் ஒப்படைக்கப்பட்டனர். இதன்போது விடுவிக்கப்பட்டவர்களின் பெயர்கள் வாசிக்கப்பட்டு அவர்கள் ஒவ்வொருவரையும் படைத்தளபதிகள் பொறுப்பேற்றுக் கொண்டனர். விடுவிக்கப்பட்ட 11 போராளிகளையும் கேணல் ஜெயமும் கேணல் தீபனும் பொறுப்பேற்றுக்கொண்டனர். இவர்களின் பெயர் விபரங்கள் வாசிக்கப்பட்டு இவர்கள் புலிகளின் தளபதிகளிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

### விடுதலையான போராளிகள்

01. தம்பையா தயாபரன் (இராமநாதபுரம், கிளிநொச்சி)
02. கிருஷ்ணபிள்ளை ஆனந்தரூபன் (இராமநாதபுரம கிளிநொச்சி)
03. பி.தங்கராசா (வட்டக்கச்சி கிளிநொச்சி)
04. ஜஸ்டின் பெர்னாண்டோ கெனடி (மன்னார்)
05. கந்தசாமி லிங்கேஸ்வரன் (யாழ்ப்பாணம்)
06. சி.விக்கினேஸ்வரன் (யாழ்ப்பாணம்)
07. செல்லத்துரை பாஸ்கரன் (மட்டக்களப்பு)
08. சுப்பிரமணியம் சந்திரமோகன் (மட்டக்களப்பு)
09. பாலசுந்தரம் கோபாலகிருஷ்ணன் (மட்டக்களப்பு)
10. நல்லதம்பி கேதீஸ்வரன் (பூநகரி)
11. சபாபதி சந்திரமோகன் (சிலாபம்)

## சமாதான முயற்சிகளில் அதிக வேகம் கூடாது!

### கப்டன் பொயாகொட கூறுகிறார்

கண்டிவீதி திறக்கப்பட்ட பின், கட்டுப்பாடு ஏதும் இன்றி வாகனங்கள் வேகமாக ஓடுவதால் அடிக்கடி விபத்துக்கள் ஏற்படுகின்றன. இதுபோன்று சமாதான முயற்சிகளையும் கட்டுபபாடின்றி வேகமாக நகர்த்தக்கூடாது. ஆறுதலாக தீர ஆராய்ந்தே முயற்சிகளை முன்னெடுக்க வேண்டும். இதுவே விடுதலைப் புலிகளின் விருப்பமும் கூட. இவ்வாறு விடுதலையான சாகரவர்த்தன கப்பலின் கப்டன் அஜித் போயாகொட அலரிமாளிகையில் பிரதமரைச் சந்தித்து உரையாடியபோது இவ்வாறு கூறியுள்ளார்.

பேச்சு முயற்சிகளை மிகவும் ஆறுதலாக முன்னெடுக்கவேண்டும் என்றே புலிகள் எதிர்பார்க்கின்றார்கள். சமாதானம் அவசியம் என்பதைப் புலிகள் மட்டுமல்ல சகலதரப்பினரும் ஏற்றுள்ளனர். கைதான காலம் முதல் புலிகள் எங்களை நல்ல முறையில் பராமரித்தனர். சித்திரவதை செயயவில்லை. அவர்கள் எம்முடன் இணைந்து பட்மின்ரன் விளையாடுவார்கள். நல்ல முறையில் எம்மீது அன்பு காட்டி நடத்தினார்கள்.

நான் விடுதலை பெறுவேன் என்று கனவிலும் நினைக்கவில்லை. பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் புலிகளின் தலைவர் பிரபாகரனும்தான் எமது விடுதலைக்கு வழி சமைத்தார்கள். அவர்கள் இருவரையும் என் வாழ்வில் மறக்கமுடியாது என்று அங்கு அவர் மேலும் கூறினார். மன்னாரில் சாகரவர்த்தன என்ற கடற்படைக் கப்பல் 94ம் ஆண்டு தாக்கப்பட்டபோது கப்டன் போயாகொட புலிகளால் சிறைப்பிடிக்கப்பட்டிருந்தார் என்பது தெரிந்ததே.



## இறுதி நேரத்தில் நடந்த கொலை முயற்சி !

சிறைகளில் பல தடவைகள் எம்மீது கொலை முயற்சிகள் மேற்கொளளப்பட்டன. நாம் சாதுரியமாக நடந்து கொண்டு பிரச்சினைகளை தவிர்த்து வந்ததால் இவ்வாறான கொலை முயற்சிகளிலிருந்து தப்பித்துக் கொண்டோம் என விடுவிக்கப்பட்ட போராளிகள் சிலர் தெரிவித்துள்ளனர். இவர்களில் ஒருவர் இது பற்றிக்கூறுகையில், கடைசிநேரத்தில் நாமிருந்த சிறையில் இரண்டு மூன்று தடவை கொலை முயற்சிகள் நடைபெற்றன. அந்தச் சிறையில் நாங்களிருவர் இருந்தோம். எங்களை அதிகாலை 6 மணியளவில் படுகொலை செய்வதற்காக இரவோடிரவாக திட்டம் தீட்டப்பட்டிருந்தது. ஒருவாறு இதனை நாம் அறிந்து கொண்டதால் இது பற்றி அதிகாரிகளுக்கு முறையிட்ட அதேநேரம் நிலைமையை உணர்ந்து நாமும் இதனைப் பெரிதுபடுத்தவில்லை. தற்போதைய சமாதானப் பேச்சுகளின் முன்னேற்றம் குறித்து சநதோஷமடைகிறோம். ஆனால் இனிமேல் அது எவ்வாறிருக்குமெனக் கூறமுடியாது. இன்றைய தினம் போர்க்கைதிகள் பரிமாற்றத்தின் மூலம் நாம் விடுதலை செய்யபபட்டதையொட்டி எமது குடும்பத்தவர்கள் பெருமகிழ்ச்சியடைந்தாலும் தென்பகுதிச்சிறைகளில் பல நூற்றுக்கணக்கான எமது சகோதர சகோதரிகள் பலத்த இன்னல்களுக்கு மத்தியில் பலவருடங்களாக தடுத்துவைக்கப்பட்டுள்ளதால் அவர்கள் விடுதலை செய்யப்படும் வரை எமக்கு சந்தோசமில்லை. நாங்கள் பிடிபட்ட போது ஆரம்பத்தில் மிக மோசமான சித்திரவதைகளை அனுபவித்தோம். சிறைகளில் நாம் சந்தோஷமாக இருக்கவில்லை. சிங்களக் கைதிகளும் சிறைக்காவலர்களும் எங்களை அடிமைகள் போன்றே நடத்தினர். சமாதான முயற்சிகள் தொடருமா அல்லது யுத்தம் மீண்டும் தொடங்குமா என்பதெல்லாம் அரசு இனிமேல் மேற்கொள்ளும் நடவடிக்கைகளிலேயே தங்கியுள்ளது. புலிகள் தங்கள் வசமிருந்த அனைத்துப் படையினரையும் விடுதலை செய்துவிட்டதால் இனிமேல் போர்க்கைதிகள் பரிமாற்றம் நடைபெறாது. இதனால் தென்பகுதிச்சிறைகளில் வாடும் பல நூற்றுக்கணக்கான தமிழ் கைதிகளின் விடுதலை குறித்து இனிமேல் எவருமே அக்கறைபபடாத சூழ்நிலையொன்று தோன்றியுள்ளது என்று பத்திரிகையாளர்களுடனான உரையாடலின் போது விடுவிக்கப்பட்ட போராளிகள் தெரிவித்துள்ளனர்.

## கைதிகள் பரிமாற்றம் இனி இல்லை

### ரணில் தெரிவிப்பு

விடுதலையான படையினரை சனிக்கிழமை மாலை அலரி மாளிகையில் சிறீலங்காவின் பிரதமர் ரணில் விக்கரமசிங்க சந்தித்து உரையாடினார். இதன்போது தொடர்ந்து கைதிகள் பரிமாற்றம் இடம்பெறுமா என்று கேட்கப்பட்டபோது யுத்தக் கைதிகள் எவரும் தம்மிடம் இல்லை என்று புலிகள் தெரிவித்துள்ளனர். எனவே, கைதிகள் பரிமாற்றம் இனி இடம்பெற வாய்ப்பு இல்லை என்று தெரிவித்தார். இதன்போது தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் கைதிகள் குறித்துக் கேட்டபோது, தடுத்துவைக்கப்பட்டுள்ள தமிழ்க் கைதிகள் தொடர்பான கோவைகளை சட்டமா அதிபர் ஆராய்ந்து வருகிறார். நீதிமன்றங்கள் மூலம் உரிய நடவடிக்கைகளை எடுத்துவருகிறார். விரைவில் கைதிகள் கட்டங் கட்டமாக விடுவிக்கப்படுவர் என்று ரணில் தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புத்திசிகாமணி பதில்கள்

* மிக நீண்ட காலமாக விடுதலைப்புலிகளிடம் கைதியாக இருந்த கப்டன் பொயகொடவும் தற்போது போர் கைதிகள் பரிமாற்றத்தில் விடுதலை செய்யப்பட்டுள்ளார். இவர் மீண்டும் படையில் இணைந்து கொள்வாரா?

*சந்திரமோகன் - சுட்காட், ஜேர்மனி.*

➲ யுத்தத்திற்கு இதுவரை வழிகொடுத்து உதவினோம். இனி நாம் சமாதானத்திற்கான வழியைத் திறந்துவைப்போம். நிகழ்வில் கப்டன் பொயகொட கூறியுள்ளார். இனி அவரின் பயணத்தைக் காலம்தான் தீர்மானிக்கவேண்டும்.

✠✠✠

* பல்வேறு நாட்டுத் தூதுவர்களும், உலக அமைப்புகள் பலவற்றின் பிரதிநிதிகளும் வன்னி சென்று விடுதலைப் புலிகளின் பிரிதிநிதிகளுடன் கலந்துரையாடுகிறார்கள். ஆனால் எமது அயல் நாடான இந்தியா இன்னும் மௌனமாக இருப்பது ஏன்?

*அராலியூர் கலைமகள் - பாரிஸ், பிரான்ஸ்.*

➲ உண்மைதான். புலிகளுக்கும், அரசுக்கும் இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திட்டவுடனேயே அன்றைய இந்தியத் தூதுவர் கோபால கிருஸ்ணகாந்தி திருமலைக்கு ஓடோடிச் சென்று எண்ணெய்க் குதங்களைக் குத்தகைக்கு எடுப்பதற்குக் காட்டிய துரித ஆர்வம், ஈழத்தமிழ் மக்களுக்கு சமாதான வழியில் ஒரு விடிவு ஏற்படவேண்டும் என்பதில் காட்டவேயில்லை. இந்தியாவைப் பொறுத்தவரை வரலாற்று ரீதியாகவும், பிராந்திய ரீதியாகவும் ஈழத்தமிழர் பிரச்சினையைத் தீர்த்து வைப்பதற்கு உதவவேண்டிய நியாயமான தேவை இருந்த போதிலும் ஈழத் தமிழர் சார்பில் இந்தியாவுடன் கடந்தகால வரலாற்றுத் தவறுகள்தான் ஓரத்திலே நின்று எமது பிரச்சினையைப் பார்க்க வைத்துள்ளது. ஆனாலும் ஈழத் தமிழரின் விடிவுக்குக் கரம்கொடுத்துதவ இந்தியாவுக்கு இன்னும் காலம் கடந்துவிடவில்லை என்றே நினைக்கிறேன்.

✠✠✠

* அண்மையில் பேரினவாதியான முன்னைநாள் பிரதமர் பண்டாரநாயக்காவின் சிலை பேருவளைப்பகுதியில் உடைக்கப்பட்டமை, தென்பகுதியில் இனவாதத்திற்கு எதிரான மக்கள் எழுச்சி உருவாகியுள்ளதை வெளிக்காட்டுகின்றதா?

தா. சிவபாலன்-பாரிஸ் 11, பிரான்ஸ்.

➲ இனவாதத்திற்கு எதிராக எழுச்சிகொண்டு தங்கள் தலைவர் ஒருவரின் சிலையை அடித்து நொருக்கும் அளவுக்குச் சிங்கள மக்கள் மத்தியில் பெரிய மாற்றம் ஏற்பட்டுவிட்டதாக நான் நினைக்கவில்லை. தற்போதைய சமாதான சூழ்நிலையில் நொந்துபோய் இருக்கும் பொது சன ஐக்கிய முன்னணியும் பேரினவாதச் சக்திகளும் நாட்டில் குழப்பங்களை ஏற்படுத்தித் தற்போதைய சமாதான சூழலை திசைதிருப்ப மேற்கொண்ட ஒரு சதி வேலையாக இது இருப்பதற்கு வாய்ப்புண்டு.

* வீரப்பனால் கடத்தப்பட்ட நாகப்பாவின் நிலை தற்போது எப்படியுள்ளது?

*த.சற்குணராசா - சூரிச், சுவிஸ்.*

➲ பிசுபிசுத்துப்போய்விட்ட கடத்தல் நாடகமாகவேயுள்ளது. நாகப்பா செத்தாலும் எமக்குப் பிரச்சினையில்லை என்ற நிலையில் தமிழக அரசு அந்தக் கடத்தல் நிகழ்வை அலட்சியம் செய்துவிட்ட நிலையில், தஸ்கார் மாநிலத்து முன்னாள் அமைச்சரை எப்படியாவது காப்பாற்றிவிட வேண்டுமெனத் தவிக்கும் கர்நாடக அரசு அதற்கான தொடர் முயற்சிகளிலும், தூதுவர்களைத் தேடும் முயற்சியிலும் இறங்கியுள்ளது. இந்தக் கடத்தல் நாடகம் கர்நாடக தமிழக அரசுகளுக்கிடையே ஒரு விரிசல் நிலையையும் ஏற்படுத்தியுள்ளதெனலாம். நாகப்பா இன்னும் வீரப்பனின் கைதியாகவேயுள்ளார்.

✠✠✠

* கடந்த காலங்களில் தமிழ்க் கட்சிகள் யாழ்ப்பாணக் குடாவை மட்டும் வைத்து அரசியல் நடத்தியதால்தான், பிற்காலத்தில் நாம் எமது தாயகப் பிரதேசங்கள் பலவற்றை இழப்பதற்குக் காரணமாக இருந்தது என்பது பற்றி உங்கள் கருத்தென்ன?

*சந்திரமோகன் - முல்கைம், ஜேர்மனி.*

➲ எமது முன்னைய தமிழ் அரசியல் தலைவர்கள் விட்ட பல தவறுகள்தான் எமது தாயக நிலத்தை இழப்பதற்கு மட்டுமல்ல ஈழத் தமிழர்களின் கோடிக்கணக்கான சொத்து இழப்புக்கும் பல்லாயிரக் கணக்கான தமிழ் மக்களின் உயிர் இழப்புக்கும் காரணமாக அமைந்தது. எமது முந்தைய தமிழ் தலைவர்கள் ஒன்றுபட்டு தமிழ் மக்களுக்காக அர்ப்பணிப்போடு செயற்பட்டிருப்பார்களேயானால் இத்தனை இழப்புக்களை நாம் சந்தித்திருக்க நேர்ந்திராது.

✠✠✠

* மக்கள் புரட்சி வெடிக்கட்டும் என முழங்கி ஒரு சொட்டு நீர்கூட அருந்தாது உயிர் தியாகம் செய்த தியாகி திலீபனின் கனவு நிறைவேறியுள்ளதா?

பாலமுரளி-பேர்ன், சுவிஸ்.

➲ மக்கள் புரட்சி வெடித்துள்ளது! தாயகத்தில் உருவெடுத்து உலகமெல்லாம் பொங்கிப் பிரவாகித்த பொங்கு தமிழ் எழுச்சி, தமிழீழ மக்கள் எழுச்சி கொண்டுவிட்டதன் ஒரு வெளிப்பாடுதானே. ஆனாலும் ஈழத் தமிழ் மக்களின் பூரணமான விடுதலைதானே அவனுடைய கனவு. அது நிறைவேற இன்னும் நாம் பயணிக்க வேண்டிய தூரம் உள்ளது.

✠✠✠

* அண்மையில் மட்டக்களப்பிலிருந்து தரைவழியூடாக வன்னிக்கு 304 விடுதலைப்புலிகள் இராணுவ பாதுகாப்புடன் சென்றுள்ளார்களே. இது விசித்திரமாக இல்லையா?

*புருசோத்துமன் - பொந்துவாஸ், பிரான்ஸ்.*

➲ விடுதலைப் போராட்டத்தில் இவ்வாறாக விசித்திரமான சரித்திர நிகழ்வுகள் நடைபெறுவது இயல்புதான். தமிழீழ விடுதலைப் போராளிகளைப் பாதுகாப்பாக இடம் விட்டு இடம் அழைத்துச்சென்றுவிடும் பணியை இராணுவம் மேற்கொண்ட நிகழ்வு ஈழ விடுதலைப் பேராட்டத்தின் வளர்ச்சிப் போக்கின் ஒரு வெளிப்பாடுதான்.

✠✠✠

* தற்போதும் பல இடங்களில் படைத் தரப்பினர் இயல்பு நிலையைக் குழப்புவதற்கான முயற்சியில் ஈடுபட்டு வருகிறார்களே? என்ன காரணம்?

*எழில்வேந்தன் - பாரிஸ், பிரான்ஸ்.*

கீழ்மட்டத்தில் இருக்கும் படையாளர் மத்தியில் அன்றி அதிகாரிகள் மட்டத்திலேயே இத்தகைய குழப்பல்வாதிகள் காணப்படுகின்றனர். போர்க்காலங்களில் இவர்களுக்குக் கிடைத்த பண வருவாய்கள் பல நின்றுபோனதால் ஏற்பட்ட ஆதங்கமும் குழப்பத்தைத் தூண்டிவிட ஒரு காரணமாக அமைகிறது. அத்துடன் கட்சிகள் சார்ந்த போரை விரும்பும் பேரினவாத சக்திகள் அதிகாரிகள் மட்டத்தில் கணிசமாக இருப்பதும் இந்நிலைக்குக் காரணமாக உள்ளது. அரசின் உறுதியான நடவடிக்கைகளாலேயே இந்நிலையை மாற்ற முடியும்.

✠✠✠

* கதிர்காமர் தற்போது என்ன செய்துகொண்டிருக்கிறார்?

முகில்வாணன்-பேர்லின்.

➲ இப்போதும் எஜமானியம்மாவின் (சந்திரிகா) காலடிக்கீழ் இருந்து வாலை ஆட்டிக்கொண்டேயிருக்கிறார். அவ்வப்போது குரைக்கவும் செய்கிறார்

# பிரிவுத் துயரின் அறிவித்தல்

## `கன்னையா மாஸ்டர்'
## கணபதிப்பிள்ளை கந்தையா

(இளைப்பாறிய தலைமை ஆசிரியர்)





மலர்ந்தார் புங்குடுதீவில் - 09.03.1919

உதிர்ந்தார் பாரிஸ் மாநகரில் - 28.09.2002

புங்குடுதீவு 12ம் வட்டாரத்தைச் சேர்ந்தவரும் கனடாவில் வசித்தவருமான
`கன்னையா மாஸ்டர்' கணபதிப்பிள்ளை கந்தையா 28.09.02 சனிக்கிழமை பாரிஸ் மாநகரில் இயற்கையின் அழைப்பில் இறைவனடி சேர்ந்தார்.
அன்னார் இளைப்பாறிய ஆசிரியை வேலுப்பிள்ளை சற்குணம் அவர்களின் அன்புக் கணவரும்,
தேவமனோகரன்(பிரான்ஸ்), வாசுகிதேவி (கனடா), பிரபாகரன்(பிரான்ஸ்), அருந்ததிதேவி (கனடா), ஞானிகிதேவி(கனடா), கருணாகரன்(கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும்,
மர்லின், ராதாகிருஸ்ணன், யேசுதாஸ், ஆனந்தமூர்த்தி வினோதினி ஆகியோரின் அருமை மாமனாரும்,
மொறிஸ், நிஷாந்தன், சுபோதினி, டீலன், ஜொனாத்தன், நந்தா, நிசா, சிவா, அனா, செனிலா, கரன் ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.
அன்னாரின் பூதவுடல் கனடா (Toranto) வில் நல்லடக்கம் செய்யப்படும். (நல்லடக்கம் பற்றிய விபரங்கள் பின்னர் தெரிவிக்கப்படும்)
இவரின் பிரிவுச் செய்தியை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

தகவல் தருபவர்கள் **கந்தையா தேவமனோகரன் (பிரான்ஸ்)**

**5, Allee. Ladrette**
**93390 Clichy -Sous-Bois**
**France**

**T.P. 0033(0) 143518775**
**Fax 0033(0) 143304136**

**ராதாகிருஸ்ணன் வாசுகிதேவி (கனடா)**
**T.P - 416-7466908**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 20 ஆண்டுகால யுத்தத்திற்குப் பின் ஏற்பட்ட ஸ்திரமான யுத்தநிறுத்தம்

**தாய்லாந்தில் கடந்த 18ம் திகதி நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கமும், சிறீலங்கா அமைச்சர் ஜீ.எல்.பீரிசும் சமாதானப் பேச்சுக்கள் தொடர்பாக உலகின் பல்வேறு தொடர்பு ஊடகங்களும் தொடுத்த கேள்விகளுக்கு தமது கருத்துக்களை வழங்கியிருந்தனர். அப்பகுதியின் சென்ற வாரத்தின் தொடர்ச்சி இது...**

### (சவுத் சைனா மார்கிங் போஸ்ட்)

**கேள்வி:–** நான் தனிப்பட்ட முறையில் இக்கேள்வியைக் கேட்கிறேன். திரு. பாலசிங்கம் அவர்களே, பல பத்தாண்டுகளின் பின் நிச்சயமாகவே இப்போதுதான் நீங்கள் பரஸ்பரம் அறிந்து கொள்ளும் வகையில் அமர்ந்திருக்கிறீர்கள். இதை எவ்வாறு நீங்கள் உணர்கிறீர்கள்?

**ஜீ.எல். பீரிஸ்:–** புரிந்து கொள்வதற்கு முதலில் அறிந்து கொள்வது மிக முக்கியமானதாகும். நானும் டொக்டர் பாலசிங்கமும் சந்தித்துப் பேசியிருக்கிறோம். பிரச்சினைகளைப் புரிந்து கொண்டிருக்கிறோம். அது மிகவும் முக்கியம். இதன் மூலம் முழுமையான ஒப்புதல் என்பது சாத்தியமில்லை. ஆனால் இந்தச் செயல்போக்கின் வழி வெற்றியை அடைவதற்காக பரஸ்பரம் நாங்கள் புரிந்து கொள்ள வேண்டும். அடுத்த பக்கத்தவரின் பிரச்சினையைக் குறித்து நாங்கள் உணர்வுபூர்வமாக இருக்க வேண்டியது முக்கியமாகும். பரஸ்பரம் நல்லமுறையில் புரிந்து கொள்வதும் அறிந்து கொள்வதும் பேச்சுவார்த்தையை நல்லமுறையில் மேலெடுத்துச் செல்ல உதவும். இதுவன்றி எந்தப் பேச்சுவார்தகையும் வெற்றி பெறாது.

**அன்ரன் பாலசிங்கம்:–** சமாதானப் பேச்சுவார்த்தையை நடத்துவதற்கு புரிந்துணர்வுள்ள நெருக்கமான உறவு என்பது அவசியம். இந்தப் பேச்சுவார்த்தையின் போக்கில் நாங்கள் பலரைச் சந்திக்க முடிந்தது. குறிப்பாக மிலிந்த மொரகொட போன்றவர்களையும், ஹக்கீமையும் பலமுறை சந்தித்ததின் ஊடாக நல்ல புரிந்துணர்வு ஏற்பட்டது. நான் நிச்சயமாகச் சொல்கிறேன். தனிப்பட்ட அளவில் நல்ல உறவு, புரிந்துணர்வு உருவாக்கப்பட்டிருக்கிறது. இந்த உறவு சமாதானப் பேச்சுவார்த்தையை வளர்த்துச் செல்லும். இடைக்கால நிர்வாகம் பற்றிய கேள்வியை பூர்வாங்கமான முறையில்தான் நீங்கள் பேசியிருக்கிறீர்கள் என்றாலும், அப்போதும் எனது கேள்வி பொருத்தமானது என்றுதான் நினைக்கிறேன்.

**கேள்வி:–** இந்த இடைக்கால நிர்வாகத்தை விடுதலைப் புலிகளிடம் தான் விட்டிருக்கிறீர்களா அல்லது இடைக்கால நிர்வாகம் பலதரப்பினரை பிரதிநிதித்துவப் படுத்துதவதாக - அதாவது வடக்கு கிழக்கை பிரதிநிதித்துவப்படுத்துவதாக - அதாவது சிங்கள முஸ்லீம் மற்றும் பிற தமிழக் கட்சிகிளின் பிரதிநிதித்துவம் அதில் இருக்குமா?

**ஜீ.எல்.பீரிஸ்:–** கையளிப்பது என்று சொல்வது தவறான அணுகுமுறை. இப்பிரச்சினையை அப்படிப் பார்க்க முடியாது. இந்த அமைப்பானது பிரதிநிதித்துவம் சேர்ந்து செயல்படுவது தொடர்பானதைச் சாத்தியமாக்குவதாக இருக்க வேண்டும் என நாங்கள் நினைக்கிறோம். இனத் தன்மையோடு நாட்டின் கலாச்சார வித்தியாசங்களை கணக்கிலெடுத்துக் கொண்டதாகத்தான் இது அமையும். விலக்கியதாக இருக்காது. எமது மக்களின் அனைத்துப் பிரிவினரதும் அபிலாசைகளையும் பிரதிபலிப்பதாகத்தான் இவ்வமைப்பு இருக்கும். அமைப்பு சம்பந்தமான ஆழமான விவாதங்கள் வருகிறபோது இந்தப் பிரச்சினைகள் எல்லாம் கவனத்தில் எடுத்துக் கொள்ளப்படும்.

**அன்ரன் பாலசிங்கம்:–** இது சம்பந்தமாக இப்போது அபிப்ராயம் சொல்வது முதிர்ச்சி பெற்றதாக இருக்காது. இடைக்கால அமைப்பின் தன்மை அதனது இயல்பு போன்றவற்றைக் குறித்து பேராசிரியர் பீரிஸ் சொல்கிறபடி வடக்கு - கிழக்கில் வாழ்கிற எமது மக்கள், முஸ்லீம் மக்கள், வட-கிழக்கில் வாழ்கிற சிங்கள் மக்கள் உள்ளிட்ட மக்களின் அபிலாசைகளைப் பிரதிநிதித்துவப்படுத்துகிற மாதிரித்தான் இந்த அமைப்பு இருக்கும். நாங்கள் இதற்கான சாத்தியங்களைத் தான் தேடிக்கொண்டிருக்கிறோம்.

### (ஜப்பனீஸ் நியூஸ் ஏஜென்ஸி)

கேள்வி:- என்ன விதமான சர்வதேச உதவிகளை ஆசிய நாடுகளிடமிருந்து நீங்கள் எதிர்பார்க்கிறீர்கள் எனக் குறிப்பாகச் சொல்வீர்களா? ஏனெனில் பிரதான நடுவராக இங்கு செய்ல்படுபவர் நோர்வே நாட்டவர் என்பதைக் கவனத்தில் கொண்டு இதை நான் கேட்கிறேன்.

**ஜீ.எல்.பீரிஸ்:–** சமாதான ஒப்பந்தம் ஒன்று கைச்சாத்திடுவதற்கு முன்பாகவே புரிந்துணர்வின் அடிப்டையில் குறைந்த அளவிலேனும் சில திட்டங்களை நாங்கள் செயல்படுத்த விரும்புகிறோம். யுத்த நிறுத்தம் நாட்டில் நிலவுகிறது. இப்போது நாட்டில் சமாதானம் நிலவுகிறது. ஆகவே பல்வேறுபட்ட திட்டங்களை இப்போது தொடங்குவது சாத்தியம். மக்களின் வாழ்க் கையில் இது நிச்சயம் பாரிய மாற்றங்களை உருவாக் கும்.

இதிலிருந்து இந்த வளர்ச்சித் திட்டங்களை நாங்கள் விரிவுபடுத்த விரும்புகிறோம். இந்த அடிப்படையில்தான் நாங்கள் சர்வதேச சமூகத்திடம் பேசிக் கொண்டிருக்கிறோம். மிலிந்த மொரகொட வாசிங்டனுக்கும் இலண்டனுக்கும் செல்கிறார். நான் கனடா வெளிவிவகார அமைச்சரைச் சந்திக்க ஒட்டவா செல்கிறேன். இலண்டனில் வெளிநாட்டு அபிவிருத்தி அமைச்சர் கிளார் ஸார்ட்டை, மிலிந்த மொரகொட சந்திக்கிறார். பிரதமர் பல்வேறு முக்கியமான பிரமுகர்களை நியூயார்க்கிலும், ஐ.நா.விலும் சந்தித்திருக்கிறார்.

### (சி.என்.என்)

**கேள்வி:–** சர்வதேச சமூகம் என்ன நடக்கிறது என்பதைக் கவனமாகக் கவனித்துக் கொண்டிருக்கிறது. என்ன காரணத்துக்காக இங்கே வந்தீர்களோ அதனை நீங்கள் குறிபிட்ட அளவிலேனும் சாதித்திருக்கிறீர்களா? நிதியுதவி பற்றி பல்வேறு நபர்கள் தெரிவித்திருக்கிறார்கள். நீங்கள் முன்னோக்கிச் செல்ல முடியும் என நினைக்கிறீர்களா? இவ்வேளையில் முன்னைய நிகழ்வுகளை கவனத்தில் கொண்டு எவ்வாறு நிதியுதவி கிடைக்க முடியும் என நினைக்கிறீர்கள்?

**அன்ரன் பாலசிங்கம்:–** நாங்கள் குறிப்பிட்ட அளவு சாதித்திருக்கிறோம் எனத்தான் நினைக்கிறேன். உங்களது கேள்வி கடந்த மூன்று நாட்களுக்குப் பொருந்தாது என நினைக்கிறேன். ஏனெனில் கடந்த எட்டு மாதங்களாக நாங்கள் யுத்தநிறுத்த ஒப்பந்தத்தை உருவாக்குவதில் கவனமாக உழைத்து வந்திருக்கிறோம். நோர்வே நடுவர்கள் ஸ்திரமான யுத்த நிறுத்தம் உருவாக ஒத்துழைத்தார்கள். இரண்டு தரப்பினரும் ஒப்புக் கொள்ளும் படியான யுத்த நிறுத்த ஒப்பந்தம் இந்த ஆண்டு பிப்ரவரி மாதம் கைச்சாத்திடப்பட்டது. இதுவும் சமாதானச் செயல் போக்கின் ஒரு பகுதிதான். இருபது ஆண்டுகால யுத்தத்திற்குப் பின் ஸ்திரமான யுத்தநிறுத்த ஒப்பந்தத்தை அடைந்திருப்பது மிகப்பெரும் சாதனையாகும். சர்வதேச மேற்பார்வையுடன் இந்த யுத்த நிறுத்தம் அமைந்திருக்கிறது. கடந்த ஏழு மாதங்களாக யுத்த நிறுத்தம் செயல்படுகிறது. இந்த நிகழ்வு இரண்டு தரப்பினருமே சமாதானத்துக்கு முழுமனத்தடன் ஒத்தழைக்கிறார்கள் என்பதனைத் தெளிவுபடுத்துகிறது.




இதுவன்றி இந்தப் பிரச்சினையின் இரண்டு தரப்பினரான தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும், சிறீலங்கா அரசுக்கும் இடையிலான பல சந்திப்புகள் நடந்திருக்கிறது. சமாதானத்துக்கான அமைப்பை உருவாக்குவதற்கு தாய்லாந்தில் கூடியிருக்கிறோம். அமைப்பு என்பது மிகவும் முக்கியம். அவசரமான முக்கியமான பிரச்சினைகள் குறித்து கவனம் செலுத்த இவ்வமைப்பு எங்களைக் கொண்டு வந்திருக்கிறது. அதனோடு ஸ்தூலமான வேலைத் திட்டத்தை நோக்கிச் செயல்படவும் எம்மைத் தூண்டியிருக்கிறது. இந்தச் செயல்போக்கு தொடர்ந்து செல்லும். இது வரை நல்ல முறையில் சென்றருக்கிறது. ஸ்திரப் படுத்துவதில் குறிப்பிடத்தக்க பதில்களை எய்தியிருக்கிறோம். முழுமையான திட்டங்களை உருவாக்க முனைந்திருக்கிறோம். யுத்தத்தினால் நிர்மூலமான வட-கிழக்கு பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப திட்டங்களைப் பேசியிருக்கிறோம். இதிலிருந்து இனப்பிரச்சினைக்கு அரசியல் ரீதியலான பேச்சுக்களைத் தொடங்க முன்னெடுப்புகளை மேற்கொண்டிருக்கிறோம். ஆகவே இந்தச் சூழலில் சர்வதேச சக்திகள் எங்களுக்கு உதவ வேண்டுமெனக் கோருகிறோம். இதன் மூலம் சமாதானப் பேச்சுவார்த்தை அடுத்த கட்டத்தக்குப் போகும் என்கிறோம்.

**ஜீ.எல்.பீரிஸ்:–** நான் நினைக்கிறேன். சர்வதேச சமூகமானது பலவிடயங்களில் இப்போது உறுதி பெற்றிருக்கும் என நினைக்கிறேன். பேச்சுவார்த்தையில் அரசியல் ரீதியில் தீர்வு நோக்கி எமது சீரிய தன்மை இருக்கிறது. அடுத்ததாக இதனைச் சாதிப்பதற்கான ஒரு அமைப்பு உருவாக்கப்பட்டிருக்கிறது. இந்த அமைப்பானது விடுதலைப் புலிகளுக்கும் சிறீலங்கா அரசுக்கும் இடையில் கலந்து செயல்படுவதற்கான வாய்ப்பை உருவாக்கியிருக்கிறது. முரண்சக்திகள் என்பதற்கு மாறாக இணைசக்திகள் உருவாகியிருக்கிறது. இது ஒரு மிகப் பெரிய முன்னேற்றமாகும். இந்த முன்னேற்றம் சர்வதேச சமூகத்தில் நம்பிக்கையை உருவாக்கும்.

### (அவுஸ்திரேலியன் நியூஸ் பேப்பர்)

**கேள்வி:–** உங்களது பேச்சுவார்த்தையில் உங்களுக்கிடையில் ஒப்புக்கொள்ள முடியாமை என்பது நிலவிய அம்சங்கள் எனனென்ன என்று சொல்வீர்களா?

**ஜீ.எல். பீரிஸ்:–** மிகத் தீவிரமான கடுமையான ஒப்புக்கொள்ளாமைகள் எதுவும் எங்களுக்கிடையில் உருவாகவில்லை. ஆனால் அபிப்பிராயங்களில் வித்தியாசங்கள் இருந்தது. இது இல்லையெனில் பேச்சுவார்த்தைகள் தேவையில்லை. எங்கள் மாறுபாடுகளின் அளவைக் குறைப்பதற்கு நாங்கள் முயற்சி செய்தோம். இதுதான் பேச்சுவார்த்தையில் உள்ள சாராம்சமான அர்த்தம். இந்தச் செயல் போக்கு என்பது டொக்டர் அன்டன் பாலசிங்கம் அவர்கள் சொன்னபடி ஏழு மாதங்களாகத் தொடர்ந்து கொண்டிருப்பதாகும். பிப்ரவரியில் யுத்தநிறுத்த ஒப்பந்தம் கைச்சாத்தானபோது நிறைய சந்தேகங்கள் இருந்தது. சீக்கிரம் இது உடைந்து போகும் என பலர் நினைத்தார்கள். ஆனால் அது அப்படி நடக்கவில்லை. பிரச்சினைகள் இருக்கிறது. ஆனால் அந்தப் பிரச்சினைகள் பூதாகரமாக எழாமல் பார்க்க வேண்டும். இந்தப் பேச்சுவார்த்தையிலும் எங்களுக்கு இடையிலான வித்தியாசங்களை நாங்கள் இனம் கண்டிருக்கிறோம். இந்த வேறுபாடுகளை எப்படி அணுகுவது என்பதும் எங்களுக்குத் தெரியும். தீர்மானமான நிரந்தரமான அரசியல் தீர்வை எப்படி அடைவது என்பதையும் இது எங்களுக்கு அறிவித்திருக்கிறது.

**அன்ரன் பாலசிங்கம்:–** இரண்டு தரப்பினருமே மனப்பூர்வமாகவும் சீரிய வகையிலும் இந்தப் பேச்சுவார்தையை வெற்றியடைய வேண்டும் என நினைக்கிறோம். இந்த உள்ளடக்கத்திலிருந்து இது முறிந்து போகக்கூடிய எந்த வாய்ப்பையும் பிரச்சினைகளையும் இந்த ஆரம்பக் கட்டத்தில் தவிர்க்கவே விரும்புகிறோம். முரண்பாடுகளை உருவாக்கும் விடயங்களைத் தவிர்க்கவே விரும்புகிறோம்.


உண்மைதான். பார்வையில் வித்தியாசங்கள் இருக்கிறது. இருவரது நிலைப்பாடுகளையும் கணக்கில் எடுத்தால் நிச்சயம் இது இருக்கும். இந்த முரண்பாடான நிலைப்பாடுகளை தீர்ப்பதற்காண ஒரு வழியை நாங்கள் காலப் போக்கில் காணவேண்டும். இதனுடைய வெற்றி என்பது இந்தப் பிரச்சனையை இரு தரப்பினரும் எவ்வாறு அணுகுகிறார்கள் என்பதைப் பொறுத்ததாகும். மறுபரிசீலனை நிலைபாட்டுக்கான வழிமுறைகளை இருவருமே காணவேண்டும். காலப்போக்கில் இந்தக் கஸ்டங்களை நாங்கள் வெல்வோம் என நாங்கள் நம்புகிறோம்.

*(மிகுதி அடுத்தவாரம்)*

*தமிழில்: ஐ.பி.சி. (இலண்டன்)*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காட்சியும் பதிவும்



நாம் சென்ற போது
யாரும் அறிந்திலர்.
மீண்டு வரும்போது
வரவேற்க ஆயிரம்
கரங்கள்...

**- உலங்குவானூர்தியில்
இறங்கிவரும்
விடுவிக்கப்பட்ட
போராளிகள்**




ஒன்றாகப் பழகினோம்
ஒரு கனவோடு
நடந்தோம்...
பிரிந்தபோது மட்டும்
தனித்தனியாக...

**- விடுவிக்கப்பட்ட
போராளியை
மகிழ்வோடு
அரவணைக்கும்
இன்னொரு போராளி**



சுட்டு வீழ்த்திவிடலாம் சுண்டக்காய் பயல்கள் என நினைத்தோம். இப்போது தான் உங்கள் கரத்தின் பலம் புரிகின்றது...

**- சிறீலங்கா இராணுவத் தளபதி லயனல் பலகல்லவுடன் தமிழீழ வடமுனைப் போர்த் தளபதி கேணல் தீபன்**



வெற்றி வரும் நீங்கள் வரமாட்டீர்கள் என்று
தெரிந்தும்
தேச விடிவிற்காய் வேதனையோடுதான் வழியனுப்பி
வைத்தோம்...
அப்போது வெற்றி வந்தது, இப்போது நீங்களும்...

**- கெனடியை கட்டித்தழுவி மகிழ்ச்சியில் கேணல் பானு அருகில் கேணல் ஜெயம்**



பிரிந்தவர் கூடினால் பேசவும் வேண்டுமா...
பேசட்டும் விடுங்கள்....

**- கெனடி தனது தாயாருடன்**



நேரில் உன்னை பார்த்ததில்லை
உன் வீரத்தை கேட்டு அறிந்ததுண்டு
அந்த இனிய நாள் இன்றுதான் வந்ததோ..!

**- விடுவிக்கப்பட்ட போராளிகளை காண்பதற்காக காத்திருக்கும் உறவுகள்**



பயங்கரவாதிகள் என்று
கடுமையாகத்தான்
விமர்சித்தோம்...
அதுதான்
உண்மை தெரிந்தபோது
முகம் பார்த்து
கைகொடுக்க
முடியவில்லை

**- கேணல் தீபனுடன்
சிறீலங்காவின்
பாதுகாப்பு அலுவலக
அமைச்சர் ஒஸ்ரின்
பெர்னான்டோ**



இத்தனை நாள் காத்திருந்தபோது இல்லாத அவசரமும், ஏக்கமும் இப்போது மட்டும் ஏன் இப்படி..?

**- மகனின் வருகைக்காக காத்திருக்கும் தாயார்**




**- கொழும்பில் கைதிகளை சந்தித்து உரையாடும் சிறீலங்காவின் பிரதமர் ரணில்**

புலிகள் உங்களை
மனித நேயத்துடன்
நடத்தியிருக்கிறார்கள்
என்பது உங்களின்
முகங்களைப் பார்க்கவே
தெரிகின்றது...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 10ம் ஆண்டு வீரவணக்கம்



## மார்க்கண்டு மதனரூபன்

**(பெரியபழம்)**

யாழ். மத்திய கல்லூரி

**மறைவு: 16.09.1991**

உங்கள் சிந்தனையோடு மெழுகுவர்த்தியாய் தங்களுக்கும் தங்கள் தோழமைகளுக்கும் இல்லறத்து நெய்விளக்கோடு இமையமாய் நிற்கும் அப்பா அம்மா அருமைத்தங்கை செல்லக்குட்டிதம்பிமார்கள்.
மார்க்கண்டு இரவீந்திராதேவி - மா. மதனராஜன் -
மா. மயூறதி - மா. மதனாகரன்
மா. மகிந்தன் - புத்தூர் கிழக்கு புத்தூர்

**கல்கத் – கிருசாந்**

காலமெல்லாம் காத்திருந்தோம்
கண் இமை கலங்கியும்
கயல் விழி நோவோடு
பூத்தமலர் சாயவில்லை
பூங்குருவி தூங்கவில்லை
பொன்மாலைப்பொழுதும் புலம்பியிங்கு
சாயவில்லை
பட்டாம்பூச்சி கூட்டங்களும்
பரிதவித்து ஏங்குது
பசுமை நெல்வயல்களும் உன்பாதம்
தேடி மாயுது
பள்ளிவாசல் மாடியோ
காத்துநிற்கும் தோழமைகள்
காத்துநின்ற தர்ப்பிடமோ தவிக்குதையா உனைத்தேடி
தர்மத்தின் சிந்தனைக்கு
தலைகொடுத்த வள்ளலே
பத்தாண்டு கடந்தாலும் பதறுதையா பாவிமடி
தூவுகின்றோம் தூய்மை மலர் தர்மத்தின்
கல்லறைக்கு
சேருகின்றோம் தர்மத்தின் சிந்தனைக்கு
தானமது செய்கின்றோம் துயிலுமில்லமதற்கு

தகவல்: புதியவன் மார்க்கண்டு (இ.போ.ச) - சுவிஸ் 079.3731158

# 4 ஆம் ஆண்டு வீரவணக்கம்



## மேஜர் துளசி (ரவி)

## இராஜரட்ணம் விஜயரவி

(ஆனந்தபுரம் கிளிநொச்சி)

**தாயகத்தின் மடியில்: 30.09.1998**

களத்தினில் இனத்தின்
கருவினைக்காத்திட
தமிழ்த்தாய்க் கருவினில்
வளர்ந்திடும் மாவீரனே!
புவத்தினில் வாழ்வதைப்
புதைத்திட்ட போதிலும் தாய்
நிவத்தினில்
வாழ்ந்திடும் உன்னை! எம்
மனதினுள் போற்றியே
வணங்குகின்றோம்

என்றும் உன்
நினைவலைகளில் வாழும்
அப்பா, அம்மா, பெரியம்மா,
அண்ணாமார், அண்ணிமார்,
அத்தான், அக்கா, தம்பிமார்,
உற்றார், உறவினர், நண்பர்கள்.

தகவல்: இ. விஜயகுமார் (சுவிஸ்)
இ. விஜயமோகன்(நோர்வே)
சி. விஜயநிர்மலா (சுவிஸ்)
தொலைபேசி எண்: 04141 7402564

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(36ம் பக்கத் தொடர்ச்சி)

**வடக்கு....**

மிருந்த இடத்தில் காலை முதல் இரவு வரை நினைவு நிகழ்வுகள் நடைபெற்றன. நல்லூரில் இந் நிகழ்வுகள் நடைபெற்ற அதே நேரம், தீவகத்தில் புளியங்கூடல் மகா மாரியம்மன் ஆலய வீதியிலும் வடமராட்சியில் மாலி சந்தி பிள்ளையார் கோயில் முன்றிலிலும் உண்ணாவிரதங்கள், பொதுக் கூட்டங்கள், நினைவு நிகழ்வுகள், கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றன. குடாநாட்டில் இந்நிகழ்வையொட்டி அனைத்துப் பகுதிகளிலும் கடைகள் மற்றும் வர்த்தக நிலையங்கள் மூடப்பட்டிருந்ததுடன் பாடசாலைகளும் இயங்கவில்லை. இதனால் குடாநாட்டின் பல்வேறு பகுதிகள் முற்றாக வெறிச்சோடிப் போயிருந்தன.

இதேவேளை, நினைவு தின பிரதான நிகழ்வுகளில் மாணவர்கள் உட்பட ஆயிரக்கணக்கான மக்கள் கலந்துகொண்டனர். குடாநாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் நினைவு நிகழ்வுகள் நடைபெற்ற நல்லூர் கந்தசுவாமி கோயில் பகுதிக்கும், வடமராட்சி மற்றும் தீவகப் பகுதிக்கும் ஆயிரக்கணக்கான மக்கள் சென்று இந்த நிகழ்வுகளில் பங்குபற்றினர். இப்பிரதான நிகழ்வுகளில் விடுதலைப் புலிகளின் முக்கிய பிரமுகர்களும், தமிழ்க்கட்சிக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களும் கலந்து கொண்டு உரையாற்றினர்.

தியாகி திலீபனின் உருவப் படம் தாங்கிய அலங்கார படகுப் பவனி தீவக கடற்பரப்பில் இடம் பெற்ற சமயம் சிறீலங்கா கடற்படையின் டோறா படகு ஒன்று அந்தப் படகுப் பவனியை வழி மறித்தது. படகுப் பவனி எழுவை தீவு, அனலைதீவு நோக்கிச் சென்றுகொண்டிருந்த சமயம் நயினாதீவை அண்டிய கடலில் வைத்து கடற்படையின் டோறா படகு குறுக்கே வந்து திலீபனின் படகை வழிமறித்தது. பின்னர் படகினை குறிகாட்டுவானுக்கு கொண்டு சென்று தடுத்து வைத்தது. இதனால் ஆத்திரமடைந்த பொதுமக்கள் கடற்படையினருடன் வாக்குவாதப்பட்டனர். படகில் இருந்த பொதுமக்கள் கொந்தளித்ததைத் தொடர்ந்து படகு அங்கிருந்து மீண்டும் செல்ல அனுமதிக்கப்பட்டது.

**வவுனியாவில்**

தியாகி திலீபனின் நினைவு நாளை முன்னிட்டு வவுனியா நகரம் சிவப்பு, மஞ்சள் கொடிகளினால் அலங்கரிக்கப்பட்டு இருந்தது. உணவுச்சாலைகள், மருந்துச்சாலைகள் தவிர ஏனைய வர்த்தக நிலையங்கள் யாவும் மூடப்பட்டிருந்தன. பூந்தோட்டம் பொது மைதானத்தில் நடைபெற்ற அடையாள உண்ணா விரத வைபவத்தில் விடுதலைப் புலிகளின் வவுனியா மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் எஸ்.எழிலன், நகர அரசியல் பொறுப்பாளர் ஏ.காண்டீபன், மாவீரர் பணிமனைத்துறை பொறுப்பாளர் தமிழினி மற்றும் தமிழ்க் கூட்டமைப்பு பிரதிநிதிகளும் ஏனைய அமைப்புக்களின் உறுப்பினர்களும், பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள், பொதுமக்கள் உட்பட ஆயிரக் கணக்கானவர்கள் இதில் கலந்து கொண்டனர். மாவீரர்களுடைய பெற்றோர் பொதுச் சுடர் ஏற்றி, திலீபனின் உருவப்படத்திற்கு மலர்மாலை அணிவித்தனர்.

**திருகோணமலையில்**

திருகோணமலை கிறீன் வீதியில் உள்ள விடுதலைப் புலிகளின் அரசியல் அலுவலகத்தில் உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டது. தமிழீழத் தேசியக் கொடியை விடுதலைப் புலிகளின் திருமலை நகரப் பொறுப்பாளர் ராஜேஷ் ஏற்றிவைத்தார். இரண்டாம் லெப்.குமார், வீரவேங்கை தமிழன்பு ஆகியோரின் தாயாரான கணபதிப்பிள்ளை பூரணி பொது ஈகைச் சுடரை ஏற்றிவைத்தார். தியாகி திலீபனின் படத்துக்கு மாவீரர் மேஜர் வன்னியதேவனின் தாயார் வைரமுத்து நேசரத்தினம் மலர்மாலை அணி வித்தார். மாவட்ட மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் தென்னவன் நிகழ்வுக்குத் தலைமை வகித்தார்.

**மட்டக்களப்பு-**
**அம்பாறையில்**

லெப்.கேணல் திலீபனின் 15வது ஆண்டு நினைவாக மட்டக்களப்பு- அம்பாறை மாவட்டங்களின் பல பகுதிகளிலும் பொது நிகழ்வுகள் இடம்பெற்றன. திலீபனின் நினைவு தினத்தையொட்டி மட்டக்களப்பு மாவட்டத்தில் பல்வேறு இடங்களிலும் உண்ணா விரதங்கள் இடம்பெற்றன. விடுதலைப் புலிகளின் அரசியல் பணிமனை உள்ள பிரதேசங்கள் ஒவ்வொன்றிலும் பிரதேச அபிவிருத்திக் குழுவினால் உண்ணா விரதங்கள் அனுஷ்டிக்கப்பட்டன. இந்நிகழ்வுகளில் பிரதேசவாசிகளுடன் பாடசாலை மாணவர்களும் பெருமளவில் கலந்துகொண்டனர்.

பிரதான நிகழ்வு மட்டக்களப்பு நகரில் இந்துக்கல்லூரி விளையாட்டு மைதானத்தில் இடம் பெற்றது. இந்நிகழ்வில் சிறப்பு அம்சமாக விடுதலைப் புலிகளின் ரசிகன் இசைக்குழுவினரின் இசை நிகழ்வும் இடம்பெற்றது. ஏனைய நிகழ்வுகள் களுவாஞ்சிக்குடி, வெல்லாவெளி, வாழைச்சேனை, செங்கலடி, பொத்துவில் ஆகிய இடங்களில் நடைபெற்றன.

(36ம் பக்கத் தொடர்ச்சி)

**சிறீலங்காவிற்கு....**

இந்தப் பணத்தை கொலோன் நிறுவனத்திடமிருந்து பெறுவதற்காக சிம்பாப்வே நிறுவனம் பலத்த முயற்சிகளை மேற்கொண்ட போதிலும் சட்டச் சிக்கல்கள் காரணமாக அது நிறைவேறவில்லை. என்ன காரணத்திற்காக இந்தச் சட்டச் சிக்கல் ஏற்பட்டது என்ற காரணம் இது வரை சரியாகத் தெரியவில்லை. கொலோன் நிறுவனத்திடம் மேற்படி பணத்தை இழந்த நிலையில் மிகுதிப் பணத்தையும் சிம்பாப்வே நிறுவனத்திற்குக் கொடுக்க சிறீலங்கா மறுத்துவருகிறது.

இந்தநிலையில் 1997ல் சிம்பாப்வே நிறுவனம் இலங்கை அனுப்பிய பெருமளவு மோட்டார்க் குண்டுகளுடன் (பெறுமதி 45 மில்லியன் டொலர்கள்) சென்ற கப்பலைப் புலிகள் தந்திரமாக திசை திருப்பிச் சென்று அவற்றில் இருந்த மோட்டார்க் குண்டுகளை தம்வசப்படுத்தியிருந்தனர். இந்தச் சூழ்நிலையிலும் சிம்பாப்வே நிறுவனம் மற்றொரு தொகுதி மோட்டார்க் குண்டுகளை வெற்றிகரமாக அனுப்பியிருந்தது. எனினும், அதற்கான பணத்தையும் சிறீலங்கா வழங்க மறுத்துவருவதாக அந்த நிறுவனத்தின் நிறைவேற்று இயக்குநர் கேணல் ரிசிங்கா டுபே தெரிவித்துள்ளார் என்று கூறியுள்ளது.

விடுதலைப் புலிகளின் வசமுள்ள ஆயுதங்களுக்கும் (இராணுவத்தினரிடம் இருந்து புலிகளால் கைப்பற்றப்பட்டவை) தமது அரசு கடன் நிலுவையைச் செலுத்தவேண்டியுள்ளதால் பாதுகாப்புச் செலவினத்தை உடனடியாக அதிகளவில் குறைக்கமுடியாதுள்ளது என அண்மையில் சிறீலங்காவின் பிரதமர் ரணில் விக்கரமசிங்க கூறியிருந்தது இங்கு குறிப்பிடத்தக்கது.

(36ம் பக்கத் தொடர்ச்சி)

**சில சலுகைகளைதான்....**

கொண்ட கேணல் கருணா தொடர்ந்து உரையாற்றுகையில், நாம் அகிம்சையை மீண்டும் ஒரு தடவை பரீட்சித்துப் பார்த்ததினால் திலீபனை இழந்தோம். மீண்டும் யுத்தம் வெடித்து இன்று யுத்த நிறுத்தக் காலகட்டத்தில் நிற்கின்றோம். யுத்தம் மீண்டும் ஏற்படுமா என்ற சந்தேகம் மக்கள் மத்தியிலும் போராளிகள் மத்தியிலும் உள்ளது உண்மை தான். இனிமேல் யுத்தம் ஏற்பட மாட்டாது என்ற நம்பிக்கை எம்மிடமிருக்கிறது. இந்தச் சந்தேகத்தை ஒரு புறம் தூக்கி வைத்துவிட்டு சமாதானத்தின் மூலம் எமது உரிமைகளைப் பெற அனைவரும் உழைக்க வேண்டும். எமக்குத் தற்போது சில சலுகைகளை அரசு வழங்கியுள்ளது. இதனை நாம் எமது உரிமைகள் என நினைக்கக் கூடாது. எமது உரிமைகள் இன்னும் கிடைக்கவில்லை. நாம் இன்று எம்மை முழுமையாக அரசியல் நிலைப்பட்டுக்கு மாற்றியுள்ளோம். புலிகள் வேறு மக்கள் வேறு அல்ல. எம்மை வழி நடத்த வேண்டியவர்கள் மக்களே என்று தனது உரையில் குறிப்பிட்டார்.

**Restaurant விற்பனைக்கு**

45 இருக்கைகொண்ட Restaurant விற்பனைக்குண்டு.
அலுவலக ஊழியர்கள் நிறைந்த இடம் (Quatier Bureaux)
இந்தியன் அல்லது Pizza Restaurant க்கு உகந்த இடம்.
Mº: Marx Dormoy
**தொடர்புகளுக்கு: 0142092011/ 0609403015**

**43வது தமிழ்ச்சோலைப் பள்ளி ஆரம்பம்**

**A.F.T.PARIS. 20ème.**

புலம் பெயர்ந்து வாழ்கின்ற எமது குழந்தைகளிடையே தமிழ்மொழியையும் கலை பண்பாட்டையும் வளர்க்கும் நோக்கில் தமிழ்ச்சங்கம் பாரீஸ்-20 (A.F.T.PARIS20ème) தமிழ்ச்சோலைப் பள்ளியை ஆரம்பிக்கவுள்ளது.

இப்பள்ளியில் தங்கள் குழந்தைகளையும் இணைத்து எதிர்காலத்தில் தமிழ்பேசும் ஆற்றல் மிக்க சிற்பிகளாக்குங்கள்.

பாடசாலை ஆரம்பிக்கும் நாள்
**09-10-2002 புதன்**
**நேரம் காலை 09.00**

இடம் UACB -Escalier-19
16 Rue Hélène Jakubowicz
75020 PARIS

*அனைவரையும் கலந்துகொண்டு சிறப்பிக்குமாறு அன்போடு அழைக்கின்றோம்.*

மின்அஞ்சல் – AFTamoule@yahoo.fr
தொடர்புகட்கு அருணகிரி
01 43 58 70 09 — 06 60 99 47 03
பேருந்து தரிப்பிடம் Pyrenees Menilmontant
Bus 26 – 96 Métro -Pelleport
நம் வாழ்வும் வளமும் தமிழ்மொழி என்போம்

**கடை விற்பனைக்கு**

நல்ல நிலையில் வியாபாரம் நடக்கும் Telephone Card கடை உடனடியாக விற்பனைக்குண்டு.
**உடன் தொடர்பு கொள்ளவும்**
T.P: 01 43 49 33 46
G.S.M - 06 64 81 68 86
224, Rue de Belleville, 75020 Paris.
Mo: Telegraph - Bus - 60

*Wembley மாநகரில் பிரமாண்டமான காட்சி அறையுடன்*

**ஓவியா Entertainment**

தமிழ், ஆங்கில, கிந்தி திரைப்படங்கள் DVD, Video CD and Magazine,
ஐங்கரன் வெளியீடுகள் அவர்கள்
வெளியிடும் அதே தினத்தன்று
எங்களிடம் பெற்றுக்கொள்ளலாம். Tel: 02087953003



ஓவியா Entertainment
14 Ealing Road
Wembley, Hao 4TL
www.oviyavideo.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழமுரசு
Eelamurasu Weekly

அனைத்துத் தொடர்புகளுக்கும்:
"EELAMURASU"
22, Rue Perdonnet
75010 Paris
Tél: 01 40 37 63 63
Fax: 01 40 37 64 64

மேற்கு லண்டன் மாநகரில்
புதிய நிர்வாகத்தில்... புதுப்பொலிவுடன்...
துவாரகா Cash & Carry
இல்லை என்பது இங்கில்லை
N°: 199, The Broadway, Southall, Middx. T.P: 020 8813 9126
Pub

# வடக்கு -கிழக்கு எங்கும் கேணல் சங்கர் - லெப். கேணல் திலீபன் நினைவு நிகழ்வு

# தேசியத் தலைவர் பங்கேற்பு

## வன்னியில் கேணல் சங்கரின் நினைவுதூபி திறந்து வைப்பு

(30.09.02)

தியாகி திலீபனின் 15ம் ஆண்டு நினைவு நிகழ்வுகள் கடந்த வியாழக்கிழமை இராணுவத்தினரின் கட்டுப்பாட்டிலுள்ள பிரதேசங்கள் உட்பட அனைத்து தமிழீழ பகுதிகள் எங்கும் மிகவும் உணர்வுபூர்வமாகவும் எழுச்சியுடனும் அனுஷ்டிக்கப்பட்டன. யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா, திருகோணமலை, மட்டக்களப்பு மற்றும் அம்பாறை மாவட்டங்களில் கடந்த 12 நாட்களாக நடைபெற்றுவந்த திலீபன் நினைவு நிகழ்வுகள் இறுதி நாளான வியாழக்கிழமை உணர்வுபூர்வமாக இடம்பெற்றது.

**வன்னியில்**

வன்னிப் பிரதேச தளமொன்றில் சிறப்பு ஏற்பாடுகளுடன் நடைபெற்ற தியாகி திலீபன் 15ம் ஆண்டு நினைவு நிகழ்விலும் கேணல் சங்கரின் முதலாம் ஆண்டு நிகழ்விலும் தமிழீழத் தெசியத் தலைவர் கலந்து கொண்டு உருவப்படங்களுக்கு தீபம் ஏற்றி, மலர் வணக்கம் செலுத்தினார்.

வன்னிப் பகுதியில் நடைபெற்ற இந்த நிகழ்வுகளில் தியாகி திலீபன் உயிர்நீத்த நேரமான காலை 10.48 மணியளவில் சகல ஆலயங்களிலும் பொது இடங்களிலும் மணியோசை எழுப்பப்பட்டது. இதேவேளை விடுதலைப் புலிகளின் மூத்த தளபதி கேணல் சங்கரின் நினைவுத் தூபி அன்றைய தினம் வன்னிப் பகுதியில் புலிகளின் தளமொன்றில் திறந்துவைக்கப்பட்டது. இந்த நிகழ்வில் பொதுச் சுடரினை மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் பொன் தியாகம் ஏற்றிவைத்தார். தேசியக் கொடியினை புலனாய்வுத்துறைப் பொறுப்பாளர். ச.பொட்டு அம்மான் ஏற்றிவைக்க கேணல் சங்கரின் நினைவுத் தூபியை அரசியல்துறைப் பொறுப்பாளர் சுப. தமிழ்ச்செல்வன் திரைநீக்கம் செய்தார். சங்கரின் துணைவியார் ஈகைச்சுடர் ஏற்றி மலர்மாலை அணிவித்து வணக்கம் செலுத்தினார். கடற்புலிகளான சிறப்புத் தளபதி கேணல் சூசை, யோகரத்தினம் யோகி, வி.பாலகுமார் ஆகியோர் நினைவுச் சிறப்புரையாற்றினார்கள். கேணல் சொர்ணத்தின் நன்றியுரையுடன் நிகழ்வுகள் முடிவுற்றன.

**யாழ். குடாவில்**

யாழ்ப்பாணம் நல்லூர் கந்தசுவாமி ஆலய வடக்கு வீதியில் தியாகி திலீபன் உண்ணாவிரத

(☞ பக்கம் 35)

# சிறீலங்காவிற்கு ஆயுத விற்பனை

## 160 மில்லியன் டொலர்களை இழக்கும் நிலையில் சிம்பாப்வே

(30.09.02)

சிறீலங்காப் படையினருக்கு இடைத்தரகராக ஆயுதங்களை விற்பனை செய்ததன் மூலம் கிடைக்க வேண்டிய 160 மில்லியன் டொலரை சிம்பாப்வே பாதுகாப்பு நிறுவனம் இழக்கும் சூழ்நிலை ஏற்பட்டுள்ளதாக தெரிய வருகிறது. இந்த விபரம் குறித்து தென் ஆபிரிக்காவில் இருந்து வெளியாகும் 'த பினான்சியல் கசற்' என்ற இதழ் தகவல் வெளியிட்டுள்ளது. 1997ம் ஆண்டு விடுதலைப் புலிகளுக்கெதிரான போருக்காக (ஜெயசிக்குறுய் இராணுவ நடவடிக்கை) ஆயுதங்களை கொள்வனவு செய்தது. அவ் ஆயுதங்களுக்காக சிறீலங்கா அரசு 99 மில்லியன் டொலர்களை முற்பணமாக வழங்கி மிகுதியை பின்னர் வழங்குவதாக கூறியிருந்தது. ஆனால் தற்போது மிகுதிப் பணமான் 160 மில்லியன் டொலர்களை வழங்க மறுத்துள்ளதாக கூறப்படுகிறது.

இதுபற்றி தென்னாபிரிக்க இதழில் கூறப்பட்டுள்ளதாவது, இவ் ஆயுத விற்பனை பற்றி சிம்பாப்வே பாதுகாப்பு நிறுவனத்துடன் தொடர்புடைய வட்டாரங்கள் கூறுகையில், சிறீலங்கா அரசு விடுத்த வேண்டுகோளை அடுத்து தென்கொரிய நிறுவனமான 'கொலோன்', சிறீலங்காப் படையினருக்குத் தேவையான 1000 மோட்டார் குண்டுகளை அனுப்பி வைத்தது. கொலோன் நிறுவனத்தின் சிங்கப்பூர் கிளை அலுவலகத்துடனேயே இது தொடர்பான வர்த்தக நடவடிக்கைகளை சிம்பாப்வே பாதுகாப்பு நிறுவனம் மேற்கொண்டிருந்தது. இதற்கான முற்பணமாக சிறீலங்கா 99 மில்லியன் டொலர்களை கொலோன் நிறுவனத்துக்கு வழங்கியிருந்தது. ஆனாலும், இந்த ஆயுத விற்பனையில் இடைத் தரகர்களாக செயற்பட்ட சிறீலங்கா இராணுவ அதிகாரிகளுக்கு தரகுப் பணம் வழங்கியதால், மேற்படி 99 மில்லியன் டொலர்களையும் கொலோன் நிறுவனம் சிம்பாப்வே நிறுவனத்திற்கு வழங்கவில்லை.

(☞ பக்கம் 35)

# சில சலுகைகளைதான் அரசு வழங்கியுள்ளது எமது உரிமைகளை அல்ல

## திலீபன் நினைவு நிகழ்வில் கேணல் கருணா

(30.09.02)

யுத்தத்தின் மூலம் தான் விடிவைப் பெறவேண்டும் என்பது கட்டாயமில்லை. யுத்தத்தைக் கண்டு சலித்துப்போனவர்கள் நாம். எனவே தான் பேச்சுவார்த்தைகள் மூலம் எமது மக்களுக்கான உரிமைகளைப் பெற்றுக் கொடுப்பதற்கான நடவடிக்கைகளில் தற்போது ஈடுபட்டுள்ளோம் என்று விடுதலைப் புலிகளின் மூத்ததளபதி கேணல் கருணா தெரிவித்தார்.திலீபனின் 15வது நினைவுதின வைபவம் வியாழக்கிழமை மாலை வெல்லாவெளியில் மட்டக்களப்பு அம்பாறை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் கௌசல்யன் தலைமையில் நடைபெற்றது.

இவ்வைபவத்தில் கலந்து

(☞ ப்க்கம் 35)

Southharrow Food & Wines
234 & 236 Northolt Road, South Harrow, HA2 8DU
Tel: 020 8423 6321
உங்கள் அன்றாட அனைத்துத் தேவைகளையும் பூர்த்தி செய்துகொள்ள நாடவேண்டிய ஒரே நிறுவனம் Southharrow Food & Wines
★ வாரம் ஏழு நாட்களும் இரவு 11 மணி வரையும் திறந்திருக்கும்
Pub

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org